சாரதா

ஓர் இனிய தமிழ் நவீனம்

27 JUN 1934

இஃது

காட்டிலாகா ரேஞ்சாபீசர்

திருநெல்வேலி

ஸ்ரீமான் சா. மு. ஸ்ரீநிவாச பிள்ளை அவர்களின்

மனைவியும்

"சுந்தரகாந்தம்" ஆசிரியையுமான

ஞா. ப. சதானந்தம் அம்மாவால்

எழுதப்பெற்று வெளியிடப்பட்டது.

சஞ்சீவி அச்சுக்கூடம், தருமபுரி.

1934

...] [விலை ரூ. 1-0-0.

0-,3MCK8,S
N34

சாரதா

ஓர் இனிய தமிழ் நவீனம்

இஃது

காட்டிலாகா ரேஞ்சாபீசர்

திருநெல்வேலி

ஸ்ரீமான் சா. மு. ஸ்ரீநிவாச பிள்ளை அவர்களின்

மனைவியும்

"சுந்தரகாந்தம்" ஆசிரியையுமான

ஞா. ப. சதானந்தம் அம்மாளால்

எழுதப்பெற்று வெளியிடப்பட்டது.

சஞ்சீவி அச்சுக்கூடம், தருமபுரி.

1934

பதிவு செய்தது] [விலை ரூ. 1-0-0.

ஞா. ப. சதானந்தம் அம்மாள்,

ஆசிரியை.

நூன்முகம்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
ணிற்க வதற்குத் தக"

'கல்லா நெஞ்சில் நில்லா ஒழுக்கம்' என்பது நம் முன்னோரின் அரிய வாக்காகும். எனினும், கற்றவர் பலர்பால் தீயொழுக்கமும், கல்லாதவர் பலர்பால் நல்லொழுக்கமும் முரண்பட்டுத் திகழ்வதைத் தற்கால அநுபவத்தில் காண்கின்றோம். இக்காலம் வருடந்தோறும் பல கல்லூரிகளினின்றும் அநேக பட்டதாரிகள் ஆண்களும், பெண்களும் புற்றீசல்போல் வெளிப்படுகின்றனர். இவரிடம் அவரவர் கல்விக்கேற்ற அறிவும், ஒழுக்கமும் காணக்கிடையாதனவாயின் அன்னவரைக் கற்றறி மூடரெனவே கருதவேண்டும். அவ்வாறே, கல்லாதவர் ஆணோ பெண்ணோ விசால புத்தியும், நற்குணமும் படைத்தவராயின் அன்னவரையே கற்றவரிலும் மேம்பட்டவராக மதித்தல் வேண்டும். இக்கருத்தை நாம் உணருமாறே தாயுமான சுவாமிகளும் 'கல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள். கற்றும் அறிவில்லாத என் கருமத்தை யென் செய்வேன்; மதியை யென் செய்வேன்' என அறிவுச்சுடர் கொளுத்தினர்போலும். இதனை விளக்குவான் வேண்டியே கற்றாருள்ளும் கல்லாருள்ளும், நல்லார் பொல்லார் ஆகிய பல பாத்திரங்களை அமைத்து இந்நவீனத்தை வரையலானேன்.

இத்தோடு இக்கதையை எழுத என்னைத் தூண்டிய மற்றொரு காரணமும் உளது. நமது பெண்மக்களுக்குக் கல்வி இன்றியமையாததென்பதை எவரும் மறுத்துரையார். ஆயினும், கற்ற பெண்மணிகள் பலரிடம் இப்பொழுது காணப்படும் ஆர்ப்பாட்டமானது, பெண் கல்வி தீயதென்றே ஐயுறச் செய்கின்றது. இல்வாழ்க்கைக்குட்பட்ட பெண்கள் அகமுடையாள், இல்லாள், மனையாள் என அழைக்கப்படுகின்றனர். இப்பதங்கள், மாதர்களுக்குரித்தானது 'இல்லம்' என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

ஆதலின், கற்ற ஒரு பெண் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களிலும் சிறந்து, தன்னலங் கருதாது தற்கொண்டானைப் பேணி, மக்களைப் பெற்று மாசின்றி வளர்த்து மனையின் பொறுப்பை மகிழ்வுடன் ஏற்று, நல்வழியில் ஒழுகி விளங்கினால் மட்டுமே அவள் கல்வியின் பயனைப் பெற்றவளாவள். அவளே அகத்திற் கழகும், கணவனுக் கணிகலமுமாவள். பெண் கல்வி இல்வாழ்க்கையின் இன்பங்களைப் பெருக்குவதற்கு அவசிய மேயன்றி ஆண்மக்களோடு போட்டி போடுவதற்கன்று. இதனை யும் அறிவுறுத்துமாறு, விவாகமானவரின் விஷயங்களையே கதா ரூபமாகக்கொண்டு, கற்ற பெண்களின் ஒழுக்கம் எவ்வாறிருக்க வேண்டுமென இக்கதையிற் காட்டலானேன்.

எனது முதல் நவீனம் 'சுந்தரகாந்தம்' வெகு அருமை பெருமையுடன் தமிழன்பர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் மேலும் ஊக்கங்கொண்டு இப்புத்தகத்தை எழுதலானேன். யாவரும் இதையும் அன்புடன் ஆதரிக்கக் கோருகின்றேன்.

இதை யான் எழுதி முடிக்க அருள்புரிந்த இறைவனை என் மனமாரத் துதிக்கின்றேன்.

ஞா. ப. சதானந்தம் அம்மாள்.

சாரதா

பொருளடக்கம்.

அத்தியாயம்		பக்கம்
1.	கணவனை மதியாக் கற்றறி மூடம்	1
2.	கணவனைப் போற்றிய கல்விக் களஞ்சியம்	11
3.	உயிரை அளித்து உதவிய உத்தமி	24
4.	பொறுதி பொறுத்த பூமாதேவி	34
5.	நல்லறம் தவறிய நாகரீக நங்கை	51
6.	குடியைக் குலைத்த கொடுஞ்சூரி	61
7.	வரதட்சணையால் வாழ்விழந்த வனிதை	73
8.	கொலையைத் தடுத்த குணசீலன்	88
9.	சதியை விளக்கிச் சங்கடந் தீர்த்த சமர்த்தி	103
10.	கொடுந்துயர் தாங்கிய குணவதி	116
11.	வண்டனுக்கேற்ற சண்டன்	126
12.	ஊழ்வினையால் பிரிந்து துயருற்ற உத்தமர்	139
13.	கடியப்பட்டுக் கரையும் காதலர்	152
14.	குலத்திலும் குணத்தைப் பாராட்டிய குலமகன்	164
15.	பாதகம் செய்த பரம சண்டாளர்	176
16.	சங்கைக் காளாகிய சதிபதி	194

கடவுள் வணக்கம்.

"நாடத்தயைசெய்வாய் நன்மைசெய்வா யென்கலிகெட்
டோடத்தயைசெய்வா யுண்மைசெய்வாய் பாடத்
தயைசெய்வாய் நித்தியநின் றாண்மலரைப்போற்றத்
தயைசெய்வாய் நல்வாக்குத்தந்தே தயையெனக்குச்
செய்வாய் நீயென்றுயரந்தீர்ப்பாய் நீயல்லாதார்
செய்வாரெனக்கிரக்கஞ் செய்குவா ரையாவே
யத்தமுறும்வாழ வில்லையாம னல்லறிவின்
புத்தியெலாந்தந்தெனக்குப் போதிப்பாய் நித்தனுனை
யல்லாதுவேறுதுணை யாருமில்லை யென்பதுனக்
கெல்லாம்வெளியா யிருக்குமே வல்லாய்நீ"

வேதநாயக சாஸ்திரியார், டி. டி.

சாரதா

அத்தியாயம்—1

கணவனை மதியாக் கற்றறி மூடம்

“இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
யில்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்”

நம் தமிழகத்தின் தென்கோடியில் சமுத்திரக் கரையோரமாய், குமரிபுரம் என்ற ஒரு நகர் உளது. சில வருடங்களுக்கு முன் ஒருநாள் மாலை சுமார் ஐந்து மணிக்கு அந்நகரின் கீழ் வீதி வழியாய்க் கடற்கரையை நோக்கி, வாலிபன் ஒருவன் விரைந்து சென்றான். அவன் தற்கால நாகரீகத்தை அநுசரித்து மேல் நாட்டுடைகளை அணிந்திருந்தான். அவன் முகத்தில் கோபமும், விசனமும் மாறி மாறிக் காணப்பட்டன. கடலில் அலைகள் அடுத்தடுத்துப் பொங்கி மறைவதுபோல், அவன் மனத்தில் பல பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. கடற்கரையை அணுகியதும் நீரருகிலுள்ள ஓர் உயர்ந்த பாறையின்மீதேறி நின்று யோசனையிலாழ்ந்தான். தனக்குள்ளாகவே “என்னே என் தலை விதி! நான் இவளைக் கைப்பிடித்த நாள் முதலாய் ஒரு சுகத்தையுமறியேனே! என் மனத்திற்கு நிம்மதியென்பதே இல்லையே! இனி இவளுடன் கூடி வாழ்வதிலும் இக்கடலில் மூழ்கி உயிர் துறப்பதே மேன்மை” எனப் புலம்பும் சமயம், அவன் தோழன் ஒருவன் சப்தமின்றி மெதுவாய் நடந்துபோய்,

அவன் பின்னால் நின்று இரு தோள்களையும் பற்றி "சாந்தசீலா! என்ன தனியே நின்று யோசனை செய்கிறாய்? நீ கலியாணம் செய்துகொண்டபின், உன்னைக் காண்பது குதிரைக்கொம்பாகி விட்டதே! தன்னைவிட்டுக் கணமும் பிரிய, உன் மனைவி சம்மதிக்கிறாளில்லையோ?" என்று கல கலவென நகைத்தான். சாந்தசீலன் திரும்பிப் பார்த்துத் தன்னுடன் பேசியவன், தன் சிநேகிதன் சந்திரகாந்தன் எனக் கண்டு "சந்திரகாந்தா! 'எலிக்கு வேதனை, பூனைக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல், நான் மனவேதனையுற்றிருக்கும்போது நீ பரிகாசம் செய்கிறாய். நீ சொல்வதின்படி என் மனைவி என்னிடம் நடந்துகொண்டால் என்னைப்போல் பாக்கியசாலி எவனுமிரானே! இப்படி ஏன் தனித்து நின்று புலம்பித் தவிக்கிறேன்! நீ சற்றுத் தாமதித்து வந்திருந்தால் என் பிணத்தையே பார்த்திருப்பாய்" என்று விசனத்துடன் கூறினான்.

சந்திரகாந்தன்:—நீ சொல்லுவது எனக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது. உன்னைப்போல் அதிஷ்டசாலி எவருமில்லையென்றல்லவோ யாவரும் பேசிக்கொள்ளுகிறார்கள். உன் மனைவி சகல அம்சங்களும் பொருந்தினவளாச்சே! திவான் பகதூரின் மகள்; பதினாயிரம் ரூபாய் சீதனத்துடன் வந்தவள்; பி. எ. பட்டம் பெற்றவள்; எம். பி. பி. எஸ். பரீட்சையில் தேறி, வைத்திய உத்தியோகம் வகிக்கிறவள்; அழகிலோ இரதியைப் போன்றவள். இன்னும் உனக்கு என்ன தேவையென்று வருந்துகிறாய்?

சாந்தசீலன்:—திவான் பகதூர் புத்திரியானதால்தான் 'அடே! ஏர் ஓட்டி மகனே!' என இனிமையாய் அழைக்கிறாள்; கனத்த சீதனம் கொண்டுவந்ததால்தான் 'வெங்கப்பயலே!' என விரும்பி அழைக்கிறாள்; அதிகம் படித்திருப்பதால்தான் 'மடப்பயலே!' என மரியாதையாய் அழைக்கிறாள்; வைத்திய உத்தியோகம் பார்க்கிறதால்தான் 'மண்டையை உடைப்பேன்' என மகிழ்ந்து கூறுகிறாள்; இரதியானதால்தான் 'அடா,

அவலட்சணமே!' என அருமையாய் அழைக்கிருள். இவ்வளவு அருமை பெருமையுடன் வாழும் எனக்கு இனி என்ன குறை?

சந்திரகாந்தன்:—இவ்வளவுதானு உன் மனையாளின் யோக்கியதை? 'ஆளைப்பார்த்தால் அழகு, வேலையைப்பார்த்தால் இழவு' என்ற பழமொழியை அவள் ரூபிக்கிருளாக்கும்.

சாந்தசீலன்:—உன் மனைவியும் என் மனைவியைப்போலவே அந்தஸ்தும், பணமும், கல்வியும், அழகும் உடையவளாயிற்றே! அவள் உன்னிடம் எப்படி நடந்துகொள்ளுகிருள்?

சந்திரகாந்தன்:—நீ சொல்லிய யாவும் அவளிடம் அமைந்திருப்பினும், அவைகளை அவள் கொஞ்சமேனும் காட்டிக் கொள்ளுகிறதில்லை. எந்த விஷயத்திலும் அவளுக்குக் கீழான என்னிடம் அவள் நடந்துக்கொள்ளுவது மிகவும் பாராட்டத் தக்கது. அவள் சகல நற்குணங்களுக்கும் உறைவிடமானவள்.

சாந்தசீலன்:—ஓ! அப்படியா? அப்படியாயின் அவள் குணுதிசயங்களைச் சற்று விவரமாகக் கூறு. சந்திரா! நீ அநுபவிக்கும் இன்பத்தைக் கேட்டாவது என் மனம் கொஞ்சம் மகிழ்வடையட்டும்.

சந்திரகாந்தன்:—நான் உயர்ந்த பதவியிலிருந்தும், சொற்பச் சம்பளத்தில் குமஸ்தாவாயிருந்த என் தந்தையை வேலையை விட்டுவிட்டு இளைப்பாறும்படி சொல்ல, என் புத்திக்குத் தோன்றவில்லை. எனக்கு விவாகமானதும் என் மனையாள் செய்த முதல் வேலை, என் பெற்ருேரை எப்பொழுதும் தன்னுடிருக்கும்படி என் வீட்டிற்குத் தருவித்துக்கொண்டதே. அது மாத்திரமல்ல; ஒவ்வொரு நாளும் அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளை முன்னர் செய்துவிட்டே, மற்ற விஷயங்களைக் கவனிப்பாள். எனக்கு விருப்பமானவைகள் எவை என்றறிவதிலேயே, எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாயிருப்பாள். அவைகளை நான் சொல்லாமலே, தானே உணர்ந்து, நிறைவேற்றி என்னை மகிழ்விப்பாள். நான் வீட்டிலிருக்கும் பொழுதெல்லாம் என் பக்கத்

தமர்ந்து, உள்ளன்புடன் மலர்ந்த முகங்காட்டி, இன்னுரையாடி இன்புறச்செய்வாள். என்னிடம் காணப்படும் பிழைகளைப் பெரிதாய்ப் பாராட்டாது சாந்தமாய் எடுத்துக்காட்டி, அவைகளை நான் மீண்டும் செய்யாதிருக்க என் மனம் வருத்தமடையா வண்ணம் ஞானமாயும், அன்பாயும் புத்தி புகட்டுவாள். நான் வெளியிற் சென்றிருக்கும் பொழுது வீண் காலம் போக்காமல், வேலையாட்கள் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்யும்படி அவர்களை மேற்பார்த்துக்கொள்ளுவாள். வெளியிற் சென்று வீண் உரையாடாள். குடும்ப விஷயமான கவலை ஒன்றும் எனக்களியாள். என் உத்தியோக விஷயமாய் ஏதாவது கவலை ஏற்படின், வேண்டிய தேறுதல் கூறி ஏற்ற ஆலோசனை சொல்லுவாள். யாவரிடத்தும் மரியாதையாயும், அன்பாயும் நடந்துகொள்ளுவாள். குடும்பத்திலும், வெளியிலுமுள்ள ஏழைகளுக்கு இல்லையென்று சொல்லாமல் தன் சௌகரியத்தைக் குறைத்தாவது உதவி செய்வாள். ஆகவே,

"அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப் பொறையும்—வன்னமு (க)
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசி லிவை யுடையாள் பெண்"

என்றபடி, அவள் எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கிறாள்.

சாந்தசீலன் :—சந்திரா! இவ்வித பாக்கியம் எனக்குக் கொடுத்துவைக்கவில்லையே! இதெல்லாங்கூட வேண்டாமப்பா! என்னை என் மனைவி அவமரியாதையாய்ப் பேசாமலிருந்தால் அதுவே எனக்குப் போதும். நான் எவ்வளவோ பொறுமை காட்டியும், அன்பாகப் புத்தி சொல்லியும் அவள் இழிகுணம் மேலும், மேலும் அதிகப்படுகிறதே தவிர சிறிதும் குறைந்தபாடில்லை. உயர்தரக் கல்வி பெற்ற பெண்மணிகள் யாவரும் மிகுந்த குணவதிகளாயிருப்பார்களென நான் எண்ணியது பொய்த்துப் போயிற்று. ஆதலால் கடலில் மூழ்கி என் உயிரை மாய்த்துக் கொள்ளவே இவ்விடம் வந்தேன்.

சந்திரகாந்தன் :—சாந்தா! நீ சொல்வதைப் பார்த்தால் உனக்கும், உன் மனைவிக்குமுள்ள மனமுறிவு 'எந்நேரமுமுள்ள இளைய சிரிப்பாணி' எனத் தோற்றுகிறது. அப்படியிருக்க உன் உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டுமென்ற விபரீத புத்தி, இன்று மட்டும் உண்டானதற்குக் காரணமென்ன?

சாந்தசீலன்:—இன்னும் சில தினங்களில் என் மைத்துனிக்கு விவாகம் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. கலியாண தினத்தன்று அவளுக்கு இனாம் அளிக்க, சுமார் ஆயிரம் ரூபாய் விலைபெறுமான வைரமோதிரம் ஒன்று வாங்கிவர, என் மனைவி எனக்கு ஆக்ஞாபித்தாள். 'அவ்வளவு பணம் தற்சமயம் என்னிடமில்லையே' என்று நான் சொல்ல, கடன் பட்டாவது கொண்டுவரவேண்டுமென உத்தரவிட்டாள். கடன் படப் பிரியமில்லாமல், அவள் நிதிச் சாலையில் போட்டிருக்கும் பணத்தில் ஆயிரம் ரூபாய் அச்சமயம்கொடுத்தால் பின்னால் அதைத் திரும்பச் செலுத்திவிடுவதாய் வாக்களித்தேன். அதைக் கேட்டதும் "இருந்திருந்தும் பிச்சைக்காரப் பயலாகிய உனக்கு வாழ்க்கைப் பட்டேனே! இந்தாடா! உன் மூன்று காசுத் தாலி! இனி என் முகத்தில் விழியாதே" என்று சொல்லித் தாலியை அவிழ்த்து என்னிடம் வீசி எறிந்துவிட்டாள். அதைப் பார்த்ததும் எனக்குக் கோபம் பொங்கினாலும், ஒன்றும் பேசாது தாலியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்— எனக் கண்ணீர் விட்டான்.

சந்திரகாந்தன் :— சாந்தா! வருத்தப்படாதே. பொறுத்தது பொறுத்தாய். இன்னமும் பொறுமையாயிரு. நீ சுகப்படுங் காலம் வரும். வீட்டிற்குப் போ—என்று அவனைச் சாந்தப் படுத்திச் சென்றான்.

சாந்தசீலனோ, சந்திரகாந்தன் சற்றுத்தூரஞ்சென்று தன் கண்ணிற்கு மறைந்ததும், கொஞ்சமும் முன்பின் யோசியாமல் கடலில் குதித்தான்.

ஏ! சுனதி! என்னே நீ உன் கணவனிடம் காட்டிய மமதையும், கொடுமையும்! இதனால் உன் குடும்பம் சீர்குலைய நேரிட்டதே! இதை நினைக்க நினைக்க நமது மனம் பதறுகிறது.

சந்திரகாந்தன் வீட்டிற்குத் திரும்பியதும், தெருவாசலில் நின்று அவனது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த அவன் மனைவி சுசீலி "நாதா! ஏன் இன்று இவ்வளவு நேரம்?" எனக் கனிவுடன் கேட்டாள்.

சந்திரகாந்தன் :—கண்ணே! டாக்டர் சுனதியை உனக்குத் தெரியுமா?

சுசீலி :—நேரில் தெரியாது. ஆனால் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சந்திரகாந்தன் :—அவளுடைய கணவன் சாந்தசீலன் எனது ஆப்த நண்பன். அவள், அவனை இன்று வீட்டைவிட்டு வெளியில் துரத்திவிட்டாள். அவனைக் கடற்கரையிற் கண்டு சற்றுநேரம் பேசி வந்தேன். அதனால்தான் தாமதம்—என்று விவரம் தெரிவித்தான்.

சுசீலி :—சாந்தசீலர் வீடு திரும்பியிருப்பாரென்று நான் நினைக்கவில்லை. மிகவும் பேதலித்திருந்த அவர் மனம் அவ்வளவு சீக்கிரத்தில் சாந்தமடைந்திராது. நாதா! அவரை அந்நிலைமையில் தனியே விடாது உங்களுடன் அழைத்து வந்திருந்தால் நலமாயிருந்திருக்கும்.

சந்திரகாந்தன் :—பெண்ணே! நீ சொல்லுவது வாஸ்தவமே. நான் அவனுடைய இல்லம் சென்று, அவன் அங்கு இல்லையாயின் அவனைத் தேடி அழைத்து வரட்டுமா?

சுசீலி :—அப்படிச் செய்வதே உசிதம். சீக்கிரம் போய் வாருங்கள்—எனச் சொல்லி அனுப்பினாள்.

சந்திரகாந்தன் அவ்விதமே சென்று சாந்தசீலனை வீட்டிலும், கடற்கரையிலும் காணாமல் துக்கத்துடன் திரும்பினான்.

சாந்தசீலனின் மனைவியோ, அவன் அன்று வீட்டுக்குத் திரும்பி வாராததை நினைத்து மனம் வருந்தவில்லை. கோபம் தணிந்தபின், தானாய் வருவானென்று திண்ணக்கமாயிருந்தாள்.

இது நடந்த இரண்டு தினங்களுக்குப் பின் சந்திரகாந்தன் தன் வீட்டில் பத்திரிகை வாசித்துக்கொண்டிருக்கையில் "ஐயோ! சாந்தசீலா! உனக்கு இவ்வித முடிவா வரவேண்டும்!" எனச் சத்தமிட்டு அழுதான். அவ்வழு குரலைக் கேட்டு ஓடி வந்த சுசீலி "நாதா! என்ன விசேஷம்?" என்று பதை பதைப்புடன் கேட்க, "சுசீலி! என் நண்பன் சாந்தசீலன் கடலில் விழுந்து உயிர் துறந்தானும்" என்று விசனத்துடன் கூற, அவளும் கண்ணீர் விட்டு "என்னே! சுனதியின் துரதிஷ்டம்" எனப் பிரலாபித்தாள்.

தன் கணவனின் மரணத்தை அறிந்த சுனதி, தான் மிகவும் விசனமுறுவதாய் வெளிக்குக் காட்டிக்கொண்டாலும் உண்மையில் கிஞ்சித்தும் வருந்தவில்லை. அச்சமயம் அவள் பூரண கர்ப்பிணியாயிருந்தாள். ஒருநாள் அவள் கடற்கரைக்குத் தனிமையாய் உலாவச் சென்றாள். அவள் கடற்கரையில் உலாவிக் கொண்டிருக்கையில் திடீரென அவளுக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்தது. வீட்டிற்குத் திரும்ப முயன்றாள். ஆனால் கொஞ்சத் தூரம் முதலாய் அவளால் நடக்கக்கூடவில்லை. பின் நிற்கவும் முடியாமல் உட்கார்ந்தாள். சற்றுநேரங் கழித்து உட்கார்ந்திருக்கவும் இயலாமல் படுத்துப்பார்த்தாள். அதுவும் சரிப்படாமல் எழுந்து, கொஞ்சம் நடக்க எத்தனித்தாள். அதற்கும் சக்தியற்று அங்கேயே மணலில் சாய்ந்தாள். அது சமயம் தனக்கு உதவி செய்ய அவ்விடத்தில் எவருமிலர் எனக் கண்டு, அவ்வெளியான இடத்தில் எவ்விதம் பிரசவிப்பதெனவும், மற்றும் வேண்டிய சௌகரியங்களுக்கு என்ன செய்வதெனவும் தயங்கினாள். அவ்வாபத்தான நிலைமையில், தான் ஆதரவற்றவளாயிருப்பதை நினைத்து மனம் வருந்தினாள். வர, வர வேதனை அதிகரிக்கவே, வீரிட்டழுதாள். உச்சந்தலை கொதித்தது; முகம் வியர்த்தது; தொடைகள் நடுங்கின. நா வறட்சிகொண்டு, தண்ணீர், தண்ணீரெனக் கதறினாள். கேட்பார் யாருமிலர். அந்தோ! பரிதாபம்!

சுனதி பிரசவவேதனைப் பட்டுக்கொண்டிருந்த இடத்திற்குச் சற்றுத்தூரத்தில் செம்படவர்கள் வசிக்கும் பல குடிசைகள்

உள. அங்கே தனியாக இருந்த சிறு குடிசை ஒன்றில் சுமார் நாற்பத்தெட்டுப் பிராயமுள்ள ஒரு ஸ்திரி சுமார் பதினைந்து வயதுடைய சாரதா என்ற தன் மகளுடன் வசித்துவந்தாள். சுமுகி எனப் பெயர் கொண்ட அம்மாது கைப்பாடுபட்டு, தன் காலத்தைக் கழிக்கும் பரம ஏழையாயிருந்தாள். அவள் சமீப காலத்தில் நோயுற்று, பாயும் படுக்கையுமாயிருந்தாள். அவள் வியாதிப்பட்டபின் அவளுக்கு வேண்டிய பணிவிடைகளையும், வீட்டு வேலையையும், பிழைப்புக்கு வேண்டிய கைத்தொழிலையும் செய்யவேண்டியது சிறு பெண்ணாகிய சாரதாவின் பொறுப்பா யிற்று.

ஒருநாள் சுமுகி, திடீரென "சாரதா! சாரதா!" எனக் கூப்பிடவும், அடுப்பில் வேலையாயிருந்த சாரதா "அம்மா!" என்றோடி வந்தாள். வரவும், சுமுகி, அவளைத் தன் அருகில் இருக்கச்சொல்லி ஒரு கரத்தால் அணைத்துக்கொண்டு "மகளே! நான் இனி நெடுநேரம் உயிரோடிரேன். இப்பொல்லாத உலகத் தில் உன்னைத் தனியே விட்டுப் பிரிய வேண்டியதாயிருப்பதை நினைக்க, நினைக்க என் மனம் தாங்கொணாத் துயரமடைகிறது. துக்கத்தைக் கொடுக்கும் சில இரகசியங்கள் என் மனத்தில் புதைந்து கிடக்கின்றன. நீ சிறு பிள்ளையானதால் அவைகளை இதுவரை உனக்குத் தெரிவிக்கவில்லை. இப்பொழுது நான் மரணத்தறுவாயிலிருப்பதால் என் ஆவி பிரியுமுன் அவைகளை உனக்குச் சொல்ல விரும்புகிறேன்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே மூர்ச்சித்து விட்டாள். அதைப் பார்த்ததும், சாரதா தன் தாய் உயிர் நீத்தாளென நினைத்து "ஐயோ, அம்மா! இனி நான் என்ன செய்வேன்!" எனக் கதறினாள்.

யாதொரு ஆதரவுமின்றித் தனித்து விடப்பட்ட சாரதா, மூர்ச்சித்திருந்த தன் அன்னையின்மேல் விழுந்து அவளைக் கட்டிக் கொண்டு பலவாறாய்ப் புலம்பி அழுதாள். அழுதழுது அவள் கண்களும் வீங்கிச் சிவந்தன. அவ்விதம் அவள் விடாது அங்க லாய்த்துக் கொண்டிருக்கையில், சுமுகியின் கண்ணிமைகளும்

உதடுகளும் சற்று அசைந்தன. அதைக் கண்ணுற்ற சாரதா, தன் தாய், தான் நினைத்தபடி இறந்துபோகவில்லையென்று சந்தேகித்து ஓடிப்போய்க் கொஞ்சம் குளிர்ந்த நீர் கொண்டு வந்து சுமுகியின் முகத்தில் தெளிக்க, அவள் நெடுமூச்செறிந்து கண்களைத் திறந்தாள். திறந்ததும், சாரதா "அம்மா! நீ மரித்துப்போனாயென்று நினைத்து அழுதேன். கடவுள் என்மேலிரங்கி உனக்கு உயிர் கொடுத்தார். இப்போ உன் உடம்பு எப்படியம்மா இருக்கிறது? ஓடிப்போய் வைத்தியரை அழைத்து வரட்டுமா?" என்று கேட்க, அவள் தலையசைத்தாள். உடனே சாரதா எழுந்து வைத்தியரை அழைத்துவர ஓடினாள்.

அவள் கடற்கரையோரமாய் ஓடும்போது 'தண்ணீர், தண்ணீர்' எனக் கதறிக் கொண்டிருந்த சுனதியைக் கண்டு "அம்மா! உனக்கு என்ன செய்கிறது?" என வினவினாள்.

சுனதி:—(கண்ணீர்விட்ட வண்ணமாய்) பெண்ணே! நான் பிரசவ வேதனைபடுகிறேன். எழுந்து வீட்டிற்குப்போக இயலாதவளாயிருக்கிறேன். எனக்கு உதவி செய்ய வைத்தியசாலையிலிருந்து ஒரு மருத்துவச்சியை அழைத்து வருவாயா? அழைத்து வந்தால் உனக்கு மிகப் புண்ணியமுண்டு. முதலில் தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. ஐயோ! என் உயிர் சீக்கிரம் போய்விடும்போலிருக்கிறதே!

சாரதா:—அம்மா! அழாதே. தைரியமாயிரு. அதி சீக்கிரத்தில் தண்ணீர் கொண்டுவருகிறேன். மருத்துவச்சியையும் அழைத்துவருகிறேன். நீ யார்? உன் வீடு எங்கேயிருக்கிறது? தெரிவித்தால் உன் வீட்டாரையும் கூட்டி வருகிறேன்.

சுனதி:—நான்தான் டாக்டர் சுனதி. கீழ்க்கோடி வீதியிலிருக்கும் சாந்தவிலாசந்தான் நான் குடியிருக்கும் வீடு. அங்கே தற்சமயம் என் வேலைக்காரர்கள் மட்டுமே இருக்கிறார்கள்.

சாரதா:—அப்படியாயின் சாந்தவிலாசத்திலிருந்த சாந்தசீலர் உனக்கு என்ன முறையாவர்?

சுனதி:—நான் எவ்வித உதவியுமின்றி இவ்வாறு அவதிப்பட என்னைப் பிரிந்து சென்று கடலில் குதித்திறந்த அச்சண்டாளன் என் கணவனே. அவரை உனக்குத் தெரியுமோ?

சாரதா:—ஆம். அவரை முன்னொருநாள் கடற்கரையில் சந்தித்திருக்கிறேன். அவரை இகழாதே. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடனல்லவா? இதோ போய் நொடிப்பொழுதில் தண்ணீர் கொண்டு வருகிறேன்—எனச் சொல்லி விரைந்து சென்றாள்.

அவள் கொஞ்சத்தூரம் போகவும் சமீபத்தில் ஒரு கிணற்றையும், அதன் பக்கத்தில் கயிற்றுடன் ஒரு வாளியையும் கண்டு அவ்வாளிகொண்டு தண்ணீர் இறைக்கையில் கிணற்றிற்குள் தவறி வீழ்ந்தாள். அச்சமயம் அவ்வழியே சென்ற சுமார் இருபது பிராயமுடைய ஓர் அழகிய வாலிபன், அவள் கிணற்றிற்குள் வீழ்ந்ததைக்கண்டு அக்கணமே ஓடிப்போய் அதற்குள் குதித்து மூழ்கிப்போன சாரதாவைத் தேடிப்பிடித்து அவளுடன் தண்ணீருக்குமேல் கிளம்பினான். கிளம்பவும், கிணற்றிலிருந்து இலகுவாய் வெளியேறப் படிகள் இருந்ததைக் கண்டு அவைகளின் வழியாய் சாரதாவுடன் கரையேறினான். கரையேறியதும், நீரை அதிகமாய்க் குடித்து மூர்ச்சித்திருந்த சாரதாவிற்குத் தண்ணீரைக் கக்குவதற்கு வேண்டிய பல பக்குவங்களைச் செய்து தெளிவுண்டாக்கினான்.

அவள் தெளிவடைந்ததும் தன் தாயின் நிலைமையையும், டாக்டர் சுனதியின் நிலைமையையும் தெரிவித்தாள். உடனே அவன் வாளியில் தண்ணீரெடுத்துக்கொண்டு சாரதாவுடன் சுனதியிருக்குமிடம் சென்றான். ஆனால் சுனதியையோ அங்கு காணவில்லை.

> "மனை மாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
> யெனை மாட்சித் தாயினு மில்"

அத்தியாயம்—2

கணவனைப் போற்றிய கல்விக் களஞ்சியம்.

"படைப்பதூஉ மக்கட்பெறுவதூஉம் பெண்பான்
முடிப்பதூஉ மெல்லாருஞ்செய்வர்—படைத்ததனு
லிட்டுண்டில் வாழ்க்கைபுரிந்துதா நல்லறத்தே
நிற்பாரே பெண்டிரென் பார்"

சாந்தசீலன் கடலில் விழுந்திறந்ததை அறிந்து சந்திர காந்தன் புலம்பிக்கொண்டிருந்த அதே சமயம் குமரிபுரத்திற்குச் சுமார் ஐம்பதுமைல் தூரத்திலிருக்கும் நந்தனூர்குடி என்ற பட்ட ணத்தில் திவான் பகதூர் இராமலிங்க முதலியார் வீட்டில் சுமதி எனப் பெயர்கொண்ட ஒரு பெண்மணி "அண்ணு! ஒரே தங்கை யாகிய என்னைத் தனியே விட்டுச் செல்ல உன் மனம் எப்படித் துணிந்தது? இவ்வாலிப வயதிலேயே உன் உயிரைத் தானுகவே மாய்த்துக்கொண்டாயே! இதற்காகவா அயல்நாடு சென்று அதி கம் கற்று வந்தாய்! செல்வமும், கல்வியும், அழகும் பொருந்திய மாதை மணந்தாய்! உலகிலுனக்கு ஒரு குறைவுமில்லையே! அப் படியிருக்க, உயிரை வெறுக்கத்தக்கதாய் உன் மனத்தை வருத்திய துயரம் யாது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! தம்பியைத் தான் சிறு வயதிலேயே பறிகொடுத்தேன். அரிய பெற்றோரை யுந்தான் இழந்தேன். உன்னையுமா இழக்கவேண்டும்? முன்னமே என் குடும்ப வாழ்க்கையில் மனமுடைந்திருக்கும் பாவி எனக்கு, இவ்வுலகில் இனி ஆதரவு யார்?" என்று தரையில் புரண்டு, புரண்டு அழுதுகொண்டிருந்தாள்.

இவள் சாந்தசீலனின் தங்கையும், சுனதியின் சகோதரன் லோகானந்தனின் மனைவியுமாவள். எம். எ. பட்டம்பெற்றவள்

நல்ல குணவதி. லோகானந்தன், தன் தந்தை இராமலிங்க முதலியாரைப் போலவே பி. எ., பி. எல். பட்டம் பெற்று வக்கீல் வேலை பார்த்து வந்தான். அவன் தன் பெயருக்கொப்ப உலகத்திலுள்ள சகல போகங்களையும் தட்டுத் தடையின்றி அநுபவித்து ஆனந்தங்கொள்பவன். சாந்தசீலன் இறந்துபோனதாய் சந்திரகாந்தன் அறிந்த அதே நேரத்தில், சுமதியும் அவ்விஷயத்தைப் பத்திரிகை மூலமறிந்து, முன் சொல்லியபடி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

அத்தருணம் வெளியில் போயிருந்த லோகானந்தன் நன்ருய் மதுபானம் செய்துவிட்டு வீட்டிற்கு வரவும் தன் மனைவி அழுது கொண்டிருப்பதைப் பார்த்து "ஏண்டி! கழுதைபோல் புரண்டு கொண்டு அழுகிருய்? உனக்கென்ன கேடு வந்தது? வெளியிற் போய்க் களைத்து வீட்டிற்கு வரும்போது அழுமூஞ்சியைக் காட்டிக் கொண்டிருக்கிருயே! சீக்கிரம் எழுந்துபோய் பிராந்திப்புட்டியை எடுத்துவா" என்று அவளைக் காலால் ஒரு உதை உதைத்தான். சுமதி தன் அழுகையை நிறுத்தி அமைதியுடனெழுந்து ஊமைக் கண்ணீர் வடித்த வண்ணமாய் "நாதா! என் அண்ணன் சாந்தசீலன் காலஞ்சென்ருனென்றறிந்து அழுதுகொண்டிருந்தேன். தங்களை மதுபானம் அருந்தவேண்டாமென்று எத்தனை தடவையோ கெஞ்சியும் அத்துர்ப்பழக்கத்தை இன்னும் விடாமலிருக்கிறீர்களே! தாங்கள் இப்போது அருந்தியிருக்கிறது போதும். இனியும் வேண்டாம். நாம் உடனே குமரிபுரம் சென்று அண்ணியை ஆறுதல்படுத்தி வருவோம். நம் மோட்டார் வண்டியைக் கொண்டுவரச் சொல்லுங்கள்" என்று பணிவுடன் கூறினுள். "குடியாத வீடு விடியாது" என்பதை மேற்கோளாகக் கொண்டிருந்த லோகானந்தன் அதிகக் குடியினுல் வெறிகொண்டிருந்ததால் அவள் சொன்னதை அலட்சியம் செய்து தன் தங்கையின் கணவன் இறந்தானென்பதையும் பெரிதாயெண்ணுமல் "முதலில் பிராந்திப் புட்டியை எடுத்துவா, பிறகு குமரிபுரம் போவதைப்பற்றி யோசிக்கலாம்" என்ருன். அவள் போகாது தயங்கி நிற்கவே "கீழ்ப்படியாத முண்டை! உதைத்தால்தான்

போவாய்" என்று அவனை அடிக்கப்போனான். அப்பொழுது தலை மயக்கத்தினால் காலிடறித் தொப்பெனக் கீழே விழுந்ததில் அவன் தலை, அருகிலிருந்த மேசைக்காலில் மோத, இரத்தம் பீறிட்டது. உடனே சுமதி காயத்தைக் கழுவி அதில் மருந்து வைத்துக் கட்டிவிட்டு, தன் மாமியாரிடம் சென்று விவரம் தெரிவித்தாள். அவள் ஓடிவந்து மகனது நிலைமையைப் பார்க்கவும் மிகவும் வருத்தமுற்று, சுமதியின்மேல் கோபங்கொண்டு "அடி! என் அருமை மகனைக் கொன்றாயே! அவன் சொன்னபடி நீ கேட்டிருந்தால் இவ்வாபத்து அவனுக்கு நேரிட்டிருக்குமா? அவன் குடித்தால் உனக்கென்ன? உன் அப்பன் வீட்டுச் சம்பாத்தியமா போகிறது? அடங்காப் பிடாரி உன்னைக் கட்டிக்கொண்டதாலன்றோ அவன் இப்படி அவதிப்படுகிறான்! உன் அண்ணன் இறந்ததுதானே உனக்குப் பெரிதாய்ப்போயிற்று! என் குமாரன் சொன்ன வார்த்தையை மதியாமற் போனாயே! உன் சகோதரன் கொழுத்துப்போய்க் கடலில் விழுந்திறந்தான். என் புத்திரனையுமா சாகச்சொல்லுகிறாய்? உன் தமையன் என் மகனைப்படுத்தின பாட்டிற்குத் தக்க பலனை அடைந்தான். சனியன் தொலைந்தான். இப்பொழுதுதான் அவளுக்கு நல்ல காலம் பிறந்தது. உன் உடன்பிறந்தானோடு நீயும் செத்தால் எங்கள் கலி நீங்கும்" எனச் சரமாரியாய் வைதாள். சோளப்பொரி பொரிந்தாற்போல் அவள் பேசிய கடுமொழிகளை, சுமதி

"கடித்துக் கரும்பினைக் கண்டகா நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து"

எனும் ஆன்றோர் மொழியைப் போற்றிப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு "அத்தை! என்னுடன் ஒரு கை பிடியுங்கள். உங்கள் மகனைக் கட்டிலில் படுக்கவைப்போம்" என்றாள். பின் இருவருமாய்க் கூடி லோகானந்தனைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்தார்கள். அவ்வமயம் அவன் தகப்பனார் வரவும் விஷயங்களை அறிந்து தன் மருமகன் சாந்தசீலன் மரித்துப் போனதற்

காக மிகவும் துக்கித்தார். அவர் மனைவி காந்தாரியும் அதிகமாய் விசனப்படுவதுபோல் தன் கணவன்முன் காட்டிக்கொண்டாள்.

மறுநாள் லோகானந்தன் சுரத்தினால் வருந்தினான். வர, வர வியாதி அதிகரித்தது. வைத்தியர் பல சிகிச்சைகள் செய்தும் அவனுக்கு நோய் நீங்கின பாடில்லை. சுமதி அல்லும், பகலும் அவன் அருகிலிருந்து வேண்டிய பணிவிடைகள் புரிந்துவந்தாள்.

லோகானந்தன் அதிகமாய் நோயுற்றிருந்ததைக் கேள்விப் பட்டு அவனுக்குக் கடன் கொடுத்திருந்த பலபேர் வந்து பணத் தைக் கொடுக்கும்படி அவனைத் தொந்தரவு செய்தனர். அவர் களைக் கண்டதும் இராமலிங்க முதலியாரும், காந்தாரியும் ஒளித் துக்கொண்டனர். சுமதியோ தன் நகைகளை விற்றுக் கடன் களைத் தீர்த்தாள்.

சாரதாவைக் கிணற்றிலிருந்து மீட்ட வாலிபன் அவளை அவள் இல்லத்தில் விட்டு விரைந்துபோய் வைத்தியரை அழைத்து வந்தான். வைத்தியர் சுமுகிக்கு வேண்டிய பரிகாரங்கள் செய்து அவளை அயர்ந்த நித்திரைக்குள்ளாக்கினார். அவள் விழித்தெழும் பொழுது நல்ல சுகமாயிருப்பாளென்றும், எழுந்தவுடன் சுடச் சுடப் பால் அருந்தக் கொடுக்கவேண்டுமென்றும் சாரதாவிடம் தெரிவித்துச் சென்றார்.

வைத்தியர் போனதும் சாரதா வாலிபனை நோக்கி "ஐயா! பால் வாங்க என் கையில் பணமில்லை. ஆனால் என் னிடம் ஒரு சிறு தங்க மோதிரமிருக்கிறது. அதைத் தருகிறேன். அதை அடகு வைத்துக் கிடைக்கும் பணத்தைப் பெற்றுக் கொஞ்சம் பால் வாங்கி வாருங்கள். மீதிப்பணத்தை என் அன்னை பலப்படும் வரை செலவிற்கு வைத்துக்கொள்ளுவேன்" என்று சொல்லித் தன் கைவிரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவனிட மளித்தாள். அவன் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து "சாரதா! நானும் உன்னைப்போல் ஏழையேயாயினும், நான் வேலை செய்து மீத்து வைத்திருக்கும் கொஞ்சப் பணம் தற்சமயம்

என் கைவசமிருக்கிறது. அதை உன் செலவிற்குக் கொடுத்துப் போகிறேன். பாலும் நானே வாங்கிவருகிறேன்" என்றுரைத்து ஐந்து ரூபாய்க்கடுதாசி ஒன்றை அவளிடம் கொடுத்தான். அவள் அதை ஏற்றுக்கொள்ளாமல் "என் தாயார் இப்பணத்தை உங்களுக்குத் திரும்பக் கொடுக்கும் வரை என் மோதிரத்தை ஈடாக வைத்திருக்கச் சம்மதித்தால் மட்டும் வாங்கிக்கொள்ளுவேன்" எனச் சாதித்தாள். அவள் பிடிவாதத்தைக் கண்ட வாலிபன் மிகுந்த மனவருத்தத்துடன் அவள் விருப்பத்திற்கிணங்கி மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு ஐந்து ரூபாய்க் கடுதாசியை அவளிடம் கொடுக்க, அவள் "கொஞ்சம் பால் வாங்கிக்கொண்டு மீதியைக் கொண்டுவாருங்கள்" என்றாள். அவ்விதமே வாலிபன் சென்று, சிறிது நேரத்தில் பாலுடனும், மீந்த பணத்துடனும் திரும்பி வந்து அவைகளைச் சாரதாவிடம் அளித்தான். அவள் மிகுந்த நன்றியுடன் அவைகளை ஏற்றுக்கொள்ள, அவன் மறுநாள் திரும்ப வருவதாய்ச் சொல்லிப் போனான்.

வாலிபன் சென்ற கொஞ்ச நேரத்தில் சுமுகி சுகமாய் விழித்தெழுந்தாள். உடனே சாரதா அவளைப் பால் குடிக்கச் செய்து, நடந்த விஷயங்கள் யாவையும் அவளுக்குச் சவிஸ்தாரமாய்த் தெரிவித்தாள்.

மறுநாள் திரும்ப வருவதாய்ச் சாரதாவிடம் சொல்லிப் போன வாலிபன் அவ்விதம் செல்லவில்லை. அதனால் சுமுகி அவன் நடத்தையைச் சந்தேகித்தாள். சாரதாவை நோக்கி "அம்மா! முன் பின் அறியாத ஒருவனிடம் விலையுயர்ந்த மோதிரத்தை ஐந்து ரூபாய்க்காகக் கொடுத்துவிட்டாயே! நம் மிகுந்த வறுமையிலும் அதை மட்டும் விற்காது ஒரு ஞாபகார்த்தமாக வைத்திருந்தேனே! ஆனால் உன்னைக் குறை கூறுவது நியாயமன்று. என்மேலுள்ள அன்பினாலும், உலகத்தின் சூதை அறியாததாலுமே அப்படிச் செய்தாய். போகட்டும். அவ்விளைஞனின் ஊரையும், பெயரையுமாவது கேட்டறிந்தாயா?" என்று வினவினாள்.

சாரதா :—இல்லை. ஆனால் நீ சந்தேகிக்கிறபடி அவ்வாலிபர் என்னை ஏமாற்றிப் போனாரென்று நான் நினைக்கவில்லை. அவர் வாராததற்கு ஏதாவது தகுந்த காரணமிருக்கவேண்டும்.

சுமுகி :—நீ சிறுபிள்ளையானதால் எவரையும் எளிதில் நம்பி விடுகிறாய். என்றாலும் பாதகமில்லை. மோதிரம் பெரிதல்ல. அவன் உன்னை மானபங்கத்திலிருந்து தப்புவித்தானே! அதுவே எனக்குப் போதும்—எனச்சொல்லித் தன் மனத்தைச் சாந்தப் படுத்திக்கொண்டாள்.

அடுத்த நாள் சாரதாவின் வீட்டிற்குச் சுகந்தி என்ற ஒரு பெண்மணி வந்து, வாசலில் நின்ற சாரதாவை நோக்கி "சுமுகி அம்மாள் வீடு இதுதானா?" என்று கேட்டாள்.

சாரதா :—ஆம்.

சுகந்தி —நீதான் சாரதாவோ?

சாரதா :—ஆம்.

சுகந்தி :—(ஒரு மோதிரத்தைச் சாரதாவிடமளித்து) உன் னிடம் இம்மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட இளைஞன் இங்கே வரமுடியாதபடி நோயுற்றிருப்பதால், இதை உன்னிடம் கொடுக் கும்படி என்னைக் கேட்டுக்கொண்டான்.

சாரதா :—அப்படி அவருக்கு என்ன ஆபத்து நேரிட்டது?

சுகந்தி :—உன் தாயின் தேகநிலைமையை அறிய நேற்று அவன் இங்கு வரும்போது ஒரு மோட்டார் வண்டி அதி விரை வாய் அவனுக்கு எதிராக வந்தது. அதற்கு முன்னால் நடந்து போய்க்கொண்டிருந்த நான் அதில் அகப்பட்டுக்கொள்ள இருந் தேன். அத்தருணம் அவன் சட்டெனப் பாய்ந்து என்னைப் பிடித்திழுத்து அவ்வாபத்திலிருந்து தப்புவித்தான். ஆனால் அவன் தவறி ஒரு பள்ளத்தில் வீழ்ந்து பெரிய கல்லொன்றில் பலமாய் மோதுண்டு அதிகக்காயமடைந்து படுக்கையிலிருக்கிறான்.

சாரதா :—(கண்ணீருகுத்தவளாய்) உயிருக்கு ஆபத்தான காயமோ ?

சுகந்தி :—இல்லை. ஆயினும் அவன் படுக்கையை விட்டெழுந்திருக்கச் சில நாட்கள் செல்லும்.

சாரதா :—அவ்வாலிபர் இப்பொழுது எங்கே இருக்கிறார் ?

சுகந்தி :—வைத்தியசாலையிலிருக்கிறான்.

சுமுகி :—(சுகந்தியை நோக்கி) அம்மா ! நீ யார் ?

சுகந்தி :—நான் பாம்பன்கோவில் சமீன்தார் இலட்சுமண முதலியாரின் சுவீகார புத்திரி சுகந்தி.

சுமுகி :—இவ்வூரில் யார் வீட்டிற்கு வந்தாய் ?

சுகந்தி :—நான் இங்கே ஒருவர் வீட்டிற்கும் வரவில்லை. எனக்கு விருப்பமில்லாத ஒருவனை மணந்துகொள்ள இலட்சுமண முதலியார் என்னை வற்புறுத்தியதால், அவருடைய வீட்டிலிருந்து வெளியேறி அவருக்கு மறைந்திருக்குமாறு இவ்வூருக்கு வந்து ஒரு வாடகை வீட்டில் தங்கியிருக்கிறேன்.

சுமுகி :—தனியாகவா இவ்வூரில் இருக்கிறாய் ?

சுகந்தி :—ஆம். ஆனால் இரவும், பகலும் என்னோடிருக்க ஒரு பெரிய மனுஷியை அமர்த்தியிருக்கிறேன்.

சுமுகி :—இவ்வூரை நீ தெரிந்துகொள்ளக் காரணமென்ன ?

சுகந்தி :—இவ்வூர் தாசில்தார் சந்திரகாந்தன் என் தமயன். அவர் இருக்கும் ஊரில் மறைந்திருப்பது நலமெனக் கருதி இங்கு வந்தேன்.

சுமுகி :—அப்படியாயின் ஏன் உன் தமயன் வீட்டிலேயே இருக்கக்கூடாது ?

சுகந்தி :—நான் அங்கிருந்தால் இலட்சுமணமுதலியாருக்குத் தெரிந்துவிடுமென்றஞ்சி அங்கே செல்லவில்லை.

சுமுகி :—சிறு பெண்ணாகிய நீ எவ்வளவு காலம் இவ்விதம் மறைந்திருக்கக்கூடும்!

சுகந்தி :—அயல் நாட்டிற்குச் சென்றிருக்கும் ஒரு வாலிபர் மீது நான் காதல் கொண்டுள்ளேன். அவரது வரவை ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்க்கிறேன். அவரை நான் சந்திக்குந்தனையும் இலட்சுமண முதலியாரின் கண்ணிற்கு அகப்படாதிருக்கக் கடவுள் கிருபை செய்தால் போதும்.

சுமுகி :—உன் காதலன் யார்?

சுகந்தி :—அவர் என் தாய்மாமன் பசுபதி முதலியாரின் மகன் புஷ்கரர். அவருக்குப் பெற்றோரில்லாததால் என் பெற்றோரிடமே வளர்ந்து வந்தார். இப்பொழுது என் பெற்றோர் என் சகோதரனோடு இவ்வூரிலிருப்பதால் இங்கேதான் வருவார்—என்றாள்.

சுகந்தியின் வார்த்தைகள் சுமுகிக்கு ஒருங்கே வியப்பையும், சந்தோஷத்தையும், துக்கத்தையும் கொடுத்தன. அவளது கண்கள் அமோகமாய் நீரைச் சொரிந்தன. அவள் சற்று நேரம் அந்நிலைமையிலிருந்து, பின் அமைதியுற்றாள்.

சுமுகி :—சுகந்தி! நீ இவ்வூரைத் தெரிந்ததின் முக்கிய காரணத்தை இப்பொழுதுதான் அறிந்தேன். நீ தனியாயிருப்பது நல்லதல்ல. என்னை நீ உன் தாய்போல் பாவித்துப் புஷ்கரன் வரும்வரை என் வீட்டில் தங்கியிருக்க விரும்புகிறேன். உன் விருப்பம் என்ன?

சுகந்தி :—என் விஷயத்தில் இவ்வளவு அநுதாபங் காட்டும் உங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவளாயிருக்கிறேன். நீங்கள் யாரென நான் அறியலாமா?

சுமுகி :—அம்மா சுகந்தி ! நீ முன் பின் அறியாத என்னை நம்பி உன் அந்தரங்க விஷயங்களை ஒன்றும் ஒளியாது என்னிடம் தெரிவித்திருக்க நான் என் விஷயங்களை உன்னிடம் அறிவிக்கத் தற்காலம் சக்தியற்றவளாயிருப்பதை நினைத்து மிகவும் வருந்துகிறேன். அவைகளை என் மகளும் அறியாள். காலம் வரும் பொழுது உங்கள் இருவருக்கும் யாவும் தெரிவிப்பேன். நான் உன் குலத்தவளே. ஆதலின் என்னோடு வசிக்க நீ யோசனை செய்யவேண்டாம்.

சுகந்தி :—அம்மா ! உங்கள் விருப்பப்படியே செய்கிறேன். வைத்தியசாலைக்குப்போய் அவ்விளைஞனுக்குத் தகவல் கொடுத்து விட்டு என் சாமான்களை எடுத்துக்கொண்டு திரும்பி வருகிறேன்—எனச் சொல்லி எழுந்தாள். அப்பொழுது சாரதா தன் தாயை நோக்கி "அம்மா ! நானும் சுகந்தி அக்காளுடன் போய் வரட்டுமா ?" என்று கேட்க, சுமுகி "நீயும் போய் அவ்விளைஞனைப் பார்த்து வா. அவனுக்கு நீ கொடுக்கவேண்டிய ரூபாய் ஐந்தையும் கொண்டுபோய் அவனிடம் செலுத்திவிடு. பகவான் தான் அந்நற்குணச் சிறுவனுக்குச் சீக்கிரம் சுகமளிக்கவேண்டும்" எனச் சொல்லி இருவரையும் அனுப்பினாள்.

பின் சுகந்தியும், சாரதாவும் முதலில் சுகந்தியின் இருப்பிடத்திற்குச் சென்று சாமான்களை வண்டியிலேற்றிச் சாரதாவின் வீட்டிற்கனுப்பிவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றனர். அவர்களைக்கண்டதும் வாலிபன் மிகுந்த சந்தோஷமடைந்தான். சாரதா அவனை நோக்கி "ஐயா ! உங்களுக்கு நேரிட்ட துன்பத்தைச் சுகந்தி அக்காள் மூலமறிந்து நானும், என் அன்னையும் அதிகத் துயரடைந்தோம். இன்று முதல் அக்காள் எங்களுடன்தான் வசிக்கப்போகிறாள். அம்மாள் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னாள்" என்று சொல்லி ரூபாய் ஐந்தையும் அவனிடம் கொடுத்தாள். பிற்பாடு இருவரும் அவனிடம் விடைபெற்று வீடு திரும்பினர்.

சற்றுத்தூரம் வரவே, அவர்களுக்கு எதிரில் வந்த ஒரு மோட்டார் வண்டி அவர்களைச் சமீபித்ததும் சட்டென நின்றது. அதிலிருந்து ஒரு மனிதன் துரிதமாய் இறங்கி சுகந்தியைப் பொட்டெனத் தூக்கி வண்டிக்குள் போட்டு, தானும் ஏறிக்கொண்டான். அக்கணமே வண்டியும் காற்றினும் வேகமாய் விரைந்துசென்றது. கண்மூடி விழிக்குமுன் நடந்த இச்செய்கையைக் கண்ட சாரதா, யாது செய்வதெனத் தோன்றாமல் "அக்கா! அக்கா!" என அலறி அழுதாள்.

ஒருநாள் மாலை நாலுமணிச் சுமாருக்கு லோகானந்தனின் வீட்டு வாசலில் மோட்டார் வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சுமார் இருபதுபிராயமுடைய ஒரு யுவதி இறங்கினாள். காந்தருவ ஸ்திரியைப்போல் தோன்றிய அவ்வணங்கு அணிந்திருந்த காசிப் பச்சைப்பட்டு இரவிக்கையும், ரோசாநிறப் பீதாம்பரப் புடவையும், விலையுயர்ந்த பல வைர நகைகளும் பார்ப்போர் கண்களைக் கூசச்செய்தன. அவள் புன்முறுவல் கொண்டு ஒய்யாரமாய் நடந்து லோகானந்தனின் படுக்கை அறைக்குள் உல்லாசமாய்ச் சென்றாள். அங்கே வியாகுலத்துடனிருந்த சுமதி அவளைக் கண்டதும் எழுந்து அன்புடன் வரவேற்று "நீ யாரம்மா?" எனக் கேட்டாள். அதற்கு அவள் "நான்தான் தாசி பிரியவதி. உனக்குத் தங்கை முறையாவேன். அக்கா! அத்தான் தூங்குகிறார்களோ? மிகவும் மெலிந்து காணப்படுகிறார்களே!" என்றாள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சுமதி பிரமிப்பும், துக்கமும் ஒருங்கே கொண்டு பேச நாவெழாமல் யாதும் பதில் சொல்லாது தூண்போல் அசைவற்று நின்றாள். பிரியவதி வந்தபோது சுவர்ப்புறமாய்த் திரும்பிப் படுத்திருந்த லோகானந்தனின் செவிகளில் 'நான்தான் தாசி பிரியவதி' என்ற சொற்கள் விழுந்ததும், அவன் பிரியவதி நின்ற பக்கம் திரும்பி அவளைப் பார்த்து முகம் மலர்ந்து "பிரியவதி! என்னைப் பார்த்துப்போக இவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டாயே! வா. என் பக்கத்தில் உட்காரு" என்றான். அவ்விதமே அவள் அமரவும் அவன் அவளை ஒரு காத்தால் அணைத்துக்கொண்டான். அவ்வடாத

செய்கையைக் கண்ணுற்ற சுமதி, பொங்கி எழுந்த கோபத்தை அடக்கி அக்கோரத்தைப் பின்னும் பார்க்கச் சகியாதவளாய் அடுத்த அறைக்குள் போய்விட்டாள்.

"என்னே இத்தாசியின் துணிகரம்! எவ்வளவு தைரியமாய் 'நான் உனக்குத் தங்கை முறையாவேன்' என்றாள். என் கண்முன்பாகவே என் பர்த்தாவின் பக்கத்தில் அமர்ந்தாளே! அவளைச் சொல்ல என்ன இருக்கிறது! இதற்கெல்லாம் என் கணவனன்றோ காரணம்! அவர் அறிவாளியாயிருந்தும்,

"வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள்பொய்யே
தம்பலந் தின்பாள்பொய்யே சாகின்றே னென்பாள்பொய்யே
அம்பிலுங் கொடியகண்ணா ளாயிரஞ் சிந்தையாளை
நம்பின பேர்களெல்லாம் நாயினுங் கடையாவாரே"

என்பதை மறந்தனரே! என்னே அவர் சபலப்புத்தி! குடிக்கு அடிமையாயிருப்பதோடு வேசிக்கும் அடிமைப் பட்டிருக்கிறாரே! இதனாலுண்டாகும் சுகவீனத்தையும், அவமானத்தையும், வீண் பணச் செலவையும் சற்றுங் கருதாதிருக்கிறாரே! என்னே என் பரிதாபமான நிலைமை! தெய்வமே! நீயே என் கணவருக்குச் சுகமளித்து அவரைச் சீர்ப்படுத்தவேண்டும்" என்று சுமதி தனக்குள்ளாகவே அங்கலாய்த்தாள்.

லோகானந்தனின் பக்கத்திலமர்ந்த பிரியவதி, ஆடவரை நோக்கியதும் மயக்கி வாட்டும் தன் கூரிய கண்களால் அவனைக் கனிவுடன் நோக்கி இனிய குரலில் மெதுவாய் "என் ஆசைக் கண்ணாளரே! நீங்கள் திடீரென இவ்விதம் வியாதியுறக் காரணமென்ன! நீங்கள் நோயுற்றிருப்பதைச் சற்று முன்தான் அறிந்தேன். சென்ற ஒரு வாரமாய் உங்களைக் காணாது என் மனம் பட்டபாட்டை என்னவென்று சொல்வேன்!" எனத் தாரை தாரையாய்க் கள்ளக்கண்ணீர் வடித்தாள். அவள் அழுததைப் பார்த்ததும் அவன் அவளது பாசாங்கை உணராது மிகவும் மனம் வருந்தி அவள் கண்ணீரைத் துடைத்து "கண்ணே! அழாதே. அன்று நான் உன் வீட்டிற்கு வந்திருந்தபோது

அதிகமாய் மதுபானம் அருந்திவிட்டபடியால் வீடு வந்ததும் தலை மயக்கமுற்றுக் கீழே விழுந்ததில் காயம்பட்டேன். அதி லிருந்து சுரமுண்டாகி வேதனைபடுகிறேன். சீக்கிரம் சுகமடை வேன். கலங்காதே" என்றான். பிரியவதி அவனை அன்புடன் தழுவிக்கொண்டு "அத்தான்! நீங்கள் சுகத்துடனெழுந்தால் எழுந்ததும் ஆஞ்சநேயர் சுவாமிக்கு ஐந்நூறு ரூபாய் செலவு செய்து பூசை செய்வதாக நேர்ச்சை செய்திருக்கிறேன்" என, லோகானந்தன் "அப்படியா! என்ன உன் அன்பு! இதை என் ஆயுளுள்ளளவும் மறக்கமாட்டேன்" என்றான். அவ்வாறு பின்னுங் கொஞ்ச நேரம் இருவரும் சல்லாபித்தபின், பிரியவதி "இரண்டாயிரம் ரூபாயில் ஒரு சோடு வைரக்கம்மல் திம்மராஜலு செட்டியாரிடம் என்னை வாங்கிக்கொள்ளச் சொன்னீர்களே! அதற்கு நீங்கள் இன்னும் பணம் கொடுக்கவில்லையாமே! அதன் பொருட்டு என் மீது வழக்குத் தொடரப் போவதாய் நேற்றுச் செட்டியார் என்னிடம் தெரிவித்தார்" என, லோகானந்தன் "அவன் என்ன சுத்த வண்டனாயிருக்கிறானே! நான் கொடுக் கிறேனென்று சொல்லியிருக்கும்பொழுது எப்படி உன்மேல் வழக்குத் தொடரலாம்? அவனை என்னிடம் வரச் சொல். நான் பேசிக்கொள்ளுகிறேன்" என்றான். அப்புறம் அவள் "அடியாள் போய் வரட்டுமா? தேகத்தைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள் ளுங்கள்" என்று அவனை அணைத்து ஒரு முத்தமிட்டுச் சென்றாள்.

அடுத்த தினம் திம்மராஜலு செட்டி வந்து ரூபாய் இரண்டாயிரத்தையும் கேட்க, ஒருவாரங் கழித்துக் கொடுப்பதாய் லோகானந்தன் தெரிவித்தான். அதற்குச் செட்டி சம்மதியாமல், உடனே கொடுக்காவிட்டால் அவன் பேரில் நியாயஸ்தலத்தில் வியாச்சியம் செய்வதாய்ப் பயமுறுத்தவே, அவன் அவ்விதம் செய்தால் தன் கணவன் அவமானத்திற்குள்ளாக நேரிடுமே யென்று சுமதி கலங்கினாள். அவளுடைய ஆபரணங்களில், முன் மற்றக் கடன்களுக்கு விற்றுக் கொடுத்ததுபோக மீந்திருந்தது வைரமாலை ஒன்றே. அதை அவள் தன் அன்னையின் ஞாபக மாகப் பாதுகாத்து வந்தாள். எவ்வித கஷ்டம் வந்தபோதிலும்

அதை விற்கக்கூடாதெனத் தீர்மானித்திருந்தாள். ஆயினும் தன் பர்த்தாவின் மானத்தைக் காப்பாற்றவேண்டுமென்கிற எண்ணம் முன்நின்று அதை விற்றுச் செட்டியின் கடனைத் தீர்த்து,

"கொண்ட கணவன் குரூபியே யானாலும்
பண்டு தான்செய்த பலனெனவே—கண்டுகொண்டு
குற்ற மெனவெண்ணி மனங்கோணா தவன்பணியைப்
பற்றி மிகச்செய்வார் பரிந்து"

என்ற பெரியோர் மொழியை மெய்ப்பித்தாள்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

அத்தியாயம்—3

உயிரை அளித்து உதவிய உத்தமி

"பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையு மேன்மைபோ—னூலினெறி
யுற்றா ரிடுக்க ணுயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து"

சாரதா, இலட்சுமண முதலியாரின் தத்த புத்திரியாகிய சுகந்தியை இழந்து அழுது நிற்கும் சமயம் ஒரு பரதேசி அவளைக் கண்டு "குழந்தாய்! ஏன் நடுப்பாட்டையில் தனியே நின்று அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று அன்புடன் வினவ அவள் நடந்த விஷயத்தை அவனுக்குத் தெரிவித்தாள். அதற்குப் பரதேசி, தான் சுகந்தியைக் கண்டுபிடிக்க முயலுவதாய்ச் சொல்லிச் சாரதாவை ஒருவாறு சாந்தப்படுத்தினான். பின் அவளை அழைத்துப்போய் அவள் அன்னை சுமுகியிடம் விட்டுச் சென்றான்.

நினையாத பிரகாரம் திடீரெனச் சுகந்தியைப் பிரிய நேரிட்டதற்காகச் சுமுகி அதிகக் கிலேசமடைந்தாள். சுகந்தியைத் தேடிப்போன பரதேசி ஒரு வாரத்திற்கு மேலாகியும் திரும்பி வரவில்லை. ஆதலால் சுமுகி மிகவும் மனங்கலங்கி, இனியும் தான் சும்மாயிருப்பது சரியல்லவென எண்ணி, தானே சுகந்தியைத் தேடிப்போகவேண்டுமென்று தீர்மானித்துப் பிரயாணத்திற்கு ஆயத்தஞ் செய்தாள். அப்பொழுது சாரதா "அம்மா! சுகந்தி அக்காள் களவாடப்பட்டுப் போனதையும், நாம் அவளைத் தேடிப் போவதையும் சர்வோத்தமருக்குத் தெரிவிக்கவேண்டாமா?" எனக் கேட்க, சுமுகி "சர்வோத்தமன் யார்?" என்றாள். "என்னைக் கிணற்றிலிருந்து மீட்ட வாலிபர்தான் அவர்" எனச் சாரதா பதிலளிக்க, சுமுகி "இதுவரை அவன் பெயரை எனக்கு நீ தெரிவிக்கவில்லையே! நாளை நாம் போகும் வழியில் அவனைப் பார்த்துவிட்டுப் போவோம்" என்றாள்.

மறுநாள் சுமுகியும், சாரதாவும் சர்வோத்தமனைக் கண்டு விவரம் தெரிவித்துக் குமரிபுரத்தை விட்டுச் சென்றார்கள்.

கடற்கரை மணலில் பிரசவ வேதனைப்பட்டுக்கொண்டிருந்த சுனதிக்குத் தண்ணீர் கொண்டுவர, சாரதா சென்ற சற்று நேரத்தில் அவ்வழியாய் வந்த பரதேசி ஒருவன், சுனதி அவஸ்தைப் படுவதைக் கண்ணுற்றான். அதுசமயம் சமீபத்திலுள்ள பெரியதொரு சாலைவழியாய் மெதுவாய்ச் சென்ற மோட்டார் வண்டி ஒன்றில் ஒரு மாது அமர்ந்திருப்பதைக் கவனித்த பரதேசி, அவளிடம் ஓடோடியும் போய்ச் சுனதியின் துன்பத்தைத் தெரிவித்தான். அவள் உடனே வண்டியை நிறுத்திப் பரதேசியுடன் சுனதியிருக்குமிடஞ் சென்றாள். சுனதி நடக்கமுடியாத நிலைமையிலிருந்ததால் அவளும், பரதேசியுமாய்க் கூடிச் சுனதியைப் பதனமாய்த் தூக்கிப் போய் மோட்டார் வண்டியில் படுக்க வைத்தனர். பின் பரதேசி தன் வழிசெல்ல, அவள் சுனதியைத் தன் இல்லத்திற்குக் கொண்டுபோனாள். அங்குச் சேர்ந்த சில மணி நேரத்தில் சுனதிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. சுனதி, தான் பலப்படும் வரை அங்கேயே தங்கியிருந்தாள்.

ஒருநாள் சுனதி இருந்த அறைக்குப் பக்கத்தறையில் குப்பி, சுப்பி என்ற இரு தாதிகள், அவள் தூங்குகிறாளென நினைத்து, பின்வருமாறு சம்பாஷிக்கலாயினர்.

குப்பி :—அடி சுப்பி! இந்தச் சுடுமூஞ்சி அம்மாள் இன்னும் எத்தனை நாளைக்கு நம்மை இப்படி உபாதிக்கப் போகிறாள். இப்போதுதான் நல்ல சுகமாயிருக்கிறாளே! அவளைச் சீக்கிரம் அனுப்பிவிடும்படி எசமானிக்கு நீ சொல்லக் கூடாதா?

சுப்பி :—நேற்று வீடு கூடியதும் அவளை அனுப்பிவிடும்படி எசமானியிடம் சாடையாய்த் தெரிவித்தேன். அதற்கு, இன்னும் இரண்டு வாரம் கழித்துத்தான் அனுப்பவேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். நாமென்ன செய்கிறது?

குப்பி :—இவள் வைத்தியவேலை பார்க்கிறாளாமே! இந்தக் குரூபியிடம் எந்த வியாதிக்காரர்தான் மருந்து வாங்கப்போவார்கள்! வைத்தியம் பார்க்கிறவர்கள் அருமையாய்ப் பேசினால் தானே நோயாளிகளுக்குப் பாதி வியாதி நீங்கினதுபோலிருக்கும். இவளைப்போல் சிடு, சிடு என்று விழுந்தால், இருக்கிற கொஞ்ச வியாதியும் அதிகமாயல்லவோ தோன்றும்!

சுப்பி :—வாஸ்தவந்தான். இவளுக்குக் கோபம் மாத்திரந் தானா உண்டென்று நினைக்கிறாய்! அதிகப் பண ஆசையுமுண்டாம். வியாதிக்காரருக்கு நோயை நீடிக்கச்செய்து பணம் பறிப்பாளாம். செத்தாலும் பிழைத்தாலும் முன் பணம் வாங்காமல் ஒரு வியாதியஸ்தர் வீட்டிற்கும் போகாளாம். "எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்று சம்பாதிக்கிறாள் போலும்.

குப்பி :—இப்பேர்ப்பட்ட மகாராசிக்குத்தானா எசமானி உதவி செய்கிறார்கள்! இவளைக் கடற்கரையிலேயே சாகவிட்டார்களில்லையே! இதிருக்கட்டும். இவளுக்குப் புருஷனிருக்கிறானா? அல்லது கள்ளப்பிள்ளை பெற்றிருக்கிறாளா?

சுப்பி :—புருஷன் இருந்தானாம். அவன் நல்ல குணவானாம். ஆனால் இந்தக் கொடுஞ்சூரி கொஞ்ச நாட்களுக்கு முன் அவனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டாளாம்.

குப்பி :—அடா பாதகி! அவ்வளவு நல்ல கணவனையா விரட்டி விட்டாள்? வேறொருவன்மேல் ஆசைகொண்டாள் போலிருக்கிறது! எந்த நாய் எந்த நரகலைத் தின்றால் நமக்கென்ன? அவள் நாசமாய்ப் போகட்டும். நம் எசமானி இவளை முன்னே அறிவார்களா?

சுப்பி :—எசமானிக்கு இவளை முன் தெரியாது. அவர்களுக்கு இயற்கையாயுள்ள பரோபகார சிந்தைகொண்டே இவளை அழைத்து வந்தார்கள். பின்னால்தான் எசமான் மூலம் இவள் எசமானுடைய சிநேகிதர் ஒருவரின் மனைவியென்று அறிந்தார்கள் —என்று பேசிக்கொண்டிருக்கையில் வீட்டு எசமானி அவர்களைக் கூப்பிட, இருவரும் சென்றனர்.

குப்பியும், சுப்பியும் முன்கண்ட சம்பாஷணையை நிகழ்த்திய போது அவர்கள் நினைத்த வண்ணம் சுனதி நித்திரை செய்ய வில்லை. அவர்கள் இருவரும் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவள் செவிகளில் நாராசம்போல் விழுந்தன. அவைகளைக் கேட்டபின் ஒரு நிமிஷமும் அவ்விடத்திலிருக்க அவள் மனம் ஒப்பவில்லை. ஆதலால் அவள், வீட்டெசமானியிடம் வேறு பல போக்குகளைக் கூறி தான் உடனே தன் இல்லம் செல்ல வேண்டுமென்று சொல்ல, வீட்டெசமானி அவளை இன்னும் இரண்டு வாரங்கள் இருந்து போகும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் செவிகொடாமல், அன்றையதினமே அவ்வீட்டை விட்டு வெளியேறி நேரே நந்தனூர்குடிக்குச் சென்றாள்.

அவள், தன் தந்தை இராமலிங்க முதலியாரின் வீட்டை நெருங்கவும் அங்கே அழுகைக் குரலைக் கேட்டு மனம் பதறி, வெளியில் நின்ற ஒருவனிடம் அழுகையின் காரணத்தை விசாரிக்க அவன், அவள் தந்தை இரண்டு தினங்களுக்கு முன் ஒரு விரோதியால் குத்தப்பட்டார் என்பதாகத் தெரிவித்தான். அதைக் கேட்கவும் அவள் "அப்பா! உங்கள் உயிரற்ற சடலத்தைக்கூடப் பார்க்கக் கொடுத்து வையாத பாவியானேனே!" என்று அலறி அடித்துக்கொண்டு ஆத்திரத்துடன் வீட்டுப் படிக்கட்டுகளில் ஏறும்பொழுது படிக்கல்லில் கால் தட்டி முகங்குப்புற விழ, திண்ணைக் குறட்டில் பலமாய் அடிபட்டுப் பேச்சு மூச்சின்றிச் சவம்போல் அசைவற்றுக் கிடந்தாள். கையிலிருந்த குழந்தையும் தவறி விழுந்து வீர் வீரெனக் கத்திற்று.

குமரிபுரம் வைத்தியசாலையில் படுக்கையிலிருந்த சர்வோத்தமனிடம், சுகந்தியைத் தேடிப்போவதாய்ச் சாரதா தெரிவித்துப் போனபின், அவன் மிகுந்த கவலைகொண்டான். தான் சுகத்தோடிருந்தால் சிறுபெண்ணாகிய சாரதாவையும், வயது முதிர்ந்த அவள் அன்னையையும் ஊர் ஊராய் அலையவிடாமல், தானே சுகந்தியைத் தேடிச் சென்றிருக்கலாமே, என எண்ணினான். உதவியற்ற அம்மூன்று பெண்களுக்கும் தான் எவ்வித சகாயமும்

செய்ய இயலாதிருப்பதை நினைத்து மிகவும் மனம் வருந்தினன். சாரதா சென்றபின் அவன் சொஸ்தமடையச் சில தினங்களாயின. அதுவரையிலும் அவளிடமிருந்து எவ்வித தகவலும் அவனுக்குக் கிட்டவில்லை. அவன் சுகமைடந்ததும், அம்மூவரையும் எங்கு தேடிச் செல்வதென ஆலோசித்து, முதலில் சுகந்தியின் வளர்ப்புத் தந்தை இலட்சுமண முதலியாரின் வீட்டிற்குச் சென்று விசாரிப்பதே உசிதமெனத் தீர்மானித்துக் காலதாமதமின்றி பாம்பன் கோவிலுக்குப் புறப்பட்டான். அங்கு அவன் சேர்ந்த சமயம் இலட்சுமண முதலியார் நித்திரையிலிருந்தார். அவர் வேலையாட்களில் சிலர் சமையலறையில் போசனம் செய்து கொண்டிருந்தார்கள். சர்வோத்தமன் அவ்விடம் சென்று கதவைத் தட்டினன். அப்பொழுது சாப்பாடு பரிமாறிக்கொண்டிருந்த ஒரு பெண் கதவைத் திறந்து சர்வோத்தமனை நோக்கி "நீ யார்?" என்று கேட்டாள்.

சர்வோத்தமன் :—அம்மா! எனக்குக் குமரிபுரம். நான் இன்று பகல் முழுவதும் ஆகாரமின்றிப் பிரயாணஞ் செய்து மிகவும் களைத்திருக்கிறேன். போசனசாலைகளும் அடைபட்டிருக்கின்றன. தீப ஒளியைக் கண்டு இங்கே வந்தேன். ஏதாவது சிறிது ஆகாரம் கொடுத்தால் மிகவும் உபகாரமாயிருக்கும்.

பெண் :—வந்தவன் போனவனுக்கெல்லாம் இங்கே வெட்டிச்சோறு போடமுடியாது. வந்த வழியைப் பார்த்துப் போ.

சர்வோத்தமன் :—தாயே! கோபஞ் செய்யாதே. நீ கேட்கும் பணம் கொடுத்துவிடுகிறேன். கொஞ்சம் புண்ணியம் செய்.

பெண் :—அதெல்லாம் முடியாது. ஊர்ப்பயல்களுக்கெல்லாம் பொங்கிக் கொட்டுகிறதுதானு எனக்கு வேலை! போ, போ.

சர்வோத்தமன் :—அம்மா! எனக்கு ஆகாரமில்லாவிட்டாலும் பாவாயில்லை. வெளித்திண்ணையில் படுத்துக்கொள்ளவாவது அநுமதி கொடுப்பாயா?

பெண் :—அதென்னமோ ஆண்பிள்ளைகளைக் கேட்டுக் கொள். அவர்கள் சாப்பாடு முடித்து இப்போ வெளியே வரு வார்கள்—என்று சொல்லி கதவைச் சார்த்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள். உள்ளே சென்றவள், விஷயத்தை மற்றவர் களுக்குத் தெரிவிக்க, அவள் கணவன் "அடி! பாதகி! பட்டினி யாய் வந்து அன்னம் கேட்பவனுக்கு இல்லையென்று சொல்ல லாமா? அவனை உள்ளே கூப்பிடு" என்றான்.

மனைவி :—கண்டவனுக்கெல்லாம் இப்படி இறைத்து இறை த்துத்தானே என்னைக் கழுத்து மூளி, காது மூளியாய் வைத் திருக்கிறீர்.

கணவன் :—பசித்தவனுக்கு ஆகாரம் கொடுத்ததனாலேயா நாம் ஏழையாய்ப் போனோம். நாம் தரித்திரராயிருப்பது நம் தலை விதி. அதற்கென்ன செய்யலாம்.

மனைவி :—நீர் தருமம் பண்ணித் தருமம் பண்ணி உமக்குக் கிடைத்த பயன் என்ன? கடவுளுக்குத்தான் கண் அவிந்து போச்சே.

கணவன் :—மடத்தனமாய்ப் பேசாதே. அவனைக் கூப்பிட் டுச் சாதம் போடு.

மனைவி :—அவனுக்குப் போடச் சாப்பாடு மிச்சமில்லை. இனி என்னால் திரும்பச் சமைக்கவும் முடியாது. உனக்கு ஆத்திரமானால் நீ பொங்கிப் போடு.

கணவன் :—அம்மா! அல்லி அரசாணி! நீ மறுபடியும் சமைக்கவேண்டாம். எனக்கு இனிச் சாப்பாடு தேவையில்லை. அதை அவனுக்குப் போடு.

மனைவி :—ஊரிலுள்ள காலாடிகளுக்கெல்லாம் நான் பரிமாற மாட்டேன். வேண்டுமானால் நீயே பரிமாறிக்கொள்—என்று கண்களை உருட்டி, முகத்தை வலித்து, தேகத்தை நெளித்து,

கையையும், காலையும் வீசிக்கொண்டு விறைப்பாய்ப் போய்விட்டாள். அப்பொழுது அவள் கணவனின் பக்கத்திலிருந்த ஒருவன் அவனை நோக்கி "என்னப்பா இது? உன் பெண்சாதி போகிற போக்கைப் பார்த்தால் பயமாயிருக்கிறதே!" என, அவன் "பயப்படாதே. அவளுக்கு அடிக்கடி இப்படிக் காக்கை வலிப்பு வருவது இயற்கை" என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியிற்போய் சர்வோத்தமனை அழைத்துவந்து பசியாற்றினான். பின்பு சர்வோத்தமன் அவ்வேலையாட்களுடன் இரவைக் கழித்துவிட்டு அதிகாலையில் அவ்வூரைவிட்டுப் பிரயாணமானான்.

சுகந்தியைத் தேடிச்சென்ற பரதேசி, ஒருநாள் நந்தனூர் குடி வழியாய்ச் செல்லுகையில் சாந்தசீலனின் மனைவி சுனதி, அவள் தந்தையின் வீட்டிற்குள் விரைந்து செல்வதைத் தற்செயலாய்க் கண்டு, அவளைக் கூர்ந்து கவனித்தான். அச்சமயம், அவள் தவறிக் குழந்தையுடன் கீழே விழுந்ததையும், வீட்டிற்குள்ளிருந்து எவரும் அவளுக்கு உதவி செய்ய வாராதிருந்ததையும் பார்த்து, ஓடிப்போய் அவளைத் தூக்கித் தன்மீது சார்த்தி உட்கார்ந்து, குழந்தையை எடுத்துக் கையில் வைத்துத் தாலாட்டிக்கொண்டே "தாயே! அம்மணி! யாரம்மா வீட்டிற்குள்ளிருப்பது? தண்ணீர்! தண்ணீர்! என்று சத்தமிட்டான்.

அவ்வமயம் வீட்டினுள் அழுதுகொண்டிருந்த லோகானந்தனின் மனைவி சுமதி, பரதேசியின் வார்த்தைகளைச் செவியுற்றதும் தன் அழுகையை நிறுத்தி ஒரு சொம்பில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவந்து சுனதி மூர்ச்சித்திருந்ததைப் பார்த்து அவள் முகத்தில் நீரைத் தெளிக்க, அவள் நெடுமூச்செறிந்து கண்களைத் திறந்தாள். பின்பு சுமதி, சுனதியை நோக்கி "அண்ணி! எப்பொழுது வந்தீர்கள்? இதுவரை எங்கே இருந்தீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே குழந்தையைப் பரதேசியிடமிருந்து வாங்கினாள். சுனதி பதிற்சொல்ல முயன்றும் அவளால் பேச முடியவில்லை. அதைக் கவனித்த பரதேசி, தான் அறிந்த விஷயங்களைக் கூறினான். பின்பு சுமதி தாதிகளை அழைத்

துச் சுனதியை உள்ளே தூக்கிச் சென்றனள். பின் அவள் திரும்பி வந்து பரதேசிக்கு நன்றிகூற, அவன் அவளிடம் விடை பெற்றுச் சென்ருன்.

மதனபுரி நகரில் மிட்டதார் பூபதி முதலியாருக்கு, பூபாலன் என்ற புத்திரன் ஒருவன் இருந்தான். பூபதி முதலியார் காலஞ்சென்றபின் பூபாலன் தூர்ச் சிநேகிதருடன் கூடிக் குடியிலும், சூதாட்டத்திலும், வேசித்தனத்திலும் தன் ஆஸ்தியில் பெரும்பாகத்தைத் தோற்றுவிட்டான். ஆதலால் யாராவதொரு சீமான் வீட்டுப் பெண்ணைக் கலியாணஞ்செய்து கொள்ளவேண்டுமென விரும்பினுன். அவன் மிகுந்த கட்டழகு வாய்ந்தவனுதலால் சமீன்தார் ஒருவர் அவனுக்குத் தன் பெண்ணைக்கொடுக்கச் சம்மதித்தார். அப்பெண் பூபாலனைக் காதலிக்காவிடினும், அவன் பணத்திற்காசைப்பட்டு அவளை விவாகஞ் செய்ய விரும்பினுன். அப்பெண்ணின் மனத்திற்கு விரோதமாய்க் கலியாண தினமும் குறிக்கப்பட்டது. பூபாலன் வீட்டில் விவாகத்திற்கு வேண்டிய சகல ஆயத்தங்களும் வெகு தடபுடலாய் நடந்தன.

ஒருநாள் ராஜாராம் எனப் பெயர்கொண்ட ஒரு சவளி வியாபாரியும் சுமார் பதினைந்து பிராயமுடைய ஒரு பெண்ணும் பூபாலனின் வீட்டிற்கு முன்னுல் சவளி! சவளி! என்று கூவிக்கொண்டு போனுர்கள். அதைக் கேட்ட பூபாலன் வியாபாரியை அழைத்து "கலியாணத்திற்கு எடுக்கக்கூடிய நல்ல பட்டுப்புடவைகள் வைத்திருக்கிருயா?" என்று கேட்க, ராஜாராம் "எசமானே! காசி, கராச்சி, காஞ்சிபுரம், கும்பகோணம் முதலிய ஊர்களில் நெய்யப்படும் விலையுயர்ந்த பீதாம்பரப் புடவைகள் பல தினுசுகளிலும் அநேகம் என்னிடம் இருக்கின்றன" என்று மூட்டைகளை அவிழ்த்தான். பூபாலன் சில புடவைகளை வாங்கியபின் "செட்டியாரே! உம்முடன் வந்திருக்கும் இந்தப் பெண் யார்?" என வினவினுன்.

ராஜாராம் :—எசமானே! இந்தப் பெண் ஒரு ஏழை. முதலியார் குலத்தைச் சேர்ந்தவள். இவள் பெயர் சதாலட்சுமி

இவளும், இவள் அன்னையும் இரண்டு தினங்களுக்குமுன் பிழைப்புக்கு வழிதேடித் தெருத்தெருவாய் அலைந்துகொண்டிருக்கும் சமயம் நான் கண்டு, என்னிடம் மூட்டை தூக்கும் வேலைக்கு இவளை அமர்த்திக்கொண்டேன்.

பூபாலன் :—இச்சிறு பெண்ணை இக்கடினமான வேலையைச் செய்யச் சொல்லுவது பெருத்த அநியாயம். நான் இன்னும் சில தினங்களில் விவாகஞ் செய்துகொள்ளப் போகிறேன். கலியாணப்பெண் இப்பொழுது இங்கேதான் இருக்கிருள். அவளுக்கு ஒரு தாதி தேவை. இவளை அவ்வேலையில் அமர்த்திக் கொள்ள விரும்புகிறேன். என்னிடம் விட்டுவிடுகிறீரா?

ராஜாராம் :—இப்பெண்ணுக்கும், அவள் அன்னைக்கும் சம்மதமாஞல் எனக்கு ஆட்சேபனையில்லை.

பூபாலன் :—(பெண்ணை நோக்கி) பெண்ணே! உன் விருப்பம் என்ன?

சதாலட்சுமி :—இந்தப் பிரபு எனக்கு ஆபத்தில் உதவினர். அவர் உத்தரவு கொடுத்தால் தங்களிடம் வேலை பார்க்க எனக்குப் பிரியமே. என் அன்னையின் சம்மதத்தையும் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

ராஜாராம் :—(பெண்ணை நோக்கி) அம்மா! நீ எசமானிடம் வேலையிலிருந்தால் சுகமாயிருப்பாய். அதற்கு இடையூருக இருக்க எனக்கு விருப்பமில்லை. சந்தோஷமாய் உத்தரவு கொடுக்கிறேன். எசமானிடமே வேலையில் அமர்ந்துகொள்— என்று சொல்லி, பெண்ணின் அன்னையின் சம்மதத்தைப் பெற்று மறுநாள் அனுப்புவதாய்ப் பூபாலனிடம் தெரிவித்துப் பெண்ணுடன் தன் இருப்பிடம் சென்ருன்.

அவ்விதமே மறுநாள் சதாலட்சுமி பூபாலனிடம் வேலையில் அமர்ந்து அவனுக்கு மனைவியாகப் போகும் பெண்ணுக்குத் தாதியாஞள். கலியாண தினமும் நெருங்கிற்று. ஒருநாள் இரவு பூபாலனின் வீட்டில் யாவரும் அயர்ந்து நித்திரை செய்தனர்.

ஆனல், இரு பெண்கள் மட்டும் வீட்டை விட்டு எவருக்கும் தெரியாமல் வெளியேற விரும்பி மற்ற யாவரும் அயர்ந்து தூங்குவதை எதிர்நோக்கிச் சிறிதும் கண்மூடாமல் விழித்திருந்தனர். மணியும் பன்னிரண்டு அடித்தது. எங்கும் நிசப்தம் குடிகொண்டது. அவ்விருவரும் தங்களை முழுவதும் துணியால் மூடிக்கொண்டு மெல்ல நடந்து வீட்டின் பின்புறமாய் வெளியேறினர். அது சமயம் சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்ததால் காவற்காரரின் கண்களில் அகப்படாதபடி தோட்டத்திலுள்ள மரங்களின் நிழலில் மறைந்து, மறைந்து சென்றனர். தோட்டத்தின் மதிற்சுவரை அணுகி அங்கு முன்னதாகவே வைக்கப்பட்டிருந்த ஏணியின் வழியாய் ஏறிச் சுவரைத் தாண்டும் சமயம் சற்றுத் தூரத்திலிருந்து கவனித்த ஒரு காவற்காரன் தன்னிடமிருந்த துப்பாக்கியினல் அவர்களைக் குறிபார்த்துச் சுட்டான். இருவரில் ஒருத்தி காயம் பட்டுச் சுவருக்கு வெளிப்புறமாய் விழுந்தாள். மற்றவள் யாதொரு காயமுமின்றி வெளிப்புறத்திலும் வைக்கப்பட்டிருந்த மற்றொரு ஏணி வழியாய் இறங்கி விழுந்த பெண்ணைத் தூக்கி மார்போடணைத்துக்கொண்டு "கண்ணே! பாவி என்னலல்லவோ உனக்கு இவ்வாபத்து நேரிட்டது. என்னைப் பின்விட்டு நீ முன் செல்ல மறுத்தாயே! இவ்விதம் நேரிடலாமென நினைத்துத்தான் அவ்விதம் செய்தாயோ? உன் உயிர் போனபின் என் உயிர் இருந்து என்ன பயன்?" எனக் கோவெனக் கத்தி அழுதாள்.

"துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை"

அத்தியாயம்—4

பொறுதி பொறுத்த பூமாதேவி.

"கள்ளி வயிற்றி னகில் பிறக்கு மான் வயிற்றி
ஞெள்ளரி தாரம் பிறக்கும் பெருங் கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார் யார்
நல்லாள் பிறக்குங்குடி"

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இராமலிங்க முதலியாரிடம் சடாலிங்கம் என்ற ஒரு வேலையாள் இருந்தான். அவன் திடகாத்திரமும், மனோதைரியமுமுள்ளவன். அஞ்சா நெஞ்சு படைத்தவன். எசமானிடத்து அன்மதியும், பணிவும், விசுவாசமுங்கொண்டவன். அவனுக்கு ஒரு இளமனைவி இருந்தாள். அவள் கட்டழகும், கற்பும் வாய்ந்தவள். முதலியார் வீட்டில் அவளும் வெளிவேலை செய்து வந்தாள். முதலியார் சடாலிங்கத்தின் மனைவி பகவதிமேல் இச்சைகொண்டு, ஒரு நாள் அவள் தனித்திருக்கும் சமயம் அவளைக் கற்பழிக்க முயல, அவள் அவரைத் திமிறிக்கொண்டு ஓடிப்போய்த் தன் கணவனிடம் தெரிவித்தாள். அதைக்கேட்டதும், பசுப்போலிருந்த சடாலிங்கம், புலிபோற் சீறி முதலியாரைத் தன் கை ஈட்டியால் குத்திவிட்டுத் தன் மனைவியுடன் ஊரைவிட்டகன்றான். காயம்பட்ட முதலியார் மரிக்கவில்லை. சில நாட்களாய்ப் படுக்கையிலிருந்து பின் சொஸ்த மடைந்தார்.

நந்தனூர்குடியை விட்டு ஓடிப்போனபொழுது சடாலிங்கமும், அவன் மனைவி பகவதியும் அவ்வூருக்குச் சமீபத்திலுள்ள மலையின் குகை ஒன்றில் அடைக்கலம் புகுந்தனர். சில காலம் அம்மலையடிவாரத்திலுள்ள குக்கிராமங்களில் பிச்சையெடுத்து வயிறு வளர்த்தனர். பின்பு ஐசுவரியவான்களின் கொடுமையால் சனசமூகத்திலிருந்து அநியாயமாய்த் துரத்தப்பட்ட தன்போன்ற

சிலரைச் சந்தித்து, அவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, தான் அவர்களுக்குத் தலைமை வகித்துத் தனவந்தர்களைக் கொள்ளையிட்டும், தரித்திரருக்குத் தருமங்கொடுத்தும் களித்து வந்தான். அவன் திருட்டுத் தொழிலில் இறங்கியது பகவதிக்குச் சற்றேனும் பிரியமில்லை. "நம்மை அறியாத தூரதேசம் சென்று நல்ல தொழிலைக் கைக்கொண்டு சீவனம் செய்வோம்" என்று அடிக்கடி அவனுக்குப் புத்தி புகட்டி வந்தாள். அவனோ "ஏழைகளின் நற்குணத்தைத் துற்குணமாக மாறச்செய்யும் செல்வவந்தரின் கொட்டத்தை அடக்குவது தருமமன்றோ? நாம் இவ்விதம் நடக்கும் பாவமும், பழியும் அத்துர்ச்சனரையே சாரும்" என்று அவளைச் சாந்தப்படுத்தி வந்தான். இவ்விதம் இரண்டொரு வருடங்கள் கழிந்தன. பகவதி குழந்தையுண்டாகி தன்னைப் போல் அழகிய ஒரு பெண்மகவை ஈன்றாள். தன் குழந்தைக்கு அறிவு வந்த காலத்து, எவராவது அதைத் திருடனின் பிள்ளையென்று அதன்முன் பழித்தால் அதன் மனம் எவ்வாறு நோகுமென்று எண்ணியெண்ணிச் சஞ்சலமடைந்தாள். அதே கவலையால் மெலிந்து சில மாதங்களில் உயிர்நீத்தாள்,

சடாலிங்கம் தன் மனைவியின் மாணத்தை நினைத்து மிகவும் வருந்தினனேயாயினும் தன் திருட்டுத் தொழிலை விடவில்லை. அதை மேலும் அதிக மும்முரமாகவே நடத்தி வந்தான். தன் குழந்தைக்கு ஒரு தாதியை அமர்த்தி அதை வெகு அருமை பெருமையாக வளர்த்து வந்தான்.

தன் மனைவி பகவதி இறந்த சில வருடங்களுக்குப் பின் சடாலிங்கம் தன் மகள் ராதாவின் செவிலித்தாய் பாஞ்சாலியை மறு விவாகம் செய்துகொண்டான். பாஞ்சாலிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இதுகாறும் ராதாவைத் தன் வயிற்றிற் பிறந்த பிள்ளைபோல் வளர்த்து வந்த பாஞ்சாலி, தனக்குக் குழந்தை பிறந்ததும் அவளைப் பகைக்க ஆரம்பித்தாள். ஆயினும் சடாலிங்கம் ராதாவின்பேரில் மிகுந்த அன்பு கொண்டிருந்ததால் அவனுக்குத் தெரியாமல் அவளைத் துன்புறுத்தினள். ராதாவோ

தன் மாற்றாந்தாயின் கொடுமைகளைத் தன் தகப்பனுக்குத் தெரிவியாதிருந்தாள். அவள் அத்தகைய பெருந்தன்மையோடு நடந்து வந்தும் பாஞ்சாலி மேலும் மேலும் பலவகையில் அவளை இம்சித்து வந்தாள்.

ராதாவுக்கு வயது சுமார் பதினேழாயிற்று. அவள் அழகிலும், குணத்திலும் முற்றிலும் தன் அன்னையையே ஒத்திருந்தாள். தன் மாற்றாந்தாயின் கர்ன கடூரமான வார்த்தைகளையும், செய்கைகளையும் பொறுமையாய்ச் சகித்தாள். தன் தந்தையின் தீய தொழிலை வெறுத்தாள். அதை விட்டுச் சீவனத்திற்கு வேறொரு நல்வழி தேடும்படி அவனை அன்பாய் வேண்டினாள். அவனும் அப்படியே செய்ய விரும்பினும் அவ்விதம் பகிரங்கமாய்ச் சீவித்தால் தான் அந்நாட்டிலிருக்கும் வரை இராமலிங்க முதலியார் தனக்குத் துன்பம் விளைவிப்பாரென நினைத்து அவ்வாறு செய்யத் தயங்கினான். அயல் நாட்டிற்குத் தன் மகளைக் கூட்டிப்போகவும் அவன் விரும்ப வில்லை. ஆதலால் இந்நாட்டிலேயே அவளுக்கு ஒரு நல்ல மணமகனைத் தேடி விவாகம் செய்து வைத்தபின், தான் மட்டும் அயல்நாடு சென்று நல்வழியிற் சீவிப்பதெனத் தீர்மானித்தான். அது சமயம், சில வருடங்களுக்கு முன் அந்நிய நாடு சென்றிருந்த தன் தங்கை நந்தனார்குடிக்குத் திரும்பிவிட்டாளெனக் கேள்விப்பட்டான். அவளுக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்கு ராதாவை விவாகஞ்செய்து வைக்க எண்ணி அது விஷயமாய்த் தன் தங்கையிடம் கலந்துகொள்ள நந்தனார் குடிக்குச் சென்றான். அவன் நகருக்குள் புகுந்து இராமலிங்க முதலியார் வீட்டைக் கடந்து செல்லும் சமயம், முதலியார் அடையாளங்கண்டு அவனைப் பிடித்துத் தண்டனைக்குள்ளாக்கும் படி சமீபத்தில் நின்ற ஒரு போலீஸ் சவானைக் கூவி அழைக்க சடாவிங்கம் மிகுந்த கோபங்கொண்டு "ஏ! சண்டாளா! என் மனைவியைக் கற்பழிக்க முயன்றதோடு என்னையுமா சிறையில் வைக்கப் பார்க்கிறாய்? அன்றைக்குத்தான் என் ஈட்டிக்குத் தப்பினாய்! இப்பொழுது தப்பமாட்டாய்" என்று கூறி, மறைத்து வைத்திருந்த தன் ஈட்டியால் அவர் மார்பில் ஒரே குத்

தாய்க் குத்தினான். அவர் கீழே விழவும், அவன் ஓட்டம் பிடித்தான். போலீஸ் சவான் அவனைத் தொடர்ந்து ஓடியும் அவனால் சடாலிங்கத்தைப் பிடிக்க முடியவில்லை. குத்தப்பட்ட முதலியார் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார். காயம் பலமானதால் அவர் உயிர் மண்ணிற்கும், விண்ணிற்கும் இடையில் ஊசலாடிற்று. இச்சமயமே சுனதி தன் குழந்தையுடன் அவர் வீட்டிற்குச் சென்றது.

நந்தனார்குடியில் சனப்பழக்கம் அதிகமாயில்லாத தெரு ஒன்றில் ஒரு சிறு குடிசையின் வாசலில் நின்று வீரப்பன் என்று பெயர்கொண்ட ஒரு மனிதன் யாரோ ஒருவரது வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நேரம் ஆக, ஆக தான் எதிர்பார்த்த ஆள் வாராததைக் கண்டு கண்களில் நெருப்புப் பொரி பறக்க, பற்களை நற நறவெனக் கடித்தும், உதடுகளைப் பிதுக்கியும் ஏதோ முண முணத்துக்கொண்டிருந்தான். அச்சமயம் ஒரு ஸ்திரி தன் முகத்தை எவரும் கண்டுகொள்ளாதபடி ஒரு சால்வையால் மூடிக்கொண்டு அவன் குடிசையை நோக்கி வர, கணப்பொழுதில் தன் கோபக்குறிகளை மாற்றிக்கொண்டு முகமலர்ச்சியுடன் அவளை வரவேற்று குடிசைக்குள் அழைத்துச் சென்றான். பின் அவளை ஒரு விசுப்பலகையில் அமரச்செய்து தான் அவள் முன் பணிவுடன் நின்று "எசமானியே! அடியேன் குடிசைக்குத் தாங்கள் விஜயஞ்செய்து என்னைக் கௌரவப்படுத்தியதை ஒருகாலும் மறவேன். அடியேன் தங்கள் இல்லத்திற்கு வாராது; தங்களை இங்கு அழைத்த காரணத்தைத் தாங்களே அறிவீர்களாதலால் என்னை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

ஸ்திரி:—உன் மனைவி எங்கே? நீ இவ்விடம் வந்து எத்தனை நாட்களாயின? நீ இந்நாட்டிற்கு வரக்கூடாதென்று என் எசமான் உனக்கு உத்தரவளித்திருக்க எவ்விதம் துணிந்து வந்தாய்?

வீரப்பன்:—என் மனைவி வெளியிற் சென்றிருக்கிறாள். நாங்கள் இந்நகருக்குச் சில தினங்களுக்கு முன்தான் வந்தோம்.

எசமான் மாதாமாதம் எங்களுக்கு அனுப்பி வந்த உபகாரம் சென்ற இரண்டு மாதங்களாய் வராததால் காரணத்தை அறியவே எசமானின் உத்தரவை மீறி இவ்விடம் வந்தோம்.

ஸ்திரி :—உங்களை யாரென எவரேனும் தெரிந்துகொண்டால் உங்கள் கதி என்னவாகும்?

வீரப்பன் :—தாங்கள் இருக்கும்பொழுது எங்களுக்கு என்ன கவலை?

ஸ்திரி :—நீ சொல்வதைப் பார்த்தால் எங்களைக் காட்டிக் கொடுக்க உத்தேசித்திருக்கிறாய்போல் தோன்றுகிறதே!

வீரப்பன் :—எனக்கு வரவேண்டிய பணம் ஒழுங்காய்ச் செலுத்தப்படும் பட்சத்தில் தங்களைக் காட்டிக்கொடுப்பதாய் எனக்கு உத்தேசமில்லை. பயப்படாதேயுங்கள்.

ஸ்திரி :—எசமானோ சாகும் நிலைமையிலிருக்கிறார். அவரது சொத்துக்களையோ பையன் முழுவதும் விரயஞ்செய்துவிட்டான். எங்களுக்கோ சாப்பாட்டிற்கே கஷ்டமாயிருக்கிறது. இந்நிலைமையில் உனக்கு வாக்களித்த பணத்தை எப்படி நாங்கள் செலுத்த முடியும்?

வீரப்பன் :—எசமானின் சொத்துக்களையெல்லாம் சின்ன எசமான் அழித்து விட்டதால் என்ன குடி முழுகிப்போயிற்று? தங்கள் அத்தானின் சமீனுக்குச் சின்ன எசமான் ஒருவர்தானே வார்ஸ்தார்? அந்தச் சமீன்பேரில் போதுமான பணம் கடன் வாங்கலாமே!

ஸ்திரி :—அப்படிச் செய்ய முடியாதபடி ஒரு பெருந்தடை ஏற்பட்டுவிட்டதே!

வீரப்பன் :—(ஆத்திரத்துடன்) அப்படி என்ன தடை ஏற்பட்டது?

ஸ்திரி :—அக்கிழட்டுப் பிணத்தின் பெண்சாதி குஞ்சுக்குமரியாகிவிட்டாள். அவளுக்குச் சமீபத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

வீரப்பன் :—(வியப்புடனும், துக்கத்துடனும்) என்ன! கிழவிக்குக் குழந்தையா? ஆச்சரியமாயிருக்கிறதே! அடடா! சுமார் இருபது வருஷங்களுக்கு முன் அச்சமீன்தாரின் இரு குழந்தைகளையும் நான் கொலை செய்தது கடைசியில் விருதாவாகவா போயிற்று?

ஸ்திரி :—இன்னும் நீ மனம் வைத்தால், முன் நீ செய்தது வியர்த்தமாகாது.

வீரப்பன் :—இக்குழந்தையையும் கொலை செய்யச் சொல்லுகிறீர்களா?

ஸ்திரி :—ஆம். அத்தோடு கிழவனையும் கைலாசம் அனுப்பிவிடவேண்டும். எடுத்த வேலையைத் தொடுத்து முடிக்கவேண்டாமா?

வீரப்பன் :—பெரியவரின் உயிரையுமா போக்கவேண்டும்? பாவம்! அவர் இன்னும் கொஞ்சக்காலம் சமீனை அநுபவிக்கட்டுமே!

ஸ்திரி :—பிறக்கும் பிள்ளைகளையெல்லாம் நாம் கொல்லக் கொல்ல வாலிபதசை திரும்பி யிருக்கும் அக்கிழவன் இன்னும் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டே யிருந்தால் என்ன செய்வது?

வீரப்பன் :—சரி. தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனல் அவ்வாபத்தான வேலைக்கு கூலி அளிக்கத் தங்களிடத்தில் பணமில்லையே!

ஸ்திரி :—அவர்கள் இருவரையும் கொலை செய்துவிட்டால் சமீன்தான் உடனே நமது கைக்கு வந்து விடுமே! பிறகு பணத்திற்கென்ன குறை?

வீரப்பன் :—இனி முன்பணம் மொத்தமாய்ப் பெற்றுக் கொள்ளாமல் மாதாமாத உபகாரத்தை நம்பி இத்துறையில் நான் இறங்கமுடியாது. ஆனல் தங்களிடமோ இப்போது பண மில்லே. ஆதலால் அவர்களேக் கொலே செய்த மூன்று தினத்திற் குள் இருபதினுயிரம் ரூபாய் ரொக்கமாய்க் கொடுப்பதாய்த் தாங் கள் எனக்கு வாக்குறுதி எழுதிக்கொடுத்தால் மட்டும் நான் அவ் வேலேயைச் செய்ய முடியும்.

ஸ்திரி :—(சற்றுநேரம் யோசனேயிலிருந்து) அவ்விதமே செய்கிறேன்—என்று சொல்லி ஒரு வாக்குறுதி எழுதி வீரப்ப னிடம் கொடுத்துவிட்டு வீடு திரும்பினுள்.

வெளியிற் சென்றிருந்த வீரப்பனின் மனேவி மீனுட்சி, வீரப்பனும், ஸ்திரியும் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே வீட்டிற் குத் திரும்பி வந்தாள். ஆனல், வந்திருந்த ஸ்திரியைச் சந்திக்க மனமற்று ஒரு பக்கத்தில் ஒளிந்திருந்து அவர்கள் சம்பாஷணே யைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் கடைசி யாய்ப் பேசிய சதியோசனேயைக் கேட்டு மனம் பதைத்தாள். தன் வார்த்தையை வீரப்பன் மதியானென்று அவள் அறிவாளாத லால் அவன் துர் எண்ணத்தைத் தான் அறிந்திருப்பதாக அவனிடம் காட்டிக்கொள்ளவில்லே.

“ இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனுகு மற்றும் பெயர்த்து ”

என்பதை முற்றுமுணர்ந்த மீனுட்சி, தன் கணவன் அக்கொலே யைப் புரியாதபடி எப்படித் தடுக்கலாமென ஆழ்ந்த யோசனேயி லிருந்தாள்.

பூபாலனின் தோட்டத்து மதிற்சுவரில் ஏறிய இரண்டு பெண்களேயும் நோக்கிச் சுட்ட காவற்காரன், ஓடிப்போய் அப் பெண்கள் ஏறிய ஏணி வழியாய் மதிற்சுவரைக் கடந்து வெளியில் நோக்க, அவ்விரு பெண்களேயும் அங்குக் காணுமல் திடுக்குற்முன். தான் கண்டது உண்மையில் பெண்ணே அல்லது பேயோ என

ஐயுற்றான். அச்சந்தேகம் வரவே, அவன் அங்கம் பதற, மெய் சிலிர்க்க கரங்களும், கால்களும் நடுங்கின. ஆவேசத்தின் நினைவால் மிகவும் வெருண்டிருந்த அவன், தள்ளாடித் தள்ளாடி ஏணியில் இறங்குகையில், தவறித் தொப்பெனக் கீழே விழவும் காலையும், கையையும் உதறிக்கொண்டு "ஐயோ! செத்தேன்; அண்ணன்மாரே! ஓடிவாருங்கள்; என்னைப் பிசாசு அடித்து விட்டது" என்று அலறினான். அக்கூச்சலைக் கேட்ட மற்றக் காவலாளிகள் ஓடிவர, அவர்களிடம் விஷயத்தைக் குளறிக் குளறித் தெரிவித்தான். வந்தவர்களில் பழனியப்பன் என்ற ஒருவனுக்குத் தவிர மற்ற யாவருக்கும் இருதயம் பக்குப் பக்கென்றடித்தது.

பழனியப்பன் :—(விழுந்து கிடந்த காவலாளியை நோக்கி) எண்டா! குஞ்சா! பிசாசு எப்படியடா இருந்தது?

குஞ்சன் :—அண்ணே! இரண்டு உருவங்கள் கன்னங்கரேரென்று ஏணியில் ஏறிப்போனது போலிருந்தது. நான் ஆளென்று சுட்டேன். ஒரு ஆள் விழுந்தமாதிரி தெரிந்தது. ஓடிப்போய்ப் பார்த்தேன். ஒன்றையுங் காணோம். அப்போ என்னை என்னமோ இறுக்கிப் பிடித்ததுபோலிருந்தது. பயந்து போய் இறங்கினேன். அப்படியே என்னைப் பிடித்துத் தள்ளி விட்டது. ஐயோ! எனக்கு ஒரு மாதிரியாய் வருகிறதே!

பழனியப்பன் :—என்னடா! பயங்கொள்ளிமட்டை! பேய் ஆளைப்போல வருமோடா? நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்—என்று சொல்லி ஏணிமேலேறி வெளிச்சென்றான். சற்றுநேரங் கழித்து வந்து "அடே! தம்பிமாரே! அது பேயுமல்ல பிசாசுமல்ல. மனுஷப்பேய்தாண்டா! இவன் சுட்டதில் ஆள் விழுந்த இடத்தில் இரத்தம் அப்படியே கொட்டிக்கிடக்கிறது. பக்கத்தில் பூம், பூம் வண்டித் தடமும் இருக்கிறது. வாருங்களடா? எசமானிடம் போய்ச் சொல்லலாம்—என்று சொல்ல, யாவரும் பயம் தெளிந்து பூபாலனிடம் சென்றார்கள். இரவு பதினொருமணி வரையிலும் சிநேகிதருடன் கூடிக் குடித்து

வெறித்துவிட்டு அயர்ந்த நித்திரையிலிருந்த பூபாலன், காவலாளிகள் வந்து எழுப்பவும் படுக்கையிலிருந்துகொண்டே கோபத்துடன் "யாரடா அது?" என்று குமுறினன். எழுந்திருக்க முயன்றும் மிதமிஞ்சிய குடியினல் பாரமும், மயக்கமுங் கொண்டிருந்த தலையை அவனுல் தூக்க முடியவில்லை. அப்பொழுது பழனியப்பன் "சாமி! உங்கள் கலியாணப்பெண் ஓடிப்போய் விட்டாள். மதிற்சுவர்மேல் ஏறும்போது குஞ்சன் அவளைத் துப்பாக்கியினல் சுட்டுப்போட்டான். சவம் மதிலுக்கு வெளியில் விழுந்துவிட்டது. அவன் ஓடிப்போய் அதை எடுக்குமுந்தி எவனே மோட்டாரில் வந்து அதைத் தூக்கிக்கொண்டு போய் விட்டான்" என்று சொல்லவும், பூபாலனின் தலைப்பாரமும், மயக்கமும் எங்கேயோ பறந்துவிட்டன. உடனே எழுந்து வெளியே வந்து விஷயத்தை விசாரிக்க, காவலாளிகள் தங்கள் மேல் குற்றம் ஏற்படாதபடி மறைக்கவேண்டியதை மறைத்தும், கூட்டவேண்டியதைக் கூட்டியும் காரியத்தைத் தெரிவித்தனர். அதன்மேல் பூபாலன் தன் காவலாளிகள்மீது குற்றமில்லையெனத் திருப்தியடைந்து, தன் துர் அதிஷ்டத்திற்காக நிரம்பவும் விசனமடைந்தான். பின்பு அப்பெண்ணைத் தேட அவ்விரவே திக்குக்குத் திக்கு ஆட்களை அனுப்பினன். தானும் சில பேருடன் சென்ருன். அன்று இரவும், மறு பகலும் பல இடங்களில் தேடியும் பெண் அகப்படவில்லை. மிகவுங் களைத்து வந்த பூபாலன், தாதி சதாலட்சுமியை விசாரிக்கவெண்ணி அவளை அழைத்தான். அவளையோ அங்கே காணவில்லை. அவள் ஒரு வேளை தன் வீட்டிற்குப் போயிருப்பாளென்று நினைத்து ஒரு வேலைக்காரனை அனுப்பி அவளை அழைத்துவரச் சொன்னன். அவளைக் கூப்பிடச்சென்ற வேலையாள் திரும்பி வந்து "எசமானே! சதாலட்மியையுங் காணேம்; அவள் அன்னையையுங் காணேம். இருவரும் நேற்று இரவே எங்கேயோ போய்விட்டார்களாம்" என்று சொல்ல பூபாலனுக்குத் தலையில் இடி விழுந்ததுபோலிருந்தது.

பூபாலன், வேலையாட்கள் யாவரையும் அனுப்பிவிட்டு ஆகாரம் முதலாய் உண்ணமல் படுக்கையிற்போய்ப் படுத்துக்

கொண்டான். அன்றிரவு முழுவதும் நித்திரை செய்யவில்லை. பல பலவெண்ணங்கள் அவன் மனத்திலெழுந்தன. மறுநாள் பகல் முழுவதும் எங்கும் வெளிக்கிளம்பாமல் தன் அறையே கதி என்றிருந்தான். மாலையில் தன் ஆப்த நண்பர் பிரகஸ்பதி ஐயரையும், காந்தருவ நாயுடுவையும் அழைத்து அவர்களுடன் ஆலோசிக்கலானான்.

பூபாலன் :—காந்தருவா! இனி என்ன செய்வது? சுடப்பட்ட பெண் இறந்தாளோ பிழைத்தாளோ தெரியவில்லை. அவளுக்காகக் கவலைப்படவில்லை. அவளால் கிடைக்கும் பணம் போய்விட்டதே! இப்படிப் பணக்காரப் பெண் வேறே கிட்டுமா?

காந்தருவன் :—பூபாலா! என் இதற்காக இவ்வளவு கவலைப்படுகிறாய்? அவள் பணம் போனால் போகட்டும். உன் அழகிற்கும், அந்தஸ்திற்கும் எத்தனையோ சமீன்தார்கள் பெண் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால் உன் ஆஸ்தி முழுவதையும் நீ தீய வழியில் விரயஞ் செய்து விட்டாயென்பது மட்டும் அவர்களுக்குத் தெரியக்கூடாது; அவ்வளவுதான். பெண்ணிற்கு நாணுச்சு.

பூபாலன் :—உனக்கு எப்பொழுதும் வாய்ச் சம்பந்தானே! வானத்தை வில்லாய் வளைப்பேன்; மணலைக் கயிறாய்த் திரிப்பேனென்று வெகு டம்பமாய்ப் பேசுவாய். ஆகிறதோ ஒன்றுமில்லை.

காந்தருவன் :—அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? ஒருவன் தன் பெண்ணை ஒருவனுக்குக் கட்டித்தான் கொடுக்கலாம். கட்டினவனுக்கு அப்பெண்ணை வைத்து ஆளத்தெரியாவிட்டால் கொடுத்தவன் என்ன செய்வான்? அதுபோலிருக்கிறது உன் விஷயம். ஆடத்தெரியாத தேவடியாளுக்குத் தெருக்கோணலாம்.

பிரகஸ்பதி :—பூபாலா! காந்தருவன் சொல்வது முற்றும் சரியே. இப்பொழுது ஓடிப்போன பெண்ணின் தந்தையிடம் காந்தருவன் உன்னைப் பற்றித் துத்தியமாய்ப் பேசியதால்தானே அவர் உனக்குப் பெண் கொடுக்கச் சம்மதித்தார். நீ தானே

அவளைப் போக்கடித்து விட்டாய். அப்படியிருக்க நீ அவனைக் குறை கூறுவது நியாயமன்று.

பூபாலன் :—காந்தருவா! ஐயாவாள் பிரகஸ்பதி உனக்கு வக்கீலாய் வருவாரென நான் எண்ணாதது தப்பிதமே. போனது போகட்டும். எப்படியாவது நீ இன்னொரு சமீனை நம் வலையில் விழத்தட்டினால் போதும்

காந்தருவன் :— பிரகஸ்பதி! பெண்கள் வைத்திருக்கும் செல்வ வந்தர்களின் சாபிதா உன்னிடமுண்டே! அதிலிருந்து ஒரு பெயரைப் பொறுக்கிச் சொன்னால் நாளைக்கே அவரை மயக்கி விடுகிறேன்.

பிரகஸ்பதி :—நீ குல்லாப்போடவேண்டிய ஒரு ஆசாமியைச் சொல்லுகிறேன். ஆனால் அந்த ஆசாமி ஆணல்ல. ஒரு பெண் மணியே. ஆகையால் பெரிய குல்லாவாய்த் தைத்துப் போக வேண்டும்.

காந்தருவன் :—பெண்ணானால் சிறிய குல்லாவே போதும். ஆசாமி யார்?

பிரகஸ்பதி :—திவான்பகதூர் இராமலிங்க முதலியாரின் மூத்த மகள் டாக்டர் சுனதியே.

காந்தருவன் :—அவள் தான் மிட்டாதார் சாந்தசீலனை விவாகஞ்செய்து கொண்டாளே!

பிரகஸ்பதி :— அவன் இறந்துபோனது உனக்குத் தெரியாதோ?

பூபாலன் :—என்ன! பிரகஸ்பதி! இருந்திருந்தும் அமங்கிலியையா என்னை மணக்கச் சொல்லுகிறாய்?

பிரகஸ்பதி :—அமங்கலியாயிருந்தாலென்ன? நம்மைப்போன்றவர்க்கு எல்லாம் ஒன்றுதானே! நமக்குத் தேவையானது

பணம் ஒன்றே. அவளோ உத்தியோகம் செய்து அதிகப்பணம் சம்பாதிக்கிருள். சாந்தசீலனின் மிட்டாவோ அவளுக்கே உரித்தாகிவிட்டது. அவள் தந்தையோ பெருத்த தனிகர். அமங்கலியென்று அதிகச் சீதனம் கொடுப்பார். அவள் பெரிய தகப்பனரின் சமீனுக்கோ அவள் சகோதரனைத் தவிர வேறே வார்ஸ்தார் இல்லை. அந்த வகையிலும் அவளுக்குப் பணம் கிடைக்கும். அவள் வயதும் கொஞ்சமே. அழகும் சிரேஷ்டமே. நானும் ஒரு விதவையையே மணஞ்செய்துகொள்ள ஒழுங்கு செய்திருக்கிறேன்.

பூபாலன் :—யார் அப்பெண்மணி?

பிரகஸ்பதி :—குமரிபுரம் பெண்கள் வைத்தியசாலையில் வேலை பார்க்கும் டாக்டர் மீனுளே அப்பெண். பதினூருவது பிராயத்தில் பர்த்தாவை இழந்தவள். டாக்டர் சுனதிக்கு உதவியாக வேலைபார்த்து வருகிருள்.

பூபாலன் :—விஷயத்தைக் கவனிக்கும்பொழுது டாக்டர் மீனுள்தான் டாக்டர் சுனதியைப்பற்றி உனக்குத் தெரிவித்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

பிரகஸ்பதி :—ஆம். அவள் மூலம்தான் அறிந்தேன்.

காந்தருவன் :—ஐயரே! நீருமா டாக்டர் மீனுளின் வலையில் விழுந்துவிட்டீர்!

பிரகஸ்பதி :—காந்தருவா! அவள் தவருன நடத்தையுள்ளவளென்பது எனக்குத் தெரியாததல்ல. அவளை விதவையென்று மணஞ்செய்ய எவரும் இதுவரை முன் வாராததாலும், அவள் தொழிலானது ஆண்கள் சகவாசத்தை நீக்கக்கூடியதல்லவாதலாலும் தவறுதலுக்குள்ளானுள். அது மானிட இயற்கைதானே! மற்றப்படி சகல நற்குணங்களும் பொருந்தியவள். இப்பொழுதும்

ஒருவன் அவளை மணஞ்செய்தால் ஒருகாலும் அவனுக்குத் துரோகம் செய்யாள். மேலும் திரண்ட பணம் வைத்திருக்கிறாள். ஆதலால் அவளை விவாகஞ்செய்து கொண்டால் நான் உழைப்பில்லாமல் உல்லாசமாய்த் திரியலாம்.

காந்தருவன் :—அதிருக்கட்டும். நீ கலியாணமானவனாயிற்றே! உன்னை மணந்துகொள்ள டாக்டர் மீனாள் எவ்விதம் சம்மதித்தாள்?

பிரகஸ்பதி :—என் தந்தை விரும்பியபடி என் மாமனார் ரூபாய் ஐயாயிரம் வரதட்சிணை கொடுக்க மறுத்துவிட்டதால் நான் என் மனைவியைத் திரட்டுக் கலியாணம் செய்துகொள்ள மறுத்துவிட்டேன். அவள் அதன்மேல் மனமுடைந்து எங்கேயோ போய்விட்டாள். இறந்தாளோ உயிருடனிருக்கிறாளோ அறியேன். உயிருடன் இருந்தாலும் அவள் ஐயாயிரம் ரூபாய் கொண்டுவரப்போகிறதில்லை. அது தெரிந்தே டாக்டர் மீனாள் என் வேண்டுகோளுக்கிணங்கினாள்.

காந்தருவன் :—ஒருகால் உன் மனைவி ஐயாயிரம் ரூபாயுடன் திரும்பி வந்தால் என் செய்வாய்?

பிரகஸ்பதி :—அப்படி வந்தால் அவளையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான். பணத்திற்குமேல் பணம் கிடைத்தால் அதிஷ்டம்தானே!

காந்தருவன் :—அப்படியாயின் டாக்டர் மீனாள் உன்னை உபாதிக்கமாட்டாளோ?

பிரகஸ்பதி :—விவாகமானபின் அவள் என்ன செய்ய முடியும்? ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி ஏறினபின் அவள் கட்டினவனுக்கு அடிமைதானே! அதிலும் என்னிடம் அவள் குண்டு செல்லுமா? அவளைப் பம்பரம்போல் ஆட்டிவைக்க மாட்டேனா?

பூபாலன் :—பிரகஸ்பதி! உன் சாமர்த்தியம் ஒரு புறமிருக்கட்டும். டாக்டர் சுனதியும் நடத்தையில் டாக்டர் மீனுளைப் போல்தானே?

பிரகஸ்பதி :—அன்று. அவளைப்போல் கற்புள்ளவளைக் காண்பதரிது.

பூபாலன் :—அப்படியானுல் சரிதான். காந்தருவா! பிரகஸ்பதி சொல்லுகிறபடி நான் சுனதியைக் கலியாணஞ் செய்து கொண்டால்தான் என் மனங்கொண்டபடி செலவு செய்யப்பணம் ஏராளமாய்க் கிடைக்கும். ஆதலால் அவளையே ஒழுங்கு செய்— என்று பேச்சை முடித்தான்.

பின்பு அவர்கள் ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டிருந்த விஸ்கி, பிருந்தி, ஒயின், ஜின், பீர் முதலிய உயர்தர மதுபானங்களை வெறிகொள்ளுமட்டும் குடித்து ஆனந்தித்திருந்தனர்.

அச்சமயம் ஆசானுபாகுவான ஒரு மனிதன் திடீரென அவர்கள் முன் தோன்றி அவர்களுக்கு நேராய் ஒரு கைத்துப்பாக்கியை நீட்டி "ஒருவரும் ஆசனத்தை விட்டு எழுந்திருக்கக் கூடாது. எழுந்தால் நிர்த்தாட்சணியமாய்ச் சுட்டு விடுவேன்" என்று பயமுறுத்த, கூடியிருந்த மூவரும் பயமடைந்தனர். பூபாலன் மட்டும் ஆசனத்தை விட்டு எழுந்திருக்காமலே "எங்களை மிரட்டத்துணிந்த நீ யார்?" என்று கேட்டான்.

வந்தவன் :—நான்தான் அக்கிரமஞ்செய்யும் ஐசுவரியவான்களைத் தரித்திராக்க வெளிப்பட்டிருக்கும் தருமவான் சடாலிங்கம். நீ உன் ஆஸ்திகளைத் துர்விநியோகம் செய்து தானுகவே ஏழையாகிவிட்டதால் உன்னிடம் இதுகாறும் நான் வரவில்லை.

பூபாலன் :—அப்படியாயின் இப்பொழுது என் வந்தாய்?

சடாலிங்கம் :—"நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு பிடிக்கும்" என்னும் மொழிப்படி நீ நடந்துகொண்டதால் உன்னைச் சிட்சிக்கவே வந்தேன்.

பூபாலன் :—அப்படி உன் வழியில் நான் வரவில்லையே!

சடாலிங்கம் :—சில தினங்களுக்கு முன் நீ மலைக்கு வேட்டையாடச் சென்றிருந்தபோது அங்கு உலாவிக்கொண்டிருந்த ஒரு பெண்மணியிடம் அக்கிரமமாய்க் காதலுரையாடவில்லையா?

பூபாலன் :—ஆம். ஒரு அதனப்பிரசங்கியிடம் ஆசைக் கொண்டேன். "கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி" என்றபடி, அவளுக்கு என் அருமை தெரியவில்லை—என்று சொல்லி முடிக்குமுன், சடாலிங்கம் "அடே! பூபாலா! வாயை மூடு. இனியும் பேசினல் உன் நாக்கை அறுத்து விடுவேன். அக்குழந்தை என் மகள் என்பதை நினை" என்று சீற்றத்துடன் கூறி விட்டு ஒரு சீக்கல் அடிக்க, எமகிங்கரர்போல் சிலர் அறைக்குள் நுழைந்து மூவரையும் அவர்களிருந்த நாற்காலிகளோடு சேர்த்துக் கயிற்றினல் பிணித்தனர். பின்பு சடாலிங்கம் பூபாலனை இரத்தம் வர அடித்துவிட்டு, தன் ஆட்களுடன் வெளியேறினன்.

சடாலிங்கம் பூபாலனை அடித்துச்சென்ற சில தினங்களுக்கு முன், ஒரு நாள் சடாலிங்கம் வெளியிற் போயிருந்த சமயம், பாஞ்சாலி ராதாவிடம் சண்டையிட்டு அவளை அவதூறுய்ப் பேச அச்சுடு சொற்களை அவள் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டாலும் தன் மனத்தைச் சாந்தப்படுத்திக்கொள்ளுமாறு வெளியிற் சென்று ஒரு சிற்ருறருகில் உலாவிக்கொண்டே தன் விதியை நொந்து கண்ணீர் சிந்தலானள். அச்சமயம் அங்கு வேட்டையாடச் சென்ற பூபாலன் அவளைக்கண்டு அவள் அழகில் மயங்கி அவள் மேல் காமுற்று அவளை நெருங்கித் தப்பிதமான வார்த்தைகளை உபயோகித்தான். அப்பொழுது அவள் கோபங்கொண்டு அவனைக் கண்டிக்க, அவன் அவள் வார்த்தைகளைச் சட்டை பண்ணுது அவளைப் பிடிக்க எத்தனித்தான். அத்தருணம் அவள் கூச்சலிட்டு ஓடவே அவனும் பின் தொடர்ந்தான். அது சமயம் சடாலிங்கத்தின் குகையைக் காவல் காத்திருந்த கணேசன் என்பவன் ராதாவின் கூச்சலைக் கேட்டு ஓடிவா, அவனைக் கண்

டதும் பூபாலன் திருப்பி ஓட்டம் பிடித்தான். பின்பு கணேசன் ராதாவை நோக்கி "அம்மணி! இதுவரை தனியே வெளியில் வராத நீ இன்று எப்படி வந்தாய்?" என்று கேட்டான்.

ராதா :—மரித்துப்போன என் தாயை நினைத்து என் மனம் சஞ்சலமடைந்ததால் ஒருவாறு ஆறுதலடையும்படி ஆற்றோரம் உலாவ வந்தேன்.

கணேசன் :—அம்மா! சிலகாலமாய் உன் முகத்தில் சந்தோஷத்தையே காணவில்லை. உன் சிற்றன்னை உன்னைக் கஷ்டப்படுத்துவதாய் அறிகிறேன். அதனால்தான் நீ வருந்துகிறாயென நினைக்கிறேன். நேற்றுத் தாதியாயிருந்தவள் இன்று மாற்றாந் தாயானவுடன் இப்படிக் கர்வம் காட்டலாமா? நீ என் உன் தந்தையுடன் சொல்லக்கூடாது?

ராதா :—அவள் என்னைத் துன்புறுத்துகிறாளென்று உமக்கு எப்படித் தெரியும்?

கணேசன் :—அம்மணி! தாய்க்கொளித்த சூலா! எந்நேரமும் இங்கே காவல்புரியும் எனக்குத் தெரியாமற்போகுமா? உன் தந்தை குகையிலில்லாத வேளைகளிலெல்லாம் அவள் உன்னை யாதொரு காரணமுமில்லாமல் கண்டிப்பதையும், ஏசுவதையும், நீ பொறுமையுடன் அழுதுகொண்டிருப்பதையும் அநேகந்தடவை கவனித்திருக்கிறேன். உன் தந்தையிடம் தெரிவிக்க எத்தனையோ தடவை நினைத்தும் நீ தெரிவியாமலிருக்கும்போது நான் தெரிவிப்பது நியாயமன்றெனப் பொறுத்திருக்கிறேன். இன்று அவள் சண்டையிட்டதையும் கவனித்தேன். ஆனால் நீ வெளியேறியதை நான் பார்க்கவில்லை. மற்றப்படி உன்னுடன் அப்பொழுதே வந்திருப்பேன். இப்பொழுதும் உன் தந்தை வந்தவுடன் அவரிடம் அவளுடைய கொடுமைகளை நீ தெரிவிக்காவிட்டால் நானே தெரிவிக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

ராதா :—என் மாற்றாந்தாயைப்பற்றி என் தந்தையிடம் நீர் ஒன்றும் சொல்லக்கூடாது. அவர் மிகவும் மனம் வருந்துவார். அதனால் அவர்கள் இருவருக்குள்ளும் சச்சரவு உண்டாகும்.

"வந்தவர் வாழ்த்தினும் வசை யுரைக்கினுஞ்
சந்தனம் பூசினுந் தசையைக் கொய்யினு
முந்துறு வினையினன் மூண்ட தாமெனச்
சிந்தையி லுன்னியான் சினத்தை வெல்வனே"

என ஆன்றோர் உரைத்த மொழி என் இதயத்தில் பதிந்து கிடக்கின்றது. பகவான் எனக்கு விதித்ததை நான் பொறுமையுடன் சகிக்கும்பொழுது நீர் என் வருத்தப்படுகிறீர்? மேலும் அவள் என் தகப்பனாரைக் கலியாணஞ் செய்துகொள்ளுமுன் என்னை எவ்வளவு அருமையாய் வளர்த்தாள்! அதற்காக நான் அவளுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவள் எவ்விதத்திலும் துன்புற என் மனம் சகியாது.

கணேசன் :—அம்மா! உன் இஷ்டம். ஆனால் சகல நற்குணங்களும் பொருந்திய பூமாதேவியாகிய உனக்கு அவள் செய்யும் துரோகத்திற்குக் கடவுள் அவளை எப்படியும் தண்டிப்பார்— என்று சொல்லும் சமயம் சடாலிங்கம் வர, அவனிடம் கணேசன் பூபாலனைப்பற்றி யாவும் தெரிவித்தான். அதைக் கேட்கவும் அவன் பூபாலன்மீது அடங்காக் கோபங்கொண்டான். அவனைச் சரியானபடி சிட்சிக்கவேண்டுமெனத் தீர்மானித்தான். முற்கூறியபடி சடாலிங்கம் பூபாலனைத் தண்டித்ததற்குக் காரணம் இதுவே.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

அத்தியாயம்—5

நல்லறம் தவறிய நாகரீக நங்கை

"கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்ற
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற
மல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
யில்லத்துத் தீங்கொழுகுவாள்"

திவான் பகதூர் இராமலிங்க முதலியாரின் இளைய புத்திரி சுமார் பதினெட்டு வயதுடைய பத்மாவதி நளபுரம் ஊரில் ஜெகந்நாதன் என்ற ஒரு உப்பள இன்ஸ்பெக்டருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். ஜெகந்நாதனும், பத்மாவதியும் எவ்வித பிணக்குமின்றி அந்நியோன்னியமாய் வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் ஜெகந்நாதன் வீட்டிலில்லாத சமயம் பாலகிருஷ்ணன் எனப் பெயர்கொண்ட அவனது சிநேகிதன் ஒருவன் அவனைத் தேடி வந்தான். பத்மாவதி அவனை வரவேற்று ஜெகந்நாதன் வரும்வரையில் காத்திருக்கும்படி கேட்டுக்கொண்டாள். தனியாயிருந்த பாலகிருஷ்ணன் தான் இருந்த அறையில் ஒரு புல்லாங்குழலைக் கண்டு அதை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். பத்மாவதி சங்கீதப் பிரியமுள்ளவள். புல்லாங்குழல் சொற்பமாய் வாசிப்பாள். பாலகிருஷ்ணன் வாசித்த புல்லாங்குழல் அவளுடையதே. அவன் வாசிப்பைச் செவியுற்ற பத்மாவதி "என்ன இன்பமாய் வாசிக்கிறார்! ஆகா! கிருஷ்ணபகவான்கூடத்தோற்றுப் போவார் போலிருக்கிறதே!" என்று தனக்குள்ளாகவே மெச்சி, பக்கத்தறையில் மறைந்து நின்று பாலகிருஷ்ணனைக் கண்ணிமை கொட்டாது பார்த்தும், அவன் வாசிப்பதைக் கேட்டும் மகிழ்ந்தாள். அச்சமயம் வெளியிற் சென்றிருந்த ஜெகந்நாதன் வந்து பாலகிருஷ்ணனைக் கண்டு ஆனந்தத்தால் அவனைக் கட்டி அணைத்

துக்கொண்டு "பாலகிருஷ்ணு! எப்பொழுது வந்தாய்? சென்ற ஒரு வருடமாய் நான் உனக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதியும் நீ எனக்கு ஒரு கடிதம் முதலாய் எழுதினுயில்லையே!" என்றான்.

பாலகிருஷ்ணன் :—கப்பலை விட்டிறங்கியதும் நேராய் உன் வீட்டிற்குத்தான் சற்றுமுன் வந்தேன்.

ஜெகந்நாதன் :—எவ்வளவு கால ரஜாவில் வந்திருக்கிறாய்?

பாலகிருஷ்ணன் :—என் மேலதிகாரிக்கும் எனக்கும் பிடிக்க வில்லை. மேலும் நாளாக நாளாகச் சொந்த நாட்டிற்குத் திரும்ப வேண்டுமென்ற ஆவலும் எனக்குண்டாயிற்று. ஆதலால் அவ் வேலையை ராஜிநாமா செய்துவிட்டே வந்தேன். இனி இந்நாட் டில்தான் ஓர் உத்தியோகம் பார்க்கவேண்டும்.

ஜெகந்நாதன் :—உன் மனைவியைக் கூட்டிவரவில்லையே! என்?

பாலகிருஷ்ணன் :—எனக்கு ஓர் உத்தியோகம் கிடைக்கு மட்டும் அவள் பெற்றோர் அவளைத் தங்களிடமே விட்டுப்போகும் படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். அதனுல் இவ்விடம் ஓர் உத்தியோகம் பார்த்தபின் அவளைத் தருவித்துக்கொள்ளலா மென்று அங்கேயே விட்டுவந்தேன்.

ஜெகந்நாதன் :—அப்படியானல் நீ ஒரு வேலையில் அமரும் மட்டும் என் வீட்டிலேயே இருக்க விரும்புகிறேன். என்ன சொல்லுகிறாய்?

பாலகிருஷ்ணன் :—உன் இஷ்டமே என் இஷ்டம்—என் றான். பின் ஜெகந்நாதன் "பத்மா! பத்மா!" என்று விளிக்க, பத்மாவதியும் வந்தாள். ஜெகந்நாதன் பாலகிருஷ்ணனை அவளு க்கு அறிமுகப்படுத்தினுன்.

பத்மாவதி வெகு நன்றாய்ப் பாடுவாள். ஜெகந்நாதனுக்கோ சங்கீதத்தில் பிரியம் கிடையாது. ஆதலால் பத்மாவதியின் சங் கீதக் கல்வி அருமையை அவன் போற்றவில்லை. எனினும்

பாலகிருஷ்ணன் வந்தபின் பத்மாவதியின் விருப்பத்திற்கிணங்கி அவனை அவளுக்குப் புல்லாங்குழல் நன்ருய்க் கற்றுக்கொடுக்கக் கேட்டுக்கொண்டான்.

பாலகிருஷ்ணனின் மனைவி ருக்குமணி சகல நற்குணங்களும் படைத்தவள். ஆனால் அவள் ஒரு நிரட்சரகுக்ஷி. கணவனை வசப் படுத்தும் சாசம் ஒன்றும் அறியாதவள். பாலகிருஷ்ணனே குண வந்தனுயிருந்து தன் மனையாளை உள்ளன்புடன் நேசித்தானுயினும் அவளது குறைகளை நினைத்து நினைத்து மனம் வருந்தி வந்தான். ஜெகந்நாதனிடம் பத்மாவதி நிகழ்த்தும் சரச சல்லாபங்களைப் பால கிருஷ்ணன் கவனிக்கக் கவனிக்க ஜெகந்நாதன்மீது பொருமையும், பத்மாவதியின்மீது வாஞ்சையும், தன் மனைவியின்மீது வெறுப்பும் அவன் மனத்தை உழலச்செய்தன. பத்மாவதியின் இனிய பேச்சுக் களும், பாடல்களும் அவனைக் கொள்ளைகொண்டன. அவன் அவளை நினைப்பதிலும், அவளோடு தன் காலத்தைச் செலவிடுவதி லும் மிகவும் இன்புற்ருன். நாளடைவில் அவள்மீது காதல் கொண்டு எந்த விஷயத்திலும் அவளைப் பிரியப்படுத்துவதிலேயே தன் முழுக் கவனத்தையும், சாமர்த்தியத்தையும் செலுத்தி வந் தான். ஆயினும் தன் காதலை அவளுக்குப் புலப்படுத்திலன்.

பத்மாவதி பாலகிருஷ்ணனிடம் கற்றுவந்த சில தினங்களுக் குள்ளாகவே புல்லாங்குழல் வாசிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற் ருள். அவனது திறமையைக்கண்டு அவன்மீது பிரேமை கொண் டாள். பாலகிருஷ்ணனும், பத்மாவதியும் ஒவ்வொரு நாளும் குழல் வாசிப்பதிலும், பாடல்கள் பாடுவதிலும் சற்றுநேர மாவது கழியாதிரார். அவ்விதம் பத்மாவதி பாலகிருஷ்ணனுடன் நெருங்கிப் பழகப் பழக, அவனது சரச குணத்தைக் காணக் காண, தன் மதி இழந்து அவன்மேல் அன்புகொண்டாள். அவனேடு சகவாசம் செய்வதில் களிப்படைந்தாள். அவனை நோக்கும்போதெல்லாம் அவள் கண்களில் அன்பு பொழியும். அவனிடம் பேசும்பொழுது நாணத்தோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவாள். அவனுக்குப் பணிவிடை செய்வதில் அளவுக்குமிஞ்சி

உற்சாகம் காட்டுவாள். இவை யாவும் அவள் அவன்மீது கொண்ட பிரேமையின் காரணமாகத் தன்னையும் அறியாமலே செய்துவந்தாள். என்னே பெண்களின் பேதைமை! அவள் அவ்விதம் நடந்ததைக் கவனித்த பாலகிருஷ்ணன் அவளிருந்த அந்நிலைமையில் அவளைத் தன் வசப்படுத்துவது இலகுவென எண்ணித் தன் துராசையை நிறைவேற்றத் தக்க சமயம் பார்த்திருந்தான். என்னே ஆண்களின் துணிவு!

சுகந்தியைத் தேடிச்சென்ற சர்வோத்தமன், பாம்பன்கோவிலில் இலட்சுமண முதலியாரின் ஆட்களுடன் சம்பாஷித்ததில் அவள் அங்கில்லையென்றும், அவளுக்கும், மதனபுரி பூபாலனுக்கும் இன்னும் சில தினங்களில் விவாகம் நடைபெறப்போகிறதென்றும் அறிந்தான். ஆனால் சுகந்தி எவ்விடம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறாளென்பதை அவனால் அறியக்கூடவில்லை. ஆதலால் மதனபுரிக்குச் சென்று பூபாலனின் வீட்டைக் கவனிக்கவேண்டுமென்று தீர்மானித்து அங்கே பிரயாணமானான்.

மதனபுரியைச் சேர்ந்தவுடன் முன்னரே சுகந்தியைத் தேடிப்போன பரதேசியும், சுமுகியும், சாரதாவும் ஒருகால் அங்கேயே இருக்கக்கூடுமென்றும், அப்படியாயின் அவர்களைச் சந்நியாசி மடங்களில்தான் சந்திக்கமுடியுமென்றும் எண்ணி நேராய் ஒரு மடத்திற்குச் சென்றான். சர்வோத்தமன் பாம்பன்கோவிலை விட்டு மதனபுரிக்குப் புறப்பட்ட அதே தினத்தன்று சுகந்தியைத் தேடிச்சென்ற பரதேசி, சுமுகியையும், சாரதாவையும் மதனபுரியில் தற்செயலாய்ச் சந்தித்துத் தான் தங்கியிருந்த மடத்திற்கு அவர்களை அழைத்துப் போனான். சுகந்தி, பூபாலனுடைய வீட்டில் சிறைவைக்கப்பட்டிருக்கிறாளென்று தனக்குச் செய்தி எட்டியிருப்பதால், சாரதாவை அவளிடம் தாதியாக அனுப்பிச் சமயம் பார்த்து அவளையும், சுகந்தியையும் வெளியேறச் சொல்லி, வெளியில் ஒரு மோட்டார்வண்டியைத் தயாராக வைத்திருந்து, தாமதமில்லாமல் அவர்களை அயலூருக்குக் கூட்டிச் செல்லவேண்டுமென்றும், அவ்விதம் செய்வதற்கு இன்னொரு ஆடவனின் உதவிதேவையென்

றும் பரதேசி அவர்களுக்குத் தெரிவித்தான். அப்பொழுது சாரதா "இத்தருணம் சர்வோத்தமர் இருந்தால் நலமாயிருக்குமே! என்று சொல்லவும் "இதோ வந்துவிட்டேன்" என்றான் சர்வோத்தமன். அவனைக் கண்டதும் மூவரும் அளவிறந்த சந்தோஷமடைந்து ஒருவரையொருவர் வினவிக்கொண்டனர்.

பின்னர், முன் பரதேசி சொன்ன ஆலோசனையின்படி, பரதேசியே ராஜாராம் எனப் பெயர்கொண்டு ஒரு சவளி வியாபாரியாகவுப், சாரதா, சதாலட்சுமி எனப் பெயர்கொண்டு சவளி மூட்டை தூக்கும் ஒரு கூலிப்பெண்ணாகவும் மாறுவேடம் புனைந்து சவளி வியாபாரம் செய்யப் பூபாலனின் வீட்டிற்குச் சென்றார்கள். பின்பு சாரதா, பூபாலனிடம் சுகந்திக்குத் தாதிப் பெண்ணாக அமர்ந்து அவளுக்குத் தான் யாரென அந்தரங்கமாய்த் தெரிவித்தாள். அப்புறம் ஒவ்வொருநாளும் மடத்திற்கு வந்து தன் அன்னையிடம் பூபாலனுடைய வீட்டில் நடையுறும் விஷயங்களை அறிவித்து ஆலோசனை கேட்டுவந்தாள்.

குறித்த ஒருநாள் இரவில் எவருக்குந் தெரியாமல் சாரதாவும் சுகந்தியும் பூபாலன் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். சாரதா, பூபாலனுடைய காவற்காரனால் சுடப்பட்டது இச்சமயமே.

சாரதாவும், சுகந்தியும் பூபாலனின் வீட்டைவிட்டு வருமுன்னதாகவே பரதேசியும், சர்வோத்தமனும் இரு ஏணிகளை மதிற்சுவருக்கு உட்பக்கத்தில் ஒன்றும், வெளிப்பக்கத்தில் மற்றொன்றுமாகச் சார்த்திவிட்டு இரு பெண்களின் வரவையும் எதிர்நோக்கி மதிலுக்கு வெளியே ஒரு மோட்டார் வண்டியில் காத்திருந்தார்கள். சாரதா சுடப்பட்டு வெளியில் விழுந்ததையும், சுகந்தி அவளைத் தூக்கிவைத்து அழுததையுங் கண்ட பரதேசியும், சர்வோத்தமனும் கணப்பொழுதில் அவர்களை மோட்டார் வண்டியில் ஏற்றி மடத்திற்குப் போய்ச் சுமுகியையும் அழைத்துக் கொண்டு தஞ்சனூருக்குத் துரிதமாய்ச்சென்றார்கள். வழி

யிலேயே சுமுகியும், சுகந்தியும் சாரதாவின் காயத்தைக்கட்டி இரத்த ஒழுக்கை நிறுத்தினார்கள். துப்பாக்கியினால் சுடப்பட்டதில் சாரதா மரிக்கவில்லையாயினும் இன்னும் மூடின கண்களைத் திறந்திலள். யாவரும் மிகுந்த கலக்கத்துடனும், கண்ணீருடனும் தஞ்சனூரைச் சேர்ந்தார்கள்.

தஞ்சனூரில் கோமளவல்லி என்ற ஒரு சீமாட்டி இருந்தாள். அவளுக்கும், பரதேசிக்கும் அறிமுகமுண்டு. பரதேசி அவளிடம் சென்று சாரதாவின் விஷயத்தைத் தெரிவித்து, சாரதாவை மறுநாள் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகும்வரை அவள் வீட்டில் தங்க அநுமதி கேட்டான். கோமளவல்லியோ சாரதா குணமடையுமட்டும் யாவரும் தன்வீட்டிலேயே தங்கவேண்டுமென்று விரும்பியதோடு ஒரு பிரபல வைத்தியரைத் தன் வீட்டிற்கே தருவித்துச் சாரதாவிற்குச் சிகிச்சை செய்வித்தாள். சாரதாவிற்கு வேண்டிய உதவியைச் செய்ய சர்வோத்தமனைத் தஞ்சனூரில் நிறுத்திவிட்டுப் பரதேசி ஒரு அவசர காரியமாய்க் குமரிபுரத்திற்குச் சென்றான். வைத்தியர் வெகு கரிசனையாய்ப் பார்த்துவந்தும் சாரதாவின் நிலைமை மிகுந்த கவலைக்கிடமாயிருந்தது.

பூபாலன் சடாலிங்கத்தால் அடிபட்ட மறுநாட் காலையில், தன் தத்தபுத்திரி சுகந்தியின் கலியாண விஷயமாய்ச் சமீன்தார் இலட்சுமண முதலியார் பூபாலனின் வீட்டிற்கு வர, அது கலியாணவீடுபோலன்றித் துக்க வீடுபோல் தோன்றியதையும், தன்னை வரவேற்க எவரும் வாராததையும் பார்த்து மிகுந்த திகைப்புடன் உட்சென்றார். சென்றதும் பூபாலனும், அவன் இரு நண்பரும் கட்டுண்டிருந்ததையும், பூபாலன் அதிகக் காயமடைந்து அவதிப்பட்டுக்கொண்டிருந்ததையும் காணவே திடுக்கிட்டார். பின் மூவரது கட்டுகளையும் அவிழ்த்து விவரம் விசாரிக்கப் பூபாலன், தானும், தன் தோழரும் சம்பாஷித்துக்கொண்டிருந்த சமயம் சடாலிங்கம் சில முரடருடன் திடீரெனத் தோன்றி வீட்டிலுள்ள வேலைக்காரர் உள்பட யாவரையும் கயிற்றினால் பிணித்துத் தன்னையும் அடித்துப் பின்னர் சுகந்தியை அழைத்துப் போய்விட்ட

தாய்த் தெரிவித்தான். சடாலிங்கம், சுகந்தியைக் கொண்டு போனனென் றறிந்ததும் முதலியார் அடைந்த துயரத்திற்கோர் அளவேயில்லை. "இறுதியில் திருடனின் கையிலா சிக்கினள்! 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை அறிந்திருந்தும் என் பேச்சைத் தட்டினதாலன்றோ இத்துன்பத்திற்குள்ளானள்! புத்திரப்பேறில்லாத எனக்குச் சுவீகார புத்திரியாய் வந்தும் என் பெருத்த சமீனை அநுபவிக்க அவளுக்குக் கொடுத்துவைக்கவில்லையே! இப்பொழுதும் சடாலிங்கம் அவளைக் கொண்டுபோகக் காரணமென்ன? இதனல் அவனுக்கு என்ன லாபம்? இதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. எவ்விதமும் சுகந்தியைக் கண்டு பிடித்துச் சடாலிங்கத்தைச் சிட்சிக்கவேண்டும். ஆனல் இதை எவ்விதம் நிறைவேற்றுவதென்பதுதான் என் புத்திக்குத் தோன்றவில்லை. இதுவரை அவன் இருப்பிடத்தைக் கண்டவர் எவருமில்லையே!" என்று முதலியார் பிரலாபித்தார். அப்பொழுது பூபாலன் "ஐயா! அவன் இருப்பிடம் எனக்குத் தெரியும்" எனச் சொல்லித் தான் சடாலிங்கத்தின் மகள் ராதாவைச் சந்தித்த இடத்தை விஸ்தாரமாய்க் கூறினன். அதை அறிந்ததும் முதலியார் மிகவும் சந்தோஷித்துப் பூபாலனிடம் விடைபெற்றுச் சென்றார்.

முதலியார் சென்றதும் பூபாலன் தன் நண்பர்களை நோக்கி "நான் முதலியாருக்குத் தெரிவித்தது சரிதான?" என்று கேட்டான்.

பிரகஸ்பதி:—மிகவும் சரி. உண்மையைத் தெரிவித்திருந்தால் அவருக்கு நம்மிடத்துள்ள மதிப்புக் குறைந்துவிடும். மேலும் அவர் ஒரு பெரிய சமீன்தாராதலால் பணத்தைப் பாராமல் ஏராளமாய்ச் செலவிட்டு நம்மைத் துன்புறுத்திய சடாலிங்கத்தை எவ்விதமும் தண்டனைக்குட்படுத்துவார். சுகந்தியும் ஒருவேளை உனக்குக் கிட்டினலும் கிட்டலாம்.

பூபாலன்:—பிரகஸ்பதி சொல்லியபடி சுகந்தி எனக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆயினும் அவள் என்னை மணந்து

கொள்ள ஒருகாலும் சம்மதியாள். அவளைப் பலவந்தப்படுத்த முதலியாரும் இனித் தயங்குவார். ஆதலால், காந்தருவா! நீ போய் நான் நோயுற்றிருக்கிறேனென்று சொல்லி எனக்குச் சிகிச்சை செய்ய டாக்டர் சுனதியை அழைத்துவந்து அவள் என்னை மணந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்.

காந்தருவன் :—பிரகஸ்பதி! டாக்டர் சுனதி ரஜாவில் தன் தகப்பனார் வீட்டிற்குச் சென்றிருந்தாளே? ரஜா முடிந்து குமரிபுரத்திற்குத் திரும்பி மறுபடியும் வேலையில் சேர்ந்துகொண்டாளா? அதுவிஷயத்தை உன் மீனாளிடம் தெரிந்துகொண்டாயா?

பிரகஸ்பதி :—அவள் குமரிபுரம் வந்து சில நாட்களாயின.

காந்தருவன் :—அப்படியாயின் உடனே போய் அவளை அழைத்துவருகிறேன்.

பிரகஸ்பதி :—டாக்டர் மீனாளையும் அவளுடன் கூட்டிவா. சுனதியை நம் வசப்படுத்துவதற்கு மீனாளும் உதவிபுரியக்கூடும்.

காந்தருவன் :—என்னால் சாதிக்கக்கூடாத காரியம் ஒன்றுண்டோ! இதற்கு மீனாளின் உதவியும் வேண்டுமோ! அவள் முகதரிசனம் பெற ஆசையாயிருக்கிறதென்று வெளிப்படையாய்ச் சொல்ல உனக்கு வெட்கமாயிருக்கிறதோ?

பிரகஸ்பதி :—எப்படியாயினும் நினைத்துக்கொள். அவளை அழைத்து வரமட்டும் மறவாதே.

காந்தருவன் :—அப்படியே செய்கிறேன்—என்று சொல்லிச் சென்றான். பின்பு பிரகஸ்பதி, கட்டுண்டிருந்த வேலைக்காரர் முதலியவர்களை அவிழ்த்துவிட்டுப் பூபாலனுக்கு உதவியாக அங்கேயே தங்கியிருந்தான்.

பூபாலனைப் பிரிந்து குமரிபுரத்திற்குச் சென்ற காந்தருவன், டாக்டர் சுனதியைக் கண்டு "அம்மா! மதனபுரியில் மிட்டாதார் பூபாலன் கொள்ளைக்காரரால் அடிக்கப்பட்டு அதிகக் காயமடைந்

திருக்கிறார். உங்களுடைய திறமையையும், கைராசியையும் கேள்வியுற்றுத் தங்களை அழைத்துவரும்படி என்னை அனுப்பினார். அவர் சுகமாகும் வரை ஒவ்வொருநாளும் நீங்கள் அவ்விடம் வந்து போவதற்கு அவருடைய மோட்டார்வண்டியையே உபயோகித்துக்கொள்ளலாமெனவும், சுகமானபின் ஒழுங்குப்படி உங்களுக்குச் சேரவேண்டிய பணத்துடன் தகுந்த சன்மானமும் அளிப்பதாகவும் தெரிவிக்கச் சொன்னார், ஆதலால் தயைபுரிந்து நீங்கள் என்னுடன் உடனே வரும்படி விரும்புகிறேன்" என்று வெகுநயமாய்ப் பேசினான்.

சுனதி:—அயலூருக்கு வரவேண்டியதிருப்பதால் எனக்கு நாளொன்றுக்கு ரூபாய் இருபத்தைந்து கொடுக்கவேண்டும். மேலும் ஒவ்வொருநாள் பணத்தையும் நான் வருவதற்கு முன்னதாகவே செலுத்தவேண்டும். அதற்குச் சம்மதமானால் வரத் தயாராயிருக்கிறேன்.

காந்தருவன்:—இருபத்தைந்து ரூபாயல்ல, முன்பணமாகக் கொடுக்கும்படி ரூபாய் நூறு பூபாலன் என்னிடம் கொடுத்திருக்கிறார்—என்று ரூபாய் நூற்றைச் சுனதியிடம் அளிக்க, அவள் அதைப் பெற்றுக்கொண்டு உடனே புறப்பட்டாள். அச்சமயம் டாக்டர் மீனாள் அங்கு வர, அவள் காந்தருவனைக் கண்டதும் "மிட்டாதாரவாள்! ஏதாவது விசேடமுண்டோ?" எனக் கேட்க அவன், தான் வந்த காரியத்தைத் தெரிவித்ததுடன் "மிட்டாதார் பிரகஸ்பதி ஐயரும் இப்பொழுது பூபாலனுடன்தானிருக்கிறார். உங்களை வந்து பார்த்துப்போகவேண்டுமென்றும் சொன்னார். உங்களுக்குச் சௌகரியமிருந்தால் இப்போது எங்களுடன் வரலாமே!" என்றான். அப்பொழுது சுனதியும் அவளைத் தன்னுடன் வரும்படி அழைக்க மீனாளும் சம்மதித்தாள். பின் மூவரும் மதனபுரிக்குப் புறப்பட்டனர். பூபாலனின் வீட்டை அடைந்ததும் சுனதி பூபாலனுக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தாள். அதுசமயம் மீனாளும், பிரகஸ்பதியும் அடுத்த அறையில் தனித்துச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். பூபாலன் சுகமடைந்தபின் தங்கள் விவாகத்தை வைத்துக்கொள்ளலாமென முடிவு

செய்துகொண்டனர். சுனதி பூபாலனின் காயங்களைக் கட்டினதும் மீனாளுடன் குமரிபுரத்திற்குத் திரும்பினாள். பூபாலன் சுகமாகும்வரை சுனதி தினமும் மதனபுரிக்கு வந்துபோயிருந்தாள்.

ஒருநாள் ஜெகந்நாதன் வெளியிற்போயிருந்த சமயம் பாலகிருஷ்ணனும், பத்மாவதியும் தனித்திருக்க, பத்மாவதியின் மனத்தைக் களிப்பிக்குமாறு பாலகிருஷ்ணன் தன் புல்லாங்குழலை எடுத்து வாசிக்கலானான். அவ்வினிய நாதத்தைக் கேட்கக் கேட்கப் பத்மாவதியின் மனம் மிகவும் கனிந்து அவனது வாசிப்பில் முற்றும் இலயித்துப்போயிற்று. அதனை உணர்ந்த பாலகிருஷ்ணன் அதுவே தக்க தருணமென உன்னி, தான் அவள்மீது கொண்டிருந்த காதலை அவளிடம் வெளியிட, அதைச் செவியுற்றதும் அவள் உள்ளம் குழம்பியது. அவன் விருப்பத்திற்கிணங்கினால் தன் பர்த்தாவிற்குத் துரோகம் செய்ததாகுமேயென எண்ணினாள். ஆயினும் அவனது கூட்டுறவில் மயக்கமுற்றிருந்த அவள் மனம் அவ்வெண்ணத்திற்கு மாறாய்ப் போராடிற்று. அவனுடைய சிநேகத்தை முறித்துக்கொள்ள விருப்பமற்றுத் தயங்கினாள். இறுதியில் அவனைப் பிரியப்படுத்த எண்ணி யாதும் பேசாது தலைகவிழ்ந்தாள். உடனே பாலகிருஷ்ணன் தைரியங்கொண்டு அவளை நெருங்கி ஒரு முத்தமிட்டான். அதுசமயம் ஜெகந்நாதனும், பாலகிருஷ்ணனின் மனைவி ருக்மணியும் அவ்வறைக்குள் வர, பாலகிருஷ்ணனும், பத்மாவதியும் இருந்த நிலைமையைக் கண்ணுற்றதும் ஸ்தம்பித்துப்போயினர். இந்நால்வரின் மனமும் இச்சமயம் அடைந்த நிலைமையை விவரித்துரைப்பது எவ்வாறெனத் திகைக்கின்றோம்.

"நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு"

அத்தியாயம்—6.

குடியைக் குலைத்த கொடுஞ்சூரி.

"வெஞ்சினம் பொருளாக்கொள்வோர் விடுபடாப் பொறுமையாள்வோர்
வஞ்சக நட்போர்பாலும் வயக்குவோர் பிறரூஞ்சி
நெஞ்சநெக் குருகாரெங்க ணின்மலப் பெருமான்றூளே
தஞ்சமென் றடையாரின்னேர் தண்டிக்கப் படுவர்மாதோ"

நந்தனூர்குடியில் வியாதியாயிருந்த லோகானந்தன் தன் மனைவியின் அன்பான பார்வையினல் சுகமடைந்து படுக்கைவிட்டெழுந்தான். பின் சரீரம் சற்று பெலனடைந்ததும்,

"கற்பூரப் பாத்திகட்டி கஸ்தூரி யெருப்போட்டுக் கமழ்நீர்பாச்சிப்
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலு மதன்குணத்தைப் பொருந்தக்காட்டும்
சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக வருமெனவே சொல்லினுலும்
நற்போதம் வாராதாங் கவர்குணமே மேலாக நடக்குந்தானே"

என்றபடி, குடியையும், தாசியின் சகவாசத்தையும் விட்டானில்லை. மேலும் மேலும் கடனில் மூழ்கினுன். சுமதி எவ்வளவோ நல்லத்தனமாய்ப் புத்தி சொல்லியும், கண்ணீருடன் வேண்டியும் அவளுக்கு அவன் செவிகொடுக்கவில்லை. அவன் அன்னை காந்தாரியோ அவன் மனங் கோண நடப்பதில்லை. தன் மகன் ஒரு தாசியை வைத்துக்கொண்டு இடம்பச்செலவு செய்வது அவளுக்கு ஒரு பெருமையாகவிருந்தது. மாணத்தறுவாயிலிருந்த இராமலிங்க முதலியார் சில தினங்களில் சொஸ்தமடைந்து வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியதும் தன் மகன் லோகானந்தனை மெதுவாய்க் கண்டிக்க ஆரம்பித்தார். அதுமுதல் லோகானந்தன் வீட்டிற்கு வருவதை நிறுத்தித் தாசி பிரியவதி வீட்டிலேயே தங்கியிருந்தான்.

குமரிபுரத்தில் பரதேசிகள் தங்கும் மடம் ஒன்றிருந்தது. அதில் சாம்பசிவன் என்ற ஒரு பரதேசி வசித்துவந்தான். அவன் வயிற்றுப் பிழைப்புக்காகப் பரதேசிக்கோலம் பூண்டவனல்லன். மிகுந்த தெய்வபக்தியுள்ளவன். பிறருக்கு நன்மை செய்வதி லேயே தன் காலத்தைக் கழிப்பவன். எவராவது தனக்குத் தரு மம் கொடுத்தால் அதை மற்ற ஏழைகளைத் தேடி அவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பான். வைத்தியசாலைகளுக்குப் போய் வியாதி யஸ்தர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லி அவர்களை மகிழ்விப்பான். எவரிடத்தும் அன்பாய்ப் பேசி அவரவர்க் கேற்ற புத்திமதிகள் கூறுவான்.

> " இளமையு நில்லா யாக்கையு நில்லா
> வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
> புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
> மிக்க வறமே விழுத்துணை யாவது "

என்பதைக் கடைப்பிடித்தொழுகிவந்தனன். குமரிபுரத்தில் அவனை அறியாதார் எவருமிலர். யாவரும் அவனிடத்து மிகுந்த மரி யாதையும், அன்பும் காட்டிவந்தனர். அழுகிற குழந்தைகள் கூடச் சாம்பசிவனைக் கண்டால் அழுகையை நிறுத்தி அவனிடம் விளையாடும். குமரிபுரத்தில் கடற்கரையிலும், நந்தனூர்குடியில் இரா மலிங்க முதலியாரின் வீட்டுப்படியிலும் சுகந்திக்கு உதவிசெய்த பரதேசி இச்சாம்பசிவனே. மதனபுரி பூபாலனிடமிருந்து சுகந்தி யைத் தப்புவித்த பரதேசியும் இவனே.

தஞ்சனூரில் நோயுற்றிருந்த சாரதா வைத்தியருடைய கரி சனையான சிகிச்சையினால் சில தினங்களில் குணமடைந்தாள். அவள் நடக்கச் சக்திபெற்றதும் அவளுடனும், சுகந்தியுடனும் சுமுகி கோமளவல்லியின் வீட்டைவிட்டு அவ்வூரிலேயே சன நெருக்கமில்லாத தெரு ஒன்றில் தனிமையான ஒரு வீட்டில் வசி த்து வந்தாள்.

கோமளவல்லி குமரிபுரத்திலிருந்த சாந்தசீலனுக்குத் தந்தையுடன் பிறந்த அத்தையாவாள். சாந்தசீலன் கடலில்

வீழ்ந்த பின் அவனுடைய மிட்டா அவளுடைய அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. அதை காறுபாறு செய்யக் கோமளவல்லி சர்வோத்தமனை நியமித்துக்கொண்டாள். அதனால் அவனும் அவ்வூரிலேயே தங்கி ஆண் துணையற்ற சுமுகிக்குத் தன்னாலியன்ற உதவி புரிந்து வந்தான்.

பூபாலன் சுகமடைந்ததும் சுனதி அவனிடம் கடைசியாய் விடைபெற்றுப்போக வந்தபோது இருவரும் ஓர் அறையில் தனித்தனர். பூபாலன் சுனதியை நோக்கி "அம்மணி! உன்னுடைய அரும் பிரயாசையால் அதிவிரைவில் என் காயங்கள் ஆறின. அத்துடன் உன் கருணையான பார்வையும், இதமான மொழிகளும் என் மனத்தை மிகவும் மகிழ்வித்தன. எனது ஐம் புலன்களும் இன்புற்றன. உன்னுடன் பழகியதில் இதுவரையில் நான் அநுபவித்தறியாத ஒருவித உணர்ச்சி என்னை வாட்டுகிறது. உன்னை என் வாழ்க்கைத்துணைவியாகப் பெறப் பெரிதும் ஆவல் கொண்டுள்ளேன். ஆகலால் எவ்விதத் தடையும் சொல்லாது என்னை உன் கணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்" என்றான்.

சுனதி இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் திடுக்கிட்டு "ஐயா! இவ்விதத் தப்பிதமான வார்த்தைகளை நீர் என்னிடம் உபயோகிப் பீரென நான் கிஞ்சித்தும் எண்ணவில்லை; நான் போய் வருகிறேன்" என்று எழுந்தாள். அப்பொழுது பூபாலன் அவளை வழிமறித்து "சுனதி! நீ யாருடன் பேசுகிறாயென்பதையும், எவ்விடத்திலிருக்கிறாயென்பதையும் உணர்ந்துகொள்ளாமல் பிதற்றுகிறாய். நீ வெளியிற் செல்லாதபடி கதவு வெளிப்பக்கம் என் வேலைக்காரன் பழனியால் தாளிடப்பட்டிருக்கிறதென்பதை அறிந்துகொள். என் கையிலிருந்து உன்னை எவரும் தப்புவிக்கமுடியாது. என்னை நீ மணந்துகொள்ளச் சம்மதியாவிடில் உன் கற்பை அழிக்காமல் உன்னை இவ்வறையைவிட்டுப் போகவிடேன் என்பது நிச்சயம்" என்று சொல்லவும், சுனதி, தன் குரலைப் பூபாலனின் குரல்போல் மாற்றிக்கொண்டு தந்திரமாய் "ஐயோ!

ஐயோ! டாக்டர் சுனதி என்னைக் கொலை செய்கிறாளே! பழனி! பழனி! சீக்கிரம் கதவைத்திற, கதவைத்திற'' என்று கதறினாள். இம்மாரீசத்தைக் கண்டதும் பூபாலன் திகைத்து யாது செய்வதெனத் தோன்றாது வாய்திறக்கவும் முடியாமல் அசைவற்று நின்றான்.

சுனதி, பூபாலன் அறைக்குட் சென்ற சில நிமிடங்களில் பரதேசி சாம்பசிவன் பூபாலனைக் காணவந்தான். அப்பொழுது வேலைக்காரன் பழனி, பூபாலனும் சுனதியும் இருந்த அறைக்குப் பக்கத்து அறையில் பரதேசியை அமரச்செய்து பூபாலன் வெளி வரும் வரை காத்திருக்கச் சொன்னான். அவ்விதம் காத்திருந்த பரதேசி, சுனதியின் அலறுதலைக் கேட்டதும் சட்டெனக் கதவைத் திறந்து உட்சென்று, சுனதி பூபாலன்முன் பயந்து நிற்பதைக்கண்டு, பூபாலனைப் பார்த்து "பூபாலரே! டாக்டர் சுனதி உம்மைக் கொலைசெய்வதாய்ச் சத்தமிட்டீரே! அப்படி ஒன்றும் தோன்றவில்லையே! நடந்தது என்ன?'' என்று வினவினான். சாம்பசிவனைக் கண்டதும் சுனதி தைரியமுற்று, தான் செய்த தந்திரம் பலித்ததை நினைத்துக் கலகலவெனச் சிரித்து நடந்த விஷயத்தைக் கூற, சாம்பசிவன் பூபாலனை நோக்கி "என்ன பூபாலரே! உமக்குமா புத்தி சபலித்துவிட்டது! இருந்திருந்தும் விதவையையா கலியாணஞ் செய்யவிரும்பினீர்? உமக்கென்ன பெண்ணிற்குப் பஞ்சமா? எத்தனையோ சமீன்தார்கள் ரதிபோல் பெண்களை வைத்துக்கொண்டு உமக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்களே! உமது அருமை தெரியாத இவள் போனால் போகட்டும்'' என்றான். இதுதான் சமயமெனச் சுனதியும் சரேலென்று வெளியேறி, செத்தேன் பிழைத்தேனென்று குமரிபுரத்திற்கு வந்து சேர்ந்தாள். பூபாலன் பரதேசியின்மீது அதிகக் கோபமடைந்தாலும் அதைக் காட்டிக்கொண்டால் தன் மானம் போய்விடுமென்றஞ்சிக் கோபத்தை அடக்கி வழக்கம்போல் சற்றுநேரம் அவனுடன் பேசியிருந்து அவனை அனுப்பிவிட்டான்.

பாலகிருஷ்ணனின் அடாதசெய்கைக்கு இடங்கொடுத்த பத்மாவதி, திடீரெனத் தன் கணவனைக்கண்டதும் திடுக்குற்றுப்

பாலகிருஷ்ணனின் கைகளினின்று சட்டெனத் தன்னை விடுவித்துக் கொண்டாள். பின் ஒன்றும் செய்யத் தோன்றாது ஒரு மூலையில் பதுங்கித் தன் கணவனைக் கண்களால் ஏறெடுத்துப் பார்க்கவும் பயந்து தலைகுனிந்து நின்றாள். அவள் தேகம் மிகவும் வெயர்த்து வேர்வை ஆறாய் ஓடி ஆடைகளை நனைத்தது. தனக்கும், பாலகிருஷ்ணனுக்கும் ஜெகந்நாதன் எத்தகைய கோரமான தண்டனையை விதிப்பானோவெனக் கலங்கினாள். பாலகிருஷ்ணனோ ஜெகந்நாதனையும், தன் மனைவியையும் பார்த்ததும் நடுநடுங்கினான். கடன் கொண்டார் நெஞ்சம்போல் கலங்கின இலங்கைவேந்தனுக் கொப்பாகித் தன் உயிரைக் கொள்ளை கொள்ள யமனே வந்தானெனப் பதறித் தான் நின்ற இடத்தைவிட்டு ஓர் அடியும் எடுத்து வையாது உன்மத்தன்போல் நின்றான்.

தன்னையும், ஜெகந்நாதனையும் கண்ணுற்றதும் தன் கணவன் அடைந்த பரிதாப நிலையை நோக்கி ருக்குமணி அவன்மீது மனதுருகினாள். தான் கண்கூடாகக் கண்ட அவனது துரோகச் செயலைச் சிறிதும் கருதாது அவனுக்கு ஜெகந்நாதனால் ஏதாவது அபாயம் நேரிடுமோவென அஞ்சிப் பதை பதைத்தாள்.

தனது மனைவியின் தீச்செயலை அறிந்த ஜெகந்நாதன் தன் நண்பன் பாலகிருஷ்ணனே அதற்குக் காரணமென வெண்ணி அவனை ஆதரித்தது பாம்புக்குப் பால் வார்த்தது போலாயிற்றே என மனங் கொதித்துப் பாலகிருஷ்ணனது பொல்லாத நடத்தையால் பொங்கிய கோபத்தை அடக்கமுடியாமல் முகம் வேறுபட்டுத் துடிதுடித்து அச்சமயம் தன்னிடமிருந்த கத்தியால் அவனைக் குத்தும்படி அவனை நோக்கி ஓரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தான். அதைக் கவனித்த ருக்குமணி தன் பர்த்தாவைக் காக்கவெண்ணிச் சட்டென ஓடி ஜெகந்நாதனை இடைமறித்துப் பாலகிருஷ்ணனைக் கட்டிக்கொள்ள ஜெகந்நாதனின் கத்தி அவளது விலாவில் பாயவே பிணம்போல் சாய்ந்தாள். இதுகாறும் பித்தனைப்போல் நின்ற பாலகிருஷ்ணன் அக்கணமே அறிவுபெற்று அவள் தலையைத் தூக்கித் தன் மடிமீது வைத்துக்கொண்டு "என்

கண்ணே ருக்குமணி! என் அக்கிரமத்தைக் கண்ணூரக் கண்டும் என் உயிரைக் சாப்பாற்ற உன் உயிரைத் தத்தம் செய்தாயே! உன்னைப்போல் உத்தமி உலகெங்கும் தேடினாலும் கிட்டுவாளா! என்பால் நீ உன் மனத்தில் வைத்துள்ள பேரன்பை என்னிடம் வெளிப்படையாய்க் காட்டாததாலல்லோ என் மதியை இழந்தேன்! என் கட்டித் தங்கமே! உன் வாயைத் திறந்து உன்னை மன்னித்தேனென்று ஒரு வார்த்தையாவது சொல்லாயா?" எனப் புலம்பி அழுதுகொண்டே ஜெகந்நாதனை நோக்கி "ஜெகந்நாதா! புத்தியீனத்தால் நான் செய்த இப்பிழையை மன்னிப்பாயா?" என்று கெஞ்சினன்.

இதுபரியந்தம் பயத்துடன் ஒதுங்கிநின்ற பத்மாவதி ஓடிப்போய்த் தன் கணவன்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவன் இரு கால்களையும் பிடித்துக்கொண்டு "நாதா! அடியாள் அறியாமற் செய்த தவறை மன்னித்து என்னைக் காப்பாற்றப் பிரார்த்திக்கிறேன். இல்லையேல் என் உயிரையும் தங்கள் கையால் மாய்த்துவிட வேண்டுகிறேன்" என்று தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டாள்.

குற்றமற்ற ஒரு குணவதியைக் கொலைபுரிந்தேனே யென்று மனம் வருந்தி நின்ற ஜெகந்நாதன் ஒருவாறு கோபந் தணிந்தான். ஆயினும் பாலகிருஷ்ணனுக்கும், பத்மாவதிக்கும் என்ன பதிலளிப்பதெனத் திகைத்துக்கொண்டிருக்கும் சமயம் ருக்குமணியின் தேகம் சற்று அசைவதைக் கவனித்தான். உடனே "பத்மா! எழுந்திரு. ஓடிப்போய் மருந்துப்பெட்டியை எடுத்துவா. தண்ணீரும் கொண்டுவா. ருக்குமணிக்கு உயிர் போகவில்லை. தேகம் அசைகிறது" என்று பரபரப்புடன் கூறி ருக்குமணியிடம் சென்றான். பத்மாவும் எழுந்து ஓடினாள். பாலகிருஷ்ணனும் தன் அழுகையை நிறுத்தி ருக்குமணியின் விலாவில் பாய்ந்திருந்த கத்தியை மெதுவாய் எடுத்துவிட்டு இரத்தம் வடியாதபடி அக்காயத்தின்மேல் ஒரு துணியை வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டான். சில நிமிஷங்களில் பத்மாவதி

தண்ணீருடனும், மருந்துப்பெட்டியுடனும் வர மூவருமாய்க் கூடி ருக்குமணியின் காயத்தைக் கழுவிக் கட்டினர்.

பின்பு வைத்தியரை அழைத்துவரப் பாலகிருஷ்ணனை அனுப்பிவிட்டு ருக்குமணியின் பக்கத்தில் பத்மாவதியை இருக்க வைத்து ஜெகந்நாதன் தன் அறைக்குச் சென்றான். தனித்திருந்த அவன் மனம் பல பல எண்ணங்களால் அலசடிப்பட்டது. "சிறு பிராயமுதலே என்னுடன் பழகி உடன்பிறந்த சகோதரன் போல் என்னை உயிருக்குயிராய் நேசித்த நற்குணவந்தனாகிய என் ஆப்த நண்பனே இத்தீத்தொழிலில் இறங்கினானே! இவ்வாறு நடக்க அவன் மனத்தைத் துணியச் செய்த காரணம் யாதோ! எவ்வித களங்கமுமின்றிச் சொல்லொணா ஆர்வத்துடன் என்னைக் காதலித்து எவ்வகையிலும் எனக்குக் களிப்பூட்டிய பத்மாவதியும் இவ்விதம் நடந்தனளே! அவ்வாறு அவள் மனத்தை மாற்ற நேர்ந்த ஏதுகரம் என்னோ! விஷயத்தை ஆழ்ந்து யோசிக்கையில் இவ்விருவரும் நிலைதவற நானும் ஒரு காரணமே! பத்மாவதியின் மனப்போக்கை உணர்ந்து நான் நடந்துக்கொள்ளாததும், அவள் மனப்பான்மைக்கு ஒத்த குணமுடைய பாலகிருஷ்ணனுக்கு, கருப்பங்கட்டியிலும் கல் இருக்கும் என்பதை மறந்து அவளுடன் நெருங்கிச் சகவாசஞ்செய்ய அநுமதி அளித்ததும் என் பிழையன்றோ! இது, தற்கால நாகரீகத்தை அநுசரித்து, அவனோடு தாராளமாய்ப் பழக என் மனைவிக்கு இடங்கொடுத்த என் மதியீனத்தால் விளைந்த தீங்கன்றோ! எவ்வளவு மன உறுதியுடையவர்களானாலும் இவ்விஷயத்தில் மட்டும் நிலைகுலைவது இயல்பன்றோ! அதிலும் ஏழை நெஞ்சுடைய மெல்லியார் ஏமாற்றப்படுவது இலகுவன்றோ! இவைகளைத் தீர ஆலோசியாமல் பொல்லாத கோபத்திற்காளாகி அவர்களைத் தண்டிக்க நினைத்ததால் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்த நேர்ந்ததே! இப்பொழுதும் இவர்கள் அதிகமாய் வரம்புமீறி நடக்குமுன் அவர்களுக்கு அறிவுணர்த்துமாறு நானும், ருக்குமணியும் சமயத்தில் வர நேர்ந்தது தெய்வச் செயலே! தாங்கள் செய்த குற்றத்திற்காக மனங்கசந்து மன்னிப்புக் கேட்கும் இவ்விருவரையும் மன்னிப்பதே பெருந்தன்மை

யாகும். ஆயினும் எத்தகைய குற்றத்தைப் பொறுத்தாலும் இக்குற்றத்தை மட்டும் பொறுக்க என் மனம் இடந்தரவில்லையே! என் மனம் அப்படியிருக்க, தன் கணவனின் துர்ச்செய்கையை நேரில் பார்த்த ருக்குமணி அதனைச் சகித்ததுமன்றி அவன் உயிரைக் காப்பாற்றவும் முன்வந்தனளே! பெண்களின் சுபாவம் அவ்விதமிருக்க ஆண்களுக்குமட்டும் இச்சுபாவம் இல்லையே! பத்மாவதியின் விஷயத்தில் இனி எவ்விதம் நடந்துகொள்வது?" என்று தனக்குள்ளாகவே யோசித்துக்கொண்டிருக்கும் சமயம் பத்மாவதி வந்து அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு "நாதா! தங்களுக்குத் துரோகஞ் செய்ய நான் என் சொப்பனத்திலும் நினைத்தவளல்ல. நினையாவாறு திடீரென நேரிட்ட சோதனையில் பேதைமையால் மதியிழந்தேன். தயைபுரிந்து என்னை மன்னிப்பீர்களா?" என்று இரந்து கெஞ்சினாள். அப்பொழுது ஜெகந்நாதன் "உன்னை மன்னிக்கிறேன். எனினும் இனி உன்னோடு கூடிவாழ என் மனம் ஒப்பவில்லை. ஆதலின் உன் பெற்றோரிடம் போய்ச் சேர்" எனச் சொல்லவும், பத்மாவதி "தாங்கள் என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளாவிடினும் ஒரு வேலைக்காரியாகவாவது பாவித்துத் தங்களுக்குப் பணிவிடை செய்ய அநுமதி அளிக்கும்படி வேண்டுகிறேன்" எனத் திரும்பவும் கெஞ்சினாள். "இப்பொழுது என் மனம் இருக்கும் நிலைமையில் உன்னை என்னோடு வைத்திருக்கமுடியாது. ஆதலால் நீ என்னைவிட்டுச் செல்ல வேண்டும்" என்று ஜெகந்நாதன் பிடிவாதமாய்க் கூற "ஒருகாலும் என் பெற்றோரிடம் செல்லேன். என்னைத் தாங்கள் ஆதரிக்க மறுப்பதால் இனி என் உயிரை ஒரு பொருட்டாக எண்ணேன்" எனக் கண்ணீருடன் சொல்லி, பத்மாவதி எழுந்து துரிதமாய் வெளியேசென்றாள்.

பத்மாவதி சென்ற சிறிது நேரத்தில் பாலகிருஷ்ணன் வைத்தியருடன் திரும்பிவந்தான். வைத்தியர் ருக்குமணியின் காயத்தைச் சோதித்து அவளை வைத்தியசாலையில் வைத்துப் பார்ப்பதே உசிதமென்றும், மற்றப்படி உயிருக்கு மோசம் நேரிடக்கூடுமென்றும் சொல்ல, பாலகிருஷ்ணன் தன் மனைவியை

வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றான். அவனும் அங்கேயே தங்கியிருந்தான்.

லோகானந்தன் வீட்டிற்கு வாராததாலும், அவன் காரியம் ஒன்றும் தெரியாததாலும் மனமுடைந்த சுமதி அதே கவலையால் மெலிந்து துரும்புபோலானாள். லோகானந்தன் அளவிற்கு மிஞ்சிக் கடனுக்குள்ளாகியிருந்தபடியால் அவனுக்கு மேலும் கடன் கொடுக்க எவரும் முன்வந்திலர். அதனால் அவன் முன் போற் பணங்கொடுத்துப் பிரியவதியைத் திருப்திசெய்ய இயலாதவனானான். அத்தோடு திடீரென அவன் வியாதியுறவே பிரியவதி தன் வீட்டைவிட்டு அவனைத் துரத்திவிட்டாள். அந்நிலைமையில் அவன் தன் தந்தையிடம் செல்ல வெட்கமடைந்து வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சைபெற்று வந்தான்.

இதைத் தன் தாதிமூலம் கேள்விப்பட்ட சுமதி துடி துடித்துத் தன் மாமனாரிடம் தெரிவித்து அவனை வீட்டிற்குத் தருவித்துக்கொள்ளும்படி வேண்டினாள்.

இராமலிங்க முதலியார் :—உன் புருஷன் துர்விஷயங்களில் என் ஆஸ்திகளையெல்லாம் விரயஞ்செய்தான். என் புத்தியையும் அசட்டை செய்து வீட்டைவிட்டு ஓடினான். வியாதியுற்றுத் தாசியால் விரட்டப்பட்ட பின்பும் என்னை நாடி வந்தானில்லை. அப்படிப்பட்டவனை வலிய அழைக்க எனக்கு விருப்பமில்லை.

சுமதி :—அறியினத்தால் அவர் செய்த குற்றங்களை முதியோராகிய தாங்கள் மனத்தில் வைக்கலாமா? அவரை மன்னித்து ஆதரிப்பதே தங்கள் கடன்.

இராமலிங்க முதலியார் :—நீ சொல்வது வாஸ்தவமாயினும் அவனை நான் இங்கு தருவிப்பதில் ஒரு பெருத்த சங்கடம் இருக்கிறது. அவன் மட்டுக்கு மிஞ்சிக் கடன் வாங்கியிருப்பதால் நான் அவனை ஏற்றுக்கொள்வேனாயின் பணங்கொடுத்தவர்கள் என்னை உபாதிப்பார்கள். என்னிடமோ அக்கடன்களைத் தீர்க்க

இப்போது போதுமான பணமில்லை. ஆதலால் அவன் வைத்திய சாலையில் இருப்பதே உசிதம்.

சுமதி:—அப்படியாயின் தஞ்சனூருக்கு என் அத்தை கோமளவல்லி வீட்டிற்கு அவரை அழைத்துப் போகட்டுமா?

இராமலிங்க முதலியார்:—அப்படியே செய்—என்று சொல்ல, சுமதி உடனே புறப்பட்டு வைத்தியசாலைக்குச் சென்றாள்.

சுமதி வைத்தியசாலைக்குப்போய்த் தன் கணவனின் நிலைமையைப் பார்த்ததும் மனந்தாளாமல் மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்தாள். அதைக் கண்டதும் லோகானந்தன் "அழுவதற்கிடமில்லையென்று இங்கே வந்து அழுகிறாய்? வீட்டிற்குப் போ" என்று கடுகடுத்துப் பேசினான். சுமதி அவ்வார்த்தைகளைச் சகித்துக்கொண்டு தான் வந்த காரியத்தைத் தெரிவிக்க அவன் பின்னும் அதிகக் கோபங்கொணடு "உன் சொற்படி உன்னோடு வர நான் விரும்பவில்லை. இங்கே நில்லாதே. வெளியில் போ" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

பின் சுமதி என் செய்வதெனத் தயங்கி வீட்டிற்குத் திரும்பி இராமலிங்க முதலியாரிடம் லோகானந்தனின் வார்த்தைகளை அறிவிக்க, அவர் "அவ்வளவு அகம்பாவமா அந்தப் பயலுக்கு? அவன் செத்தாலும் சரி. இனி எனக்குக் கவலையில்லை" என்று சொல்லி வெளியிற் போய்விட்டார்.

இவை யாவையும் கேட்டுக் கொண்டிருந்த காந்தாரி தன் கணவன் வெளியே சென்றதும் சுமதியை நோக்கி "அடி! பாதகி! உன்னைக் கட்டிக்கொண்ட நாள் முதல் என் அருமை மகனுக்கு ஒன்றின்மேலொன்றாய்த் துன்பம் வந்துகொண்டேயிருக்கிறது. அந்தச் சண்டாளனே பெற்றபிள்ளையென்றும் பாராமல் அவனை வைத்தியசாலையில் சாகச் சொல்லுகிறான். உனக்கோ வெட்டிச் சோறுபோடத் தயாராயிருக்கிறான். இனிச் சணப்பொழுதும் நீ என் வீட்டிலிருக்கக்கூடாது. நான் பெற்ற மகனுக்கே இடமில்லையே! உனக்கிங்கே என்னடி?" என்று

அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள, சுமதி அமைதியாய் அழுதுகொண்டே சென்றாள்.

அயல்வீட்டுப் பெண்ணை அநியாயமாய் வெளியே தள்ளிய காந்தாரியே! என்னே உன் கொடுமை! நீ பெற்ற மகள் பத்மாவதியும் உன் தீவினையின் பயனாய் இவ்விதம் தெருவில் தவித்து நிற்க நேர்ந்ததே! இட்டாருக்கு இட்ட பலன் என்பதை மறந்தனையே! இது தெய்வ தீர்மானமன்றோ!

தன் புத்திரன்மீது கோபத்துடன் வீட்டைவிட்டுச் சென்ற இராமலிங்க முதலியார் சற்று நேரங்கழித்து வீட்டிற்குத் திரும்பியதும் அவர் மனைவி காந்தாரி கண்ணீரும் கம்பலையுமாய் எதிர்கொண்டோடி "நான் அருமையாய்ப் பெற்று வளர்த்த மகனைப் பாராமரிக்க மறுத்தீர்களே! அதனால் அவன் மனைவியும் மனம்வேசாறி நம் வீட்டைவிட்டுப் போய்விட்டனளே!" எனப் பாசாங்கு செய்தாள். அதைக்கேட்ட முதலியார் மிகுந்த மனவருத்தமடைந்து பணத்தின் அருமை தெரியாத பிள்ளையைப் பெற்றதால் என்ன கேடெல்லாம் விளைந்தது! அவனுக்காக நான் பட்ட பிரயாசை அனைத்தும் விருதாவாயிற்றே" என்று பெருமூச்சு விட்டு ஒரு நாற்காலியிற் சாய்ந்தார். அவ்வமயம் தபால்காரன் வந்து கடிதமொன்றை அவரிடமளிக்க அவர் அதை வாசித்ததும் "அடி காந்தாரி! உன் வயிற்றில் பிறந்த குழந்தைகளில் ஒன்றாவது புத்தியுள்ளதாயிருக்கக்கூடாதா? நம் குடும்பத்திற்குக் கேடு காலம் கிட்டிவிட்டதுபோலும்; பத்மாவதி அந்நியன் ஒருவனிடம் சிநேகங் கொண்டாளென்று ஜெகந்நாதன் எழுதியிருக்கிறான். இதை வாசித்துப்பார்" என்று கடிதத்தைக் காந்தாரியிடம் கொடுத்தார். அதைப் படிக்கவும் அவள் உதடு துடித்தது. கண்களில் தீப்பொறி பறந்தது. "என் மகள் பத்மாவதி ஒரு நாளும் அவ்விதம் நடந்திராள். அந்தப் பயல் ஜெகந்நாதன் வேறு பெண்ணின்மேல் இச்சைகொண்டு என் அருமை மகளை அநியாயமாய் வீட்டைவிட்டு விரட்டியிருக்கிறான். வைத்து ஆளத்தெரியாத மடையர்களுக்குப் பெண்களைக் கட்டிக்கொடுத்துவிட்டுப் பாவமறி

யாத பெண்கள்மேல் பழி சுமத்துகிறீர்களே ?" என்று கர்ச்சித்தாள். அதற்கு முதலியார் "நீ சொல்லுவது முற்றிலும் பொருத்தமற்றது. சாந்தசீலனையும். ஜெகந்நாதனையும்போல் சகல நற்குணமும் பொருந்தியவர்களைக் காண்பதரிதல்லவா? அவர்களைப் போலவே சுமதியும்" என்று சொல்லும்பொழுது காந்தாரி மிகுந்த உக்கிரங்கொண்டு "உங்கள் பேச்சை நிறுத்துங்கள். ஊரை உயர்த்தி உள்வீட்டைத் தாழ்த்திப் பேசுவதே உங்களுக்கு வழக்கம். உங்கள் மருமக்கள்மாருக்கு நற்சாட்சிப்பத்திரம் கொடுத்தது போதும். இப்போ பத்மாவதி எங்கே நின்று தவித்துக்கொண்டிருக்கிறளோ? உடனே போய்க் குழந்தையைத் தேடிக் கூட்டிவாருங்கள்" என்று உத்தரவிட்டாள். காந்தாரி காளி அவதாரங்கொண்டதைக் கண்ட முதலியார் நடுநடுங்கிப் போனர். மறுவார்த்தை பேசாது எழுந்து வெளியிற் சென்றர்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

அத்தியாயம்—7

வரதட்சணையால் வாழ்விழந்த வனிதை.

"பொருளிலார்க் கின்பமில்லை புண்ணிய மில்லையென்று
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே"

சுனதி பூபாலனிடமிருந்து தப்பிப்போன சில தினங்களுக்குப்பின் மதனபுரியில் பெண்கள் வைத்தியசாலை ஒன்று புதிதாய் நியமிக்கப்பட்டு டாக்டர் மீனுள் அங்கு மாற்றப்பட்டாள். முன் தீர்மானித்தபடியே அவளுக்கும், மிட்டாதார் பிரகஸ்பதி ஐயருக்கும் விவாகம் நடந்தேறியது.

ஒருநாள் காந்தருவன் பூபாலனிடம் வந்து "பூபாலா! அயல்தேசம் சென்றிருக்கும் புஷ்கரன் இன்று மாலை குமரிபுரத்திற்கு வருகிருன்" என்று ஆத்திரத்துடன் சொன்னுன்.

பூபாலன் :—அது உனக்கு எப்படித் தெரியும்?

காந்தருவன் :—(ஒரு கடிதத்தை அளித்து) இதை வாசித்துப்பார்.

பூபாலன் :—(கடிதத்தைப் படித்து) இது டிப்டி கலெக்டர் சந்திரகாந்தனுக்கல்லவோ எழுதப்பட்டிருக்கிறது! உன்னிடம் எவ்விதம் வந்தது?

காந்தருவன் :—இன்று காலை குமரிபுரம் தபால் சாவடிக்குப் போயிருந்தேன். தபால் சேவகனிடம் சந்திரகாந்தனின் மேல் விலாசங்கொண்ட ஒரு கடிதம் இருந்தது. அதில் அந்நியதேசத்து முத்திரை காணப்பட்டதால் ஒருவேளை அது புஷ்கரனிடமிருந்து வந்திருக்கலாமெனச் சந்தேகித்துத் தபால் சேவகனுக்குக்

கைலஞ்சம் கொடுத்து அதைப் பெற்றுக்கொண்டேன். அதைப் பிரித்துப் பார்த்துச் சங்கதியை அறிந்ததும் நேரே உன்னிடம் வந்தேன். இப்பொழுதும் நாம் அவனைத் தந்திரமாய் இவ்விடம் கூட்டி வந்து அவன் சுகந்தியைச் சந்தியாதபடி செய்யவேண்டும். உன் அபிப்பிராயம் என்ன?

பூபாலன் :—அப்படிச் செய்வதால் நமக்கென்ன லாபம்?

காந்தருவன் :—லாபம் என்னவா! அதனுல் நீ சுகந்தியை அடையலாம்.

பூபாலன் :—அதெப்படி முடியும்?

காந்தருவன் :—புஷ்கரனை நமது இரகசிய அறையில் அடைத்து இம்சித்து அவன் ஒரு அந்நியதேசத்து மாதை மணந் திருக்கிருனென்று அவன் கைப்பட எழுதி வாங்கவேண்டும். சுகந்தியை இலட்சுமண முதலியார் எப்படியும் கண்டுபிடிப்பார். நாம் புஷ்கரனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் எழுத்தைச் சுகந்தியிடம் காண்பித்தால் அவள் அவனை வெறுத்து உன்னை மணந்து கொள்ளச் சம்மதிப்பாள்.

பூபாலன் :—நீ சொல்வது நல்ல யோசனைதான். ஆனுல் அவனை இங்கு கொண்டுவருவது எவ்வாறு?

காந்தருவன் :—புஷ்கரன் இன்று வருவதைச் சந்திரகாந்தன் அறியான். நான் உன் மோட்டார் வண்டியுடன் குமரிபுரம் துறைமுகத்திற்குச் சென்று கப்பலின் வரவை எதிர்பார்த்திருந்து புஷ்கரன் கப்பலை விட்டிறங்கியதும் "சந்திரகாந்தர் இப்பொழுது குமரிபுரத்திலில்லை. மதனபுரிக்கு மாற்றப்பட்டிருக்கிருர். அவர் சுகவீனமாயிருப்பதால் உம்மை வரவேற்க இங்கே வரமுடியாத நிலைமையிலிருக்கிருர். ஆதலால் உம்மை அழைத்துவர என்னை அனுப்பினுர். அவருடைய மோட்டார் வண்டி உமக்காகக் காத்திருக்கிறது" என்று ஏமாற்றி அவனை நம்முடைய வண்டியிலேற்றி நேரே இங்கு கொண்டுவந்து விடுகிறேன்.

பூபாலன் :—பேஷ்! தோழனென்றால் இப்படியல்லோ இருக்கவேண்டும்! அப்படியே செய்—என்று சொல்லவும் காந்தருவன் குமரிபுரத்திற்குச் சென்றான்.

மாலைப்பொழுதானதும் பூபாலனும், பிரகஸ்பதியும் காந்தருவனின் வரவை ஆவலாய் எதிர்நோக்கியிருந்தனர். இரவு மணி ஒன்பதாயிற்று. அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி காந்தருவன் புஷ்கரனுடன் பூபாலனின் அறைக்குள் நுழையவும் அங்கு தயாராயிருந்த இரு வேலையாட்கள் புஷ்கரன்மீது பாய்ந்து அவன் கரங்களையுங் கால்களையுங் கட்டினர். பின் தன் நண்பர் இருவரின் உதவிகொண்டு பூபாலன் புஷ்கரனைத் தன் இரகசிய அறைக்குத் தூக்கிப்போனான். அங்கே போனதும் பூபாலன் புஷ்கரனின் கட்டுகளை அவிழ்த்து, காந்தருவன் முன் சொல்லியவாறு எழுதிக்கொடுக்கும்படி புஷ்கரனைக் கேட்க, அவன் கோபாவேசங்கொண்டு மறுக்கவே, அவ்விதம் அவன் எழுதிக் கொடுக்கும்வரை அவ்வறையிலேயே அடைபட்டிருக்கவேண்டுமென்று கூறி, அவனை அங்கேயே விட்டுக் கதவை அடைத்துப் பூட்டியபின் தன் சிநேகிதருடன் வெளிவந்தான்.

பின்பு பூபாலன் தன் விருப்பத்திற்கிணங்கும்படி புஷ்கரனை நாள்தோறும் வருத்திவந்தும் அவன் தன் உயிர்போயினும் அவ்விதம் எழுதிக்கொடுக்க முடியாதெனச் சாதித்துவந்தான். புஷ்கரன் தன் விதியை நொந்து "சுமார் பதினைந்து வருடங்களாய்ப் பாராத என் அருமையான அன்னையையும், என் மனதிற்கிசைந்த காதலியையும் இன்று கண்டு ஆனந்திக்கலாமென ஆகாசக்கோட்டை கட்டினேனே! என் எண்ணம் ஈடேறாவண்ணம் தெய்வம் இப்படிச் செய்ததே! இச்சண்டாளன் யார்? என்னை ஏன் இவ்வாறு இம்சிக்கிறான்? நான் இந்நாட்டிற்கு வரும் தினத்தையும், நேரத்தையும் எவ்வாறு அறிந்தான்? என் வரவை ஆவலாய் எதிர்பார்த்திருக்கும் என் தாயாரும், சுகந்தியும், மற்றும் உறவினரும் நான் குறித்தநேரத்தில் வாராததை நினைத்து எவ்விதம் மனம் துடிக்கின்றனரோ! இனி எப்போ அவர்களைக் காண்பேன்! என் ஆவல் தீர்ப்பேன்! பகவானே! நீயே எனக்கு உதவி புரிய

வேண்டும். உன்னையே நம்பியிருக்கிறேன்" என்று சதா அரற்றியவண்ணமாய்த் தன் காலத்தைக் கழித்தான். கவலையினால் உடல்மெலிந்து துரும்புபோலானான்.

பூபாலனும், காந்தருவனும் அடிக்கடி மீனாளின் வீட்டிற்குப்போய்ப் பிரகஸ்பதியுடன் உல்லாசமாயிருந்து வந்தனர். இது சமயம் நளபுரத்தில் உப்பள இன்ஸ்பெக்டாயிருந்த ஜெகந்நாதன் மதனபுரிக்குக் கலால் இன்ஸ்பெக்டாராக மாற்றப்பட்டான். அவனுக்கும், பூபாலனுக்கும் தற்செயலாய்ச் சிநேகம் ஏற்பட்டது. அத்துஷ்டனுடைய சகவாசத்தால் ஜெகந்நாதன் நாளடைவில் தன் நற்குணங்களை இழக்கலானான். அவனும் மீனாளின் வீட்டிற்கு அடிக்கடி போவதுண்டு. பூபாலன், காந்தருவன், ஜெகந்நாதன், பிரகஸ்பதி, மீனாள் இவர்கள் ஐவரும் மீனாளுக்கும், ஜெகந்நாதனுக்கும் வேலை ஒழிந்த நேரங்களில் ஒன்றுகூடிக் குடிப்பதிலும், சீட்டு ஆடுவதிலும், கேளிக்கைகள் பார்க்கப்போவதிலும் வெகு ஆனந்தமாய் நாட்களைப் போக்கினர். பூபாலனும், காந்தருவனும் மிட்டாதார்களாயிருந்தாலும் ஏற்கனவே மிகுந்த கடனுக்குள் மூழ்கியிருந்தனராதலால் மேலும் கடன் கொடுப்பாரின்றிக் கையில் காசில்லாது தவித்தனர். ஆனால் இவர்கள் தங்களது உண்மை நிலையை மீனாள் அறியாதபடி சாமர்த்தியமாய் நடந்துகொண்டனர். பிரகஸ்பதிக்கோ அவன் தந்தை சீவித்திருந்ததால் மிட்டாவின் வருமானத்தில் ஒரு பைசா முதலாய்க் கிடைக்க வழியில்லை. இதை மீனாள் அறிந்திருந்தும் பிரகஸ்பதியின் தந்தை இறந்தபின் மிட்டா தனது அதிகாரத்திற்குட்படுமென்று மனப்பால் குடித்திருந்ததால் இவ்வாடவர்களுடன் சந்தோஷமாயிருப்பதில் தன் வருமானத்தைத் தாராளமாய்ச் செலவிட்டாள். மீனாள் தன் கணவனின்மீது உள்ளன்பு கொண்டவளல்ல. முன்னரே கற்பு நிலை தவறிய மீனாள், பூபாலனின் அழகில் இலகுவில் மயங்கி அவனுடன் அந்தரங்க சிநேகம் செய்து வந்தாள். வீண் செலவுகளில் தன் கைப்பணம் குறையக் குறைய பூபாலனை எதிர்நோக்கினாள். தன் தரித்திர தசையைப் பின்னும் மறைக்க வகையின்றி அவன் அவளிடம் உண்மையைக்கூற, தான்

எதிர்பாராத அவ்விஷயத்தை மீனாள் அறிந்ததும் மிகவும் ஏமாந்து போனாள். ஆயினும் அவன் சிநேகத்தை விட்டுவிட மனமில்லாமல் தன் கணவன் பிரகஸ்பதியை அவன் மிட்டாவின்பேரில் கடன் வாங்கத் தூண்டினாள். அவனுக்கு அது பிரியமில்லாவிடினும் அவளுடைய தொந்தரவைப் பொறுக்கமாட்டாது சிறிது கடனுக்குட்பட்டான். ஒருநாள் மீனாளும், பூபாலனும் நடந்து கொண்ட விதத்தைக் கண்டு அவள் நடத்தையைச் சந்தேகித்து பிரகஸ்பதி அவளைக் கண்டிக்க ஆரம்பித்தான். அவ்வளவுதான் தாமதம்; வந்தது வினை; மீனாள், கொண்டாள் கோபாவேசம்; எடுத்தாள் நரசிம்மாவதாரம். அச்சணமே பிரகஸ்பதியை வீட்டை விட்டுத் துரத்தினாள். தன் இல்லத்திற்கு வரக்கூடாதென்று பூபாலன், காந்தருவன், ஜெகந்நாதன் இவர்களுக்குக் கட்டளையிட்டாள். ஆனால் பூபாலனுக்கு இட்ட கட்டளை மற்றோர் மெச்சவே தவிர உண்மையிலல்ல. இரகசியத்தில் அவனுடன் சிநேகமாகவே இருந்தாள்.

திருட்டுத் தண்ணீர் தித்திக்குமன்றோ!

சுமார் பதினெட்டுப் பிராயமுடைய ஒரு பெண் தான் எங்கு போவது, என்ன செய்வதெனத் தெரியாமல் பல நாட்களாய்ப் பட்டினியும், பசியுமாய் ஊரூராய்த் திரிந்து ஒருநாள் மதனபுரிக்குச் செல்லுமொரு சாலைவழியாய் நடந்துகொண்டிருந்தாள். அஸ்தமனமாகும் சமயம் மதனபுரியை அடைந்து, ஆகாரமில்லாமல் கடும் வெயிலில் நடந்துவந்த களைப்பினால் மேல்நடக்கச் சக்தியற்று, ஒரு வீட்டின் வெளித் திண்ணையில் சாய்ந்தாள். அவ் வீட்டில் வயதுசென்ற ஒரு தாசி வசித்தாள். அவள் தன் வாலிப வயதில் சம்பாதித்து மீத்துவைத்திருந்த பணத்தைக் கொண்டு சிக்கனமாய்க் காலங்கழித்தாள். தன் வீட்டுத் திண்ணையில் ஒரு அழகிய யுவதி சோர்வுடன் படுத்திருப்பதை அவள் கண்டு "அம்மா! நீ யார்? வெகு களைப்புடனிருக்கிறாயே! தாகத்திற்கு ஏதாவது வேண்டுமா?" என அன்புடன் வினவ, அப் பெண் "அம்மா! என் களைப்பு நீங்க முதலில் கொஞ்சம் தண்ணீர்

கொண்டுவா. பின் என் விருத்தாந்தத்தைத் தெரிவிக்கிறேன்" என்று பதிலுரைத்தாள். தாசி விரைந்துபோய்க் கொஞ்சம் நீர் மோர் கொணர்ந்து அப்பெண்ணைப் பருகச் செய்தாள். அப்புறம் அப்பெண் தாசியை நோக்கி "அம்மா! ஆதரவற்ற எனக்கு நீ காட்டிய அன்பிற்கு நான் என்ன பதில் செய்வேன்! நான் என் புருஷனால் வெறுக்கப்பட்டதால் மனமுடைந்து வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினேன். எங்கேயாவது கூலிவேலை செய்து சீவனம் செய்ய விரும்புகிறேன். இன்று இரவுமட்டும் தங்க இங்கு இடங் கொடுத்தால் மிகவும் புண்ணியமாயிருக்கும்" என்று கண்ணீர் உதிர்த்தாள். "குழந்தாய்! ரதிபோலிருக்கும் உன்னை வெறுக்க உன் கணவனுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ! அழாதே. நீ எங்கும் வேலைக்குப் போகவேண்டாம். என்னிடத்தில் போதுமான ஆஸ்தி இருக்கிறது. எனக்கோ குழந்தைகளில்லை. என் வயிற்றிற் பிறந்த பெண்போல் உன்னை ஆதரிப்பேன். என் வயது காலத்தில் எனக்கு உதவியாகத் தெய்வம்தான் உன்னை என்னிடம் சேர்த்திருக்கிறது. வீட்டிற்குள் வா, அம்மா" என்று தேனொழுகப் பேசி அவளை உள்ளே அழைத்துச் சென்று போசனம் செய்வித்தாள். அப்பெண் வாலிபமும், சௌந்தரியமும் பொருந்தியிருந்தாளாதலால் நாளாவட்டத்தில் அவளை விபசாரத்திற்குட்படுத்தி அதன் மூலம் ஏராளமான பணம் சம்பாதிக்கலாமென்று நினைத்தே தாசி இவ்விதம் அவளிடம் மாரீசமாய் நடந்துகொண்டாள். அப்பெண்ணோ அவள் ஒரு தாசியென அறியாளாதலால் அவளுடன் வெகு அந்நியோந்நியமாய்ச் சீவித்தாள். நாட்களும் கழிந்தன. ஒருநாள் அக்கிழத்தாசி அப்பெண்ணிடம் "கண்ணே! நீ உன் பருவகாலத்தை ஒரு ஆடவனுடன் இன்புற்றுக் கழிக்காமல் வீணாக்குவது என் மனத்தை மிகுந்த துயரத்திற்குள்ளாக்குகிறது. உன் புருஷனோ உன்னை விரும்பவில்லை. ஆதலால் உனக்கேற்ற ஒரு மணமகனைத் தேடி உனக்கு மறு விவாகம் செய்வித்து என் கண்குளிரப் பார்க்க விரும்புகிறேன்" என்று அவளை நோட்டம் பார்த்தாள். அதைக் கேட்டதும் அப்பெண் பதைப்புற்று "அம்மா! நான் அவ்விதம் செய்தால் என் கற்பை இழந்தவளாவேன். நான் இங்கிருப்பது

உனக்குப் பாரமாயிருப்பின் சந்தோஷமாய் வேறிடம் செல்வேன்" எனச் சொல்லவும், தாசி "ஐயோ மகளே! நீ என்னுடனிருப்பது எனக்கொரு பாரமா! நீ எனக்கு எவ்வளவோ பணிவிடைகள் செய்கிறுயே! அது போதாதா! நீ எங்கும் போகக்கூடாது. உன் மனம்போல் நடந்துகொள்ள எனக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை" என்று பாசாங்கு செய்ய அப்பெண்ணும் அவ்வார்த்தைகளை நம்பிப் பின்னும் அவளுடனேயே தங்கிவந்தாள்.

நந்தனூர்குடி வைத்தியசாலையில் வியாதியாயிருந்த லோகானந்தன் பல தினங்களாகியும் சுகமடையாமல் மிகவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தான். ஒருநாள் வைத்தியர் ஒரு தாதியை அவனிடம் அழைத்துப்போய் "லோகானந்தரே! உமது பக்கத்திலிருந்து குறித்த நேரத்தில் மருந்தும், ஆகாரமும் கொடுக்கவும், மற்றும் அவசியமான சௌகரியங்களைக் கவனிக்கவும் இந்தத் தாதிக்கு உத்தரவளித்திருக்கிறேன்" எனச் சொல்லி அவளை அவனிடம் விட்டுச் சென்றார். அத்தாதி மிகவும் நற்குணம் வாய்ந்தவளாதலால் லோகானந்தனின் உயிரைத் தன் உயிர்போல் பாவித்து, கொடிய நோயால் அவன் அநுபவித்த துன்பத்தைத் தானே அநுபவித்ததாய் உணர்ந்து இராப்பகலாய்க் கண்விழித்து அவனுக்கு உதவிபுரிந்தாள். தன்னுடைய இனிய மொழிகளினல் அவனைத் தேற்றினாள். இவ்விதம் தாதி தனக்காக எடுத்துக் கொள்ளும் சிரமங்களைக் கவனிக்கக் கவனிக்க லோகானந்தனுக்கு அவள்மீது அதிக மதிப்பும், அன்பும் உண்டாயின. நாளாக நாளாக அவனுடைய நோய் குறைந்ததுடன் அவனது துர்க்குணமும் மாறிவந்தது. தாதியின் அன்பான பணிவிடைகள் அவனுக்குத் தன் மனைவியை ஞாபகமூட்டின. முன்னொருதரம் தான் வியாதியுற்ற காலையில் சுமதி தனக்காகப் பட்ட பாடுகளையும், தான் அவளுக்குச் செய்த துரோகங்களையும் நினைத்து நினைத்துப் பெருமூச்செறிந்தான். மனைவிக்கும், ஒரு தாசிக்குமுள்ள அன்பின் தாரதம்மியத்தைச் சீர்தூக்கி யோசிக்கலானான். தான் இயற்றிய தீச்செயல்களுக்காகத் தன்னைத்தானே வெறுத்து அங்கலாய்த்தான். இவைகளைக் கவனித்துவந்த தாதி ஒருநாள்

அவனை நோக்கி "ஐயா! நீங்கள் அடிக்கடி பெருமூச்சுவிடுவதை யும், உங்கள் முகம் வாடுவதையும் காண்கிறேன். உங்கள் மனத் திலிருக்கும் கவலை யாது? நோய் சற்று நீங்கி வருங்காலத்தில் இவ்விதம் கவலைகொண்டால் வியாதி முற்றும் தீருவது எப்படி? ஆதலால் நீங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் கவலையுறாது சந்தோஷமாயிருக்க வேண்டுகிறேன்" என உருக்கமாய் மொழிந் தாள்.

லோகானந்தன் :—அம்மா! என்னை ஒரு பெரிய கவலை வருத்துகிறது. அதை உன்னிடம் தெரிவித்தால் என் மனம் சற்று நிம்மதியடையுமென்றும், அது நீங்க ஒரு நல்ல யோசனை நீ சொல்லக்கூடுமென்றும் நினைக்கிறேன்.

தாதி :—நான் செய்யக்கூடிய சகாயத்தை உங்களுக்குச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். உங்களைத் துன்புறுத்தும் துய ரம் யாது?

லோகானந்தன் :—நான் ஒரு உயர்வான குடும்பத்தில் பிறந்தும், அதிகம் கற்றும் யோக்கியமாய் நடந்துகொள்ளாமல் குடியிலும், சூதாட்டத்திலும் பெருந்தொகையைத் தோற்றது மன்றி ஒரு வேசியின் வலையிலும் ஈடுபட்டேன். அதுசமயம் நான் சற்று அசௌக்கியமடைந்தபோது எனக்குக் கடன் கொடுத் தவர்கள் என்னை உபாதிக்க என் பெற்றோர் என் கடனைத் தீர்க்க முன்வரவில்லை. என் மனைவியோ, தன் ஆபரணங்களை விற்று என் கடன்களைத் தீர்த்து என் மானத்தைக் காப்பாற்றினாள். இப்பொழுது நீ எனக்கு எவ்விதம் கரிசனையுடன் சிஷ்ரூஷை செய்துவருகிறாயோ அவ்விதமே அவள் செய்து அந்நோயிலிருந்து என்னைக் காப்பாற்றினாள். ஒரு வேசியுடன் சிநேகமாயிருந்தே னென்பதை அறிந்தும் அவள் என்னிடம் காட்டிய பேரன்பை என்னவென்றெடுத்துரைப்பேன்! அவ்வாறு அவள் நடந்தும் நான் குணமடைந்தவுடன் நாய் தான் கக்கினதைத் தின்னுவது போல் மறுபடியும் அவ்வேசியின் வீட்டையே அடைந்து என் மீந்த ஆஸ்திகளையும், தேகசுகத்தையுமிழந்தேன். மிகுந்த

கடனுக்கும் உள்ளானேன். இப்பெரு நோயையும் சம்பாதித்தேன். அவ்வேசியால் வீட்டைவிட்டுத் துரத்தவும் பட்டேன். அந்நிலைமையில் என் பெற்ருேர் என்னை ஏற்றுக்கொள்ள விரும்பாதிருந்தும் என் மனைவி என்னைத் தேடிவரச் சண்டாளன் நான் அவளிடம் முகங் கொடுத்தும் பேசாது அவளைக் கோபித்து அனுப்பிவிட்டேன். இனி அக்குணவதியின் முகத்தில் விழிப்பது எப்படியென நினைத்தே வருந்துகின்றேன்.

தாதி:—ஐயா! இவ்வளவு கவலை கொண்டிருக்கும் உங்களை இன்னும் அதிகக் கவலைக்குட்படுத்த நான் விரும்பவில்லையாயினும் நீங்கள் அறியவேண்டிய ஒரு முக்கியமான விஷயத்தை உங்களுக்குத் தெரிவியாதிருக்க எனக்கு மனம் வரவில்லை. ஆனால் நீங்கள் மனங்கலங்காமலும், தைரியத்தை இழந்துவிடாமலும் இனி நடக்கவேண்டியதையே யோசிக்கவேண்டும். கடந்துபோன காரியத்தைப்பற்றிச் சஞ்சலப்படுவதில் யாதொரு பயனுமில்லை.

லோகானந்தன்:—அம்மா! நான் செய்த பாபங்களுக்குத் தெய்வம் இதுவரையிலும் அளித்திருக்கும் துன்பங்கள் போதாதா? இன்னும் என்ன வைத்திருக்கிறது? சொல்.

தாதி:—உங்கள் அன்னை உங்கள் மனைவியை வீட்டிலிருந்து விரட்டிவிட்டாள்—என்று சொல்லவும், லோகானந்தன் "ஐயோ சுமதி! என் கண்மணி! நீ எங்குச் சென்றனையோ! உனக்கு யாது நேரிட்டதோ! நான் பிழைத்தெழுந்ததும் உன்னிடம் ஓடிவந்து என் பிழைகளை மன்னிக்கும்படி கேட்க எண்ணியிருந்தேனே! இனியாவது நம் குடும்ப வாழ்க்கையைச் செம்மையாய் நடத்தவேண்டுமென நினைத்தேனே! உன்னை எங்கே தேடிக் கண்டுபிடிப்பேன்! ஈசுவரன் என் எனக்கு இப்படிச் செய்தானே?" என்று புலம்பி அழுதான். தாதியும் சேர்ந்து அழுதாள். பின் தாதி "ஐயா! கவலையுறவேண்டாம். முதலில் உங்களுக்குப் பூரண சுகம் உண்டாகட்டும். அப்புறம் உங்கள் மனைவியைத் தேடலாம்" என ஆறுதல்படுத்தினள்.

மீனுளின் விபரீத நடக்கையால் மனம் வேசாறிய பிரகஸ்பதி நோய்த் தன் தந்தையின் வீட்டிற்குச் சென்று சில தினங்களாய் எங்கும் போகாமல் தன் நிலைமையை நினைத்து நினைத்து நலிந்தான். "அடே! பூபாலா! கூட இருந்து குரல் வளையை அறுத்தாப்போல் இறுதியில் என் மனைவியையே கைப் பிடித்தாயே! இதுதானு நான் உன்னுடன் சிநேகமாயிருந்ததன் பலன்! உன்னைக் குறைசொல்ல என்ன இருக்கிறது! கற்பிழந்த வளைக் கலியாணம் பண்ணின என்னையன்றே நோகவேண்டும்! நன்னடக்கையில்லாத ஆணே, பெண்ணே அதிகக் கல்விகற்றும், உயர்ந்த உத்தியோகம் செய்தும் யாது பயன்! என் முதல் மனைவியிடம் ஐயாயிரம் ரூபாய் வரதட்சணை கேட்ட என் தந்தை யின் பேராசையினுலன்றே நான் இக்கதிக்குள்ளானேன்! நான் அவர் விருப்பத்திற்கு உடன்படாதிருந்தால் இப்பொழுது அவ ளுடன் சுகமாய் வாழ்ந்திருப்பேனே! அவள் புஷ்பவதியானதும் நான் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்ததாலன்றே அவள் மன முறிந்து தன் பெற்றோரையும் விட்டு எங்கேயோ மறைந்து போனுள்! அவள் இறந்தாளோ உயிருடனிருக்கிருளோ! உயிரு டனிருந்தால் என்னென்ன இன்னல்களை அநுபவிக்கின்ருளோ! அவளுக்கு நான் செய்த துரோகமே இப்பொழுது என்னைப்பற்றிப் பிடித்திருக்கிறது!" என்று தனக்குள்ளாகவே அங்கலாய்த் தான். பின் ஊரைவிட்டு வெளிக் கிளம்பிப் பித்தனைப்போற் கண்டவிடமெல்லாம் அலைந்தான்.

ஒரு நாள் அவன் தஞ்சனூரில் சுமுகி வசித்த வீதி வழியாய் நடந்துபோகும்பொழுது அவன் பக்கமாய்ச் சென்ற ஒரு பாரவண்டி அகஸ்மாத்தாய்க் குடைக்கவிழ அவன் அதன் கீழகப்பட்டு அதிகக் காயமடைந்து பிரக்ஞை இழந்தான். அத்தருணம் தன் வீட்டின்முன் நடந்த அச்சம்பவத்தைக் கண்ணுற்ற சாரதா, பிரகஸ்பதியின் பரிதாப நிலைமையைப்பார்த்து மனமிரங்கி அவனைச் சில ஆட்களின் உதவிகொண்டு தன் வீட்டிற்குள் தூக்கிச் சென்று வைத்தியரை அழைப்பித்து அவ னுக்குச் சிகிச்சை செய்வித்தாள். ஒரு தினம் அவனுக்குச்

சன்னி காண அவன் "மேனகா! மேனகா! என் கண்ணே! உன்னைக் கைவிட்டேன், இப்படி அழுந்துகிறேன்" எனப் புலம்பினன். அச்சமயம் சாரதாவும், அவ்வூர் உயர்தரக் கலாசாலையின் தலைமை உபாத்தினியும் அவன் அருகிலிருந்தனர். அவ்வார்த்தைகளைக் கேட்ட அவ்வுபாத்தினி அவன் யாராயிருக்கக்கூடுமென யோசனையிலாழ்ந்தாள். அவன் முகத்தை உற்று நோக்க நோக்க அவள் சந்தேகம் அதிகரித்தது. இறுதியில் ஒருவித முடிவிற்கு வந்தாள். அன்று முதல் அவள் பகலில் ஒழிந்த வேளைகளிலும், இரவிலும் அவன் பக்கத்தமர்ந்து அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து சாரதாவிற்குச் சகாயமாயிருந்தாள். சன்னி நீங்கி அவன் சற்றுச் சுகமடைந்ததும் உபாத்தினி அவனது பெயரைக் கேட்டு அவன் யாரென அறியவே அவள் மனத்தில் இன்பத்தையும், துன்பத்தையும் விளைத்த பல எண்ணங்கள் எழும்பின. அவன் அவளுடைய பெயரை விசாரிக்க அதைப் பின் ஒரு சமயம் தெரிவிப்பதாய்ப் பதிலளித்தாள். அவன் முற்றும் குணமடைந்து எழுந்து நடக்கச் சக்தி பெற்றதும் உபாத்தினியை நோக்கி "அம்மா! எனக்கு உயிர்ப்பிச்சை அளித்த சாரதாவுடன் நீயும் சேர்ந்து எனக்குச் செய்த உபகாரத்திற்காக மிகவும் நன்றியுடையவனாயிருக்கிறேன். புண்ணியவதியாகிய உன்னை என்றும் நான் ஸ்மரிக்கும் பொருட்டு உன் நாமதேயத்தை இப்பொழுதாவது எனக்குத் தெரிவிப்பாயா?" என்று கேட்டான்.

உபாத்தினி:—ஐயா! என் பெயரை அறிவிக்குமுன் உங்கள் விருத்தாந்தம் முழுவதையும் தெரிவிக்கக் கோருகிறேன். இவ்விதம் நான் விண்ணப்பித்துக் கொள்வதற்குத் தகுந்த காரணமுண்டு. என் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய உங்களுக்கு மனமில்லாவிடின் உங்களை வற்புறுத்தேன்.

பிரகஸ்பதி:—அம்மணி! எனக்கு அல்லும் பகலுமாய்ச் சோர்வின்றி ஒத்தாசை செய்த உன் வார்த்தையைத் தட்டுவேனா? நான் இருப்பது மதனபுரி. என் தந்தை ஒரு மிட்டாதார்.

அவர் பெயர் நாகராஜ ஐயர். அவருக்கு நான் ஏகபுத்திரன். அவ்வூர் விசுவேசுவர ஐயரின் ஏகபுத்திரி மேனகை என்பவளைச் சிறுவயதிலேயே கலியாணஞ் செய்தேன். அவள் பக்குவமடைந்ததும் ஐயாயிரம் ரூபாய் வரதட்சணை பெற்ருலன்றி ருதுசாந்திக் கலியாணம் செய்யக்கூடாதென்று என் தந்தை எனக்கு உத்தரவிட்டார். நானும் புத்தியீனமாய் அவர் வார்த்தைக்கு உடன்பட்டேன். அவ்வளவு பெருந் தொகையைக் கொடுக்கக்கூடிய ஐசுவரியம் என் மாமனருக்கு இல்லாததால் நான் என் மனைவியை அடையமுடியாமற் போயிற்று. அப்பெரு விசனத்தின் காரணமாய் அவள் தன் பெற்ரேரையும் மறந்து எங்கேயோ போய்விட்டாள். அவ்வுத்தமி பிழைத்திருக்கிருளோ மரித்தாளோ தெரியவில்லை. அவள் பெற்ரேர் இச்சம்பவத்தால் பாயும் படுக்கையுமாகிக் காலமாயினர். பின்னர், நான் துர்ச்சகவாசத்தாற் கெட்டு கற்பிழந்தக் ஒரு விதவையை மணம் செய்தேன். விவாகமானபின்னும் அவள் தன் கற்பு நிலையைக் காத்துக்கொள்ளாததால் நான் அவளைக் கண்டிக்க என்னை அவள் விலக்கிவிட்டாள். அப்புழுக்கத்தால் நான் ஊரைவிட்டு நினைத்த இடங்களுக்குச் சென்று திரியும்பொழுது இவ்விபத்திற்குட்பட்டேன். இதுவே என் வரலாறு. இதை நீ அறிய ஆவல்கொண்ட காரணமென்ன?

உபாத்தினி:—ஒருநாள் உங்களுக்குச் சன்னி கண்ட சமயம் "மேனகா! உன்னைக் கைவிட்டேன், இப்படி அழுந்துகிறேன்" என்று புலம்பினீர்கள். மேனகை என்ற ஒரு பெண்ணை நான் அறிவேன். நீங்கள் கூறிய பெண் ஒருகால் அவளாயிருக்கக் கூடுமோவென நினைத்தே உங்கள் சரிதையை அறிய விரும்பினேன். இப்பொழுதும் அவள்தான் உங்களால் கைவிடப்பட்ட மனைவியென்று அறிகிறேன்.

பிரகஸ்பதி:—(மிகுந்த ஆத்திரத்துடன்) அம்மா! அக்குணவதி உயிருடனிருக்கிருளா? இருந்தால் எங்கேயிருக்கிருள் சொல். இக்கணமே போய் அவள் காலில் விழுந்து என்னை மன்னித்துச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுவேன்.

உபாத்தினி :—ஐயா! அவள் மரிக்கவில்லை. ஆனால் இப்பொழுது அவள் உங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுக்கக்கூடிய ஸ்திதியில் இல்லையே!

பிரகஸ்பதி :—எனக்கு ஐயாயிரங் காசுகூட வேண்டாம். அவள் மட்டும் கிடைத்தால் போதும்.

உபாத்தினி :—உங்கள் விருப்பம் அப்படியிருக்கலாம். ஆயினும் உங்கள் தந்தை அதற்குச் சம்மதிக்கவேண்டாமா? அவர் மனத்தை நீங்கள் அறிந்துகொண்டபின் அவள் இருக்குமிடத்தைத் தெரிவிக்கிறேன்.

பிரகஸ்பதி :—என் மனைவியை நான் சேர்த்துக்கொள்ள என் தந்தையின் சம்மதம் எதற்கு? முன்னர்தான் புத்தியீனமாய் நடந்தேன். இனிமேல் அப்படி நடவேன்.

உபாத்தினி :—அப்படிச் சொல்லுவது சரியல்ல. "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்றபடி தந்தைசொற் கேட்பதே உசிதமாகும். எதற்கும் முதலில் அவர் எண்ணத்தை அறிந்துகொள்ளுங்கள். அதற்குள் நானும் உங்கள் மனைவியின் நோக்கத்தைத் தெரிந்துகொள்ளுகிறேன்.

பிரகஸ்பதி :—அப்படியே செய்கிறேன். இப்பவும் ஒரு விஷயம் அறிய விரும்புகிறேன். அவள் சுகத்துடனும், சீவனத்திற்குக் கஷ்டமில்லாமலும் இருக்கிறாளா? அதுமாத்திரம் தெரிந்தால் போதும். அப்பொழுதுதான் என் மனம் நிம்மதியாயிருக்கும்.

உபாத்தினி :—அவ்விரண்டிற்கும் குறைவில்லை. கவலையுற வேண்டாம்—என்று சொல்லும் சமயம் சுமுகியும், சாரதாவும் அங்கே வர, பிரகஸ்பதி அவர்களைப் பார்த்து "முன் பின் அறியாத அந்நியனாகிய எனக்கு நீங்கள் இருவரும் செய்த பேருபகாரத்திற்காக என் மனமுவந்த நன்றியைச் செலுத்துகிறேன். உங்கள் புண்ணியத்தால் முற்றும் சுகமடைந்து நடக்கவும் பல

மடைந்தேன். இனியும் உங்களைப்பாரப்படுத்த எனக்கு மனமில்லை. என் வரலாறு அனைத்தையும் இவ்வுபாத்தினி அம்மாளிடம் தெரிவித்திருக்கிறேன். அவளிடம் கேட்டு அறிந்துகொள்ளுங்கள். இப்பவும் என் இல்லத்திற்கேக எனக்கநுமதி கொடுங்கள்" என்று அவர்களிடமும், உபாத்தினியிடமும் விடைபெற்றுச் சென்றான்.

இது நடந்த இரண்டு தினங்களுக்குப்பின் பிரகஸ்பதி, உபாத்தினியிடம் துக்கமுகத்துடன் திரும்பிவந்து "அம்மணி! என் தந்தை, தான் கோரிய வரதட்சணையைப் பெறுமுன் என் மனைவியைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று கழுவஞ்சாதனையாய்ச் சாதிக்கிறார். ஆதலால் இனித் தாமதம் செய்யாமல் அவளைச் சேர்த்துக்கொண்டு தனிக்குடித்தனம் செய்ய ஆசிக்கிறேன். அவள் மனத்தை அறிந்தாயா?

உபாத்தினி:—ஆம். அதி துரிதத்தில் உங்களுடன் கூடி வாழ விரும்பினாலும் உங்கள் தந்தையின் நோக்கத்திற்கு மாறாக நடக்க அவளுக்குப் பிரியமில்லை. அவள் படித்து உத்தியோகம் செய்து பணம் மீத்து வைக்கிறாள். ஐயாயிரம் ரூபாய் மீந்ததும் உங்கள் தந்தையின் ஆசையைப் பூர்த்தி செய்து, பின் உங்களுடன் வாழ எண்ணங்கொண்டிருக்கிறாள். அதுவரை தன் இருப்பிடத்தை முதலாய் உங்களுக்குத் தெரிவிக்க அவள் விரும்பவில்லை. ஆதலால் நீங்கள் இன்னும் கொஞ்சக்காலம் பொறுமையுடனிருப்பதே நலம்.

பிரகஸ்பதி:—என்ன மனஉறுதி! அவள் எண்ணத்தை மாற்றமுடியாதோ?

உபாத்தினி:—முடியாதெனவே நினைக்கிறேன்.

பிரகஸ்பதி:—அங்ஙனமாயின் நான் இதுகாறும் காலத்தை வீணாய்க் கழித்ததுபோல் இனிமேலுங் கழிக்காமல் உடனே ஒரு வேலையில் அமர்ந்து என் சம்பாத்தியத்தையும் மீத்து வைப்பேன். நானும், என் மனைவியும் சேர்ந்து வாழுங் காலம் சமீபிக்குமென எதிர்பார்க்கிறேன்.

உபாத்தினி :—என்ன உத்தியோகம் செய்ய நினைக்கிறீர்கள்?

பிரகஸ்பதி :—என்னைப்பற்றிப் பெருமையாய்த் தெரிவித்துக் கொள்ள எனக்கு விருப்பமில்லையாயினும் உன் கேள்விக்கு விடையளிக்க வேண்டுமாதலால் தெரிவிக்கிறேன். நான் எம்.எ., எல். டி., பட்டம் பெற்றிருக்கிறேன். இக்கல்வியிருந்தும் போதுமான செல்வம் இருக்கிறதென்னும் மமதையினால் இதுவரை உத்தியோகம் பார்க்காமல் கசடர்களுடன் உறவாடிக் காலத்தை வீணாக்கினேன். இப்பொழுதும் எனக்குக் கல்வி இலாகாவில் ஒரு இன்ஸ்பெக்டர் உத்தியோகம் இலகுவில் கிடைக்கக்கூடும். தற்சமயம் என் மனையாளைப் பார்க்கவோ வழியில்லை. ஆதலால் நான் அடிக்கடி உன் வீட்டிற்கு வந்து உன்னிடமாவது அவள் விஷயத்தை அறிந்துபோக அநுமதி அளிப்பாயா?

உபாத்தினி :—ஆகா! தடையில்லை.

பிரகஸ்பதி :—கடைசியில் உன் பெயரையும், வரலாற்றையும் தெரிவிக்கவில்லையே!

உபாத்தினி :—நான் ஒரு அனாதை. இவ்வூர்க் கலாசாலையில் தலைமை உபாத்தினி வேலை பார்க்கிறேன். எனக்குத் துணையாக ஒரு வயோதிக ஸ்திரியும், என் வீட்டுவேலையைச் செய்ப ஒரு சிறு பெண்ணும் என்னோடிருக்கிறார்கள். இதற்குமேல் விவரங்கூறத் தற்சமயம் இயலாதவளாய் இருக்கிறேன். மன்னிக்க வேண்டுகிறேன்.

பிரகஸ்பதி :—அம்மா! உன்னை நான் வற்புறுத்தவில்லை. போய் வருகிறேன்—என்று சொல்லிப்போனான். என்னே வரதட்சணையின் கொடுமை!

> "நல்குர வென்னு மிடும்பையுட் பல்குறைத்
> துன்பங்கள் சென்று படும்"

அத்தியாயம்—8

கொலையைத் தடுத்த குணசீலன்

"பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோலடி தன்மேற்
கைசென்று தாங்குங் கடிது"

ஒருநாள் அழகிய வாலிபன் ஒருவன் மதனபுரியிலிருந்த கிழத்தாசியிடம் வந்து "சில நாட்களாய் உன் வீட்டில் ரூபலாவண்ணியமான யுவதி ஒருத்தி வசித்துவருவதாய்க் கேள்விப் பட்டேன். அவளை நீ எனக்குச் சிநேகம் செய்துவைக்க முடியுமா?" என்று கேட்க, அவள் "ஐயா! அம்மாது தாசியல்ல; ஒரு குடித்தனக்காரப் பெண். அவள் பிழைப்புக்காக ஒரு வேலை தேடி இவ்வூருக்கு வந்தபோது நான் தற்செயலாய் அவளைக் காண நேரவே அவளைத் தீய வழியிலுட்படுத்திப் பணம் சம்பாதிக்கலாமென்னும் எண்ணத்துடன் என்னோடு வைத்துக்கொண்டேன். ஆனால் அவள் தன் கற்பை இழக்கச் சம்மதிக்கிறாளில்லை. அவளைக் கெடுக்க என் சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்தும் ஒரு பயனையுங் காணேன். ஆதலால் உம்முடைய விருப்பம் கைகூடாது" என்று பிகுவாய்ச் சொன்னாள்.

வாலிபன் :—நீ ஒரு அநுபவமுதிர்ந்த தாசியாயிருந்தும் ஒரு இளம் பெண்ணை உன் வழியில் திருப்ப முடியவில்லையென்று சொல்லுவது ஒப்பக்கூடியதன்று. நீ மனம் வைத்தால் கூடாத காரியமும் உண்டோ! எப்படியாவது நீ என் அபேட்சையைப் பூர்த்தி செய்தே தீரவேண்டும். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

தாசி :—இது விஷயத்தை அவளுக்கு முன்னதாகவே தெரிவித்தால் உம்முடைய காரியம் ஒருகாலும் சித்திக்காது. என் யோசனைப்படி செய்தால் ஒருவேளை உமது எண்ணம் நிறைவேறலாம்.

வாலிபன் :—நீ சொல்வதின்படியே செய்கிறேன். காரியம் முடிந்தால் போதும்.

தாசி :—எப்பொழுதும் தீபத்தை அணைத்துவிட்டே நித்திரைக்குப் போவது அவள் வழக்கம். இன்று இரவு பன்னிரண்டு மணிக்குமேல் நீர் இவ்விடம் வருவீராளுல் அவள் நன்ருய்த் தூங்கினபின் உம்மை அவளுடைய அறைக்குள் விட்டுவிடுகிறேன். அப்புறம் உம்முடைய சாமர்த்தியம். இதற்கு ரூபாய் ஐம்பது நீர் எனக்கு முன்பணமாகக் கொடுக்கவேண்டும்.

வாலிபன் :—நீ இவ்வளவு உபகாரம் செய்தால் போதும். இப்பொழுதே ரூபாய் ஐம்பதையும் பெற்றுக்கொள்—என்று சொல்லிப் பணத்தை அவளிடம் அளித்துவிட்டு மிகுந்த மனக்கிளர்ச்சியுடன் சென்ருன்.

குறித்த நேரத்தில் அவ்வாலிபன் வரவும், அத்தாசி அவனை அப்பெண்ணின் அறையில் விட்டுச் சென்ருள். அவ்வறை முகத்திற்கு முகம் பார்க்கக்கூடாதபடி மிகவும் இருண்டிருந்தது. அவ்வணங்கு ஒரு கட்டிலில் படுத்து அயர்ந்த நித்திரையிலிருந்தாள். வாலிபன் சப்தமின்றி மெதுவாய் நடந்து கட்டிலில் அமர்ந்து அவள் முகத்தில் ஒரு முத்தமிட்டான். இச்செய்கையால் அவள் விழித்துப் பயந்தலறி அவனைப் பலமாய்த் தள்ளவே, கட்டிலிலிருந்து விழுந்த வேகத்தில் தரையில் தலை வலுவாய் மோத அவன் மூர்ச்சையாளுன். தன்னை அணுகின ஆள் யாரெனவறிய அவள் விளக்கை ஏற்றிளுள். அவள் மூர்ச்சித்திருந்த வாலிபனின் முகத்தைப் பார்க்கவே ஒருங்கே வியப்பும், விசனமுங்கொண்டு அவனுக்கு மூர்ச்சை தெளிவிக்கவேண்டிய சைத்தியோபசாரங்களை வெகு துரிதமாய்ச் செய்தாள். அவன் மூர்ச்சை

தெளிந்து கண்களைத் திறக்கும் சமயம் அவள் தீபத்தை அவித்து விட்டு "ஐயா! நீர் எப்படி இங்கு வந்தீர்?" என்று அவனை வினவ, அவன் "பெண்ணே! நான் உன்மேல் ஆசைகொண்டு உன்னை எனக்குச் சிநேகஞ்செய்து வைக்கும்படி உன்னைப் பராமரிக்கும் தாசியைக் கேட்டுக்கொண்டேன். அவள் என்னிடம் ஐம்பது ரூபாய் பெற்று என்னை இவ்வறையில் விட்டுப்போனாள். நீயோ முன்பின் யோசியாமல் என்னைக் கீழே தள்ளினாய். அதற்காக நான் இப்போது வருந்தவில்லை. ஆனால் உன் அன்பை மட்டும் பெற விரும்புகிறேன்.

பெண் :—அவள் தாசியா? இதுவரை அறியேனே! ஐயோ! சண்டாளி! என் கற்பைக் கெடுக்கவா எத்தனித்தாள்? இது தெரிந்திருந்தால் கண நேரமும் இங்கே தங்கியிரேனே! ஐயா! உடனே என்னை விட்டுச் செல்லும். உமக்கு வெகு புண்ணியமுண்டு.

வாலிபன் :—கண்ணே! அப்படிச்சொல்லாதே. என்மேல் கிருபை வை. ஒரு தாசி வீட்டில் வசித்தபின் நீ உன் கற்பை இழக்காவிடினும் உன்னைக் கற்பிழந்தவளென்றே உலகம் பழி கூறும். "பனையடியிலிருந்து பாலைப் பருகினாலும் கள் குடித்தான் என்பார்கள்" என்னும் பழமொழியைக் கேட்டிலையோ? ஆதலால் எவ்விதத் தடையுஞ் சொல்லாது என்மனப்படி நடந்துகொள்வாய்.

பெண் :—நீர் சொல்வது ஒரு வகையில் வாஸ்தவமே. ஆயினும் இத்தாசியின் வஞ்சக நடக்கையை நினைக்க நினைக்க என் இருதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது. ஆதலால் உம்மோடு சந்தோஷமாயிருக்க என் மனம் இப்பொழுது இடந்தரவில்லை. நாளை இந்நேரத்திற்கு இவ்விடம் வருவீராயின் உமது விருப்பப்படி நடந்துகொள்ளுகிறேன்.

வாலிபன் :—உன் வார்த்தையை நான் உறுதியாய் நம்பலாமா?

பெண் :—நிச்சயமாய் நம்பலாம். வேண்டுமானால் உம்முடைய கணையாழியை என்னிடம் கொடுத்துப்போம். உம்மை ஏற்றுக்கொள்ளுவதற்கு அறிகுறியாக அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

வாலிபன் :—அப்படியே செய்கிறேன். இப்பொழுது உன் முகாரவிந்தத்தையாவது நான் பார்க்கும்படி அருள் செய்யாயா ?

பெண் :—அதற்கு நான் இடங்கொடுத்தால் அப்புறம் என்னை விட்டுப் போகமாட்டீர். தயைபுரிந்து இன்னும் இருபத்துநான்கு மணிநேரம் உமது ஆவலைத் தணித்துக்கொள்ளும்.

வாலிபன் :—உன் இஷ்டம்போல் ஆகட்டும்—என்று சொல்லித் தன் கணையாழியைக் கழற்றி அவளிடமளித்துவிட்டு வெளியில் வந்து தாசியிடம் விவரம் தெரிவித்துச் சென்றான்.

அவ்வாலிபன் சென்றதும் அக்கிழத்தாசி "இப்பெண் இலகுவில் தீயவழிக்குட்படுவாளென்று அவள் முகத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே சந்தேகித்தேன். கற்புள்ள ஒரு பெண் தன் கணவன் எவ்வளவு பொல்லாதவனாயிருப்பினும், தனக்கு அவனால் எவ்வளவு துன்பம் நேரிடினும் அவனை விட்டு ஒருகாலும் நீங்காள். ஆனால் அவள் தான் மிகுந்த கற்புடையவளென்று வெகு சாதுரியமாய் என்னிடம் பேசிய மாதிரியில் நானும் சற்று ஏமாந்து போனேன். ஆயினும் நான் செய்த சூழ்ச்சியால் இறுதியில் என் வழிக்கு வந்தாள். இனி எனக்கு ஒரு புதையல் கிடைத்த மாதிரிதான்" என்று தனக்குள்ளாகவே அகமகிழ்ந்து நித்திரைக்குப்போனாள்.

அப்பெண்ணோ பின்னர் தூக்கத்தை நாடாமல் தாசி அயர்ந்து உறங்குமட்டும் காத்திருந்து மெதுவாய்க் கதவைத் திறந்து வெளியே வந்து இரவென்றும் பாராமல் வீட்டைவிட்டு ஓட்டம் பிடித்தாள். வழியில் எங்கும் தங்காது வெகுதூரம் அவ்விதமே சென்று களைத்துப்போய் ஒரு மரத்தடியில் வீழ்ந்து நித்திரைபோனாள்.

பிரகஸ்பதி தஞ்சனூரிலேயே கல்வி இலாகா இன்ஸ்பெக்டராக உத்தியோகம் பெற்றான். தனக்கு வியாதியில் முன் உதவி புரிந்த உபாத்தினியின் வீட்டிற்கு வாரத்திற்கு ஒரு முறையாவது தவறாது போய்த் தன் மனைவி மேனகையின் சுக செய்தியை விசாரித்து வந்தான். அவ்விதம் ஒருநாள் அவன் அங்குப் போன போது அம்மாது வீட்டிலில்லை. அச்சமயம் அங்கிருந்த மூதாட்டி அவனை அன்புடன் வரவேற்று அப்பெண்மணியின் அறையில் அமரச் செய்து அவனுக்குச் சிற்றுண்டி தயார் செய்யச் சென்றாள். பிரகஸ்பதி அவ்வறையில் தொங்கவிடப்பட்டிருந்த சில புகைப்படங்களைப் பார்ப்பதில் தன் நேரத்தைச் செலவிட்டான். அங்கே சுமார் பன்னிரண்டு வருடங்களுக்குமுன் எடுக்கப்பட்ட தன்னுடைய புகைப்படம் ஒன்றைக் கண்டு ஆச்சரியமுற்றான். அதன் பக்கத்தில் வேறு மூன்று புகைப்படங்களும் தொங்கின. ஒன்றில் 'மேனகை வயது பத்து' என்றும், இன்னொன்றில் 'மேனகை வயது பதினான்கு' என்றும், மற்றொன்றில் 'மேனகை வயது இருபத்தைந்து' என்றும் வரையப்பட்டிருந்தன. முதல் இரண்டும் தன் மனைவியின் படங்களெனச் சந்தேகமறத் தெரிந்து கொண்டான். மற்றப் படத்தையோ இதுவரை அவன் பார்த்ததில்லை. ஆயினும் அதன் சாயலிலிருந்து அதுவும் தன் மனைவியின் படமாகவே இருக்கவேண்டுமென யூகித்தான். ஆனால் அதைப் பார்க்கப் பார்க்க அவன் மனம் மிகவும் குழம்பியது. ஏனெனில் அப்படம் தான் வந்திருக்கும் வீட்டிலுள்ள உபாத்தினியின் சாயலை ஒத்திருந்தது. ஆதலின் அவ்வணங்கே தன் மனைவி மேனகையோவெனச் சந்தேகித்தான். அவ்வெண்ணம் அவன் மனத்தில் உதிக்கவே அவன் உள்ளம் பூரித்தது. அடங்கா மகிழ்ச்சிகொண்டான். அவளது வரவை ஆவலுடன் எதிர்நோக்கி அங்குமிங்கும் அறையில் உலாவினான். அப்பொழுது மூதாட்டி சிற்றுண்டியுடன் அங்கு வர அவன் அவளை நோக்கி "பாட்டி! இந்த வீட்டுப் பெண்மணியின் பெயரென்ன?" என்று வினவினான்.

மூதாட்டி :—அவள் பெயர் மேனகை. அவள் சொந்த ஊர் மதனபுரியாம். விசுவேசுவர ஐயரின் குழந்தையாம்.

மிட்டாதார் நாகராஜ ஐயரின் நாட்டுப் பெண்ணும். அவள் அகமுடையான் பிரகஸ்பதி தன் மாமனர் வரதட்சணை கொடுக்க வில்லையென்று அவளைச் சாந்திமுகூர்த்தம் செய்துகொள்ள மறுத்துவிட்டானும். அதனுல் அவள் அயலூர் சென்று படித்து உத்தியோகம் செய்கிருள். எங்கள் காலத்தில் பெண்ணுக்குப் பரிசங்கொடுத்தார்கள். இந்தக் கலிகாலத்திலோ மாப்பிள்ளைக்குப் பணம் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. இந்தக் கொடுமையை எங்கே போய்த் தொலைக்கிறது? நீ யாரப்பா?

பிரகஸ்பதி:—அப்பெண் வரட்டும். அப்புறம் சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுத்துக்கொள் பாட்டி!—என்று சொல்லி முடிக்கவும் அப்பெண்மணி அங்கு வர, பிரகஸ்பதி எதிர்கொண்டோடி அவள் எதிர்பாராவண்ணம் அவளை அணைத்து "என் கண்மணி! மேனகா! உண்மையைச் சோதிக்கவோ நீ யாரென இதுவரை தெரிவியாதிருந்தாய்? என் பிழைகளைப் பொறுத்து என்னை எற்றுக்கொள்ளுவாய்" என்று அவள் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மூதாட்டி "என்னடி இது! இவன் யாரடி?" என ஆத்திரத்துடன் வினவ, மேனகை, பிரகஸ்பதியின் கரங்களினின்று தன்னை மெல்ல விடுவித்துக்கொண்டு "பாட்டி! இவர்தான் என் பர்த்தா. நான் யாரென இதுவரை அவருக்குத் தெரிவிக்கவில்லை. அவர் செய்கையைக் கவனிக்கும்போது நீதான் என்னை அவரிடம் காட்டிக் கொடுத்துவிட்டாய்போல் தோன்றுகிறது" என்று புன்னகை பூத்தாள். அப்பொழுது அவள் "இவன்தான் பிரகஸ்பதியென்று நான் கண்டேனு? வந்ததும் உன் பெயரைக் கேட்டான். நான் உன் கதையைச் சொன்னேன். அதனுல் இப்போ உனக்கு ஒன்றும் குறைந்து போகவில்லையே! நன்மையாய்த்தானே போச்சுது. தெய்வம் உங்கள் இருவரையும் கூட்டிவைக்கும் காலம் வந்தது" என்று சொல்லிப் பிரகஸ்பதியை நோக்கி "ஏண்டாப்பா பிரகஸ்பதி! உன் அப்பாவையும், உன்னையும் வரதட்சணைப்பேய் பிடித்திரா விட்டால் பன்னிரண்டு வருஷமாய்ப் பெண்டாட்டியில்லாமல்

திண்டாடியிருக்கமாட்டாயே! உன் இள மனைவியும் தன் வாலிப காலத்தைக் கண்ணீரில் கழித்திருக்கமாட்டாளே! நீங்கள் அதிகம் படிப்பது இதற்குத்தானு? இப்பாழுங் கொடுமையை நீக்காவிட்டால் நீங்கள் படிப்பதிற் பயனென்ன? இனி உங்களைப் பார்த்தாவது மற்றவர்களுக்குப் புத்தி வருமோ என்னவோ!" என்று பெருமூச்சுவிட்டாள். அவ்வார்த்தைகள் பிரகஸ்பதியின் நெஞ்சில் அம்புபோற் பாய்ந்தன. அதன்பின் பிரகஸ்பதியும், மேனகையும் உல்லாசமாய்ச் சல்லாபித்துக்கொண்டே சிற்றுண்டி அருந்தினர். பின்பு மறுநாள் திரும்பிவருவதாய்ச் சொல்லி, பிரகஸ்பதி மேனகையிடம் விடைபெற்றுச் சென்றான். அடுத்த தினம் தான் வாக்களித்தபடியே பிரகஸ்பதி திரும்பிவந்து மேனகையைத் தன் தந்தையிடம் அழைத்துப்போனான். அவள் அவரிடம் ஐயாயிரம் ரூபாய் வரதட்சணையைச் செலுத்தி விவரமனைத்துங் கூற, அவர் ஒருங்கே பிரமிப்பும் சந்தோஷமுமடைந்து "அம்மா! மேனகா! உன் வரதட்சணை வேண்டாம், நீயே வைத்துக்கொள். என்னால் நீ அடைந்த கஷ்டங்களுக்கெல்லாம் இஃதாவது ஈடாயிருக்கட்டும்" என அன்பாய் மொழிந்தார். இருவருக்கும் சாந்திமுகூர்த்தமும் செய்வித்தார். என்னே! பணத்தின் மகிமை!

மதனபுரியில் பரதேசி சாம்பசிவன் வியாதிப்பட்டு மரணத்தறுவாயிலிருப்பதாகச் சாம்பசிவனின் தோழனாகிய மற்றொரு பரதேசி ஒருநாள் தஞ்சனூருக்கு வந்து சுமுகியிடம் தெரிவித்தான். அதை அறிந்ததும் சற்றும் தாமதியாமல் சுமுகியும், சாரதாவும் அப்பரதேசியுடன் மதனபுரிக்குப் போனார்கள். அவர்களைக் கண்டதும் சாம்பசிவனின் முகம் மலர்ந்தது. சுமுகியும், சாரதாவும் அம்மடத்திலேயே தங்கி ஒரு வைத்தியரைத் தருவித்துச் சாம்பசிவனுக்குச் சிகிச்சை செய்வித்தனர். தெய்வாநுகூலத்தால் சில தினங்களில் சாம்பசிவன் பிழைத்தெழுந்தான். பின் சுமுகியும் சாரதாவும் சாம்பசிவனிடம் விடைபெற்று ஊர் திரும்பினர். போகும் வழியில் அவர்கள் ஏறிச்சென்ற வண்டிக்கு முன்னாக ஓர் அழகிய யுவதி சாலையின் நடுவில் தள்ளாடித் தள்ளாடி நடந்து

போவதைக் கண்டு சாரதி வண்டியை மெதுவாய் ஓட்டினான். அச் சமயம் அம்மாது வண்டிக்கு விலக எத்தனித்ததில் ஒரு கல்லில் இடறிப் பொத்தெனத் தரையில் வீழ்ந்தாள். மதனபுரியிலிருந்து கிழத்தாசியை விட்டுத் தப்பி வந்தவளே இப்பெண்மணி. அவள் விழுந்ததைக் கண்டதும் சாரதியை வண்டியை நிறுத்தச் சொல்லி சாரதா இறங்கி அம்மாதைத் தூக்கிவிட்டாள். அவள் மிகவும் களைப்புற்றிருந்ததைக் கவனித்துச் சாரதா அவளிடம் விவரம் விசாரிக்க, அவள் கிழத்தாசியிடம் தெரிவித்ததையே சாரதாவிடமும் கூறினாள். அதைக் கேட்டுப் பரிதபித்துச் சாரதாவும், சுமுகியும் அவளைத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். இப்பெண் வீணை வாசிப்பதில் கைதேர்ந்தவள் எனச் சுமுகி அறிந்து, அவ்வூர்ப்பெண்கள் கலாசாலைத் தலைமை உபாத்தினியாகிய மேனகையிடம் பேசி அவளை அக்கலாசாலையில் ஒரு சங்கீத உபாத்தினியாக நியமிக்க ஏற்பாடு செய்தாள். சாரதாவும் அவளிடம் வீணை கற்று வந்தாள்.

ஒருநாள் சர்வோத்தமன் தன் அறையில் தனித்திருக்கும் போது ஒரு பெண்மணி அவனைப் பார்க்க வந்தாள். அவளுக்குச் சுமார் பதினேழுவயதிருக்கும். மிகுந்த அழகுள்ளவள். சாதாரண உடை தரித்திருந்தாள். அவள் முகம் சற்று வாட்டமுற்றிருந்தது. அவளைக் கண்டதும் சர்வோத்தமன் தன் ஆசனத்தை விட்டெழுந்து அவளை அன்புடன் வரவேற்று மற்றோராசனத்தில் அமரச்செய்து “அம்மணி! நீ யார்? என்னிடம் வந்த விஷயம் யாது?” என வினவினான்.

பெண்மணி:—ஐயா! நான் யாரெனத் தெரிவிக்குமுன் உங்கள் நாமதேயத்தை அறிய விரும்புகிறேன்.

சர்வோத்தமன்:—என் பெயர் சர்வோத்தமன்.

பெண்மணி:—உங்களுக்கு ஒரு லிகிதம் கொண்டு வந்திருக்கிறேன். முன்னர் அதை வாசியுங்கள்—என்று சொல்லி ஒரு கடிதத்தை அவனிடம் அளித்தாள். அதை வாசித்ததும் அவன் முகத்தில் கோபமும், துக்கமும் ஒருங்கே தோன்றின. அவன்

கண்கள் கலங்கின. கரங்கள் நடுங்கின. அவன் தேகம் சிலீரிட்டது. பின் ஒருவாறு தன்னைச் சாந்தப்படுத்திக்கொண்டு "அம்மா! நீ யாரெனத் தெரிவிக்கவில்லையே" என்றான்.

பெண்மணி:—நான் உங்கள் அன்னையின் சகோதரன் மகள்.

சர்வோத்தமன்:—அப்படியா! இதுகாறும் சந்தியாத உன்னை இன்று காண நேர்ந்ததற்காக மிகவும் மகிழ்வடைகிறேன். உன் ஊர் எது? என் அன்னையிடம் எப்பொழுது வந்தாய்? அவள் உன்னை இங்குத் தனியாகவா அனுப்பினாள்?

பெண்மணி:—நானும், என் தந்தையும் ஆரம்பூ மலையில் வசிக்கிறோம். உங்கள் பெற்றோர் அயல்நாட்டிலிருந்து திரும்பி விட்டார்களெனக் கேள்விப்பட்டுத் தன் தங்கையைப் பார்க்க விரும்பி என் தந்தை என்னையும் அழைத்துக்கொண்டு சில தினங்களுக்கு முன் நந்தனார்குடிக்கு வந்தார். தன் சகோதரியுடன் சிலகாலம் தங்கியிருக்கும்படி என்னை அவ்விடம் விட்டு என் தந்தை மட்டும் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினார். இப்பொழுது நான் உங்களுக்கு அளித்த லிகிதத்தில் அந்தரங்கமான முக்கிய விஷயம் ஒன்று எழுதப்பட்டிருப்பதால் அதை உங்களிடம் தவறாது சேர்ப்பிக்க ஒரு உண்மையான ஆள் வேண்டுமென உங்கள் அன்னை கவலையுற்றபோது நான் அதை எடுத்துச் செல்வதாய்த் தெரிவிக்க அவள் அதிக சந்தோஷமடைந்து என்னை அனுப்பினாள். ஆதலால் நான் தனியே வர நேரிட்டது" என்று பதிலளித்ததுடன், சர்வோத்தமனின் அன்னை சொல்லியனுப்பிய மற்றுஞ் சில அந்தரங்க விஷயங்களையும் அவனுக்குத் தெரிவித்தாள். அதைக் கேட்டதும் சர்வோத்தமன் "அம்மணி! உன் சிறந்த குணத்தையும், தைரியத்தையும் மிகவும் மெச்சுகிறேன். இப்பவும் நீ உடனே என் அன்னையிடம் சென்று அவள் நிருபத்தில் கண்டபடி நிச்சயமாய்ச் செய்வேனெனத் தெரிவி" எனச் சொல்லி அவளை அனுப்பிவிட்டு, தான் தன் தாயின் விருப்பத்தை நிறைவேற்றப் புறப்பட்டான். அப்பொழுது நடுநிசி வேளையாயிருந்தது. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

இது நடந்த மறுநாள், முந்தின இரவில் சமீன்தார் சிவஞான முதலியாரின் மனைவியைக் கொலைசெய்ய எத்தனித்த குற்றத்திற்காக, சர்வோத்தமன் போலீஸ் கச்சேரியில் அடைக்கப் பட்டிருக்கிறனென ஒரு வதந்தி எங்கும் பரவியது. அதைக் கேட்ட சாரதா துடிதுடித்தாள். அவளால் அதை நம்பமுடியவில்லை. உடனே அவளும், சுகந்தியும் கோமளவல்லியின் வீட்டிற்குச் சென்று அங்குச் சர்வோத்தமனைக் காணமல் கோமளவல்லியை விசாரிக்க அவள், முந்தினநாள் சர்வோத்தமனைப் பார்க்க யாரோ ஒரு பெண்மணி வந்ததாயும், அதற்குப்பின் ஏதோ ஒரு அவசர சோலியாய் அவன் புறப்பட்டுப் போனதாயும் தெரிவித்தாள். அதை அறிந்ததும் சாரதா மனங்கலங்கினுலும் "சர்வோத்தமர் ஒருகாலும் இக்குற்றத்தைச் செய்திரார். அவரைப் பார்க்கவந்த பெண் யாராயிருக்கக்கூடும்? இதில் ஏதோ ஒரு சூது இருக்கிறது. ஆகையால் நாம் உடனே நந்தனூர்குடிக்குச் சென்று அவரை நேரில் கண்டுவருவோம்" என்று சுகந்தியிடம் சொல்ல இருவரும் வீட்டிற்குத் திரும்பிச் சுமுகியிடம் விடைபெற்றுக்கொண்டு நந்தனூர்குடிக்குச் சென்றனர்.

சடாலிங்கத்தின் மறுதாரமாகிய பாஞ்சாலி அவனை மணஞ் செய்துகொள்ளுமுன்னர் அவனது கூட்டாளிகளில் ஒருவனுகிய கோவிந்தன் என்பவனை ஆசை நாயகனுக வைத்திருந்தாள். சடாலிங்கத்தைக் கலியாணஞ்செய்த பின்னரும் அவள் கோவிந்தனது சிநேகத்தை விட்டாளில்லை. சடாலிங்கத்தின் மகளாகிய ராதாவை ஒழித்துவிடவும், சடாலிங்கத்தை இராமலிங்க முதலியாரிடம் காட்டிக்கொடுத்து ஒரு பெருந்தொகையைப் பெற்றுக் கொள்ளவும், சடாலிங்கம் சேர்த்து வைத்திருந்த சகல ஆஸ்திகளையும் அபகரித்துக்கொள்ளவும் பாஞ்சாலியும், கோவிந்தனும் நெடுநாளாய்ச் சதியாலோசனை செய்துவந்தனர். இதுவிஷயத்தைச் சடாலிங்கமும், ராதாவும் அறியாதிருந்தனர். ஒருநாள் சடாலிங்கம் வீட்டிலில்லாத சமயம் பாஞ்சாலியும், கோவிந்தனுங் கூடி ராதாவைத் துன்புறுத்தி அவளிடமிருந்த பொக்கிஷ அறை

யின் திறவுகோலைப் பலவந்தமாய் அபகரித்துக்கொண்டு அவளை ஒரு பாதாள அறையில் அடைத்துவிட்டனர். அச்சமயம் சடாலிங்கத்தின் உண்மைக் காவலாளனாகிய கணேசனும் வெளியிற் சென்றிருந்தான். அவன் திரும்பிவந்ததும் பாஞ்சாலி அவனை நோக்கி "கணேசா! ராதா என்னிடம் சண்டையிட்டுக் கொண்டு எங்கோ ஓடிப்போய்விட்டாள். சீக்கிரமாய்ப் போய் அவளைத் தேடி அழைத்துவா" என்று தந்திரமாய் அவனை வெளியில் அனுப்பிவிட்டாள். பின் சடாலிங்கம் வந்ததும் அவனிடம் ராதா கணேசனைக் கூட்டிக்கொண்டு எவ்விடமோ போய்விட்டதாக வஞ்சனையாகக் கூறினாள். சடாலிங்கம் அவள் வார்த்தையைச் சந்தேகியாமலும், ஆழ்ந்து யோசியாமலும் விஷயத்தைக் கேட்டதும் சற்றும் தாமதியாமல் அச்சமயம் அங்கிருந்த தன் ஆட்கள் யாவருடனும் ராதாவைத் தேடிப்போனான். அவன் சென்றபின் பாஞ்சாலியும், கோவிந்தனுஞ் சேர்ந்து பொக்கிஷ அறையைத் திறந்து சடாலிங்கம் சேர்த்துவைத்திருந்த ஏராளமான நகைகளையும், நாணயங்களையும் அப்புறப்படுத்தி இரகசியமான ஓரிடத்தில் பதனஞ் செய்தனர்.

நந்தனூர்குடிப் போலீஸ் கச்சேரியில் சர்வோத்தமன் ஒரு தனி அறையில் அடைக்கப்பட்டிருந்தான். சாரதாவையும், சுகந்தியையுங் கண்டவுடன் சர்வோத்தமன் தேம்பித் தேம்பி அழுதான். அவ்விதமே சாரதாவும், சுகந்தியுங் கண்ணீருதிர்த்தனர். பின் சாரதா தன் அழுகையை நிறுத்தி 'சர்வோத்தமரே! நீங்கள் செய்ததாகச் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தை நீங்கள் செய்திருப்பீர்களென நான் நம்பவில்லை. அதுவிஷயமாய் உங்கள் வாய்மொழியை அறிந்து எங்களாற் செய்யக்கூடிய உதவியை உங்களுக்குச் செய்யவந்தோம்" என்றாள்.

சர்வோத்தமன்:—சாரதா! உன் அநுதாபமான வார்த்தைகளுக்காக உனக்கு நன்றி பாராட்டுகிறேன். இக்குற்றத்தை நான் செய்யவில்லை. சுகந்தி அம்மா! நீங்கள் என் வார்த்தையை நம்புகிறீர்களா?

சுகந்தி:— அப்பா சர்வோத்தமா! நீ குற்றவாளியன்று என்றே நானும் நம்புகிறேன். நீ அநியாயமாய்க் குற்றஞ் சாட்டப்பட நேரிட்ட சந்தர்ப்பங்கள் யாவையும் எங்களுக்குத் தெளிவாய்க் கூற விரும்புகிறோம்.

சர்வோத்தமன் :—அம்மா! நான் அவ்விஷயங்களைக் கூறின் அது மற்றொருவருக்கு ஆபத்தாக முடியும். ஆதலால் சொல்லத் தயங்குகிறேன். அவரை ஆபத்திற்குட்படுத்துவதிலும் நானே குற்றவாளியாகப் பாவிக்கப்பட்டு அதனால் வரும் தண்டனையை அநுபவிப்பதே மேலாகும்.

சாரதா :—உத்தமரே! உங்களுடைய உயிர் ஆபத்திலிருக்கும் பொழுதும் நீங்கள் காட்டும் பெருந்தன்மையை நிரம்பவும் மெச்சுகிறேன். ஆயினும் இதனால் உங்களுக்கு ஏதாவது துன்பம் நேரின் அது எங்கள் மனத்தை எவ்வளவுதூரம் வருத்துமென்பதை யோசிக்கவேண்டாமா? அதுவுமன்றிக் குற்றஞ் செய்தவர் தண்டனை யடைய வேண்டுமேயன்றி நிரபராதியொருவன் தண்டனை அடைவது நியாயமாகுமா? நீங்கள் குறிப்பிடும் நபர் யாரோ?

சர்வோத்தமன் :—அவர் யாரென்று தெரிவிக்க என் மனம் துணியவில்லை. அவர் சிட்சையடைந்தாலும் நான் சிட்சையடைந்தாலும் ஒன்றே.

சாரதா :—அவரது பெயரைத்தவிர மற்ற விபரங்களையாவது எங்களிடம் தெரிவிக்கக்கூடாதா? அதனால் உங்களைத் தப்புவிக்க எங்களுக்கு வழி ஏற்பட்டாலும் ஏற்படலாமே!

சர்வோத்தமன் :—அம்மா! அவைகளைக் கூறின் உங்களுக்கு என்மேலுள்ள மதிப்புக் குறைந்துவிடும். நீங்கள் என்னை அருவருத்துப் புறக்கணிப்பீர்கள். எனினும் நீங்கள் விரும்புவதால் தெரிவிக்கிறேன். நான் ஒரு நிர்ப்பாக்கியன். சிவஞான முதலியார் வீட்டில் கொலை செய்ய எத்தனித்தவர் என் தந்தையே! அக்கொலை நடவாதபடி தடுக்கவேண்டுமென்று என் அன்னையின்

கடிதம் ஒன்றை நேற்றிரவு என் மைத்துனி என்னிடங் கொடுத்துப் போனாள். நான் உடனே சிவஞான முதலியார் வீட்டிற்குச் சென்றேன். நான் போன சமயம் என் தந்தை அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு சிவஞான முதலியாரின் குழந்தைக்கு நேராய்த் தன் கத்தியை ஓங்கினார். க்ஷணமே நான் அவரது ஓங்கிய கையைப் பிடித்துக்கொள்ள, அவர் கத்தியை நழுவவிட்டு ஓட்டம் பிடித்தார். விழுந்த கத்தி குழந்தையின் அருகில் படுத்திருந்த முதலியாரது மனைவியின் கையில் பாய இரத்தம் பீறிட்டது. அக்காயத்தினால் அவள் விழித்து 'ஐயோ என்னைக் குத்திவிட்டானே' எனக் கூச்சலிடவே, முதலியாரும் விழித்துக்கொண்டார். நான் என் தந்தையுடன் ஓடிப்போகாமல் அவள் கையில் பாய்ந்திருந்த கத்தியைப் பிடுங்கி எறிந்துவிட்டுக் காயத்தை என் கரத்தால் அழுத்தி இரத்தம் வடியாதபடி செய்தேன். முதலியாரோ என்னைப் பிடித்துக்கொண்டு தன் வேலைக்காரரைக் கூவி அழைத்தார். அப்பொழுது நான் "ஐயா! நான் எங்கும் போகேன். என்னை விடுத்து முதலில் உங்கள் மனைவியின் காயத்தைக் கட்டுங்கள்" என்று சொன்னேன். அது சமயம் முதலியாரின் வேலைக்காரர் ஓடிவந்தனர். கொலை செய்ய வந்தவர் என் தந்தை என்பதைமட்டும் தெரிவியாமல் மற்ற விபரமனைத்தையும் உள்ளபடி கூறினேன். குற்றம் செய்தவர் இன்னாரெனத் தெரிவிக்க நான் மறுத்துவிட்டதால் முதலியார் என் வார்த்தைகளை நம்பாது என்னைத் தன் வேலைக்காரர்மூலம் போலீஸ் கச்சேரிக்கு அனுப்பிவைத்தார். போலீஸ் இன்ஸ்பெக்டரிடமும் அவ்விதமே தெரிவித்தேன். அவரும் என் வார்த்தைகளை நம்பாமல் என்னை நியாயஸ்தலத்திற்கு அனுப்புவதாய்ச் சொல்லி இங்கே சிறைவைத்திருக்கிறார். இப்பொழுது நான் ஒரு கொலைகாரனின் புத்திரனென்ன நீங்கள் அறிந்தபின்பு எனக்கு உதவிசெய்ய முன் வருவீர்களோவென அஞ்சுகிறேன்.

சாரதா:—ஐயா! ஒருபோதும் அப்படி நினைக்கவேண்டாம். உங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்கிற ஆவல் இப்பொழுது அதிகரிக்கிறதேயொழியக் குறையவில்லை. இக்குற்றத்தைச்

செய்ய உங்கள் தந்தையைத் தூண்டின காரணம் யாதென அறிவீர்களா?

சர்வோத்தமன் :—அறிவேன். திவான்பகதூர் இராமலிங்க முதலியார் சிவஞான முதலியாரின் ஏக தம்பி யாவார். சிவஞான முதலியாருக்குக் குழந்தையில்லாவிடின் அவரது சமீன் இராம லிங்க முதலியாரையே சேரும். ஆதலால் சிவஞான முதலியா ரையும், அவருடைய குழந்தையையும் கொலை செய்யும்படி இராமலிங்க முதலியாரின் மனைவி காந்தாரி என் தந்தையை ஏவினாள். அக்கொலை புரிவதற்கு இருபதினாயிரம் ரூபாய் இலஞ்சம் கொடுப்பதாக அவள் என் தந்தைக்கு எழுதிக் கொடுத் திருக்கிறாள். அப்பணத்திற்காசைப்பட்டே இத்தீச்செயல் புரிய என் தந்தை துணிந்தார்.

சாரதா :—காந்தாரி அளித்த அச்சீட்டு உங்களிடமிருக் கிறதா?

சர்வோத்தமன் :—இல்லை; என் தந்தையிடமிருந்த அச் சீட்டை அவருக்குத் தெரியாமல் என் அன்னை கைப்பற்றி அது தவறிப்போகாவண்ணம் தன் தமையனுக்கு அனுப்பியிருக்கிறாள்.

சாரதா :—உங்கள் அன்னை உங்களுக்கு அனுப்பிய கடிதம் எங்கே?

சர்வோத்தமன் :—அது தஞ்சனூரில் என் பெட்டியிலிருக் கிறது.

சாரதா :—அக்கடிதத்தையும், காந்தாரியின் சீட்டையுங் கொண்டு உங்களை விடுவிக்கக்கூடுமென நினைக்கிறேன்.

சர்வோத்தமன் :—அவைகளை உபயோகிப்பதால் நான் மீட் கப்படலாம். ஆனால் என் தந்தை தண்டிக்கப்படுவது திண்ணம். ஆதலால் அவ்விதம் செய்வது எனக்கு நலமாகத் தோன்றவில்லை.

சாரதா :—அவ்விரு கடிதங்களிலும் உங்கள் பெற்றோரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ?

[library stamp]

சர்வோத்தமன் :—இல்லை.

சாரதா :—அப்படியாயின் உங்கள் தந்தை தண்டனைக்குள் ளாவாரென்று நீங்கள் கவலைப்படவேண்டாம். நாங்கள் சிவஞான முதலியாரிடம் உண்மை யாவையும் கூறி உங்கள் பெற்றோர் யாரென அறிய யாதொரு பிரயத்தனமும் செய்யாமலே உங்களை விடுதலை செய்யும்படி அவரை மன்றாடுவோம். அப்புறம் தெய்வச் செயல். உத்தமரைக் கடவுள் கைவிடார் என்பது நிச்சயம். உங்கள் அம்மான் யார்? அவர் எங்கேயிருக்கிறார்?

சர்வோத்தமன் :—அவர் பெயர் சடாலிங்கம். அவர் ஆரம்பூமலையில் தேனாற்றின் பக்கம் ஒரு குகையில் வசிக்கிறார்.

சாரதா :—காந்தாரியின் சீட்டை என்னிடம் அளிக்கும்படி அவருக்கு ஒரு லிகிதம் எழுதிக்கொடுங்கள். உங்கள் பெட்டியின் சாவியையும் என்னிடம் அளியுங்கள்—என்று சொல்ல, சர்வோத் தமன் அவ்வண்ணமே செய்தான். பின்பு சாரதாவும், சுகந்தியும் அவனிடம் விடைபெற்றுப் போயினர்.

" மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை "

அத்தியாயம்-9

சதியை விளக்கிச் சங்கடந் தீர்த்த சமர்த்தி

"உற்றுழி யுதவிசெய்வோ ருலப்பிலா தெவையுமீவோ
ரற்றமிற வத்தாறுற்றோ ரமர்புரி வீரராவோர்
மற்றொரு பொருளும்வெஃகார் வருத்தமு மோராராவி
யிற்றிட வரினுமெண்ணா ரினிதென மகிழ்வரன்றே"

ஒரு சமீன்தாரையும், அவர் குழந்தையையும் கொலை செய்ய, முன் நந்தனூர்குடியில் வீரப்பன் என்ற ஒரு மனிதனுடன் சதியாலோசனை செய்த ஸ்திரி, திவான் பகதூர் இராமலிங்க முதலியாரின் மனைவி காந்தாரியே. அச்சமீன்தார், இராமலிங்க முதலியாரின் சகோதரன் சிவஞான முதலியாரே. இப்பொழுது சிவஞான முதலியாருடைய குழந்தையைக் கொல்ல எத்தனித்துத் தப்பி ஓடியவன், இவ்வீரப்பனே. சர்வோத்தமனுக்கு இச்சதியாலோசனையைக் குறித்துக் கடிதம் அனுப்பியது, வீரப்பனின் மனைவி மீனாட்சியே.

வீரப்பன் தன் வீட்டிற்குத் திரும்பியதும் மிகுந்த கோபத்துடன் மீனாட்சியை நோக்கி "சிவஞான முதலியாரையும் அவர் குழந்தையையும் இன்றிரவு நான் கொலைசெய்யப் போவதாய்ச் சர்வோத்தமனுக்குச் செய்தி அனுப்பினாயோ?" என்று கேட்டான்.

மீனாட்சி:—ஆம். அத்தீத்தொழிலுக்கு உடன்படக் கூடாதென்று நான் உங்களுக்குச் சொன்ன புத்தியை நீங்கள் கேட்காததால், அதை நீங்கள் செய்யாதபடி தடுக்கச் சர்வோத்தமனிடம் என் தமையன் மகனை அனுப்பினேன்.

வீரப்பன்:—அடி பாதகி! உன்னால் இருபதினாயிரம் ரூபாய் தோற்றேனே! நான் முதலியாரது குழந்தையைக் கத்தியால்

குத்தப்போகும் சமயம் சர்வோத்தமன் என் கையைப் பிடித்துக் கொண்டான். உடனே ஓடிவந்துவிட்டேன். மற்றொருவன் அவ்விதம் என்னைத் தடுத்திருந்தால் அக்கணமே அவனைக் குத்தி யிருப்பேன்.

மீனாட்சி:—அப்படியானால் சர்வோத்தமன் எங்கே?

வீரப்பன்:—அஃதொன்றும் எனக்குத் தெரியாது—என்று கூறி, ஆங்காரத்துடன் போய்ப் படுத்துக்கொண்டான். மீனாட்சியோ, சிவஞான முதலியாரும், அவர் குழந்தையும் தன் கணவனின் கைக்குத் தப்பியதற்காகவும், தன் கணவனும் தப்பிவந்ததற்காகவும் சந்தோஷமடைந்தாலும், சர்வோத்தமனுக்கு யாது நேர்ந்ததோவென நினைத்து இரவெல்லாம் நித்திரை செய்யாது மிகுந்த கவலையுடன் தன் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். விடிந்ததும், சர்வோத்தமன் சிறை செய்யப்பட்டிருக்கிறானென வும், தன்னை அவன் காட்டிக்கொடுக்கவில்லையெனவும் வீரப்பன் கேள்விப்பட்டான். தன் பெயர் வெளிவாரததற்காக அவன் சந்தோஷமடைந்தாலும் சர்வோத்தமன் பிடிபட்டதற்காக மிகவும் விசனமடைந்தான். அவன் அதை மீனாட்சியிடம் தெரிவிக்க, அவளும் தாங்கொணுத் துயரமடைந்தாள். பின்பு "அவனை மீட்பது எப்படி?" என்று மீனாட்சி கேட்க, வீரப்பன் "அவனுக்கு விரோதமாய்ப் போதுமான சாட்சியம் இல்லாததால் நியாயஸ்தலத்தில் அவன் எவ்விதமும் விடுதலையடைவானென நினைக்கிறேன். அவ்விதம் அவன் விடுவிக்கப்படாவிட்டால் பின் செய்யவேண்டியதை அப்புறம் யோசிப்போம்; கவலைப் படாதே" என்று அவளைத் தைரியப்படுத்தினான்.

தன் மகள் ராதாவைத் தேடிச்சென்ற சடாலிங்கம், காடு காடாய் அலைந்தும் ராதாவையாவது, கணேசனையாவது கண்டு பிடிக்கவில்லை. அவன் மிகுந்த கவலையுடன் தன் குகைக்குத் திரும்பினான். அப்பொழுது மாலை மணி எட்டு இருக்கும். அது சமயம் தன் கூட்டாளி கோவிந்தன் குகையைவிட்டு வெளியில் போவதைக் கவனித்து அவ்விரவில் அவன் எங்குப் போகிறானென்

றறிய அவன் பின்னால் மறைந்து சென்றான். அவன் இராமலிங்க முதலியாரின் வீட்டிற்குள் நுழைவதைக் கண்டான். கோவிந்தன் இராமலிங்க முதலியாரிடம் தான் சடாலிங்கத்தின் கூட்டாளி யென்றும், தனக்குத் தகுந்த சன்மானம் கொடுப்பின் அவனைப் பிடித்துக் கொடுப்பதாயும் தெரிவித்தான். அதைக் கேட்டதும் முதலியார் துள்ளி எழுந்து அவன் சடாலிங்கத்தைக் காட்டிக் கொடுத்தால் ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாய் வாக்களித்தார். இதைச் செவியுற்றதும் சடாலிங்கத்தின் கண்கள் இரண்டும் கோபத்தால் சிவந்தன. கோவிந்தனின் எலும்புகளை அப்போதே நொறுக்கிவிடலாமாவென யோசித்தான். ஆயினும் அவனது சூழ்ச்சிகளை முற்றும் அறிந்தபின் அவ்விதம் செய்யலாமென நினைத்துத் தன் கோபத்தைத் தணித்துக்கொண்டான். கோவிந்தன் முதலியாரின் வீட்டைவிட்டு வெளியே வந்ததும் சடாலிங்கமும் அவன் பின்னே சென்று தன் குகையை அடைந்து அங்கே நடைபெறுவதை ஒளிந்திருந்து கவனித்தான். கோவிந்தனைக் கண்டதும் பாஞ்சாலி எதிர்வந்து "போன காரியம் பாலா? மோரா?" என விசாரித்தாள்.

கோவிந்தன்:—பால்தான்; உன் புருஷனைக் காண்பித்தால் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக முதலியார் சொல்லியிருக்கிறார். அத்தோடு சர்க்காரில் கொடுக்கும் வெகுமானமும் நமக்குத்தான்.

பாஞ்சாலி:—எல்லாம் சரிதான். அக்கழுதை ராதாவைத் தேடிப்போன அத்தடியன் இன்னும் வரவில்லையே! வந்தாலல்லவோ அவனைப் பிடித்துக் கொடுக்கக்கூடும்.

கோவிந்தன்:—அவன் இங்கே வாராமல் எங்கே போவான்? வந்தபின் பார்த்துக்கொள்வோம்.

பாஞ்சாலி:—ஒருகால் சடாலிங்கம் திடீரெனத் திரும்பி வந்து நாம் மறைத்துவைத்திருக்கும் அவனுடைய ஆஸ்திகளை எங்கேயென்று கேட்டு நம்மைத் துன்புறுத்தினால் என்ன செய்வது?

கோவிந்தன் :—உன்னைப்போல் கோழையை நான் எங்கும் பார்க்கவில்லை. ராதாவும், கணேசனும் கொண்டுபோய்விட்டார்களென்றே சாதிக்கவேண்டும். பொக்கிஷ அறையின் சாவி ராதாவிடமே இருந்ததால் நம் சொல்லைத் தேவவாக்காக நம்பிக் கொள்வான். ஒன்றுக்கும் கவலைப்படாதே. நான் இருக்கிறேன். தைரியமாயிரு—என்று சொல்லி வாய்மூடவும், இவர்கள் இருவரின் சம்பாஷணை முழுவதையும் மற்றோர் பக்கத்தில் ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த கணேசன், அவர்கள்முன் ஒன்றுமறியாதவன்போல் வந்து நின்றான். மேற்கண்ட சம்பாஷணையைக் கேட்டு மிகுந்த கோபாவேசத்துடன் துடித்துக்கொண்டிருந்த சடாலிங்கம், கணேசனைக் கண்டதும் பிரமிப்படைந்து பின்னும் நடையுறுவதை அறியவெண்ணி அமைதியாயிருந்தான். கணேசன் பாஞ்சாலியை நோக்கி "அம்மா! ராதா திரும்பி வந்துவிட்டாளா? எங்கெங்கோ தேடியும் அவள் என் கண்ணிற்குத் தென்படவில்லையே! வெளியிற் சென்றிருந்த அவர் தந்தை வந்தாரா?" என்று கேட்க, பாஞ்சாலி "அவள் இன்னும் வரவில்லை. நீ போனபின் அவள் தந்தை வந்தார். ராதாவைக் காணோமென்று நான் அவரிடம் தெரிவித்ததும் அவரும் அவளைத் தேடிப்போனார். அவரும் திரும்பி வரவில்லை" என்று சொல்லவும், கணேசன் "மறுபடியும் காலையில் போய்த் தேடிப்பார்க்கிறேன்" என்று சொல்லிப்போக, மறைந்துநின்ற சடாலிங்கம் அவனைச் சைகைகாட்டி அழைத்துத் தன்னுடன் நிறுத்திக் கொண்டான். கணேசன் போகவும், பாஞ்சாலி கோவிந்தனை நோக்கி "நாம் மறைத்து வைத்திருக்கும் பொக்கிஷம் பத்திரமாயிருக்கிறதாவென்று போய்ப்பார்த்து வருவோமா?" என்று கேட்க, அவன் "இந்த இரவிலேயா? என்ன இவ்வளவு சந்தேகம் உனக்கு? அதை ஒருவரும் கண்டுகொள்ள முடியாது. நாமிருவரும் சற்றுநேரம் சந்தோஷமாய்க் கூடியிருக்கலாம் வா; நாம் இருவரும் தனித்தால் இக்குகையே நமக்குச் சுவர்க்கலோகம்" என்றான். அப்போது பாஞ்சாலி "முதலில் போய்ப் பொக்கிஷத்தைப் பார்த்துவருவோம். அப்படியானால்தான் எனக்கு

மனநிம்மதியுண்டாகும். பின் உன் விருப்பப்படி இருவரும் கூடி ஆனந்திக்கலாம்'' என்று சொல்ல, கோவிந்தன் "உன் இஷ்டம்" எனக் கூறி ஒரு விளக்குடன் அவளை அழைத்துப்போனான். சடாலிங்கமும், கணேசனும் மறைந்து அவர்களைப் பின் தொடர்ந்தனர். கோவிந்தனும், பாஞ்சாலியும் பொக்கிஷத்தைப் பார்த்து விட்டுத் திரும்புகையில் சடாலிங்கமும், கணேசனும் திடீரென அவர்களுக்குமுன் தோன்ற, அவர்கள் இருவரும் நடுநடுங்கிப் போயினர். சடாலிங்கம் அவர்களை நோக்கி "ஏ! துரோகிகாள்! 'உப்பிட்டாரை உள்ளளவும் நினை' என்பதை மறந்து அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்ட உங்களுக்கு என்ன தண்டனை விதிக்கலாமென்று நீங்களே கூறுங்கள்'' என்று உக்கிரத்துடன் கேட்டான். பாஞ்சாலி ஒன்றும் பேசாமல் மௌனம் சாதித்தாள். கோவிந்தனோ "எசமானே! அப்படி ஒரு துரோகமும் உங்களுக்கு நாங்கள் செய்யவில்லையே! ராதாவைத் தேடிப் போன நீங்கள் திரும்பிவர எத்தனைநாள் செல்லுமோவென்றும், நீங்கள் குகையிலில்லாத சமயத்தில் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் யாராவது நம் குகையைத் தெரிந்துவந்து பொக்கிஷத்தைப் பறித்துப் போய்விடுவார்களோவென்றும் நினைத்து அதை அப்புறப்படுத்தி இரகசியமும், பந்தோபஸ்துமான இவ்விடத்தில் பதனம் செய்தோம்'' என்று தைரியமாய்க் கூறினான். அதைக் கேட்டதும் சடாலிங்கம் அடங்காக் கோபங்கொண்டு "அடே! நாயே! நீயும், இப்படுநீலியும், கணேசனும் குகையில் பேசிய வார்த்தைகள் யாவும் என் காதில் விழுந்தன என்பதை நினை'' என்று சொல்லி அவன் கன்னங்களில் பளீர் பளீரென அறைந்தான். உடனே கோவிந்தனும், பாஞ்சாலியும் அவன் கால்களில் வீழ்ந்து "நாங்கள் அறியாமற் செய்த பிழையை மன்னிக்க வேண்டும்'' என்று கெஞ்சினர். சடாலிங்கம் அவர்களைக் காலால் உதைத்து "எழுந்து என் கூட வாருங்கள்'' என்று சொல்லி அவர்களை இழுத்துப்போய் ஓர் அறையில் தள்ளி "இவ்வறைதான் இனி உங்களுக்குச் சுவர்க்கலோகம்'' எனக் கூறிக் கதவைப் பூட்டிவிட்டுச் சென்றான்.

பின்பு கணேசனிடம் "கணேசா! நீ ராதாவை எங்கேயோ திருட்டுத்தனமாய்க் கூட்டிப் போய்விட்டதாகப் பாஞ்சாலியும், கோவிந்தனும் என்னிடம் தெரிவித்தனர். ஆனால் நான் அதை நம்பவில்லை. அச்சண்டாளி பாஞ்சாலி ராதாவிடம் சச்சரவு செய்து அவளை வெளியிற் துரத்தியிருக்கவேண்டுமெனவே நினைத்தேன். நான் நினைத்தது சரியாய்ப்போயிற்று. ராதா போனசமயம் நீ எங்கே போயிருந்தாய்?" என்று வினவினான்.

கணேசன் :—ஐயா! பாஞ்சாலியும், ராதாவும் குழந்தையிடம் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் சற்றுநேரம் வெளியிற் சென்றிருந்தேன். நான் திரும்பிவந்ததும் "ராதா என்னிடம் சண்டையிட்டுக்கொண்டு வெளியில் போய்விட்டாள். உடனே போய் அவளைத் தேடி அழைத்துவா" என்று பாஞ்சாலி என்னிடம் தெரிவித்தாள். முன் ஒரு சமயம் பாஞ்சாலியின் கொடுமையால் ராதா ஆற்றோரம் சென்று அழுது கொண்டிருந்தமையால், இப்பொழுதும் அவ்விதமே நடந்திருக்கக்கூடுமென ஐயுற்று உடனே ராதாவைத் தேடிப்போனேன். ஆற்றுப்பக்கம் அவள் காணப்படவில்லை. பின் தூர இடங்களிலும் அலைந்து பார்த்தேன். எங்கும் அவள் தென்படவில்லை. ஆதலால் கோவிந்தனையும், பாஞ்சாலியையும் சந்தேகித்து அவர்கள் நடவடிக்கைகளைக் கவனிக்க, திரும்பிவந்து குகைக்குப் பக்கம் மறைந்துநின்றேன். பின் நடைபெற்றதை நீங்களே அறிவீர்கள்.

சடாலிங்கம் :—என் மகளைத் தேடிச்சென்ற மற்றவர்களும் எவ்விதத் தகவலும் கொண்டு வரவில்லை. என் அருமைக் குழந்தைக்கு என்ன நேரிட்டதோ? குகைக்குத் திரும்பிவர வழி தெரியாமல் எங்கே நின்று திகைக்கிறாளோ? பட்டினியும், பசியுமாய் வருந்துகிறாளோ? துஷ்ட மிருகங்களுக்கிரையானாளோ? பாதகராகிய கோவிந்தனும், பாஞ்சாலியும் சேர்ந்து அவளைக் கொலைதான் செய்துவிட்டார்களோ? இனி என் மகளை எங்கே தேடிச் செல்வேன்? எப்போ பார்ப்பேன்? இது என் துஷ்கிருத்தியங்களுக்கு தெய்வம் இட்ட தண்டனையோ? என் உத்தம பத்தினி

யாகிய பகவதியைத்தான் இழந்தேன்! குணசீலியாகிய என் மகள் ராதாவையும் இழந்தேனே! இனிமேல் நான் உயிரோடிருந்து பயனென்ன?—என்றழுது புலம்பினன்.

போலீஸ் சிறையில் அடைபட்டிருந்த சர்வோத்தமனைச் சந்திக்கச் சுகந்தியுடன் நந்தனூர்குடிக்குச் சென்ற சாரதா, நேரே தஞ்சனூருக்குத் திரும்பிச் சர்வோத்தமனுடைய பெட்டியிலிருந்து அவன் அன்னையின் லிகிதத்தை எடுத்து வாசித்தாள். பின் தன் தாய் சுமுகியிடம் சென்று விஷயங்களைத் தெரிவித்து, சடாலிங்கத்திடமிருக்கும் காந்தாரியின் சீட்டைப் பெறுவதற்கு ஆரம்பூ மலைக்குத் தன்னுடன் யாரைக் கூட்டிப்போவதென ஆலோசிக்கலானாள். அச்சமயம் தற்செயலாய்ச் சாம்பசிவப்பாரதேசி அங்கு வரவும் அவனையும், சுகந்தியையும் தனக்கு உதவியாகக் கூட்டிக்கொண்டு சடாலிங்கத்தின் இருப்பிடத்திற்குப் புறப்பட்டாள். அவ்விடம் சென்று தேனாற்றின் ஓரம் மாலை மயங்கும் வரை அலைந்தும் சடாலிங்கத்தின் குகை தென்படவில்லை. இருளும் சூழ்ந்தது. மிகவும் அலுத்துப்போன அம்மூவரும் அவ்வாற்றோரமே அவ்விரவைக் கழித்தனர். மறுநாள் அதிகாலையில் சாரதா தன் காலைக் கடன்களை முடிக்கப்போன இடத்திற்குச் சமீபமாய் யாரோ ஒரு பெண் வெகு இனிமையாய் மிகுந்த துயரத்தோடு பாடிய சப்தம் அவள் செவிகளில் விழுந்தது. உடனே அவள் சாம்பசிவனையும், சுகந்தியையும் அழைத்து அத்தொனி வந்த திக்கை நோக்கிச் சென்றாள். இடை மறித்திருந்த முட்புதர்களை வெகு கஷ்டத்துடன் கடந்து கொஞ்சத் தூரம் போகவும் பெருங் கற்கள் கொண்டு பலமாய்க் கட்டப்பட்ட ஒரு சிறிய கட்டடம் ஒரு குன்றின் அடியில் காணப்பட்டது. அதற்குள்ளிருந்து ஒரு பெண் அங்கலாய்த்துப் பாடும் சப்தம் தெளிவாய்த் தொனித்தது. அக்கட்டடத்தின் கதவு பூட்டப்பட்டிருந்தது. சாம்பசிவன் ஒரு கல்லினால் பூட்டை உடைத்துக் கதவைத் திறக்கவும் உள்ளே ஓர் அழகிய மாது காணப்பட்டாள். சாரதா அவளை நோக்கி "அம்மா! நீ யார்?

உனக்கு இத்தண்டனை விதித்தவர் எவர்?" என அன்பாய் வினவ, அவள் தான் சடாலிங்கத்தின் மகள் ராதாவெனவும், முன்தினம் தன் தந்தை வெளியிற் போயிருந்த சமயம் தனது மாற்றாந்தாய் அவ்விதம் தன்னைச் சிறையிட்டாளெனவும் தெரிவித்துத் தன்னை மீட்டதற்காக அவர்களுக்கு நன்றி கூறினாள். அப்பொழுது சாரதா தான் வந்த காரியத்தைக் கடவுள் கைகூடச் செய்ததற்காகப் பகவானை மனத்தில் துதித்து, சர்வோத்தமன் சிறைப்பட்டிருக்கும் விஷயத்தையும், அவனை விடுதலை செய்வதற்காகக் காந்தாரியின் சீட்டைச் சடாலிங்கத்திடமிருந்து பெற்றுப் போக வந்ததையும் அவளிடம் அறிவிக்க, அவள் "அம்மா! நான்தான் சர்வோத்தமரிடம் தூதுபோனவள். சர்வோத்தமரின் அன்னை என்மூலமே காந்தாரியின் சீட்டை நேற்றையதினம் என் தந்தைக்கு அனுப்பினாள். அச்சீட்டு என் தந்தையின் வசம் பதனமாயிருக்கிறது. ஆனால் அவர் வெளியிற் சென்றவர் குகைக்குத் திரும்பிவந்தாரோ? இல்லையோ? எதற்கும் அங்கே செல்லுவோம்" என, சாரதா "அம்மா! உன் தந்தை அவ்விடமில்லாவிட்டால் உன் மாற்றாந்தாய் உனக்கு மறுபடியும் தீங்கிழைக்கத் துணிவாளோ?" என்று கேட்கவும், சாம்பசிவன் "நான் இருக்கும்பொழுது ஒரு ஆபத்தும் நேரிடாது" என்று தைரியம் சொல்லவே, ராதா தான் அடைபட்டிருந்த கட்டடத்தின் பக்கமாயுள்ள ஒரு குன்றின் உச்சியின்மேல் அமைந்து நாலாபக்கங்களிலும் மரங்களாலும், செடிகளாலும் சூழப்பட்டு எவர் கண்ணிற்கும் புலப்படாதிருந்த ஒரு குகைக்கு அம்மூவரையும் அழைத்துச் சென்றாள். தன் மகளைக் காணாது சடாலிங்கம் கணேசனுடன் அங்கலாய்த்துக்கொண்டிருந்தது அச்சமயமே. ராதாவைக் கண்டதும் சடாலிங்கம் ஓடி அவளை வாரி எடுத்து "என் கண்ணே! என்னைத் தவிக்கவிட்டு இதுகாறும் எங்கே போயிருந்தாய்?" என்று ஆவலுடன் கேட்க, ராதா அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு மாக்கு மாக்கென அழுது, அவன் வெளியிற் போயிருந்த சமயம் பாஞ்சாலியும், கோவிந்தனும் அவளிடமிருந்து பொக்கிஷ அறையின் சாவியைப் பலவந்தமாய்ப் பறித்துக்கொண்டு அவளைக் குன்றின் அடியிலிருந்த கற்கட்டடத்

தில் அடைத்ததையும், பின் சாரதா அவளை மீட்டதையும், சாரதா அங்குவந்த காரணத்தையும் விஸ்தாரமாய்த் தெரிவித்தாள். அவை யாவையுங் கேட்ட சடாலிங்கம், சாரதாவை மிகவும் புகழ்ந்து தன் நன்றிப்பெருக்கை வெளியிட்டான். பின் சாரதா சர்வோத்தமனின் கடிதத்தை அவனிடம் அளிக்க அவன் அதை வாசித்ததும் காந்தாரியின் சீட்டை அவளிடம் கொடுத்து "அம்மா! தெய்வம்போல் வந்து என் மகளைக் காப்பாற்றினுய். என் தங்கை மகளையும் காப்பாற்ற முன்வந்தாய். சிறு பெண்ணுகிய உன் பரோபகார சிந்தையையும், மற்றும் மேன்மையான குணங்களையும் பார்க்கப் பார்க்க என் மனத்தில் ஆனந்தம் பொங்கி வழிகிறது. இவ்வுலகிலுள்ள தனவந்தர் யாவரும் உன்னைப்போலிருப்பாராயின் என்னைப்போன்ற ஏழைகள் எவரும் தீயவழியிற் செல்லத்துணியார். இப்பொழுதும் என் மகளையும் உன்னுடன் அழைத்துப்போ. சர்வோத்தமனின் குற்றமின்மையை நிரூபிக்க ஒருவேளை அவள் சாட்சியமும் தேவையாயிருக்கும்" என்று விநயமாய்ச் சொன்னுன். சாரதா அதற்குச் சம்மதித்து ராதாவையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு நந்தனூர்குடிக்குத் திரும்பினுள்.

சாரதா சடாலிங்கத்தின் குகையிலிருந்து நந்தனூர்குடிக்கு வந்ததும் பரதேசி சாம்பசிவனையும், சுகந்தியையும் தஞ்சனூருக்கு அனுப்பிவிட்டு, தன்னுடன் ராதாவைமட்டும் கூட்டிக்கொண்டு நேரே சிவஞான முதலியாரின் மாளிகைக்குச் சென்ருள். முதலியார் அவர்களை அன்புடன் வரவேற்று "நீங்கள் யார்? என்னிடம் வந்த விஷயம் யாது?" என்று வினவினூர்.

சாரதா:—நான் தஞ்சனூரிலிருக்கும் சீமாட்டி கோமளவல்லிக்கு அறிமுகமானவள். உங்கள் தம்பி இராமலிங்க முதலியாரின் மருமகனுன சாந்தசீலரது மிட்டா அந்த அம்மாளின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. அவள் அதிகாரத்திற்குக்கீழ் அந்த மிட்டாவை நீங்கள் போலீஸில் ஒப்புவித்திருக்கும் சர்வோத்தமர் மேல் விசாரணை செய்துவருகிருர். அவரையும் நான் அறிவேன்.

அவர் மிகுந்த நன்னடக்கையுள்ளவர். அவர் உங்கள் படுக்கை அறைக்குக் கொலைக்குற்றம் செய்ய வந்தவரல்லர். அதை நான் உருசுப்படுத்தக்கூடும். அதற்குத் தகுந்த ஆதாரங்கள் என்வச மிருக்கின்றன. அவ்வாதாரங்களினால் உண்மையான குற்றவாளி வெளிப்படுவான். ஆனால் அக்குற்றவாளியைத் தண்டனைக்குள் ளாக்குவதிலும் தானே அத்தண்டனையை அநுபவிப்பது நலமெனக் கருதி, சர்வோத்தமர் அக்குற்றவாளியின் பெயரைப் பகிரங்கப்படுத்த மறுக்கிறார். அதன் காரணமாகவே என்னிட முள்ள ஆதாரங்களையும் எவருக்கும் காட்டக்கூடாதென்றும் விரும்புகிறார். ஆயினும் ஒரு அபராதியைச் சிட்சியாது விட்டுவிட அவசியம் நேர்ந்தாலும், குற்றமில்லாத மற்றொருவனைச் சிட்சிப்பது நியாயத்திற்கு விரோதமாதலால் இது விஷயத்தை உங்களுக்குத் தெரிவிக்கத் துணிந்தேன். எனினும் உண்மைக் குற்றவாளியைத் தண்டியாதிருக்க உங்களுக்குச் சம்மதமில்லையாயின் சர்வோத்தமர் அபராதி அல்லவென நிரூபிக்க நான் விரும்பவில்லை. அதனால் ஒரு நிரபராதி தண்டனைக்குள்ளாக்கப்பட்டா னென்னும் பழிச்சொல் உங்களையே சாரும். இதை உங்களுக்குத் தெரிவிக்கவே நான் வந்தேன்.

சிவஞான முதலியார் :—சர்வோத்தமன் குற்றமற்றவனென எவ்வித சந்தேகமுமின்றி நீ உரூபகாரப்படுத்தக் கூடுமாயின் உண்மைக் குற்றவாளியைத் தண்டியாதுவிட எனக்கு ஆட்சேபனையில்லை. என் வார்த்தையை உறுதியாய் நம்பி உன் ஆதாரங்களைக் காட்டு—என்று சொல்லவும், சாரதா தன்னிடமிருந்த காந்தாரியின் கடிதத்தை அவரிடமளித்தாள். அதில் "நந்தனூர் குடியிலிருக்கும் சமீன்தார் சிவஞான முதலியாரையும், அவர் குழந்தையையும் கொலை செய்தால் ரூபாய் இருபதினாயிரம் ரொக்கமாகக் கொடுக்கச் சம்மதிக்கிறேன். காந்தாரி" என எழுதப் பட்டிருந்தது. முதலியார் அதைப் படித்ததும் உயிரற்றவர்போலானார். சற்றுநேரம் அந்நிலைமையிலிருந்து பின் சாரதாவை நோக்கி "அம்மா! 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' போன்று என் தம்பியின் மனைவியே என் உயிரையும், என் குழந்தையின்

உயிரையும் போக்க நினைத்தாளென இதனால் அறிகிறேன். ஆனால் இவள் கட்டளையை நிறைவேற்ற வந்தவன், சர்வோத்தம னன்றென எப்படி நீ மெய்ப்பிக்கக்கூடும்?" என்று வினவினர். அப்பொழுது சாரதா "ஐயா! அதற்குரிய ஆதாரம் இதோ இருக்கிறது"—என்று சர்வோத்தமனுடைய அன்னையின் கடிதத்தை அவரிடம் அளித்தாள். அதில்,

பிரியமுள்ள சர்வோத்தமனுக்கு

நந்தனூர்குடியிலிருக்கும் சமீன்தார் சிவஞான முதலியாரையும், அவர் குழந்தையையும் கொலை செய்ய உன் தந்தை இன்றிரவு போகிறார். ஆதலால் க்ஷணநேரமும் தாமதியாமல் நீ அங்குச் சென்று அக்கொலை நடவாதபடி தடுக்கவேண்டும். இக்கடிதம் கொண்டுவரும் பெண்மணி மற்ற விபரமனைத்துங் கூறுவாள்.

ஆசீர்வாதம்
உன் சுகத்தைக் கோரும்
அன்பான அன்னை

என வரையப்பட்டிருந்தது.

சிவஞான முதலியார் அதை வாசித்ததும் "தன் தந்தை யானதால்தான் சர்வோத்தமன் அக்கொலையாளியின் பெயரைத் தெரிவிக்கவில்லை. ஆகா! தன் தகப்பன் பரம துஷ்டனாயிருந்தும் அவனைத் தப்புவிக்கத் தன் உயிரையும் பெரிதாயெண்ணாத இம்மக னன்றோ புகழ்ச்சிக்குரியவன். சர்வோத்தமன் அவன் பெயருக் கேற்ப உத்தமனே. என் உயிரையும், என் குழந்தையின் உயிரை யும் காப்பாற்றிய இப்புண்ணியனை நானும், என் வீட்டாரும் என்றும் மறவோம். அம்மா! உன்னுடன் வந்திருக்கும் இப்பெண் யார்? சர்வோத்தமன்மீது இவ்வளவு அக்கரைகொண்ட உன் வரலாறு என்ன?" என்று கேட்க, சாரதா "இவள்தான் சர்வோத்தமரது அன்னையின் சகோதரன் மகள். இவள் மூலமே காந்தாரியின் சதியாலோசனையையும், தன் கணவனின்

தீத்தொழிலையும் சர்வோத்தமரின் அன்னை அவருக்குத் தெரிவித்தாள்" என்று சொல்லித் தான் யாரென்பதையும், சர்வோத்தமன் தனக்குச் செய்த உபகாரங்களையும் தெளிவாய் எடுத்துரைத்தாள். அதைக் கேட்டபின் சிவஞான முதலியார் "சர்வோத்தமன் இனிக் கணநேரமும் சிறையிலிருக்கச் சகியேன். இப்பொழுதே சென்று அவனை விடுதலை செய்து கூட்டிவருவேன்" எனச் சொல்லிப் போலீஸ் கச்சேரிக்குச் சென்று இன்ஸ்பெக்டரிடம் முழு விவரமும் தெரிவித்துச் சர்வோத்தமனை விடுவித்தார். முதலியார் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துப்போக யாவரும் மிகுந்த சந்தோஷமடைந்தனர். பின்பு சாரதா, ராதா, சர்வோத்தமன் மூவரும் சிவஞான முதலியாரிடமும், அவர் மனைவியிடமும் விடைபெற்றுத் தஞ்சனூருக்குத் திரும்பினர். தஞ்சனூரில் சுமுகி, சுகந்தி, கோமளவல்லி, சாம்பசிவன் நால்வரும் விடுதலை பெற்ற சர்வோத்தமனைக் கண்டு ஆனந்தமெய்தினர்

பின்பு சர்வோத்தமன் யாவரையும் நோக்கி "இதுகாறும் என் வரலாற்றை அறியாத உங்களுக்கு, அதை இச்சமயம் தெரிவிப்பது நலமென நினைக்கிறேன். என் தந்தையின் பெயர் வீரப்பன். என் தாயின் பெயர் மீனாட்சி. எனக்கொரு தமையனுமுண்டு. என் தந்தை எத்தகைய தீச்செயலையும் செய்யப் பின்வாங்கார். என் தாயோ சகல நற்குணங்களும் பொருந்தியவள். என் பெற்றோர் நான் பிறக்குமுன் நந்தனூர்குடியில் வசித்தனர். நான் பிறந்தபின் அயல்நாட்டிற்குச் சென்றனர். எனக்கு வயது வர, வர என் தாயின் நற்குணங்களைப் பின்பற்றி என் தந்தையின் துர்க்குணங்களை வெறுத்துவந்தேன். சுயமாய் நடக்கக்கூடிய வயது வந்ததும் என் தந்தையோடு வசிக்க மனமற்று என் தமையனைமட்டும் என்னுடன் அழைத்துக்கொண்டு இந்நாட்

டிற்கு வந்தேன். இங்கு வந்ததும் பிழைப்புக்கொரு வழி தேட என் தமையன் என்னைப் பிரிந்துசென்றான். எங்குச் சென்றானென இதுவரை அறியேன். நான் குமரிபுரத்தில் வசித்து என் சுக துக்கங்களை அப்போதைக்கப்போது என் அன்னைக்கு அறிவித்துவந்தேன். என்ன காரணத்தினாலோ என் பெற்றோர் சில தினங்களுக்குமுன் நந்தனூர்குடிக்குத் திரும்பிவந்திருக்கின்றனர். ஆனால் நான் இன்னும் அவர்களைச் சந்திக்கவில்லை. இப்போதும், என் தந்தையின் துஷ்கிருத்தியங்களினால் எனக்கு நேரிடவிருந்த தண்டனையையும், அவமானத்தையும் தன் சாமர்த்தியத்தாலும், பரோபகார சிந்தையாலும் தவிர்த்த தயாவதியாகிய சாரதாவிற்கு என்ன கைமாறு என்னால் செலுத்தக்கூடும்!" எனக் கூறி முடித்தான்.

"நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை"

அத்தியாயம்—10

கொடுந்துயர் தாங்கிய குணவதி.

" இன்பம தடைந்தகாலை யினிதென மகிழ்ச்சியெய்தார்
துன்பம துற்றபோதுந் துண்ணெனத் துளங்கிச்சோரார்
இன்பமுந் துன்பந்தானு மிவ்வுடற் கியைந்தவென்றே
முன்புறு தொடர்பையோர்வார் முழுவது முணர்ந்தநீரார் "

தன் தம்பி இராமலிங்க முதலியாரின் மகன் லோகானந் தன் வைத்தியசாலையில் நோயுற்றிருக்கிருனெனவும், அவன் தந்தை அவனைக் கவனியாதிருக்கிருரெனவும் கேள்விப்பட்டு சிவஞான முதலியார் அவனைப் பார்க்கச் சென்ருர். தன் பெரிய தந்தையைக் கண்டதும் அவரிடம் லோகானந்தன் தன் விஷய முழுவதையும் அறிவித்துக் கண்ணீர் சிந்திஞன். உற்சாகமாயும், அருமையாயும், கரிசனையாயும் தனக்குப் பணிவிடை செய்யும் தாதியைப் புகழ்ந்து பேசிஞன். அப்பொழுது சிவஞான முதலியார் அவனிடம் அவன் தாய் காந்தாரி தனக்கும், தன் குழந்தைக்கும் விரோதமாய்ச் செய்த சர்ப்பனையைத் தெரிவிக்க லோகானந்தனும், தாதியும் திடுக்கிட்டனர். லோகானந்தன் தன் தாயின் தீயகுணத்தை நினைத்து மனங் குன்றிஞன். அவன் சிவஞான முதலியாரை நோக்கி "பெரியப்பா! என் தாயைத் தாயென அழைக்கவும் வெட்கப்படுகிறேன். இனி அவள் முகத்திலும் விழியேன். அவளால் துரத்தப்பட்ட அருங்குணவதியாகிய என் மனைவி சுமதியை நான் சற்றுப் பெலனடைந்ததும் தேடிக் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்று திரும்பவும் சிறுபிள்ளைபோல் அழுதான். அதைப்பார்த்த சிவஞான முதலியார் "அப்பா! அழாதே. சுமதியைத்தேடி நீ எங்கும் அலைந்து திரிய அவசியமில்லை. அவள் படித்தவளாதலின் எங்கிருந்தாலும் பத்திரிகைகளை வாசியாமலிராள். ஆதலால் பல

பத்திரிகைகளிலும் பிரசுரித்தலே போதுமானது. உயிருடனிருந்தால் எவ்விதமும் வந்து சேருவாள். இப்பொழுதும் உன்னை என்னுடன் அழைத்துப்போகவே இங்கு வந்தேன். இனி வைத்தியர் உன்னை என் வீட்டில் வந்து பார்க்கும்படி அவரிடம் போய் ஏற்பாடு செய்துவருகிறேன்" என்று தாதியைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு சென்றார். தாதியிடம் அவர் "அம்மா! லோகானந்தனின் வார்த்தைகளிலிருந்து நீ ஒரு குணவதியென அறிகிறேன். என் குழந்தையைக் கவனிப்பதற்கு உன்னைப் போல் ஒரு உத்தமி கிடைப்பின் என் மனைவிக்கு மிகவும் உதவியாயிருக்கும். இவ்வைத்தியசாலை வேலையை விட்டு என்னிடம் வேலைக்கு அமர்ந்துகொள்ள உனக்கு விருப்பமா? உன் ஆயுள் உள்ளளவும் என் வீட்டிலிருக்கலாம். நீ கேட்கும் சம்பளம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்று சொல்ல அவளும் சம்மதித்தாள். பின்பு வைத்தியரிடம் கலந்துபேசி லோகானந்தனையும், தாதியையும் அழைத்துக்கொண்டு தன் மாளிகைக்குத் திரும்பினர். பிற்பாடு சற்றும் தாமதியாமல் காணுமற்போன சுமதியைப்பற்றிப் பல பத்திரிகைகளிலும் பிரசுரித்தார்.

தஞ்சனூரில் ஒருநாள் சுமுகி, சுகந்தி, சாரதா மூவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயம் பரதேசி சாம்பசிவன் துக்க முகத்துடன் அவர்கள்முன் தோன்றிச் சுகந்தியை நோக்கி "அம்மா! நேற்றுத் தற்செயலாய் நான் பாம்பன்கோவிலுக்குச் சென்றிருந்தபோது ஒரு விசனகரமான செய்தி கேள்விப்பட்டேன். நீ பூபாலனின் வீட்டிலிருந்து தப்பிவந்தபின் உன் கலியாணத்தை நிறைவேற்றும்பொருட்டு இலட்சுமண முதலியார் அவ்விடம் சென்றாராம். அவர் போனசமயம் பூபாலனும், அவன் ஆட்களும் கயிற்றினல் பிணிக்கப்பட்டிருப்பதைக் கண்டாராம். சடாலிங்கம் தன் கூட்டாளிகளுடன் திடீரென வந்து தன்னையும் தன் ஆட்களையும் கட்டிவிட்டு உன்னைப் பலவந்தமாய்க் கொண்டு போய் விட்டதாகப் பூபாலன் அவரிடம் தெரிவித்தானம். அதை அறிந்ததும் அவர் சடாலிங்கத்திடமிருந்து உன்னை மீட்டுவர அவன் இருப்பிடத்திற்குத் தன் சிப்பந்திகள் சிலருடன் போனு

ராம். போனவர் இன்னும் திரும்பிவரவில்லையாம். ஒருகால் சடாலிங்கம் அவருக்கு ஏதாவது தீங்கிழைத்திருப்பானோவென அவர் மாளிகையிலுள்ள பணியாட்கள் சந்தேகிக்கிறார்கள்" என்று தெரிவிக்கவும் சுமுகியின் முகம் மிகுந்த சஞ்சலத்தைத் தோற்றுவித்தது. சுகந்தியும், சாரதாவும் மிகவும் துயரமுற்றனர். அப்பொழுது சுமுகி சாரதாவை நோக்கி "குழந்தாய்! நீ உடனே சடாலிங்கத்திடம் சென்று சுகந்தியின் வளர்ப்புத் தந்தையை மீட்டுவரவேண்டும். அவன் உன் வேண்டுகோளை ஒருகாலும் மறுக்கான்" எனச் சொல்லவும் சாரதா சந்தோஷத்துடன் புறப்பட்டாள். சுகந்தியும், சாம்பசிவனும் அவளுக்குத் துணையாகச் சென்றனர். அவர்கள் சடாலிங்கத்தின் குகையை அடைந்ததும் அவனும், ராதாவும் அவர்களை வெகு அருமையாய் வரவேற்று, உபசரித்தனர். சாரதா சடாலிங்கத்தை நோக்கி "சமீன்தார் இலட்சுமண முதலியார் இவ்விடம் வந்தாரா?" என விசாரித்தாள்.

சடாலிங்கம் :—ஆம். அவரை நான் சிறையில் வைத்திருக்கிறேன். ஆயினும் அவருக்கு எவ்வித குறைவும் வைக்கவில்லை. சுயேச்சை ஒன்றைத்தவிர மற்ற எல்லா வசதிகளும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனம்மா நீ அவரைப்பற்றி விசாரிக்கிறாய்?

சாரதா :—என்னோடு வந்திருக்கும் இந்த அம்மாள் இலட்சுமணமுதலியாரின் சுவிகார புத்திரி; என்னுடைய ஆப்த சிநேகிதி. ஆதலால் அவரைத் தேடிவந்தோம்.

சடாலிங்கம் :—இப்பெண்மணி சுகந்தி அம்மாளா? முன் இவ்வம்மணி உன்னுடன் இங்கு வந்திருந்தபொழுது இதை அறிந்திருப்பேனாயின் இலட்சுமண முதலியாரைச் சிறைப்படுத்த நேர்ந்திருக்காதே! அம்மா! என்னைப் பாதுகாக்கும் பொருட்டே அவரைச் சிறையிலிட்டேன். ஆதலால் நான் அறியாமற் செய்த இப்பிழையைப் பொறுத்தருளல்வேண்டும். நீங்கள் என் மகளைத் தப்புவித்துப்போனபின் ஒருநாள் நான் என் குகைக்கு வெளியே

உலாவிக்கொண்டிருக்கும்போது அவர் தன் ஆட்களுடன் வந்து என்னிடம் "சடாலிங்கத்தின் இருப்பிடம் உனக்குத் தெரியுமா ?" எனக் கேட்டார். "நானே சடாலிங்கம்" என நான் தெரிவிக்க அவர் "நீ என் தத்தபுத்திரி சுகந்தியைப் பூபாலனிடமிருந்து பலவந்தமாய்க் கொண்டுவந்துவிட்டதாக அறிகிறேன். ஆதலால் அவளைத் தேடி வந்தேன்" என்றார். "பூபாலனிடமிருந்து எப்பெண்மணியையும் நான் கவர்ந்து வரவில்லை. அத்துஷ்டப் பயல் உங்களிடம் பொய்யுரைத்திருக்கிறான்" என நான் பதிலளிக்க, அவர் "பூபாலன் ஒரு மதிப்புள்ள மிட்டாதாரனாயிருந்தும் அவரைத் துஷ்டப்பயல் என்று கூறத் துணிவுகொண்ட நீயே பொய்யுரைக்கிறாயென்று நினைக்கிறேன். மயிலே, மயிலே இறகுபோடு என்றால் போடுமா ? உன்னைத் தண்டித்தால்தான் உண்மை கூறுவாய்போலும்" என்று சீறினார். "ஐயா ! வீணாய் என்னோடு மனஸ்தாபம் செய்யவேண்டாம். உங்கள் சுவிகாரப் புத்திரி என்னிடமில்லை. தயவு செய்து இவ்விடம் விட்டுச் செல்லுங்கள்" என்று நான் சொல்ல அவர் அதைச் சட்டைசெய்யாது தன் ஆட்களை ஏவி என்னைப் பிடித்துக் கட்டும்படி ஆக்ஞாபித்தார். அப்பொழுது நான் அபாயத்தைக் குறிப்பிடும் ஒரு விதச் சீக்கல் அடிக்கவே என் ஆட்கள் ஓடிவந்து அவரையும், அவரது சிப்பந்திகளையும் பிடித்துக்கொண்டனர். அப்புறம் அவர்களை விடுவித்தால் அது எனக்கும், என் ஆட்களுக்கும் ஆபத்தாக முடியுமெனக் கருதியே அவர்கள் யாவரையும் சிறைசெய்தேன். இப்பொழுது அவர் இருக்கும் இடத்திற்குப் போவோம் வாருங்கள்—எனச் சொல்லி அவர்களை அழைத்துப்போனான். இலட்சுமண முதலியார் இருந்த அறை இரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டு வெகு அலங்காரமாயிருந்தது. அவர் ஒரு சாய்வான நாற்காலியில் மிகுந்த கவலையுடன் அமர்ந்திருந்தார். சுகந்தியைக் கண்டதும் அவர் ஆச்சரியமுற்று ஆவலுடன் அவள் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு "அம்மா ! நீ எப்படி இங்கு வந்தாய் ?" எனக் கேட்க, அவள் தான் அவரை விட்டுப் பிரிந்தது முதல் நடந்த எல்லாச் சமாச்சாரங்களையும் விவரமாய்க் கூறவும் அவர் "சுகந்தி ! உன் மனப்

படி நான் நடந்திருந்தால் நாமிருவரும் இவ்வளவு துன்பத்திற் குள்ளாகி யிருக்கமாட்டோமே! இனி உன் இஷ்டத்திற்கு விரோதமாய் நான் எதையும் செய்யேன்" என்று சமாதானப் படுத்தினர். அப்புறம் இலட்சுமண முதலியார் சாரதாவையும், சாம்பசிவனேயும் அளவிறந்த நன்றியுடன் புகழ்ந்து பின் சடாலிங் கத்தை நோக்கி "அப்பா சடாலிங்கம்! உண்மையை அறியாது நான் உன்னை மனம் நோகச் செய்ததற்காக மிகவும் விசனமுறு கிறேன். நீ இப்பொழுது நடத்தும் தொழிலைவிட்டு முற்றும் நல்வழியில் உன் காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். உனக்குச் சம்மதமானல் உன்னை என் மெய்க்காவலாளனுகவும், ராதாவைச் சுகந்திக்குத் தோழியாகவும் நியமித்துக்கொள்ளுகிறேன்" என் ருர். அதற்குச் சடாலிங்கம் "ஐயா! தங்களைப்போலொத்த குணவந்தர் எனக்கு எஜமானனுய்க் கிடைப்பது அரிதே! எனினும் நான் நகரில் தலைகாட்டினல் அக்கணமே என் உயிரை வாங்க இராமலிங்க முதலியார் காத்துக்கொண்டிருக்கிருர். அது கார ணங்கொண்டே நான் தலை மறைவாயிருந்து அவரைப்போல் துர்க்குணம் படைத்தவர்களை மட்டும் கொள்ளையடித்து அவர்கள் கொட்டத்தை அடக்கிவருகிறேன்" எனப் பதிலளித்தான். அப்பொழுது சாரதா "இராமலிங்க முதலியாரால் உமக்கு எவ்விதத் தீங்கும் நேரிடாதபடி பார்த்துக்கொண்டால் சமீன்தாரவர்கள் சொல்லியபடி நடக்க விருப்பந்தானு?" எனக் கேட்க, அவன் "அப்படியே செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்ருன். உடனே சாரதா இலட்சுமண முதலியாரிடம் காந்தாரி வீரப்ப னுக்குக் கொடுத்த சீட்டை அளித்து "ஐயா! இதன் மூலம் தாங்கள் இராமலிங்க முதலியாரை இனிச் சடாலிங்கம் விஷயத் தில் தலையிடாதிருக்கச் செய்யலாமென நினைக்கிறேன்" எனச் சொல்ல, அவர் அச்சீட்டை வாசித்ததும் "காந்தாரி இத்தகைய பாமசண்டாளியா? ஆகா! இதைக்கொண்டு இராமலிங்க முதலி யாரை நம் மனப்படி நடக்கச் செய்யலாம். சடாலிங்கம்! இனி மேல் நீ அவருக்குப் பயப்படவேண்டியதில்லை. என்னுடன் தைரியமாய் வா" என்று கூற அவனும் அவர் விருப்பத்திற் கிணங்கினன். பின் சடாலிங்கம் தான் சேர்த்துவைத்திருந்த

ஆஸ்திகள் முழுவதையும் தன் கூட்டாளிகள் யாவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை அவரவர் விரும்பிய இடத்திற்குப் போகும்படி கேட்டுக்கொண்டான். அப்பொழுது கணேசன் சடாலிங்கத்தைப் பார்த்து "ஐயா! நீர் எனக்களிக்கும் இப்பங்கு நான் சம்பாத்தியம் செய்ததல்லவாதலால் இதை மற்ற வர்களுக்கே கொடுத்துவிட விரும்புகிறேன்" என, சடாலிங்கம் "அப்பா! கணேசா! இனி நீ எங்குப் போவாய்? ஜீவனத்திற்கு என் செய்வாய்?" என்று அன்புடன் கேட்டான். அதற்குக் கணேசன் "என் கதி எப்படியாயினும் இப்பொருளை அநுபவிக்க என் மனம் இடந்தரவில்லை. இதுவரை காப்பாற்றிய தெய்வம் இனிமேலும் என்னைக் காப்பாற்றும்" என்று கண்ணீருடன் பதிலளித்தான். அப்பொழுது இலட்சுமண முதலியார் சடாலிங் கத்தைப்பார்த்து "இவ்வாலிபன் யார்?" என வினவ, அவன் "இவனும் என்னைப்போல் செல்வந்தர்களிடத்தில் துன்பப்பட்ட வன். பிழைப்புக்காக என்னை அண்டியிருப்பினும் நான் செய்து வரும் தொழிலில் அவன் சேர விரும்பாமல் என் குகைக்குக் காவலாளியாக மட்டும் இருந்து என்னிடம் சம்பளம் பெற்று வந்தான்" என விடை கொடுத்தான். அதைக் கேட்ட சமீன் தார் கணேசன்மீது மனமுருகி அவனை நோக்கி "அப்பா! நீயும் என்னுடன் வா. உனக்கும் நல்ல பதவி அளிப்பேன்" என, அவனும் சம்மதித்தான். சடாலிங்கத்தின் மற்ற ஆட்கள் விடை பெற்றுப் போனபின் சிறையிலிருந்த பாஞ்சாலியையும், கோவிந் தனையும் விடுதலை செய்து அனுப்பிவிடும்படி ராதா தன் தகப்பனை வேண்ட அவன் அவ்விதமே செய்தான். பின்னர் இலட்சுமண முதலியார் யாவருடனும் பாம்பன்கோவிலுக்குத் திரும்பினார். அங்கே சாரதாவும், சாம்பசிவனும் இரண்டொருநாள் தங்கிப் பின் தஞ்சனூருக்குப் புறப்படும் சமயம் சுகந்தி இலட்சுமண முதலியா ரிடம் "அப்பா! நானும் சாரதாவுடன் சென்று அவள் அன்னை யிடம் விடைபெற்று வருகிறேன்" என்று சொல்ல, அவர் சம்ம தித்து அவளையும், ராதாவையும் சாரதாவுடன் அனுப்பினார் சுகந்தியும், ராதாவும் சாரதாவின் தாய் சுமுகியுடன் சில தினங்

கள் தங்கிப் பாம்பன்கோவிலுக்குத் திரும்பினர். புஷ்கரன் பாம்பன் கோவிலுக்கு வந்தால் வந்ததும் அவனைத் தன்னிடம் உடனே அழைத்து வரும்படி சுமுகி சுகந்தியைக் கேட்டுக் கொண்டாள்.

சர்வோத்தமன் விடுதலை செய்யப்பட்டுத் தஞ்சனூர் சேர்ந்தானென்றறிந்து வீரப்பனும், அவன் மனைவி மீனாட்சியும் சந்தோஷமெய்தினர். இனித் தாங்கள் நந்தனூர்குடியில் வசிப்பது உசிதமன்றென்றும், முன்போல் அயல் நாட்டிற்குப் போய் விடுவதே நலமென்றும், இனித் தீயவழியைத் தவிர்த்து நல்வழியிற் சீவனம் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தனர். அவ்விதம் அயல்நாடு செல்லுமுன் சர்வோத்தமனைச் சந்தித்துத் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்க விரும்பினர். அவனை அழைத்துவா யாரை அனுப்புவதென்று ஆலோசித்தனர். அச்சமயம் சர்வோத்தமனே அவர்கள்முன் வந்து நின்றான். அவனைக் கண்டதும் அவர்கள் ஆச்சரியமுற்றனர். தன்னை அவன் காட்டிக்கொடாதததற்காக வீரப்பன் அவனை மிகவும் புகழ்ந்து தானும், தன் மனைவியும் உறுதிகொண்டிருக்கும் விஷயங்களை அவனுக்கு அறிவித்தான்.

சர்வோத்தமன்:—சிவஞான முதலியாரால் இனிமேல் உங்களுக்கு ஒரு தீங்கும் விளையாது. மேலும் நீங்கள் யாரெனவும், உங்கள் இருப்பிடம் யாதெனவும் அவர் அறியார். ஆதலால் நீங்கள் அயல்நாடு செல்ல அவசியமில்லை; இங்கேயே இருக்கலாம். நான் உங்களுக்கு உதவி செய்வேன்.

வீரப்பன்:—நீ சொல்வது சரியே. எனினும் ஒருகால் அவர் என்னைத் தெரிந்துகொண்டால் எனக்கு ஆபத்து இல்லையேயாயினும் என் மானம் போய்விடுமல்லவா? நான் அவ்வவமானத்தைச் சகித்துக்கொண்டாலும் உன் அன்னை அதைச் சகியாது உயிர் துறப்பாளென்பது திண்ணம். ஆதலால் அயல்நாடு போவதே நலம். இப்போதும் இதுகாறும் நீ அறியாத ஒரு விஷயத்தை உனக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். உனக்கு

ஒரு தமக்கையும் உண்டு. அவள் குமரிபுரத்திலிருக்கிருள். மற்ற விவரம் அவள் முன்னிலையில் சொல்லுகிறேன். இப்பொழுதே அங்குச் செல்வோம்—எனச் சொல்லிச் சர்வோத்தமனையும், மீனுட்சியையும் அழைத்துக்கொண்டு குமரிபுரம் புறப்பட்டான்.

சர்வோத்தமன் தனக்கு ஒரு தமக்கை குமரிபுரத்திலிருக்கிருளெனக் கேள்வியுற்றதும், ஒருங்கே ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனன். தான் குமரிபுரத்திலிருந்த காலத்தில் அதை அறிந்திருந்தால் தன் தமக்கையுடன் கூடித் தன் காலத்தை எத்தகைய மகிழ்வுடன் கழித்திருக்கலாமென நினைத்தனன். தன் உடன் பிறந்தாளைச் சந்திக்க இப்பொழுதாயினும் சமயம் வாய்த்ததே யெனப் புளகாங்கிதங் கொண்டனன். அவளைப் பார்க்குமுன்னரே அவள் வரலாற்றை அறிய ஆவல் கொண்டானேயாயினும் பொறுமையுடன் சென்றனர்.

குமரிபுரத்தைச் சேர்ந்ததும் மூவரும் முன் தாசில்தாராயிருந்து இப்போது டிப்டி கலெக்டர் உத்தியோகம் வகித்துவரும் சந்திரகாந்தனின் பங்களாவிற்கேகினர். அவர்கள் போனசமயம் சந்திரகாந்தனும், அவன் மனைவி சுசீலியும் சாவதானமாய்ப்பேசிக் கொண்டிருந்தனர். அவர்களால் வரவேற்கப்பட்டதும் வீரப்பன் சந்திரகாந்தனை நோக்கி "ஐயா! என்னுடன் வந்திருப்பவர்கள் என் மனைவி மீனுட்சியும், என் மகன் சர்வோத்தனுமாவர். என் பெயர் வீரப்பன். என் சொந்த ஊர் நந்தனூர்குடி. இச்சர்வோத்தமனுக்கு முன் பிறந்த ஒரு ஆண்மகவும், ஒரு பெண்மகவும் எனக்குண்டு. நான் சில வருஷங்களுக்குமுன் என் தரித்திர தசையினிமித்தம் பிழைப்புக்காக இந்நாட்டைவிட்டு அயல்நாடு போக நேர்ந்தது. ஆனுல் அத்தூர நாட்டிற்குப் பெண்குழந்தையைக் கூட்டிப்போக மனமற்று அதைக் காவலூரிலிருந்த கஜபதி முதலியார் என்ற ஒரு தனவந்தர் வீட்டிற்கு எடுத்துப்போய் எவருக்கும் தெரியாது ஓர் அறையில் விட்டுவிட்டுக் கல்நெஞ்சனுய் அயல்நாடு சென்றேன். கஜபதி முதலியார் மிகவும் நற்குணம் வாய்ந்த செல்வந்தரானதால் என் குழந்தையை எவ்விதமும் பராமரிப்பார் என்னும் நம்பிக்கையுடனேயே அவ்விதம் செய்யத்

துணிவுற்றேன். நான் வேறுநாட்டில் வசித்த காலபரியந்தமும் அப்பெண் என்னவானுளென அறியேன். சில நாட்களுக்குமுன் நான் இந்நாட்டிற்கு வந்து விசாரித்ததில் அவள் அத்தனவந்தரால் செல்வமாய் வளர்க்கப்பட்டு உங்களுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டாளென அறிந்தேன். உங்களது தரும பத்தினியாகிய சுசீலியே பாவியாகிய என்னுல் கைவிடப்பட்ட என் அருமை மகளாவாள்"—எனக் கண்ணீர் விட்டான். இவ்வார்த்தைகள் செவியில் விழவும் சுசீலி எழுந்து மீனுட்சியைக் கட்டிக்கொண்டும், வீரப்பனின் கரத்தைப் பிடித்துக்கொண்டும் "இத்தனை வருடங்களுக்குப் பின்பாவது என் பெற்றோரைக் காணும் சிலாக்கியம் பெற்றேனே!" என்று கண்ணீர் பெருக்கினுள். பின்பு அவர்களைவிட்டுச் சர்வோத்தமனை அணைத்துக்கொண்டு "தம்பி! சர்வோத்தமா! நீ எனக்குத் தம்பியாய் வந்தது நான் செய்த தவப்பயனே! உன் அருங் குணங்களை என் மைத்துனி சக்கிதியின் கடிதங்கள் மூலம் வெகுவாய் அறிந்துள்ளேன். நீ குமரிபுரத்திலிருந்த காலத்தில் உன்னைச் சந்திக்கச் சந்தர்ப்பம் வாய்க்காமற்போனது என் துர்அதிஷ்டமே!" என்று கனிவாய் மொழிந்தாள். சர்வோத்தமனே தன் சகோதரியைக் கண்ட மனப்பூரிப்பாலும், அத்தருணம் தன் மனத்திடை எழும்பிய மற்றும் பல எண்ணங்களினுலும் யாதும் பேசச் சக்தியற்றவனுய்த் தேம்பித் தேம்பி அழுதான். பின் சுசீலி வீரப்பனை நோக்கி "அப்பா! மற்ற என் சகோதரனை ஏன் உங்களுடன் அழைத்து வரவில்லை?" எனக் கேட்க அவன் "அம்மா! நாங்கள் அந்நிய நாட்டிலிருக்கும் பொழுதே உன் சகோதரர் இருவரும் இந்நாட்டிற்கு வந்துவிட்டார்கள். வந்ததும் உன் தமையனும், தம்பியும் ஓரிடத்திலிராமல் பிரிந்து பிழைப்பிற்காக வெவ்வேறிடம் சென்ருர்கள். உன் தம்பிமட்டும் தன் சுக துக்கங்களை எங்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருந்ததால் நாங்கள் இவ்விடம் திரும்பியதும் அவன் இருப்பிடத்தை அறிய ஏதுவிருந்தது. உன் தமையன் இருக்குமிடமே தெரியவில்லை" என்ருன். அதைக் கேட்டதும் அவள் மிகவும் வருத்தமுற்ருள். சந்திரகாந்தனும், சர்வோத்தமனைப் புகழ்ந்து வீரப்பனையும், மீனுட்சியையும் அன்புடன்

வினவினுன். பின்பு வீரப்பன் சுசீலியை நோக்கி "அம்மா! நீயும், உன் பர்த்தாவும் எங்களை அன்புடன் ஏற்றுக்கொண்டதற்காக நிரம்பவும் மகிழ்வடைகிறோம். ஆனல் என் வரலாறு முழுவதையும் அறிந்தால் நீயும், உன் கணவனும் என்னை வெறுப்பது திண்ணம். ஆயினும் அதை உங்களுக்கு மறைக்க என் மனம் ஒப்பவில்லை. மேலும் நானும், உன் தாயும் திரும்பவும் அந்நியநாடு செல்ல உத்தேசித்திருப்பதால் அதற்குமுன் உன்னைக் கண்டு உண்மையைத் தெரிவித்து உன் தம்பியை உன்னிடம் ஒப்புவித்துப் போக ஆசித்தே இங்குவந்தேன்" எனச் சொல்லிச் சிவஞான முதலியாரையும், அவரது குழந்தையையும் தான் கொலைபுரிய எத்தனித்த விவரமனைத்தையுங் கூறினுன். அதைக் கேட்டதும் சந்திரகாந்தனும், சுசீலியும் தாங்கொணுத் துயரமுற்ருலும் வீரப்பனையும், மீனுட்சியையும் அந்நியநாட்டிற்குப் போகவேண்டாமென்றும், தஞ்சனூருக்கும், குமரிபுரத்திற்கும் சமீபமாயுள்ள ஒரு ஊரில் அடக்கமாய்க் குடியிருக்கவேண்டுமென்றும் விரும்பினர். அவ்வண்ணமே வீரப்பனும், மீனுட்சியும் அம்மபுரம் என்ற ஒரு குக்கிராமத்தில் போய் வசித்தனர். சர்வோத்தமன் தஞ்சனூருக்குத் திரும்பினன். அவர்கள் போனபின் சுசீலி சந்திரகாந்தனிடம் "நாதா! என் தந்தை தன் ஏழ்மையினல் பணத்தாசைகொண்டு கொலைக்குற்றம் செய்ய எத்தனித்ததினிமித்தம் நானும், என் சகோதரரும் என்றுமழியாப் பழிசொல்லுக்காளானேம். இதனல் தாங்கள் என்னை விவாகஞ் செய்துகொண்டதற்காக வருந்துகிறீர்களோவென ஐயுறுகின்றேன்" எனப் பரிதாபமாய் மொழிந்தாள். அதைக்கேட்ட சந்திரகாந்தன் "சுசீலா! இத்தனைகாலம் நீ என்னுடன் பழகியும் இன்னும் என் குணத்தை அறியாததற்காகவே வருந்துகிறேன். உன் தந்தை உண்மையை உரைத்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேனேயன்றிக் கொஞ்சமும் விசனமுறவில்லை. வருந்தாதே" என்று ஆறுதல்படுத்தினுன்.

"இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்"

அத்தியாயம்—11

வண்டனுக்கேற்ற சண்டன்.

"மூடவனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை முனிதான் கொல்லும்
மடவனை வலியான் கொன்றால் மறலிதான் அவனைக் கொல்லும்
* * * * * * மாதே! இத்தரணியி லுள்ளோர்க் கெல்லா
மடவனை யடித்த கோலும் வலியனை யடிக்குங் கண்டாய்"

சாந்தசீலனின் மிட்டாவை மேல்பார்த்து வந்த சர்வோத்தமனைத் தன் உத்தியோக சம்பந்தமாய்க் கண்டுபேச, மதனபுரி கலால் இன்ஸ்பெக்டர் ஜெகந்நாதன் ஒருநாள் தஞ்சனூருக்குச் சென்றனன். அப்பொழுது ஜெகந்நாதன் பல பேச்சுகளினிடையே, டாக்டர் சுனதியின் தங்கையும், தன் மனைவியுமான பத்மாவதி தன்னைவிட்டுப் பிரிந்திருக்குங் காரணத்தைச் சர்வோத்தமனுக்குத் தற்செயலாய்த் தெரிவித்தான். அத்துடன், ருக்குமணி முன்னரே குணமடைந்து விட்டதாயும், ஆனால் அவள் கணவன் பாலகிருஷ்ணன் வியாதியுற்று இன்னும் நளபுரம் வைத்தியசாலையிலேயே இருப்பதாயும், அது விஷயத்தைப் பாலகிருஷ்ணன் ரங்கூனிலிருக்கும் அவன் தந்தை கேசவ முதலியாருக்காவது ருக்குமணியின் தந்தை சோமு முதலியாருக்காவது நாளது வரை தெரிவிக்கவில்லை யெனவும், ஆதலால் அவ்விருவரும் யாதொரு உதவியுமின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்களெனவும் அறிவித்தனன். இவ்விஷயங்களைச் சர்வோத்தமன் மற்றொருநாள் சுமுகியின் வீட்டிற்குப் போயிருந்தபொழுது அவளுக்குத் தெரிவித்தனன். அதைக் கேட்டதும் சுமுகி அதிகத் துயரமுற்று "ருக்குமணியின் அன்னையை யான் அறிவேன். உடனே நளபுரம் சென்று ருக்குமணியையும், அவள் கணவனையும் பார்த்து வர விரும்புகிறேன்" என்று சொல்லி, அன்றே சாரதாவுடன் நளபுரத்திற்குப் பிரயாணமானாள். அவ்விடஞ் சேர்ந்து பாலகிருஷ்ணனையும், ருக்குமணியையும் வைத்தியசாலையிற் சந்தித்து

வினவியபின் "நீங்கள் இருக்கும் நிலைமையை இதுகாறும் என் உங்கள் பெற்ருேருக்குத் தெரிவிக்கவில்லை?" எனக் கேட்டாள்.

பாலகிருஷ்ணன் :—அம்மா! நான் அவர்களுக்குக் கடிதம் எழுதினுல், ருக்குமணி ஜெகந்நாதனுல் குத்தப்பட்டதையும், நான் அவளுக்குச் செய்த துரோகத்தையும் தெரிவிக்கவேண்டி வருமே யென்று எழுதவில்லை.

சுமுகி :—ஐயா! இவ்விஷயத்தை எத்தனை நாளைக்கு மறைக்கக்கூடும்? போனது போகட்டும். இப்பவும் நீங்கள் இவ்விடத்தைவிட்டு, ருக்குமணியின் தாய்மாமன் காவனூர் கஜபதி முதலியார் வீட்டிற்குப் போவது நலமென நினைக்கிறேன்.

பாலகிருஷ்ணன் :— அவர் மூத்த தங்கையின் மகன் புஷ்கரன் இப்பொழுது எங்கே யிருக்கிருன்? காவனூரிலா? குமரிபுரத்திலா?

சுமுகி :—அவன் இன்னும் அயல் தேசத்திலிருந்து திரும்பி வரவில்லை.

பாலகிருஷ்ணன் :—(மிகுந்த வியப்புற்று) என்ன! அவன் இந்நாட்டிற்கு வந்து பலதினங்களாயிற்றே!

சுமுகி :—(ஆச்சரியமும், கவலையுங் கொண்டு) அப்படியா! அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

பாலகிருஷ்ணன் :—நான் சில வருஷங்களுக்குமுன் அயல் தேசத்திற்குச் சென்றிருந்தபோது அவனேடுதான் தங்கியிருந்தேன். முந்தின வருடம் ரங்கூனுக்குத் திரும்பினேன். நான் இப்போ நளபுரத்திற்கு வந்த பின் அவனிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. அதில் தான் நேரே குமரிபுரத்திற்கு வருவதாயும், தன்னை அங்கே சந்திக்கும்படியாயும் எழுதியிருந்தான். எனக்கு நேரிட்ட அசந்தர்ப்பங்களினுல் அவ்விதம் செய்யமுடியாமற் போயிற்று.

சுமுகி :—புஷ்கரன் திரும்பிய விவரம் இதுவரை என் காதுக் கெட்டவில்லை. நாளை நாம் இவ்விடத்தை விட்டுப் புறப்படுவோம். காலையில் வருகிறேன்—என்று சொல்லி, அவ்வூரிலுள்ள சத்திரத்திற்குச் சென்றாள்.

சுமுகியும், சாரதாவும் சத்திரத்தில் தங்கியிருக்கும் சமயம், ஓர் அழகிய யௌவன மாது ஒரு கைக்குழந்தையுடன் அவ்விடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அம்மாது கிழிந்ததும், அழுக்குமான ஆடைகளை அணிந்து மிகுந்த தரித்திர தசையில் தோன்றினாள். அப்பெண்மணியைச் சற்று தூரத்தில் பார்த்த சாரதா கூர்ந்து கவனிக்க, தான் முன்னர் அவளை எவ்விடத்திலோ கண்டிருப்பதாக நினைத்தாள். அவள் தன் சமீபத்தில் வரவும், டாக்டர் சுனதி என அறிந்து எதிர்கொண்டோடி அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு "அம்மா! நீ இந்நிலைமைக்கு வரவேண்டிய காரணமென்ன?" என்று அன்புடன் வினவினாள். அவளோ வெடுக்கெனத் தன் கைகளை விடுவித்துக்கொண்டு "நீ யார்? என்னை அறிவாயோ? என்னை யாரென நினைத்து அக்கேள்வி கேட்டாய்?" என்று கோபத்துடன் மொழிந்தாள்.

சாரதா :—சில மாதங்களுக்குமுன் குமரிபுரம் கடற்கரை மணலில் நீ பிரசவ வேதனைபட்டுத் தாகமுற்றுக் கதறியபோது, உன்னைச் சந்தித்து உனக்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்ற பெண் நானே. நீ சாந்தசிலரின் மனைவி டாக்டர் சுனதி அல்லவா?

சுனதி :—(இனித் தன்னை மறைக்க எத்தனிப்பது பிசகென நினைத்துக் கோபத்தை அடக்கி) ஆம்; என் தலைவிதி என்னை இப்படி வருத்துகிறது. உனக்கென்ன?—என்று சொல்லிக் கொண்டே சத்திரத்தின் ஒரு மூலையிற்போய் உட்கார்ந்தாள்.

சுனதி இவ்வித எளிமையான ஸ்திதிக்கு வந்தும் தன் துர்க்குணத்தை விடாததைக் கண்டு சாரதா மிகவும் சஞ்சலமடைந்தாள். சுனதி தன்னுடன் பேச விரும்பவில்லையென்றறிந்தும்

எப்படியாவது அவளுக்கு நல்லாலோசனை சொல்லி அவளைச் சீர்ப்படுத்த முயலுவேண்டுமெனத் தீர்மானித்தாள். அதுசமயம் சுனதியின் குழந்தை பசியினுல் அழ ஆரம்பித்தது. அப்பொழுது சுனதி "என் மகனே! நான் என்னடா செய்வேன்? உன் பசியைத் தீர்க்கப் பாலோ, பட்சணமோ வாங்க என் கையில் ஒரு காசும் இல்லையே! பாழுந் தெய்வத்திற்குத்தான் கண் அவிந்து போச்சே! சண்டாளன் உன் தகப்பன் கடலில் விழுந்து இறந்ததாலன்ரோ நாம் இக்கதிக்குள்ளானேம்!" என்று தன் குழந்தையுடன் சேர்ந்து அழுதாள். அப்பொழுது சாரதா கொஞ்சம் பால் எடுத்துப் போய் அக்குழந்தைக்குக் குடிக்கக் கொடுத்தாள். குழந்தை பாலைக்குடித்ததும் அழுகையை நிறுத்திச் சாரதாவுடன் விளையாட ஆரம்பித்தது. சுனதியின் முகமும் பசியினுல் வாட்டமுற்றிருப்பதைச் சமுகி உணர்ந்து அவளுக்கும் கொஞ்சம் பால் கொணர்ந்து பருகக் கொடுத்தாள். அவளும் அதை ஆவலுடன் பெற்று அருந்தினுள்.

பின்பு சாரதா குழந்தையைத் தன் தாயிடம் கொடுத்து விட்டுத் தன் ஆடைகளில் ஒன்றை எடுத்து வந்து சுனதியிடம் கொடுத்து "அக்கா! ஸ்நானஞ் செய்து உன் உடையை மாற்றிக் கொள். போசனத்திற்குப் போகலாம்" என்ருள். சுனதி அவ்விதமே செய்தபின் மூவரும் உணவு அருந்தினுர்கள்.

சிறிது நேரங் கழித்து சாரதா குழந்தையைத் தன் மடி மீது வைத்துத் தாலாட்டிய வண்ணம் சுனதியை நோக்கி "நானும், என் தாயாரும் பரம ஏழைகள். உன்னை நான் முதன் முதலாய்ச் சந்தித்த காலத்தில் நாங்கள் கைப்பாடுபட்டே வயிறு வளர்த்தோம். பின்பு நாங்கள் தெய்வ கடாட்சத்தால் தஞ்சனூர் கோமளவல்லி அம்மாளைச் சந்திக்கநேரிட அந்த அம்மாள் எங்கள் மேல் கிருபை கூர்ந்து யாதொரு குறைவுமின்றி எங்களை ஆதரித்து வருகிருள். வாழ்வும், தாழ்வும் ஒரு நிலையில்லாதவை. கடவுள் நம்பினேரை ஒருகாலும் கைவிடார். நாம் அவரைக்

குறை கூறுவது புத்தியீனமே. திரும்பவும் அவர் உன்னை உன் முன்னிலைமைக்குக் கொண்டுவரச் சித்தங்கொண்டால் அது அவ ரால் முடியாத காரியமா? ஆதலால் மனம் வருந்தாதே" எனத் தேற்றினள்.

சுனதி:—என்னவோ என் விஷயத்தில் மட்டும் அவர் மனம் கல்லாகவேயிருக்கிறது. என் கணவனே இறந்தார். நானே ஒரு தவறிழைத்ததற்காக என் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டேன். என் ஆஸ்திகளோ அவைகளை நான் பதனஞ் செய்து வைத்திருந்த நிதிச்சாலை முறிந்துபோனதால் எனக்கு உதவாமற்போயின. என் தந்தையும், சகோதரனுமோ எனக்கு உதவிபுரிய ஏதுவில்லாதபடி தரித்திரராயினர். என் சகோதரி யிடமாவது சகாயம் பெறலாமென இவ்வூருக்கு வந்தேன். அவளோ தன் கணவனால் துரத்தப்பட்டாளென அறிகிறேன். இனி யாது செய்வதெனத் தெரியாது தயங்கி நிற்கிறேன். என் உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. ஆயினும் இப்பாலகனின் பொருட்டே உயிர் வாழ விரும்புகி றேன்.

சாரதா:—வைத்தியவேலை கற்றிருக்கும் நீ சர்க்கார் பத வியை இழந்துவிட்டபோதிலும் சுதாவில் வைத்தியஞ் செய்து ஜீவனஞ் செய்யலாமே! அவ்விதஞ் செய்யக்கூடாதா?

சுனதி:—ஒரு நோயாளிக்குக் கைப்பிசகாய் விஷமருந்தைக் கொடுத்ததன் நிமித்தம் உத்தியோகத்தை இழந்தேன். அதனால் பயந்து என்னிடம் வைத்தியஞ் செய்து கொள்ள எவரும் வருவ தில்லை.

சாரதா:—அப்படியாயின் தஞ்சனூருக்குச் சென்று உன் கணவரின் மிட்டாவை உனக்கு உரியதாக்கிக் கொள்ளலாகாதா?

சுனதி:—அந்த மிட்டா என் பர்த்தாவின் அத்தை கோமள வல்லி அம்மாளின் அதிகாரத்திற்குட்பட்டிருப்பதை நீ அறிந் திருப்பாய். என் பர்த்தா நான் அவருக்குச் செய்த நிஷ்டூரத்தி

ஞல் சமுத்திரத்தில் வீழ்ந்து உயிர் துறந்தாரென அந்த அம்மாள் கேள்வியுற்று என்மீது மிகுந்த கோபமாயிருக்கிருளென அறிந்தேன். ஆதலால் அங்குச்செல்ல எனக்குத் தைரியம் வரவில்லை.

சாரதா:—அந்த அம்மாள் மிகவும் நல்லவள். ஒருபொழுதும் உன்னைக் கைவிடாள். ஆதலால் இப்பொழுதே நீ எங்களுடன் தஞ்சனூருக்கு வந்து அந்த அம்மாளைப் பார்ப்பது நலமென நினைக்கிறேன்—என்ருள். சுமுகியும் அவ்விதமே சுனதியைத் தன்னுடன் வரும்படி வற்புறுத்தினுள்.

அச்சமயம் பரதேசி சாம்பசிவன் அங்குவர, சாரதா அவனை நமஸ்கரித்து "சுவாமி! வரவேணும்; வரவேணும்; அமருங்கள்" என்ருள். சுனதியும் அவரைச் சேவித்தாள். அவர்களை அங்கே கண்ட சாம்பசிவன் ஆச்சரியமுற்று, அவர்கள் அவ்விடம் வந்த காரணத்தை விசாரிக்க, சுமுகி யாவும் தெரிவித்தாள். அப்பொழுது சாம்பசிவன் சுனதியைப் பார்த்து "அம்மணி! உனக்கு நேரிட்ட இரண்டொரு ஆபத்துகளில் உதவி செய்ய, ஏழைப் பரதேசியாகிய எனக்குக் கிடைத்த சிலாக்கியத்திற்காகப் பகவானைத் துதிக்கிறேன். நீ அடைந்த பல துன்பங்களுக்காக மிகவும் வருந்துகிறேன். இப்பவும் நீ சுமுகி அம்மாளின் வார்த்தைகளைத் தட்டாது, கோமளவல்லி அம்மாளிடம் போய்ச் சேருவதே உசிதம். ஏதோ பரதேசிப்பயல் உளறுகிருனென எண்ணவேண்டாம்" என்று அன்புடன் புத்தி சொன்ஞன். அதற்குச் சுனதி "சுவாமி! தாங்கள் எனக்குச் செய்த பேருபகாரங்களை என்றும் மறவேன். நான் மமதை கொண்டு, சகல நற்குணங்களும் பொருந்திய என் பர்த்தாவை ஆட்டிவைத்ததன் பலனை இப்பொழுது அநுபவிக்கிறேன். நான் குமரிபுரம் கடற்கரை மணலில் பிரசவ வேதனை பட்டபொழுது, இச்சிறு பெண்ணுகிய சாரதா என் துர்க்குணத்தை அன்பாய்க் கண்டித்தும் இதுவரை அதை உணர்ந்தேனில்லை. ஆனல் இப்பொழுதோ அவள் கூறிய நல்வார்த்தைகள் என் இதயத்தில் பசுமரத்தாணிபோற் பதிவுற்றன. இனி நான் என்ன தவஞ் செய்

தாலும், என் கணவர் உயிருடன் திரும்பி வரப்போகிருரா? எவ்வளவு அவரை அதிகாரம் செய்தேனே அவ்வளவு அவருக்குப் பணிவிடை செய்ய எண்ணும் என் விருப்பம் ஈடேறப் போகிறதா? அப்பாக்கியம் பாவியாகிய எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. இப்பாலகனையாவது என் துன்மாதிரியைப் பின் பற்ருது அவரது நன்மாதிரியைப் பின்பற்றும்படி போதித்து வளர்க்கவேண்டுமென்றே உயிர்தரிக்க விரும்புகிறேன். நீங்கள் மூவரும் சொல்லுகிறபடி கோமளவல்லி அம்மாளிடமே போய்ச் சரண்புகுவேன்" என்று சொல்லித் தாரை தாரையாய்க் கண்ணீர் வடித்தாள்.

மறுநாள் சுமுகி பாலகிருஷ்ணனையும், உருக்குமணியையும் சாம்பசிவனுடன் காவலூருக்கு அனுப்பிவிட்டு சுனதியை அழைத்துக்கொண்டு தஞ்சனூருக்குத் திரும்பினுள்.

சுனதியைச் சாரதாவுடன் தன் வீட்டில் விட்டுச் சுமுகி கோமளவல்லியிடம் போய்ச் சுனதியின் விஷயத்தைத் தெரிவிக்க, அவள் சர்வோத்தமனை அனுப்பிச் சுனதியையும், சாரதாவையும் அழைத்துவரச் சொன்னுள். சுனதி வந்ததும் கோமளவல்லி அவளைப் பட்சமாய் வரவேற்று, அவளுடைய குழந்தையை வாரி யெடுத்துப் பன்முறை முத்தமிட்டாள். பின் சுனதியை நோக்கி "அம்மா! சாந்தசீலன் மரித்துப்போனதாகக் கேள்விப்பட்டதும், நீ இவ்விடம் வருவாயென எதிர்பார்த்தேன். அவ்விதம் நீ செய்திருந்தால் நீயும், இச்செல்வப் பாலகனும் இத்துன்பத்திற் குள்ளாகி யிருக்கமாட்டீர்களே! என் பர்த்தா இறந்தபின், நான் எங்கும் வெளியிற் செல்லுவதில்லை. மற்றப்படி நானே உன்னைத் தேடி வந்திருப்பேன்" என அருமையாய்ப் பேசினுள்.

சுனதி:—அம்மா! நான் என் பர்த்தாவிடம் மரியாதை யின்றி நடந்துகொண்ட காரணமாய், அவர் மனங்கசந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டாராதலால், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளமாட்டீர்களென நினைத்தே நான் இங்கு வரவில்லை. இப் பொழுதும் என்னை மன்னித்து என்னையும், என் குழந்தையையும் ஆதரிக்கவேண்டுகிறேன்.

கோமளவல்லி:—நீ அதிகங் கற்றவளாயிருந்தும், சற்குணனாகிய சாந்தசீலனிடம் நடந்துகொண்ட விதம் முற்றும் அருவருக்கத்தக்கதே. ஆயினும், நீ புத்தியில்லாது அவ்விதம் செய்தாயென்று என் மனத்தைச் சாந்தப்படுத்திக்கொண்டேனே தவிர உன்னையும், உன் குழந்தையையும் கைவிட நான் கருதவில்லை. எவ்விதக் கவலையுமின்றி நீ என்னோடிருக்கலாம். இனி யாவது குணமாய் நடந்துகொள்வாயென நம்புகிறேன்—என்று சொல்லி அவளைத் தன்னிடமே நிறுத்திக்கொண்டாள். சுனதியும் கோமளவல்லியின் வார்த்தையைச் சிரமேற்கொண்டு, தன் பழைய துர்க்குணங்களையெல்லாம் ஒழித்து நல்வழிப்பட்டாள்.

சுமுகி தன் இல்லத்திற்குத் திரும்பியதும், புஷ்கரன் அயல் தேசத்திலிருந்து வந்துவிட்டானாவென அறிந்து வரும்படி சர்வோத்தமனைக் குமரிபுரத்திற்கு அனுப்பினாள். அவன் அங்குப் போய் வந்து, புஷ்கரன் வரவில்லையென்றும், அவன் வருவதைப் பற்றிச் சந்திரகாந்தனுக்கு யாதொரு தகவலுமில்லையென்றும் தெரிவித்தான். புஷ்கரன் தான் இந்நாட்டிற்குத் திரும்புவதாய்ப் பாலகிருஷ்ணனுக்குப் பல தினங்களுக்கு முன்னதாகவே கடிதம் வரைந்திருந்தும் அவ்விதம் அவன் சந்திரகாந்தனுக்கு எழுதாததற்கும், இதுவரை வாராததற்கும் காரண மென்னவாயிருக்கக் கூடும் எனப் பலவாறாய் ஆலோசித்து சுமுகி மிகவும் கலக்கமுற்றிருந்தாள்.

சுமுகியின் சிபார்சின்பேரில் உயர்தரக் கலாசாலையில் சங்கீதங் கற்றுக்கொடுக்கப் புதிதாய் நியமனஞ் செய்யப்பட்டிருந்த வீணை உபாத்தினி, ஒரு நாள் சுமுகியின் வீட்டில் சாரதாவிற்கு வீணை கற்பித்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் சர்வோத்தமன் ஜெகந்நாதனுடன் அங்குவந்து, ஜெகந்நாதனைச் சுமுகிக்கு அறிமுகஞ் செய்துவைத்தான். அப்பொழுது சுமுகி ஜெகந்நாதனை நோக்கி "ஐயா! உமது மனைவி பத்மாவதி, பாலகிருஷ்ணனுடன் தவறுதலாய் நடந்துகொண்டது பெரிய தப்பிதமே. ஆயினும் அறிவீனத்தால் அவள் செய்த அப்பிழைக்கு நீர் விதித்த

தண்டனை பெரிது. ஆதலால் அவளைக் கண்டுபிடித்து மன்னித்துத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவதே உமது பெருந் தன்மைக்கு அழகாகும்" என, அவன் "அம்மா! நான் செய்தது தவறென்பதை, அவள் என்னை விட்டுச் சென்ற சில தினங்களுக்குப் பின்னரே உணர்ந்தேன். இப்பொழுதும் அவளைக் கற்பு நிலையில் கண்டு பிடிப்பேனுகில் அவளைச் சேர்த்துக்கொள்ள நிர்ணயித்திருக்கிறேன். ஆனல், அவள் மனமுடைந்து உலகத்தை வெறுத்து மடிந்தனளோ? அல்லது என் மனம் சாந்தப்படுமட்டும் என் கண்ணிற்கு மறைந்திருக்க வெண்ணி உயிர்தரித்திருக்கின்றனளோ? இல்லையெனின் மனக் கடினங் கொண்டு தீயவழியிற் புகுந்து கெட்டலைகின்றனளோ? யாதுந் தெரியாது மலைவுறுகிறேன்" என்றான். சுமுகியும், ஜெகந்நாதனும் பேசிய வார்த்தைகள், அடுத்த அறையிலிருந்த சங்கீத உபாத்தினியின் காதுகளில் விழ, அவள் சட்டென எழுந்து ஜெகந்நாதனின் முகத்தை மறைந்து நின்று நோக்கினுள். நோக்கியதுதான் தாமதம். சாரதாவிடம் "சாரதா! சர்வோத்தமருடன் வந்திருப்பவர் யாரென உனக்குத் தெரியுமா?" என்று வினவினுள்.

சாரதா:—தெரியாது.

சங்கீத உபாத்தினி:—நீ எனக்கொரு உபகாரம் புரிவாயா?

சாரதா:—ஆகா! தடையில்லை.

சங்கீத உபாத்தினி:—(தன் கையிலிருந்த ஒரு மோதிரத்தைக் கழற்றிச் சாரதாவிடமளித்து) இம்மோதிரத்தை ஈடாக வைத்துக்கொண்டு எனக்கு ஐம்பது ரூபாய் கடன் கொடுக்கும்படி சர்வோத்தமரைக் கேட்டுவா. ஆனல், மோதிரத்தைச் சர்வோத்தமரிடங் கொடுக்கும்பொழுது, வந்திருக்கும் அந்நியர் அதைக் கவனிக்கும் வண்ணம் கொடுக்கவேண்டும். அவ்வளவே நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி.

சாரதா:—(ஆச்சரியத்துடன்) நீ இவ்விதம் விரும்புவதற்குக் காரணமென்ன?

சங்கீத உபாத்தினி:—உன் ஆவலைக் கொஞ்சநேரந் தணித்துக்கொள். எல்லாம் சீக்கிரம் அறிவாய்—என, சாரதா அக்கணையாழியுடன் சர்வோத்தமனிடம் போய் "சர்வோத்தமரே! என் சங்கீத உபாத்தினிக்கு ஐம்பது ரூபாய் கடன் வேண்டுமாம். அதைத் திரும்பச் செலுத்தும்வரை இக்கணையாழியை ஈடாக வைத்துக்கொள்ளச் சொல்லுகிருள். நீங்கள் இதை வைத்துக் கொண்டு அவளுக்கு அத்தொகையைக் கடன் கொடுக்க முடியுமா?" என்று அம்மோதிரத்தை ஜெகந்நாதன் பார்க்கச் சர்வோத்தமனிடம் அளித்தாள். அவன் அதைக் கையில் வாங்கிக்கொண்டு "சாரதா! இம்மோதிரம் ஐம்பது ரூபாய் பெறுமா? எனக்கு நகைகளை மதிப்பிடுவதில் அநுபவமே கிடையாது" என்று சொல்ல, அவள் "அதுவிஷயத்தில் எனக்கும் அநுபவமில்லை. மோதிரத்தை உங்கள் நண்பரிடம் காட்டி அதன் மதிப்பைக் கேட்கலாமே!" எனச் சொல்ல, சர்வோத்தமன் அதை ஜெகந்நாதனிடங் காட்டினன். அவன் அதைப் பார்த்ததும் திடுக்கிட்டுச் சாரதாவை நோக்கி "அம்மா! இதை உன்னிடந் தந்த பெண்மணி எங்கே இருக்கிருள்?" எனப் பரபரப்புடன் கேட்டான்.

சாரதா:—அவள் பக்கத்தறையில்தானிருக்கிருள். விஷயம் என்ன?

ஜெகந்நாதன்:—இம்மோதிரம் என்னுடையது. இப்போதே அம்மங்கையைப் பார்க்க விரும்புகிறேன்—என்று சொல்லி ஆத்திரத்துடன் எழவும், மூவரும் சங்கீத உபாத்தினியிருந்த அறைக்குச் சென்றனர். ஜெகந்நாதன் அவளைப் பார்த்ததும் திகைத்துப் பேச நாவெழாமல் பதுமைபோல் நின்றுன். அக்கணமே சங்கீத உபாத்தினி அவன் பாதங்களில் வீழ்ந்து "நாதா! என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளவேண்டுகிறேன்" எனக் கண்ணீர் உதிர்த்தாள். ஜெகந்நாதன் "கண்ணே! பத்மா! என்னிலும் நீ உத்தமி. மன்னிப்புப் பெறவேண்டியவன் நானே! எழுந்திரு" என்று அவளைத் தூக்கி அணைத்துக்கொண்டான். இதைக் கண்ணுற்றதும் மற்ற மூவரும் மிகுந்த ஆச்சரியமுற்றனர். சாரதா

பத்மாவதியின் சரிதையை அறிய மிகுந்த ஆவல் கொண்டவளாய் அவளை நோக்கி "அக்கா! இதுகாறும் உண்மையை எங்களிடம் கூறாது மறைத்து வைத்தனை. உன்னோடு நாங்களும் களிகூரும்படி இப்பொழுதாவது கூறுவாயா?" எனக் கேட்க, பத்மாவதி தன் சரித்திரத்தை ஆதி முதல் அந்தம் வரை விஸ்தரித்துரைத்தாள். அவள் அநுபவித்த பல துன்பங்களையும் அறிந்து ஜெகந்நாதன் மிகவும் மனம் நொந்தான். பின்னர் அவன் தனது விருத்தாந்தத்தையும் விவரமாகத் தெரிவித்து, தான் இடையிற் சீர்குலைந்ததற்காக வெகுவாய்த் துக்கித்தான்.

மதனபுரிக் கிழத்தாசியின் வீட்டிலிருந்து தப்பிவந்தவள் இப் பத்மாவதியே! அவளிடம் தன் கணையாழியை அளித்துச் சென்ற ஆடவன், அவள் கணவன் ஜெகந்நாதனே!

இவ்விருவரின் சரித்திரத்தையும் கேட்ட சாரதா, மனைவியினது பலவீனத்தைக் கணவனும், கணவனது பலவீனத்தை மனைவியும், தெளிவுற உணரும்படி செய்தும், அவர்கள் இருவரையும் கற்புநிலை தவறாது தடுத்த தெய்வத்தின் திருவிளையாடலை நினைத்து, நினைத்து உள்ளம் பூரித்தாள்.

பின்பு பத்மாவதி, சாரதாவின் இருகாங்களையும் பற்றிக் கொண்டு "தங்காய்! நானும், என் பர்த்தாவும் ஒன்றுசேரப் பகவானுக்குப்பின் காரணமாயிருந்தது உன்னுடையவும், உன தன்னையுடையவும் பரோபகார சிந்தையன்றோ! உங்கள் நன்றியை நாங்கள் எவ்விதம் எடுத்துரைக்கக் கூடும் என்று!" கூறி, அவளது கரங்களைத் தன் இரு கண்களிலும் ஒத்திக்கொண்டாள். பின் ஜெகந்நாதனும், பத்மாவதியும் சுமுகிக்கும் தங்கள் நன்றியைச் செலுத்தி யாவரிடமும் விடைபெற்றுச் சென்றனர்.

சடாலிங்கத்தின் மலைக் குகையினின்று பாம்பன்கோவிலுக்குத் திரும்பியதும் இலட்சுமண முதலியார், இராமலிங்க முதலியாரைச் சந்திக்க நந்தனார்குடிக்குச் சென்றார். சடாலிங்கமும் அவருடன் போய் இராமலிங்க முதலியாரின் அறைக்குப்

பக்கமாய் மறைந்து நின்ருன். இலட்சுமண முதலியார் மட்டும் அறைக்குட் செல்ல, இராமலிங்க முதலியார் அவரை மரியாதையாய் வரவேற்ருர். ஒருவரையொருவர் மினவிக்கொண்டபின் இலட்சுமண முதலியார், சடாலிங்கம் தனக்கு அறிமுகமான சம்பவத்தை இராமலிங்க முதலியாருக்குச் சவிஸ்தாரமாய்க் கூறி, அவர் அவன்மேல் கொண்டிருக்கும் குரோதத்தை மறந்து அவனை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ள, அவர் ரௌத்திராகாரம் அடைந்து "என் உயிரைப் போக்க இருமுறை எத்தனித்த அக்கொலைபாதகனையா மன்னிக்கச் சொல்லுகிறீர்கள்? அது ஒருகாலும் முடியாது" என்று பதிலுரைத்தார்.

இலட்சுமண முதலியார்:—சடாலிங்கம் உங்களைக் குத்த நினைத்ததற்கு உங்களுடைய துர்ச்செய்கைதானே காரணம்! ஆதலால் அவன்மேல் வர்மம் வைப்பது நியாயமன்றே!

இராமலிங்க முதலியார்:—காரணம் எதுவாயிருப்பினும் அவன் செய்ய நினைத்தது கொலைக்குற்றமல்லவா? அதை மன்னிப்பது நியாயமாகுமா?

இலட்சுமண முதலியார்:—தன் கணவனின் சகோதரனையும், அவரது குழந்தையையும் கொலைசெய்யச் சதி செய்த உங்கள் மனைவியைப் பார்க்கிலும் அவன் யோக்கியனில்லையா? அதை எண்ணியாவது அவனை மன்னியுங்கள்—என்று சொல்லவும், இராமலிங்க முதலியார் வெலவெலத்துப் போனுர். பின் ஒருவாறு தைரியங்கொண்டு "நீங்கள் சொல்வது எனக்குச் சற்றும் அர்த்தமாகவில்லையே!" என, இலட்சுமண முதலியார் "இச் சீட்டை வாசித்துப்பாருங்கள்" என்று தான் சாரதாவிடமிருந்து பெற்ற காந்தாரியின் சீட்டை இராமலிங்க முதலியாரிடம் கொடுத்தார். அவர் அதை வாசித்தும், வாசியாததுமாய்ச் சட்டெனத் தன் வாயினுள் போடவும், இலட்சுமண முதலியார் யாதுஞ் செய்யத் தோன்ருது "சடாலிங்கம்! சடாலிங்கம்!" என்று கத்திய சமயம், இராமலிங்க முதலியாரின் செய்கையைக் கவனித்துக்கொண்டிருந்த சடாலிங்கம் திடீரென அறைக்குள் பாய்ந்து

அவரது தொண்டையைப் பிடித்துக்கொண்டு "காகிதத்தைக் கக்குகிருயா? அல்லது தொண்டையை நெரித்துவிடட்டுமா?" என்று பயமுறுத்த, இராமலிங்க முதலியார் அருண்டுபோனர். சடாலிங்கம் பிடித்த பிடியில் அவர் இருவிழிகளும் பிதுங்கின. காகிதத்தை உமியாவிட்டால் தன் உயிர் நீங்குவது திண்ணமென உணர்ந்து அவர் அதைத் துப்பவும், இலட்சுமண முதலியார் தீவிரமாய் அதை எடுத்துக்கொண்டார். சடாலிங்கமும் தன் பிடியை விட்டான். இலட்சுமண முதலியார் இராமலிங்க முதலியாரைப் பார்த்து "உம்மைப்போல் துர்க்குணன் இவ்வுலகில் எவனுமிரான். சடாலிங்கத்திற்கு விரோதமாய் நீர் எதாவது கடையெடுத்தால் உமது மனைவிக்கு விரோதமாய் இச்சீட்டு பகிரங்கத்திற்குக் கொண்டுவரப்படுமென்பதைத் திட்டமாய் அறிந்துகொள்ளும். நீர் அவனுக்குச் செய்யும் எத்தீங்கும் எனக்குச் செய்ததாகவே பாவிக்கப்படும்! என் மன உறுதியை நீர் அறியாதவரல்லர். சாக்கிரதை" என்று கூறி, சடாலிங்கத்துடன் வெளியேறினர்.—

"தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று"

அத்தியாயம்—12

ஊழ்வினையால் பிரிந்து துயருற்ற உத்தமர்

"ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டாமற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டாவிடினு முறற்பால
தீண்டா விடுதலரிது"

தஞ்சனூரிலிருந்த பிரகஸ்பதி ஐயர், சாரதா தனக்கு ஆபத்திலுதவிய நன்றியை மறவாது அவள் வீட்டிற்குத் தன் மனைவி மேனகையுடன் அடிக்கடி போய்வருவதுண்டு. அவ்விதம் ஒருநாள் போயிருந்தபொழுது பிரகஸ்பதி ஐயர் சாரதாவை நோக்கி "அம்மா! பல நாட்களாய் என் மனத்தில் ஒரு சந்தேகம் இருக்கிறது. உன்னைப் பார்க்கப் பார்க்க அச்சந்தேகம் அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. உன்னை விசாரித்து அச்சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்ள எத்தனை தடவையோ ஆவல்கொண்டும் அவ்விதம் செய்ய என் மனந் துணியவில்லை" என்றான்.

சாரதா :—அது என்ன விஷயம் ?

பிரகஸ்பதி :—ஒருகால் நான் நினைப்பது தவறாயிருக்குமானால் அதனால் உன் மனம் வருத்தப்படுமோவென அஞ்சுகிறேன்.

சாரதா :— ஒருபோதும் உங்கள்மீது வருத்தங்கொள்ளேன். உங்கள் சந்தேகத்தைத் தெரிவியுங்கள்.

பிரகஸ்பதி :—இலட்சுமண முதலியாரின் சுவிகார புத்திரி சுகந்தி மதனபுரியில் பூபாலனிடம் சிக்கியிருந்தபோது சதாலட்சுமி என்னும் பெயருடன் அவளுக்குத் தாதியாகவந்து அவளை விடுவித்துப்போன புண்ணியவதி நீதானோ ?

சாரதா:—(புன்சிரிப்புடன்) ஆம்.

பிரகஸ்பதி:—சுகந்தி உனக்குச் சொந்தமோ?

சாரதா:—இல்லை. ஆனால் தற்செயலாய் எனக்கு அறிமுகமானாள். இலட்சுமண முதலியார் அவளைப் பூபாலனுக்கு மணஞ்செய்துகொடுக்கத் தீர்மானித்ததும் அவள் அவர் மாளிகையை விட்டு வெளியேறிக் குமரிபுரத்தில் தலைமறைவாயிருந்தாள். அவ்வமயம் நானும் அவ்வூரிலேயே இருந்தேன். ஒருநாள் தெய்வ சங்கற்பத்தால் இருவரும் சந்திக்க நேர்ந்து சினேகிதைகளானோம். நான் அவளுடனிருக்கும்பொழுதுதான் பூபாலன் அவளைத் திடீரெனத் தூக்கிச் சென்றான். ஆதலால் நான் சதாலட்சுமியாக மாறுவேடம் புனைந்து அவளை மீட்டுவந்தேன்.

பிரகஸ்பதி:—அவள் உன்னால் தப்புவிக்கப்பட்டபின் எங்கே போனாள்?

சாரதா:—பூபாலன் அவளைத் திருட்டளவாய்த் தூக்கிச் சென்று பலவந்தமாய் மணம்புரிந்துகொள்ள இலட்சுமண முதலியாரும் உடந்தையாயிருந்ததால் அவள் அவரிடம் போகாமல் என்னோடேயே தங்கியிருந்தாள். பின், அவள் விருப்பத்திற்கு மாறாக நடப்பதில்லையென்று அவர் வாக்களித்ததால், சில தினங்களுக்கு முன்தான் அவர் மாளிகைக்குச் சென்றாள்.

பிரகஸ்பதி:—(வியப்புற்று) அப்படியாயின் நான் உங்கள் இல்லத்தில் வியாதியாயிருந்தபோது அவள் ஏன் என் கண்முன் தென்படவில்லை?

சாரதா:—நீங்கள் பூபாலனின் தோழனென்று நாங்கள் தெரிந்துகொண்டதால் அவள் மறைவாயிருந்தாள்.

பிரகஸ்பதி:—என்னை ஒரு பகைவனின் நண்பனென்று அறிந்தும் என் உயிரைக் காப்பாற்றினாயே! என்னே உன் உதார குணம்! சாரதா! உன் முகத்தில் சில நாட்களாய்ச் சந்தோஷமே காணப்படவில்லையே? ஏன்?

சாரதா :—சுகந்தியின் விஷயமே என்னை வருத்துகிறது. அவள் காதலிக்கும் புஷ்கரன் என்பவர் பல தினங்களுக்கு முன்னதாகவே அயல்நாட்டிலிருந்து திரும்பிவருவதாய்த் தன் சிநேகிதர் ஒருவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால் அக்கடிதப்படி இன்னும் வாராததால் அவருக்கு என்ன நேரிட்டதோவெனக் கவலைகொண்டிருக்கிறோம்.

பிரகஸ்பதி :—அம்மா! என்னை மன்னிக்கவேண்டும். நான் ஒரு முக்கியமான விஷயத்தை உனக்குத் தெரிவிக்க இதுவரை மறந்துபோனேன். புஷ்கார் தான் எழுதியபடியே அநேக நாட்களுக்கு முன்னமே வந்துவிட்டார். சுகந்தி அவரைச் சந்தியாதபடி பூபாலன் அவரைத் தன் மாளிகையில் ஒரு இரகசிய அறையில் அடைத்து வைத்திருக்கிறான் என்று தான் அறிந்த விஷயங்களைத் தெரிவித்து அவன் அடைபட்டிருக்கும் அறை தனக்கும், காந்தருவனுக்கும், பூபாலனுக்கும் மட்டுமே தெரியுமென்றும், மற்றெவரும் அதைக் கண்டுபிடிக்க முடியாதென்றும், அவனை மீட்கவேண்டுமாயின் தந்திரமாகவே வேலை செய்யவேண்டுமென்றும், போலீஸ் அதிகாரிகளைத் துணைகொண்டு அவனை விடுவிக்க முயன்றால் அது வியர்த்தமாகவே முடியுமென்றும் கூறினான். இவ்விவரங்களைக் கேட்டதும், சாரதா பதைபதைத்து உடல் நடுங்கினாள். கண்ணீர் சொரிந்தாள். தன் தாயின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தாள். அவள் திரும்பிவரவும் புஷ்கரனைப்பற்றிப் பிரகஸ்பதி சொல்லிப்போன விஷயத்தைச் சாரதா அறிவிக்க, அவள் அதைச் செவியுற்றதும் வேரற்ற மரம்போல் சாய்ந்து "புஷ்கரா! இக்காதகன் கையிற் சிக்கி வாதைபடவா அயல்நாட்டிலிருந்து இந்நாடு திரும்பினாய்?" என்று தரையில் புரண்டு புரண்டு அழுதாள். பின்பு ஒருவாறு தேறிச் சர்வோத்தமனையும், சாம்பசிவனையும் அழைத்துப் புஷ்கரனைத் தப்புவிப்பது எவ்வாறெனஅவர்களுடனும், சாரதாவுடனும் ஆலோசனை செய்தாள். யாவரும் பலவாறு யோசித்து இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தனர்.

பிரகஸ்பதி மீனுவை விட்டுச் சென்ற சில தினங்களுக்குப் பின் ஒருநாள் பூபாலன் தன் மாளிகையில் தனியேயிருக்கையில் "இவ்வுலகத்தின் சகல இன்பங்களையும் பூரணமாய் அநுபவிக்க விரதம்பூண்டு, பிரகஸ்பதி, காந்தருவன் இருவர்களையும் தோழராகக் கொண்டு, என் மனம்போன மட்டும் சிற்றின்பத்தில் மூழ்கி என் ஆஸ்தி யாவையும் தோற்றேன். அவ்விதம் தோற்றும் என் ஆயுளுள்ளவரையிலும் அவ்வாறே இன்பம் நுகரவேண்டுமென்று நினைத்து ஒரு செல்வவந்தனின் பெண்ணை மனைவியாகக்கொள்ள எண்ணினேன். என் விருப்பத்திற்கிணங்க சமீன்தார் இலட்சுமணமுதலியாரும் தன் வளர்ப்புப் பெண் சுகந்தியை எனக்கு விவாகஞ் செய்துவைக்கச் சம்மதித்தார். அப்பெண்ணோ என்னை விரும்பாது தன் வளர்ப்புத் தந்தையைவிட்டு ஓடினாள். ஆயினும் அவளை எவ்விதமும் கண்டுபிடித்து எனக்கு மணஞ் செய்ய இலட்சுமண முதலியார் விரும்பினார். கடவுள் கடாட்சத்தால் நானே அவளைக் கண்டுபிடித்து என் வீட்டிற்குக் கொண்டுபோய் வைத்திருக்கக் கலியாணதினத்திற்குமுன் என்னிடமிருந்தும் தப்பியோடினள். என்னே! என் துரதிஷ்டம்! இது போதாதென்று என் தோழன் பிரகஸ்பதியும் என்னை விட்டகன்றனன். என் ஆசைநாயகி மீனுவும் நான் கைகெட்டுப்போனவனெனத் தெரிந்து நாளுக்குநாள் என்னைப் புறக்கணித்து வருகின்றனள். இப்போதும் என்னை அவமதித்துச் சென்ற சுகந்தியை எவ்விதமும் திரும்பக் கண்டுபிடித்து மணஞ் செய்துகொண்டால் மட்டுமே நான் அவளது ஏராளமான ஆஸ்திகளை அநுபவிக்க முடியும். அவளோ புஷ்கரனை மணஞ் செய்ய விரும்பி அவன் வரவை எதிர்நோக்கி என் கண்ணிற்கு அகப்படாதபடி மறைந்திருக்கிறாள். நானோ அவ்விருவரும் ஒருவரையொருவர் சந்தியாதபடி அவனை மறைத்துவைத்திருக்கிறேன். இது இறுதியில் எவ்வாறு முடியுமோ! என் கதி என்னவாகுமோ!" என்று சிந்தனையிலாழ்ந்திருந்தான். அச்சமயம் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து "எசமானே! ஒரு பெண்மணி தங்களைப் பார்க்க வருகிறாள்" எனச் சொல்லிப்போகவும் மேல்நாட்டுடை தரித்த ஓர் அழகிய இந்திய மாது பூபாலன்முன் வந்து நின்றாள். பூபாலன் அவளை

மரியாதையாய் வரவேற்று அவள் தன்னிடம் வந்த காரணத்தை வினவ, அவள் "ஐயா! நீர் சுகந்தியை விவாகஞ் செய்ய விரும்புவதையும், அவளோ உம்மை விரும்பாது புஷ்கரரை மணந்து கொள்ள விரும்பி உமக்கு மறைந்திருப்பதையும், நீரோ புஷ்கரரை அவளுக்கு மறைத்து வைத்திருப்பதையும் யான் அறிவேன். புஷ்கரரோ எனக்கு வேண்டியவர். இப்பொழுதும் நீர் என்னிடம் புஷ்கரரை ஒப்புவிக்கச் சம்மதித்தால் நான் உமக்குச் சுகந்தியிருக்குமிடத்தைத் தெரிவிக்கச் சித்தமாயிருக்கிறேன். உம்முடைய விருப்பத்தை அறியவே வந்தேன்" என்றாள்.

பூபாலன்:—பெண்ணே! நீ யார்? புஷ்கரன் என்வசமிருக்கிறானென்று உனக்கு எப்படித் தெரியும்?

பெண்மணி:—நான் யாரெனக் கூறமுடியாது. புஷ்கரர் உம்முடைய மாளிகையின் ஒரு இரகசிய அறையில் அடைக்கப்பட்டிருக்கிறாரென உம்முடைய தோழன் பிரகஸ்பதி ஐயர் மூலம் அறிந்தேன். எனக்குப் புஷ்கரர் வேண்டும். உமக்கு சுகந்தி வேண்டும். ஆதலால் உமது அபிப்பிராயத்தைக் கூறும்.

பூபாலன்:—நான் சுகந்தியைப் பார்க்குமுன் புஷ்கரனை உன்னிடம் ஒப்புவிக்க முடியாது. ஆதலால் முதலில் சுகந்தி இருக்குமிடத்தைத் தெரிவி. நான் அவளைப் பார்த்து வந்தபின் புஷ்கரனை உன்னிடம் ஒப்புவிக்கத் தடையில்லை.

பெண்மணி:—இப்பொழுது நீர் என்னிடம் புஷ்கரரை ஒப்புவிக்காவிட்டாலும் அவரை எனக்குக் காட்டவாவது வேண்டும். அதற்கு நீர் சம்மதித்தால் மட்டும் சுகந்தியிருக்குமிடத்தைத் தெரிவிப்பேன். என்ன சொல்லுகிறீர்?

பூபாலன்:—அப்படியே ஆகட்டும்—என்று சொல்லி புஷ்கரனை அடைத்திருக்கும் இரகசிய அறைக்கு அவளை அழைத்துச் சென்றான். அவர்கள் இருவரும் புஷ்கரன் இருந்த அறைக்குப் போனதும் புஷ்கரன் பூபாலனுடன் வந்த பெண்மணியையே கூர்ந்து பார்த்த வண்ணமாய் நின்றான். அப்பொழுது அப்பெண்மணி

அவனை நோக்கி "ஐயா புஷ்கரரே! நான் யாரென அறியக்கூட வில்லையா? இதைப் பாருங்கள்" எனச் சொல்லி எதையோ எடுப்பதுபோல் தன் ஆடைக்குள்ளிருந்து ஒரு கைத்துப்பாக்கி யைச் சட்டென எடுத்துப் பூபாலனுக்கு நோய்க் காட்டி "பூபாலரே! நீர் சத்தமிட்டாலும், இவ்விடத்தை விட்டு ஓர் அடி எடுத்துவைத்தாலும் அக்கணமே இத்துப்பாக்கிக்கு இரையாவீர்" என்று கூறவும் பூபாலன் திமிர்ப்பிடித்தவன்போலானான். பின் அவள் தான் மறைத்துவைத்திருந்த ஒரு கயிற்றைப் புஷ்கரனிட மளித்துப் பூபாலனின் கரங்களையும், கால்களையும் பிணிக்கும்படி சொல்ல அவன் அவ்விதமே செய்தான். அத்துடன் அவன் வாயில் ஒரு துணிப்பந்தையும் திணித்தான். பின்னர் அப்பெண் மணி பூபாலனை நோக்கி "பூபாலரே! நீர் தேடி அலையும் சுகந்தி இலட்சுமண முதலியாரின் மாளிகையிலிருக்கிறாள். சதாலட்சுமி யெனப் பெயர்கொண்டு உம்மிடத்தில் வேலையிலமர்ந்து உமது மாளிகையினின்று முன் அவளைத் தப்புவித்துப்போனவள் நானே. உம்மைச் சர்க்காரில் ஒப்புவித்துத் தண்டிக்க என்னால் முடியும். ஆயினும் இனியாகிலும் நீர் புத்தியாய் நடந்துகொள்வீ ரென நம்பி அவ்வாறு செய்யாது விடுகிறேன்" எனச் சொல்லிப் புஷ்கரனுடன் வெளியில் வந்தாள். இவ்வரிய செயலைச் செய்த இப்பெண்மணி நமது சாரதாவே. சாரதாவும், பூபாலனும் புஷ்கரன் அறைக்குச் சென்ற சமயம் சாரதாவுடன் வந்து வெளி யில் நின்ற சர்வோத்தமனும், சாம்பசிவப்பரதேசியும் உட்சென்று அங்கிருந்த நான்கு வேலையாட்களையும் தங்களிடமிருந்த துப்பாக் கிகளினால் மிரட்டிக் கயிறுகளினால் பிணித்துவிட்டனர். ஆதலால், புஷ்கரன், சர்வோத்தமன், சாம்பசிவன் இவர்களோடு சாரதா யாதொரு விபத்திற்கும் உட்படாது பூபாலனின் மாளிகையி லிருந்து சுலபமாய் வெளியேறினாள்.

லோகானந்தன் சிறிதுகாலத்தில் பூரண சுகமடைந்ததும், சிவஞான முதலியார் அவனுடைய கடன்கள் யாவையும் தீர்த்தது மன்றி அவனுக்குப் போதுமான பணமும் கொடுத்துத் தனியாய் வேறொரு பங்களாவில் அவனை வசிக்கச் செய்து அவனது

நடவடிக்கைகளைக் கவனித்துவந்தார். லோகானந்தன், தன் பெரிய தந்தை தனக்கு ஏராளமான பணம் கொடுத்திருந்தும் அதைச் செலவிடாமல், தானே வக்கீல் வேலையில் உழைத்துச் சீராய்க் காலங்கழித்து வந்தான். ஆயினும் சுமதி கண்டுபிடிக்கப் படாததால் அவன் மனம் நிம்மதியற்றிருந்தது. அவன் முன் வைத்தியசாலையில் வியாதியாயிருந்தபொழுது அவனுக்குப் பணி விடை செய்த தாதி, சிவஞான முதலியாரிடமிருந்து அவனுக் கொரு கடிதம் கொண்டுவந்தாள். அவள் அதை அவனிடம் கொடுத்து வெளியில் வந்த சமயம் தாசி பிரியவதி தன் எதிரில் வருவதைப் பார்த்தாள். அவள் எங்கு போகிறாளென அறிய விரும்பி அவளுக்குத் தெரியாது மறைந்து நின்று கவனிக்க, அவள் லோகானந்தனின் வீட்டிற்குள் நுழைவதைக் கண்டாள். தானும் ஒளிந்து அவளுக்குப் பின் சென்று அங்கு நடைபெறுவ தென்னவெனக் கவனித்தாள்.

பிரியவதி எவ்வித படாடோபமுமின்றிச் சாதாரண உடையையே தரித்திருந்தாள். அவள்மீது ஆபரணங்களொன் றும் காணப்படவில்லை. ஆயினும் அந்நிலைமையிலும் முன்னிலும் அதிக வசீகரமாகவே தோன்றினாள். அவளைக் கண்டதும் லோகானந்தன் திடுக்கிட்டெழுந்து "பிரியவதி! நீ என்னிடம் வந்த காரணம் என்ன?" என்று வினவ, அவள் அவன் கால் களில் வீழ்ந்து "ஐயா! அறியாமையால் நான் செய்த தவறைத் தாங்கள் மன்னித்தருளல்வேண்டும். என் வீட்டில் தாங்கள் வியாதிப்பட்ட சமயம் என் காரியஸ்தன் சுப்பையனின் துர்ப்புத் திக்குச் செவிகொடுத்து முட்டாள்தனமாய்த் தங்களை வெளியில் அனுப்பினேன். இப்பொழுதோ அச்சண்டாளச் சுப்பையன் எனக்கு விரோதமாய்ப் பல சூழ்ச்சிகளைச் செய்து என் ஆஸ்தி களையெல்லாம் அபகரித்துக்கொண்டான். தங்கவும் வீடின்றித் தவிக்கிறேன். தாங்கள்தான் இச்சமயம் என்னைக் கைதூக்கி ஆதரிக்கவேண்டும்" என்று மன்றாடினாள்.

லோகானந்தன்:—உன் சிநேகத்தை நான் விரும்பாததால் தயவு செய்து இக்கணமே வெளியில் போய்விடு.

பிரியவதி:—தங்கள் திருவாயால் அப்படிச் சொல்லலாமா? நான் இழைத்த ஒரு சிறிய பிழைக்காக இவ்வித பெருந்தண்டனையை அளிக்கலாமா? அடியாளை இவ்வாறு நடத்துவது தங்கள் பெருந்தன்மைக்கு அழகாகுமா? தாங்கள் எவ்விதமும் என்னை க்ஷமித்து ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

லோகானந்தன்:—அது முடியாத காரியம். சீக்கிரம் எழுந்துபோ.

பிரியவதி:—நான் இருக்கும் ஏழ்மை நிலையைக் கண்டும் தங்கள் மனம் இரங்கவில்லையா? நான் ஒரு தாசி வயிற்றில் பிறந்தும் என் கற்பு நிலை தவறாது தங்கள் ஒருவரையே காதலித்துக் களிப்பித்து வந்தேனே! இனி மற்றெவரையும் கைப்பிடிக்க என் மனம் ஒப்பவில்லையே! தாங்கள் என்னை வெறுப்பது உறுதியேயானால் இவ்விடத்திலேயே என் உயிரை மாய்த்துக்கொள்வேனேயன்றி வேறெங்கும் செல்லேன்—என்று அவன் இரு கால்களையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். அத்தகாத செய்கையைக் கண்ணுற்றதும் லோகானந்தன் அதிகக் கோபமடைந்து அவளை உதறித் தள்ளி "நீ உடனே எழுந்து போகாவிட்டால் என் வேலையாளை அழைத்து உன்னைப் பலவந்தமாய் வெளியிற் கொண்டுபோய் விடச்செய்வேன்" என்று கர்ச்சிக்கவும், பிரியவதி சடக்கென எழுந்து நிமிர்ந்து நின்று குரூரமான பார்வையுடன் "லோகானந்தரே! உம்மை இலகுவில் விட்டு விடுவேனென நினையாதேயும். நீர் எனக்கு எழுதிக்கொடுத்திருக்கும் பல கடன் பத்திரங்களையும் நினைத்துப்பாரும். உம்மைப் பழையபடி ஒட்டாண்டியாக்க என்னால் முடியுமென்பதை மறவாதேயும். உமது மனைவியைக் கண்டுபிடித்து அவளுடன் வாழ மனப்பால் குடித்திருக்கிறீர். உம்மை ஒருகாலும் அவ்விதம் வாழவிடேன். அவளை நீர் கண்டுபிடிக்குங் காலத்துச் சற்றுமுன் இங்கு வந்து போன தாசிப்பெண்ணை நீர் வைத்திருக்கிறீரென்று அவளிடம் கோள்மூட்டி உம்மை அவள் வெறுக்குமாறு செய்வேனென்பதை

உறுதியாய் எண்ணும் நான் உம்மை எவ்வளவோ கெஞ்சியும் நீர் எனக்குச் செய்த இவ்வவமானத்திற்குப் பதில் உமக்குச் செய்யாது வாளாவிரேன்—எனச் சொல்லிச் சரேலென வெளிப் போந்தாள். அதுகாறும் வெளியில் காத்துநின்ற சுப்பையனைக் கண்டு, தான் லோகானந்தனிடம் தோல்வியுற்றதைத் தெரிவித் துக்கொண்டிருக்கையில் ஒளிந்துநின்ற தாதி தங்களுக்குச் சற்றுத் தூரத்தில் ஒதுங்கிப் போவதைப் பார்த்தாள். பார்த்ததும் சுப்பையனிடம் "ஐயரே! அதோ போகிறவள்தான் லோகானந் தனை மயக்கியிருக்கிறாள். அவன் என்னை இப்போது வெறுப் பதற்குக் காரணம் இவளே. இவளை நான் ஒழித்துவிட்டாலன்றி அவனை மறுபடியும் வசப்படுத்தமுடியாது. என்ன சொல்லுகி றீர்?" என, அவன் "நீ சொல்வது முற்றிலும் சரியே. சந்திர னும் நமக்கு அநுகூலமாய் மேகத்திற்குள் மறைந்திருக்கிறான். இவ்விருண்ட நேரமே நாம் செய்ய நினைப்பதற்கு ஏற்ற தருணம்" என்று சொல்லவும் இருவரும் விரைந்து போய்த் தாதியைப் பிடித்துக்கொண்டனர். அதி விரைவில் எதிர்பாராது நேரிட்ட இவ்விபத்தால் தாதி மிகவும் பயந்து "ஐயோ!" என்றலறினாள். அதுசமயம் சாரதா சமீபத்திலுள்ள பாட்டைவழியாய் பூபா லனிடமிருந்து தான் விடுவித்த புஷ்கரனுடன் மதனபுரியி லிருந்து தஞ்சனூருக்குப் போய்க்கொண்டிருந்தாள். "ஐயோ" என்ற ஒரு பெண்குரலைக் கேட்டதும் வண்டியை நிறுத்தித் தன்னுடனிருந்த மூன்று ஆடவருடனும் சப்தம் வந்த திக்கை நோக்கித் துரிதமாய்ச் சென்றாள். அத்தருணம் தெய்வாதீன மாய் ஒரு மின்னல் தோன்ற அவ்வெளிச்சத்தின் உதவியால் ஒரு யுவதியை ஒரு ஆடவனும், ஒரு பெண்ணும் பிடித்து இழுத்துப் போவதைக் கண்டு அவர்களை நோக்கி நால்வரும் ஓடினர். மோட்டார்வண்டி வந்ததையும், திடீரென நின்றதையும் அதி லிருந்து சில ஆட்கள் இறங்கித் தங்களுக்கு நேராக ஓடிவரு வதையும் கவனித்த பிரியவதியும், சுப்பையனும் க்ஷணமே தாதியை விட்டு ஓட்டம் பிடித்தனர். சாரதா முன்னோடி தனித்து நின்ற தாதியைப் பார்த்து "அம்மா! பயப்படாதே.

உனக்கென்ன நேரிட்டது? அதோ ஓடிப்போகிறவர்கள் யார்?" என ஆத்திரத்துடன் வினவினுள். அப்பொழுது தாதி விவரம் கூற, சாரதா அவளை அழைத்துப்போய் சிவஞான முதலியார் வீட்டில் விட்டுப் பின் தஞ்சனூருக்குச் சென்ருள்.

இது நடந்த மறுதினம் லோகானந்தன் சிவஞான முதலியாரிடம் சென்று முன்தினம் இரவு தாசி பிரியவதி தன் வீட்டிற்கு வந்ததையும், தன்னை அவள் பயமுறுத்தியதையும் விவரமாய்த் தெரிவித்து இனி எக்காரணங் கொண்டும் தாதியைத் தன் இல்லத்திற்கு அனுப்பாதிருக்க வேண்டிக்கொண்டான். அதைக் கேட்ட சிவஞான முதலியார் அவ்விதமே செய்வதாய்ச் சொல்லி தாசிக்குச் சேரவேண்டிய கடன்களையும் செலுத்தி அவன் கவலையை மாற்றினர்.

குமரிபுரம் டிப்டி கலெக்டர் சந்திரகாந்தனின் அன்னை கற்பகத்திற்கு, பசுபதி முதலியார் என்ற ஒரு சகோதரர் இருந்தார். அவர் காவலூர் கஜபதி முதலியாரின் மூத்த தங்கை சுவர்ணத்தை விவாகஞ் செய்துகொண்டார். கலியாணமான மறுவருடம் சுவர்ணம் ஒரு ஆண்மகவை ஈன்ருள். அக்குழந்தை பிறந்த சில தினங்களில் பசுபதி முதலியார் தேகவியோகமானுர். அவர் காலஞ்சென்ற சில மாதங்களுக்குப்பின் கஜபதி முதலியார் இளம்பிராயத்திலேயே விதவையான தன் தங்கை சுவர்ணத்தைப் பாம்பன்கோவில் சமீன்தார் இலட்சுமண முதலியாருக்கு மறு விவாகம் செய்வித்தார். ஆனுல் தன் தங்கை விதவையென்றும், ஒரு குழந்தைக்குத் தாயென்றும் அவருக்குத் தெரிவித்திலர். இது விவரத்தைச் சுவர்ணமும் தன் கணவனுக்கு அறிவித்திலள். அவள் பசுபதி முதலியாருக்குப் பெற்ற மகன் அவருடைய சகோதரி கற்பகத்தால் வளர்க்கப்பட்டான். அவன் சுமார் பதினெட்டுப் பிராயமானபின் கஜபதி முதலியாரின் செலவில் அயல்தேசத்திற்குப் படிக்கச் சென்றிருந்தான். படிப்பிலும், உத்தியோகத்திலும் அங்கேயே சுமார் பதினைந்து வருடங்களைக் கழித்துப் பின் தன் நாடு திரும்பினுன். இவனே சந்திரகாந்தனின் தங்கை சுகந்தியி

னால் காதலிக்கப்பட்டவனும், பூபாலனால் சிறை செய்யப்பட்டவனுமான புஷ்கரனுவான்.

சாரதா, தான் பூபாலனிடமிருந்து மீட்டுவந்த புஷ்கரனை நோக்கித் தன் இல்லத்திற்கு அழைத்துவந்தாள். புஷ்கரன் சுமுகியைக் கண்டதும் "அம்மா!" என்றோடி அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு தாயைப்பிரிந்த கன்று கதறுவதுபோலக் கதறி அழுதான். அவளும் அவ்வண்ணமே "என் மகனே!" என்று ஏங்கி, ஏங்கி அழுதாள். அதைப் பார்த்த சாரதா, சர்வோத்தமன், சாம்பசிவன் மூவரும் பிரமித்து நின்றனர். சுமுகியும், புஷ்கரனும் அழுது தீர்ந்தபின் புஷ்கரன், தன் தாய் அவள் கணவனின் மாளிகையிலில்லாமல் தனித்து ஒரு சாதாரண வீட்டிலிருப்பதையும், மெலிந்து முகம் வாடி மிகவும் பரிதாபமான நிலைமையிலிருப்பதையும் பார்த்து, "அம்மா! நீ இந்நிலைமையில் இருப்பதற்குக் காரணமென்ன?" என்று ஆத்திரத்துடன் வினவினன்.

சுமுகி:—அப்பா! நீ அயல் தேசத்திற்குப் புறப்பட்ட தினத்தன்று என்னிடம் விடைபெற்றுப்போக வந்தபோது நான் உன்னை ஆர்வத்துடன் அணைத்து இரு கன்னங்களிலும் முத்தமிட்டு வழியனுப்பியது உனக்கு ஞாபகமிருக்கும். மரித்துப்போன என் முதற்கணவரால் நீ ஒரு புத்திரன் எனக்குண்டென்பதை அறியாத என் இரண்டாவது பர்த்தா இலட்சுமண முதலியார் என் செய்கையை மறைந்து நின்று கண்ணுற்று நான் அவரைவிட்டுப் பிறிதொருவனைக் காதலிப்பதாய் நினைத்து நீ வெளியிற் சென்றதும் திடீரென என் முன்னிலையில் கோபாவேசத்துடன் தோன்ற, நான் உன்னைப் பிரிந்த தாங்கொணு வியாகுலத்தாலும், என் கணவர் நான் உன்னை முத்தமிட்டதைக் கண்டுகொண்டே உக்கிரத்துடன் என்னைத் தண்டிக்க வந்திருக்கிருரென்ற பீதியாலும் அவரைப் பார்த்தமாத்திரத்தில் மூர்ச்சித்து விழுந்துவிட்டேன். அதைப்பார்த்த அவர் "உன் வேசித்தனத்தைக் கண்ணாரக் கண்டேன். இந்தக்ஷணமே நீ என்னைவிட்டுப் பிரிந்து கண்காணுவிடம் போய்விடவேண்டும். இல்லையேல்

நான் என் உயிரை மாய்த்துக்கொள்ளுவது திண்ணம். என்னைத் திரும்பச் சந்திக்க எத்தனிப்பதில் யாதொரு பயனுமிராதென் பதை உறுதியாய் நினை" என்று ஒரு சீட்டை எழுதி என் மடியில் வைத்துவிட்டு வேறோரறைக்குட் சென்று கதவை அடைத்துத் தாளிட்டுக்கொண்டார். சிறிது நேரத்தில் தாதியால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்ட நான் அவர் சீட்டை வாசித்ததும் ஆற்றொணு வியாகுலத்துடன் அவ்விடத்தைவிட்டு வெளியேறி சுவர்ணம் என்னும் என் பெயரைச் சுமுகி என மாற்றி உன் வரவை எதிர் நோக்கி அடக்கமாய்ச் சீவித்து வந்தேன். நான் என் கணவரை விட்டுப் பிரிந்த சமயம் எட்டுமாதக் கர்ப்பிணியாயிருந்தேன். அப்பொழுது என் வயிற்றிலிருந்த குழந்தை இப்பொழுது உன்னை என்னிடம் அழைத்துவந்த இச்சாரதாவே! அவளை நானே உன்னிடம் அனுப்பினேனென நீ அறிந்துகொள்ளும்பொருட்டே உன் ஞாபகார்த்தமாக நான் வைத்திருந்த உன் மோதிரத்தை அவள் விரலில் அணிந்தனுப்பினேன்" எனச்சொல்லி முடிக்கவும் புஷ்கரன் சாரதாவை ஆவலுடன் தழுவிக்கொண்டு "என் அருமைத் தங்காய்! உன்னை என் உடன் பிறப்பாகக் கொண்ட என் பாக்கியமே பாக்கியம். நீ அணிந்திருக்கும் என் மோதிரத்தை அங்கேயே கவ்னியாமற்போனேனே!" என்று கூறி அவளைப் பன்முறை முத்தமிட்டான். பின் சாரதா தன் தமையனுக்குச் சர்வோத்தமனையும், சாம்பசிவனையும் அறிமுகப்படுத்த, அவன் அவர்களை அன்புடன் மினவி அவர்களுக்கு நன்றிகூறினன். அதன்பின் சுமுகி தன் மகனிடம் அவன் தன்னைவிட்டுப் பிரிந்தது முதல் நடந்த விஷயங்கள் யாவையும் ஒன்றுவிடாது கூறினுள். அப்பொழுது புஷ்கரன் "அம்மா! உனக்கு நேர்ந்த இச்சங்கடத்தை உடனே என் எனக்குத் தெரிவிக்கவில்லை? தெரிவித்திருந்தால் அப்பொழுதே இந்நாட்டிற்குத் திரும்பிவந்து இலட்சுமண முதலியாரின் சந்தேகத்தை நிவர்த்தித்திருப்பேனே! அம்மான் கஜபதி முதலியாரும், மைத்துனன் சந்திரகாந்தனுங்கூட இவ்விஷயத்தை எனக்கு அறிவித்தார்களில்லையே!" என்று மனம் வருந்தினன். அதற்குச் சுமுகி "தூரதேசத்திலிருந்த உன்

மனத்தை வருத்த மனமில்லாமலே உனக்கு எழுதவில்லை" என்று அவனைச் சாந்தப்படுத்தினாள். பின் புஷ்கரன் "அம்மா! நான் இக்கணமே இலட்சுமண முதலியாரிடம் சென்று யாவும் தெரிவித்து நீ சிறிதும் பழுதற்றவளென ரூபித்து அவரையும், சுகந்தியையும் இங்கே அழைத்துவருகிறேன்" எனச் சொல்லிப் பாம்பன்கோவிலுக்கு அப்பொழுதே பிரயாணமானான்.

"வருத்தான் வருத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"

அத்தியாயம்—13

கடியப்பட்டுக் கரையும் காதலர்.

"சங்குமுழங்குந் தமிழ்நாடன் றன்னைநினைந்த போதெல்லாம்
பொங்குகடலு முறங்காது பொழுதோர்நாளும் விடியாது
திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்றலுறங்குஞ் சிலகாலம்
எங்குமுறங்கு மிராக்காலமென் கண்ணிரண்டு முறங்காவே."

புஷ்கரன் இலட்சுமண முதலியாரின் மாளிகையை அடைந்ததும் அங்கிருந்த ஒரு பணியாளிடம் தான் யாரெனத் தெரிவித்து இலட்சுமண முதலியாரைப் பார்க்க விருப்புவதாய்ச் சொல்ல அவன் முதலியாரிடம் சென்று "எசமானே! சுகந்தி அம்மாள் மணஞ் செய்ய விரும்பும் புஷ்கரர் என்பவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று சொல்லவும் அவர் அவனைத் தன்னிடம் அனுப்பும்படி அவ்வேலையாளுக்கு ஆக்ஞாபித்தார். புஷ்கரன் அவரிடம் செல்லவும் முதலியார் அவனைப் பார்த்தது தான் தோஷம்; சீறி எழுந்து "அடே! என் மனைவியைக் கற்பழித்த சண்டாளனாகிய உன்னையா சுகந்தி காதலிக்கிறாள்? வெளியில் போ நாயே!" என்று ஆக்கிரமித்தார். பக்கத்தறையிலிருந்த சுகந்தி இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் அங்கு ஓடி வந்து பார்க்கத் தன் காதலன் புஷ்கரனைக் கண்டு ஆச்சரியப்பட்டு "அத்தான்! எப்பொழுது வந்தீர்கள்?" என ஆவலுடன் வினவினாள். புஷ்கரனோ அவளுக்கு யாதும் பதிலுரையாமல் தன் இருகாங்களையுங் கூப்பிக் கண்ணீர் தேங்கிய கண்களுடன் இலட்சுமண முதலியாரை நோக்கி "ஐயா! உங்கள் மனைவி என்னைப் பத்துமாதம் சுமந்து பெற்ற என் மாதாவே என அறியீர்களானால் நீங்கள் உங்கள் அருமை மனைவியைப் பிரிந்திருக்கமாட்டீர்கள்" என்று கூறவும், இலட்சுமண முதலியார் திடுக்கிட்டுப் பின்

அமைதியுற்று விஷயத்தைத் தெளிவாய் உரைக்கும்படி ஆத்திரத்துடன் புஷ்கரனைக் கேட்க, அவன் தன் தாய் சுவர்ணம் இலட்சுமண முதலியாரைக் கலியாணஞ் செய்துகொண்ட காலத்திற்கு முன்னுள்ள அவளது முழு வரலாற்றையும் தெரிவித்தான். அதை அறிந்ததும் இலட்சுமண முதலியார் தான் முன்பின் யோசியாமல் பதட்டமாய் நடந்ததற்காக மனஸ்தாபப்பட்டு "என் பிரிய சுவர்ணம் நான் இழைத்த கொடுமையைப் பொறுக்காது எவ்விடம் சென்றனளோ! எங்கு நின்று தவிக்கின்றனளோ! அல்லது வயிற்றிலிருந்த சிசுவுடன் உயிர் துறந்தனளோ!" என்று புலம்பி அழுதார். தன் மனைவியை அநியாயமாய்த் துரத்தியதை நினைத்துப் புலம்பி அழுத இலட்சுமண முதலியாரை நோக்கிப் புஷ்கரன் "ஐயா! இனி கடந்த காரியத்தை நினைத்து அங்கலாய்ப்பதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. என் தாயும், தங்கையும்—சுமுகி, சாரதா எனப் பெயர் கொண்டு தஞ்சனூரில் நலத்துடன் வசிக்கிறார்கள்" என்று சொல்லும்பொழுதே இலட்சுமண முதலியாரும், சுகந்தியும் ஏகோபித்து "சுமுகியும், சாரதாவுமா?" என்று ஆச்சரியக் கூச்சலிட்டனர். புஷ்கரன் "ஆம்" என்று சொல்லி, தான் அயல்நாட்டிலிருந்து திரும்பியது முதல் அதுவரை நடைபெற்ற யாவற்றையும் தெரிவித்தான். உடனே இலட்சுமண முதலியாரும், சுகந்தியும் புஷ்கரனுடன் தஞ்சனூருக்குப் புறப்பட்டனர்.

சுமுகியின் வீட்டை அடைந்ததும் இலட்சுமண முதலியார் ஓடோடியும் போய் சுமுகியைக் கட்டி அணைத்துக்கொண்டு "சுவர்ணம்! என்னை மன்னிப்பாயா?" என்று மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்தார். "நான் தங்களைக் கலியாணம் செய்யுமுன் விதவையாயும், ஒரு புத்திரனைப் பெற்ற தாயாயும் இருந்தேனெனத் தங்களுக்குத் தெரியாதது என் குற்றமேயாதலின் நானல்லவோ தங்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்" என்று சுவர்ணமும் தேம்பித் தேம்பி அழுதாள். அது தருணம் சாரதா "அப்பா" என்று இலட்சுமண முதலியாரிடம் ஓடினாள்.

இலட்சுமணமுதலியார் சுவர்ணத்தை விட்டுச் சாரதாவைத் தூக்கித் தன் மடிமீது இருத்திக்கொண்டு "என் கண்ணே! என் புத்தி யீனத்தாலன்றோ பதினைந்து வருஷகாலமாய்க் குழந்தையின் இன்பத்தை அநுபவிக்கக் கொடுத்துவையாத பாவியானேன்" எனப் பெருமூச்செறிந்து அவள் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் கொடுத்தார். பின் புஷ்கரன் இலட்சுமண முதலி யாரை நோக்கி "அப்பா! நான் காதலிக்கும் என் அருமை மைத்துனி இச்சுகந்தியே உங்களுக்குத் தத்துபுத்திரியாக வாய்த் ததை நினைத்துப் பூரிப்படைகிறேன். அவளை நீங்கள் தெரிந்து கொண்ட காரணம் என்ன?" என்று வினவி சுகந்தியைப் புன் முறுவலுடன் நோக்கினான். அதற்கு இலட்சுமண முதலியார் "உன் தாய் என்னைவிட்டுப் பிரிந்தபின் நான் மிகவும் மன முடைந்து என் சமீன் விஷயங்களைச் சரிவரக் கவனிக்க இயலாத வனானேன். அதை உரித்தாயும் உண்மையாயும் பார்க்கக்கூடிய ஒரு ஆளை நியமிக்க நினைத்து என் மைத்துனன் கஜபதி முதலி யாரைக் கலந்தபோது அவர் சுகந்தியின் தந்தை கனகராய முதலி யாரைச் சிபார்சு செய்ததால் அவரையே என் மாளிகையில் குமஸ்தாவாக நியமித்துக்கொண்டேன். சுகந்தி அப்பொழுது இளமங்கையாயிருந்தாள். அவள் அடிக்கடி என்னிடம் வந்து பேசுவதும் பாடுவதுமுண்டு. அவளுடைய பேச்சுகளும், பாடல் களும் கவலைகொண்டிருந்த என் மனத்திற்கு ஒருவாறு ஆறுதலை யும், மகிழ்வையும் உண்டாக்கின. அவள் தமையன் சந்திரகாந்தன் ஒரு உத்தியோகத்திலமர்ந்து கஜபதி முதலியாரின் மகளை விவாகஞ் செய்துகொண்டபின் தன் தந்தையை வேலையை ராஜி நாமாச் செய்துவிட்டுத் தன்னிடம் வந்து சேரும்படி எழுதினான். அதன்பிரகாரம் கனகராய முதலியார் என்னைப் பிரியும் சமயம் மனைவியும் குழந்தையுமில்லாத எனக்கு ஒரு குழந்தைபோலிருந்து என் கவலையை மாற்றிவந்த சுகந்தியைப் பிரிய நேரிட்டது மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. அப்பொழுது என் மைத்துனர் அவளை எனக்குச் சுவிகார புத்திரியாக எடுத்துக்கொள்ளும்படி ஆலோசனை சொல்ல அவ்விதமே செய்தேன். சுகந்தியின்

தந்தையை என்னிடம் குமஸ்தாவேலைக்கு வைத்துக்கொள்ளவும், சுகந்தியை நான் தத்துபுத்திரியாக எடுத்துக்கொள்ளவும் என் மைத்துனர் எனக்கு ஆலோசனை கூறியதன் நோக்கம் இப்பொழுதுதான் பட்டப்பகல்போல் வெட்ட வெளிச்சமாகிறது. வாரீசு இல்லாத என்னுடைய சமீனை எனக்கு மனைவியாக வந்த தன் தங்கைக்கு முதற்கணவனால் பிறந்த மகனே அநுபவிக்கத்தக்கதாய் அவன் காதலிக்கும் ஒரு பெண்ணை அதற்கு வாரீசாகத் தெரிந்தெடுத்திருக்கிறார். தன் தங்கையை எனக்கு விவாகஞ் செய்து கொடுக்கும்பொழுது அவள் விதவையென எனக்கு அறியாதபடி எப்படி ஜாக்கிரதையாயிருந்தாரோ அப்படியே என் சமீனும் அந்நியருக்குச் சேராதபடி தன் தங்கை மகனுக்கே உரித்தாகும்படி காரியமாய் நடந்துகொண்டார். எனினும் இறுதியில் யாவும் நன்மையாய் முடிந்ததற்காக அதிகச் சந்தோஷமடைகிறேன்" என்றார். அங்கே கூடியிருந்த யாவரும் தங்கள் தங்கள் விஷயங்களை ஒருவர் அறியாததை மற்றொருவருக்குத் தெரிவித்து ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தனர்.

பின்பு இலட்சுமணமுதலியார் தன் மனைவி பிள்ளைகளுடன் குமரிபுரத்திற்குச் சென்று சந்திரகாந்தன் வீட்டில் இரண்டொரு நாள் தங்கியிருந்தார். பிற்பாடு தன் மைத்துனர் கஜபதி முதலியார் வீட்டிற்குப் போனார். அவ்விடமிருந்த பாலகிருஷ்ணனின் மனைவி உருக்குமணி, தங்களைப் பார்க்கவந்த சுமுகி தன் அன்னையின் சகோதரியென அறிந்து மிகவும் மகிழ்வெய்தினாள். அப்பொழுது சுவர்ணம் "அம்மா! ருக்கு! நீயும், உன் புருஷனும் நளபுரத்திற்கு வந்து வியாதிப்பட நேர்ந்ததும் தெய்வ நடத்துதலே. அதுவே புஷ்கரனைக் கண்டுபிடிக்கக் காரணமாயிருந்தது. துன்பத்திலும் பகவான் ஒரு இன்பத்தை அளிக்கிறான்" என்றாள். அதன்பின் இலட்சுமண முதலியார் அங்கும் சிலநாள் இருந்து தன் ஊருக்குத் திரும்பினார்.

ஒரு சாதாரணப் பெண்ணாய்க் கருதப்பட்ட சாரதா ஒரு சமீன்தாரின் மகளெனத் தெரிந்ததும் சர்வோத்தமன் பெரிதும் மகிழ்வடைந்தானேயாயினும் அதுவிஷயத்தை அறிந்த அந்நிமி

ஷமே அவன் மனம் துக்க சாகரத்தில் மூழ்கியது. அவன் சாரதாவைக் காதலித்து அவளைத் தனக்கு வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ள எண்ணியிருந்தானாதலால் இப்பொழுது உன்னத பதவியை அடைந்த அவள் இனித் தனக்குக் கிட்டாளென எங்கினன். அவளை அடைய விரும்புவது "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோலாகும்" என மனம் நைந்தான். இனி அவள் முகதரிசனம் முதலாய்க் கிடைப்பது அரிதென நினைத்துள்ளம் நொந்தான். தான் இதுகாறும் கட்டிய மனக்கோட்டை க்ஷணப்பொழுதில் இடிந்ததே என அங்கலாய்த்தான். இவைகளை எண்ண எண்ண அவன் இருதயம் பிளந்துவிடும் போலிருந்தது. சாரதா அவள் தந்தை இலட்சுமண முதலியாருடன் தஞ்சனூரை விட்டுச் சென்ற அன்றிரவு முழுவதையும் நித்திரையின்றிக் கழித்தான். தெய்வச் செயலை யாரே அறிவர்?

இலட்சுமண முதலியார் தன் மனைவி பிள்ளைகளுடன் பாம்பன்கோவிலுக்குத் திரும்பிய ஒரு வாரத்தில் புஷ்கரனுக்கும், சுகந்திக்கும் விவாகம் முடிப்பதாகத் தீர்மானித்துக் கலியாண தினமும் குறிக்கப்பட்டது. எல்லா உறவினருக்கும், நண்பருக்கும், மற்றவருக்கும் அழைப்புப் பத்திரிகையும் அனுப்பப்பட்டது. சமீன்தார் இலட்சுமண முதலியார் சர்வோத்தமனையும், பரதேசி சாம்பசிவனையும், பிரகஸ்பதி ஐயர் குடும்பத்தையும் இக்கலியாணத்திற்கு அழைக்க மறக்கவில்லை. சர்வோத்தமன் விவாக அழைப்பைப் பெற்றதும் பல பல எண்ணங்கள் அவன் மனத்தைப் பாதித்தன. சாரதா தற்சமயம் அடைந்திருக்கும் சமீன்தாரணி நிலைமையில் தன்னை ஒரு பொருட்டாக மதிப்பாளோவென எண்ணினன். முகங் கொடுத்தும் பேசுவாளோவெனச் சந்தேகித்தான். தன் தாய்மாமன் சடாலிங்கமும், மைத்துனி ராதாவும் அவளிடம் வேலைக்காரர்களாயிருக்க தன்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பாளோவென ஐயுற்றான். தன்னை அவள் சட்டை செய்யாதிருந்தால் அவ்வவமானத்தை எவ்விதம் தாங்குவதெனத் தயங்கினன். எனினும் அவள் அவ்வித அற்பகுணம் படைத்தவளல்லளெனத் தேறினன். தன்னை ஒரு பொருட்டாக மதித்து சமீன்

தார் இவ்வழைப்பை அனுப்பியதற்குக் காரணம் ஒருகால் சாரதா வாகவே இருக்கக்கூடுமோவென்ற எண்ணம் உதிக்கவும் சற்று உற்சாகம் அடைந்தான். இறுதியில் விவாகத்திற்குப் போவ தெனத் தீர்மானித்தான். குறித்த தினத்தில் புஷ்கரனுக்கும் சுகந்திக்கும் சகல வைபவங்களுடனும் விவாகம் நடந்தேறியது. சர்வோத்தமன் எண்ணியதற்கு மாருக இலட்சுமண முதலியார், சுவர்ணம், சாரதா, புஷ்கரன், சுகந்தி இவர்கள் ஒவ்வொருவராலும் மரியாதையாயும், அன்பாயும் வரவேற்கப்பட்டு அவன், சாரதா, சுகந்தி, புஷ்கரன் மூவருக்கும் செய்த பல அரிய உதவிகளுக்காக சபை நடுவில் மிகவும் புகழப்பட்டான். அவன் மனத்தைச் சிறிதும் வருத்தக்கூடிய சம்பவம் யாதும் நேரிடாவிடினும் அவன் முகத் தில் கடுகளவேனும் மலர்ச்சி காணப்படவில்லை. சாரதா அவன் கண்ணில் தென்படுந்தோறும் அவன் மனம் பகீர் பகீரென்றடித் தது. தன் மனத்திடை எழும்பிய வியாகுலத்தை அடக்கமுடி யாதவனாய்த் தனித்திருக்க விரும்பி கூட்டத்தை விட்டுப் பிரிந்து அரண்மனையின் பின்புறமிருந்த தோட்டத்தினுட் சென்று அங்கு மிங்கும் தனியே உலாவிக்கொண்டிருந்தான். "சாரதாவை என் மனத்திலிருந்து நீக்கவோ முடியவில்லை. ஆனால் அவளை அடை வதோ கூடாத காரியம். இவ்வைபவத்திற்கு வாராமலும், அவளை மற்றொருமுறை சந்தியாமலும் இருந்திருப்பேனாயின் ஒருவேளை என் மனம் இவ்வளவுதூரம் அலசடிப்படாதிருக்கலாம். இப் பொழுதோ அவளது பட்சமான பார்வையும், அன்பான மொழி யும் என் இதயத்தைக் கொள்ளைகொள்ளுகின்றன. அவளை என் மனைவியாகப் பெறாவிடின் எவ்விதம் உயிர் தாங்குவேன்? அவளைத் தனிமையாய்ச் சந்திப்பது எப்படி? அவளிடம் என் காதலைத் தெரிவிப்பது எவ்வாறு? ஒருகால் அவளைத் தனியாய்ச் சந்திக்கச் சந்தர்ப்பமும், அவளிடம் என் காதலைத் தெரிவிக்கப் போதுமான துணிவும் எனக்கு ஏற்பட்டாலும் அவளும் என்னைக் காதலித்தா லன்றோ என் கவலை நீங்கி என் உள்ளம் மகிழும்! உயர்குலத்தில் பிறந்து சகல நற்குணங்களும் அமைந்த சமீன்தாரணியாகிய சாரதா கொலைகாரனுக்குப் பிறந்து ஒரு குமஸ்தா வேலை செய்யும்

சர்வோத்தமனையா மணந்துகொள்ளுவாள்! என்னே என் புத்தி யீனமான எண்ணம்! நான் அவளுக்குத் தற்செயலாய்ச் செய்ய நேர்ந்த அற்ப நன்றிக்கு ஈடாக அவள் காதலைப்பெற விரும்பு கிறேனென்று அவள் அறிந்தால் என்னை ஒரு கசடனென்றல்ல வோ இழித்துக் கூறுவாள்! சே! இனி ஒரு நிமிடமும் இவ்விடம் தாமதியாமல் ஓடிப்போவதே உசிதமாகும்" எனப் பலவாறு எண்ணி அங்கு நிற்கவும் மனமில்லாமல் அதை விட்டுப்போகவும் மனமில்லாமல் என் செய்வதெனத் தோன்றாது பித்தனைப்போல் நின்றுகொண்டிருந்தான்.

சாரதா, சர்வோத்தமனைச் சபைநடுவில் நெடுநேரமாய்க் காணாது அவன் எங்குப் போயிருக்கக்கூடுமென யோசிக்கலானாள். சர்வோத்தமனின் முகம் சந்தோஷமற்றிருந்ததைக் கவனித்திருந்த சாரதா, அதன் காரணம் என்னவாயிருக்கலாமென ஆலோசிக்க லானாள். யோசிக்க, யோசிக்க அவள் மனம் சஞ்சலத்திலாழ்ந் தது. சபை கலைந்தபின் அரண்மனையின் ஒவ்வொரு பாகத்திலும் அவனைத் தேடினாள். சர்வோத்தமனோ காணப்படவில்லை. இறுதியில் ராதாவை அழைத்துக்கொண்டு தோட்டத்திற்குச் சென்று தேட, அவன் அங்கே ஒரு மாத்தடியில் நின்று ஏதோ சிந்தனை செய்து கொண்டிருந்ததைக் கவனித்தாள். உடனே அவனிடம் விரைந்து சென்று "சர்வோத்தமரே! அரண்மனையில் நடக்கும் சந்தோஷ காரியங்களில் ஈடுபடாது முகவாட்டத்துடன் இவ்விடம் வந்திருப்பதற்குக் காரணமென்ன? எவராயினும் உங் கள் மனத்தை வருத்தும்படி நடந்துகொண்டனரோ?" என அன்புடன் வினவினாள்.

சாரதாவுடன் சென்ற ராதா தன் எசமானி தன் மைத்து னனிடம் பேசும்பொழுது தான் அதைக் கவனிப்பது சரியல்ல வென நினைத்துச் சற்று விலகி நின்றாள். சர்வோத்தமன் சாரதாவைப் பார்த்ததும் திப்பிரமையடைந்தான். தான் விரும் பியவண்ணம் சந்தர்ப்பம் வாய்த்ததெனை அகங்களித்தான். ஆயி னும் அவள் கேட்ட கேள்விக்கு யாது பதிலுரைப்பதெனத் திகைத்தான். அவளது தூய உள்ளத்தில் காதல் உணர்ச்சியை

ஊட்டுவதெவ்வாறெனச் சிந்தித்தான். அவ்விதம் தான் செய்ய நினைப்பது சரியோ தவறோ எனக் கலங்கினான். ஆனால் இத்தருணம் தவறினால் எத்தருணம் வாய்க்குமோவென எண்ணினான். பின் ஒருவாறு தன் மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு "சமீன்தாரணியே! இச்சமயம் தாங்கள் இங்கு வந்த காரணத்தை யான் அறியலாமோ?" என மரியாதையாய் வினவினான்.

சாரதா:—உங்களை அரண்மனையில் எங்கும் காணாததால் இங்கே தேடிவந்தேன். நான் கேட்ட கேள்விக்குப் பதிலுரைக்கவில்லையே!

சர்வோத்தமன்:—தாங்கள் நினைக்கிறபடி ஒருவரும் என்னை அகௌரவப்படுத்தவில்லை. இயற்கையாய் எனக்கு நேர்ந்த ஒரு மனச்சஞ்சலத்தின் காரணமாகவே தனித்திருக்க விரும்பி இங்கு வந்தேன். தாங்கள் என்னைத் தேடி வந்ததற்காக மிகுந்த நன்றி பாராட்டுகிறேன்.

சாரதா:—ஒருகாலும் இல்லாத விதமாய் இன்று உங்கள் பேச்சும், செய்கையும் விபரீதமாய்த் தோன்றுகின்றன. இதுவரையும் என்னைச் சாரதாவென்றும், நீ என்றும் அழைத்த நீங்கள் இன்று சமீன்தாரணியே என்றும், தாங்கள் என்றும் விளிப்பது என் மனத்தை மிகவும் வருத்துகிறது. அவ்வாறு நீங்கள் என்னை வருத்த யான் செய்த பிழை யாதோ?

சர்வோத்தமன்:—அம்மணி! தங்கள் நிலைமை மாறியதால் மட்டுமே யான் அவ்விதம் அழைத்தேன். தாங்கள் எனக்கு யாதொரு பிழையும் இழைக்கவில்லை.

சாரதா:—மற்றவர்க்கு நான் சமீன்தாரணியேயன்றி உங்களுக்கன்று. உங்களுக்கு என்றும் நான் சாரதாவே. ஆகலால் இனி அவ்விதம் விளியாதிருக்க வேண்டுகிறேன்.

சர்வோத்தமன்:—அம்மா! நான் என் நிலைமையைக் கருதாது நடந்தால் அது தப்பிதமன்றோ?

சாரதா :—என்னை நீங்கள் சாரதாவென்றும், நீ என்றும் அழைப்பது ஒருகாலும் தப்பிதமாகாது. அஃதிருக்கட்டும்; இப்போ உங்கள் சஞ்சலத்திற்குக் காரணத்தைக் கூறுங்கள்.

சர்வோத்தமன் :—சாரதா! அதை உன்னிடம் தெரிவிக்க என் மனந் துணியவில்லை. நான் அதைத் தெரிவித்தால் என்மீது நீ வருத்தங்கொள்ளுவாயோ என அஞ்சுகிறேன்.

சாரதா :—நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் புரிய வில்லையே! உங்கள் வியாகுலத்தை நீங்கள் தெரிவித்தால் உங்கள் மீது நான் ஏன் வருத்தமடைவேன்? அது என் புத்திக்கு எட்ட வில்லையே?

சர்வோத்தமன் :—உன்னிடம் ஒரு தயவு பெற விரும்பு கிறேன். அதை எனக்குச் சந்தோஷமாய் அளிப்பாயா?

சாரதா :—என்னால் கூடுமானால் அளிக்கத் தடையில்லை.

சர்வோத்தமன் :—பார்த்தாயா! முதலிலேயே கூடுமானால் என்று சொல்லிவிட்டாயே!

சாரதா :—அதனாலென்ன? உள்ளதையே சொன்னேன். என்னால் கூடாததைக் கொடுக்கமுடியுமா?

சர்வோத்தமன் :—உன்னால் கொடுக்கக்கூடாததை நான் கேட்பேனா?

சாரதா :—இதற்கேன் இவ்வளவு விவாதம்? கேளுங்கள்; கொடுக்கிறேன்.

சர்வோத்தமன் :—நான் கேட்கப்போவது உன் மனத்தைப் பொருத்த விஷயம். ஆதலால் மயங்குகிறேன்.

சாரதா :—எதுவாயிருப்பினும் விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சர்வோத்தமன் :—சாரதா! நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ என் காதலை எற்றுக்கொள்வாயா?—என அவள்முன் முழந்தாளிட்டு வேண்டினன். அம்மொழிகள் சாரதாவின் காதுகளில் விழுந்ததும் அவள் நாணமுற்றுத் தலைகுனிந்து சர்வோத்தமனை நோக்கினுள். அச்சமயம் திடீரென அங்கு வந்த இலட்சுமண முதலியார் அவர்கள் இருவரும் இருந்த நிலைமையை நோக்கிச் சர்வோத்தமனைப் பார்த்து "சர்வோத்தமா! ஏன் என் குழந்தையின் முன் முழந்தாளிட்டிருக்கிறாய்? அவளுக்கு யாது குற்றம் விளைத்தாய்?" எனக் கேட்கவும், சர்வோத்தமன் எழுந்து தேகம் நடுங்க உயிர்குன்ற யாதும் பேசாது மௌனமாய்த் தலை கவிழ்ந்து நின்றான். அப்பொழுது சாரதா தன் தந்தையை நோக்கி "அப்பா! சர்வோத்தமர் எனக்கு விரோதமாய் யாதொரு குற்றமும் செய்யவில்லை. அவரை நான் என் கணவாக எற்றுக் கொள்ளமுடியுமா என்று மட்டுமே கேட்டார்" என்று பயத்துடன் மொழிந்தாள். அதைக் கேட்டதும் இலட்சுமண முதலியார் கோபத்துடன் "அதற்கு நீ என்ன பதில் கூறினுய்?" என "நான் ஒன்றுமே கூறவில்லை" என்றாள் சாரதா. உடனே இலட்சுமண முதலியார் பொங்கிய கோபத்தை அடக்கிக்கொண்டு சர்வோத்தமனை நோக்கி "சர்வோத்தமா! என் மகளின் அந்தஸ்தையும், உன் பிறப்பையும், நிலைமையையும் சற்றும் கவனியாது புத்தியீனமாய் நடந்துகொண்டாய். ஆயினும், நீ என் குடும்பத்திற்குப் புரிந்திருக்கும் பல பரோபகாரங்களை முன்னிட்டு உன் துணிவான செய்கையை மன்னித்தேன். நான் கேள்வியுற்றபடி நீ உண்மையாகவே சற்குணனுயின் இனி என் மகளை மறுபடியும் சந்திக்க எத்தனியாதே. இப்பொழுதே இவ்விடத்தைவிட்டுப்

போய்விடு" என்று சொல்லவும், சர்வோத்தமன் மலமலெனக் கண்ணீருதிர்த்தான். அப்பொழுது சாரதா தன் தந்தையின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்து "அப்பா! பிறப்பும், அந்தஸ்துமா பெரிது? குணமன்றோ விசேஷம்! நான் சர்வோத்தமரையே மணஞ் செய்ய விரும்புகிறேன். அவரைப் போகாதிருக்கச் சொல்லுங்கள்" என்று மன்றாடினுள். இலட்சுமண முதலியார் தன் அருமை மகளின் மனம் நோகும்படி நடக்கச் சிறிதும் விரும்பாவிடினும் இவ்விஷயத்தில் சம்மதங்கொடுக்க அவர் மனம் கொஞ்சமேனும் ஒப்பவில்லை. சாரதாவைத் தூக்கி அன்பாய் அணைத்துக்கொண்டு "என் மகளே! நீ சிறுபிள்ளையானதால் உனக்கு உலக விவகாரம் தெரியவில்லை. வீட்டிற்குப் போவோம் வா" எனச் சொல்லி மெதுவாய் அழைத்துப்போய் விட்டார். சாரதா, சர்வோத்தமனைத் திரும்பிப்பார்த்த வண்ணமாய் அழுதுகொண்டே சென்றுள். சர்வோத்தமன் சாரதாவின் கண்மறையும் மட்டும் அங்கேயே நின்று மிகுந்த கிலேசத்துடன் அப்பொழுதே தஞ்சனூருக்குத் திரும்பினுன்.

தஞ்சனூருக்குத் திரும்பிய சர்வோத்தமன் "என்னே! என் பரிதாபமான நிலைமை! சாரதா என்னைக் காதலிப்பாளோவெனச் சந்தேகித்தேன். அக்கவலை நீங்கியும் பகவான் பிறிதொரு கவலையைக் கொடுத்தானே! அவள் என்னை விரும்பவில்லையென்றிருந்தாலும் என் மனம் ஒருவாறு நிம்மதியாயிருக்கும். நானும், அவளும் ஒருவரையொருவர் காதலித்தும் அவள் தந்தை இடைநின்று எங்களைப் பிரித்துத் துன்புறுத்த நேர்ந்ததை எவ்வாறு சகிப்பது? அவர் தன் தத்தபுத்திரி சுகந்தியின் விஷயத்தில் பிடிவாதமாயிருந்ததின் பலனை அநுபவித்தும் தன் சொந்த புத்திரியின் விஷயத்திலும் அவ்விதமே செய்யத் துணிந்தாரே! என் கண்மணியாகிய சாரதா இத்துயரை எவ்விதம் தாங்குவாளோ?" எனப் பலவாறு நினைந்து நினைந்து உருகினுன்.

சர்வோத்தமனைப் பிரிந்த சாரதாவும், அவ்வாறே துயரக் கடலிலாழ்ந்தாள். தனது சகோதரனின் கலியாணதினம் அவளுக்குத் துக்க தினமாகவே முடிந்தது. அத்தினத்தின் எவ்வித சந்தோஷத்திலும் அவள் மனம் செல்லவில்லை. தன் தந்தையிடம் பெற்ற அவமானத்தைச் சர்வோத்தமன் எவ்விதம் சகிப்பானெனக் கவலைகொண்டாள். அவனைத் திரும்பவும் எப்பொழுது எவ்வாறு சந்திப்பதென ஏக்கமுற்றுள். தான் எளிய நிலைமையிலிருந்து உயர்பதவிக்கு வந்த நாளைச் சபித்தாள். சஞ்சலத்துடன் கூடிய ஐசுவரியத்திலும் சந்தோஷத்துடன் கூடிய தரித்திரமே மேலானதென நினைத்தாள். அவள் அன்னையும், மற்றவர்களும் எவ்வளவோ தேறுதல் சொல்லியும் அவள் மனம் சற்றும் சாந்தமடையவில்லை. இம்மனோ வியாகுலத்தால் நாளடவில் உடல் மெலிந்தாள்.

"இன்னு தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னு தினியார்ப் பிரிவு"

அத்தியாயம்—14

குலத்திலும் குணத்தைப் பாராட்டிய குலமகன்.

“ தாமரை பொன்முத்துச் சாமரை கோரோசனைபால்
பூமரு தேன்பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்க
ளெங்கே பிறந்தாலு மென் ”

ஒருநாள் குமரிபுரம் கடற்கரை மணலிற் சந்திரகாந்தன் தன் மனைவி சுசீலியோடும், சுமார் பதினாறு பிராயமுடைய தன் இளைய தங்கை இலட்சுமியோடும் உலாவிக்கொண்டிருந்தான்.

சந்திரகாந்தன் :—சுசீலி! என்ன இன்று ஒருவிதமாயிருக்கிறாயே! உன் முகத்தில் எப்பொழுதுமுள்ள செழிப்பைக் காணோமே! உன்னை வருத்துவது யாது?

சுசீலி :—நாதா! என் தம்பி சர்வோத்தமன் இலட்சுமண முதலியாரால் அடைந்த அவமானத்தையும் அதனால் அவன் ஆறா மனத்துயரிலாழ்ந்திருப்பதையும் நினைத்தேன். வேறொன்றுமில்லை.

சந்திரகாந்தன் :—இலட்சுமண முதலியார் இதுவிஷயத்தில் பிடிவாதம் காட்டினால் சாரதா மரிப்பது திண்ணம். அதை நினைத்து ஒருகால் அவர் மனம் மாறினாலும் மாறலாம். பகவான் அவர்கள் இருவரையும் எவ்விதமும் சேர்த்து வைப்பாரென்றே எண்ணுகிறேன்.

இலட்சுமி :—அண்ணி! சுகந்தி அக்காள், அத்தான் புஷ்கரரை விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்று இலட்சுமண முதலியார் முதலில் பிடிவாதம் செய்து பின் சம்மதிக்கவில்லையா? அதுபோல இதுவும் நடக்கும். என் கவலைப்படுகிறீர்கள்?

சந்திரகாந்தன்:—சுசீலி! அதோ பார்! இப்பொழுதுதான் ஒரு கப்பல் துறை முகத்திற்கு வந்து பிரயாணிகள் இறங்குகிறார்கள். அங்கு போகலாமா?

சுசீலி:—உங்கள் விருப்பப்படியே செய்வோம்—என்று சொல்ல, சந்திரகாந்தனும், சுசீலியும் முன்னாகவும் இலட்சுமி சற்றுப் பின்னாகவும் துறைமுகத்தை நோக்கிச் சென்றனர். கொஞ்சத் தூரம் செல்லவும், இலட்சுமி "அண்ணி! என் கொண்டைத் திருகைக் காணோம். எவ்விடத்திலோ அது தவறி விட்டது" என்று சொல்ல, சுசீலி திரும்பி "உன் கொண்டையில் திருகைக் கடைசியாக எப்பொழுது பார்த்தாயென்று கவனமிருக்கிறதா?" எனக் கேட்க "சற்றுமுன்கூடப் பார்த்தேன். இப்பொழுதுதான் விழுந்திருக்கவேண்டும்" என்று சொல்லவும், மூவரும் வந்த வழியே திரும்பி மணலில் திருகைத் தேடிக்கொண்டிருந்தனர்.

அது சமயம், சுமார் இருபத்திரண்டு வயதுடைய ஒரு வாலிபன், தன் வயது சென்ற பெற்றோருடன் அவ்வழியாய் வரும்போது ஒரு கல்லிழைத்த கொண்டைத் திருகைக் கண்டெடுத்து, சமீபத்தில் மணலைக் கிளறிக்கொண்டிருந்த இலட்சுமியைப் பார்த்து "அம்மணி! என்ன தேடுகிறாய்?" என்றான். அவ்வார்த்தைகள் செவியில் விழவும், இலட்சுமி நிமிர்ந்து "என் கொண்டைத் திருகு ஒன்று தவறிப் போனதைத் தேடுகிறேன்" என, வாலிபன் தான் கண்டெடுத்த திருகை அவளிடங் காட்டி "இதை வழியில் கண்டெடுத்தேன். உன்னுடையதுதானோ என்னவோ பார்" என்றான். அதைப் பார்த்ததும், இலட்சுமி ஆனந்தக் கூச்சலிட்டு "அண்ணி! என் திருகு அகப்பட்டுக் கொண்டது" என்று கூறிக்கொண்டே வாலிபனை நோக்கி "ஐயா! தாங்கள் செய்த இவ்வுபகாரத்தை யான் என்றும் மறவேன்" என்று சொல்லும்பொழுது, சந்திரகாந்தனும், சுசீலியும் அவ்விடம் வர, அவர்களிடம் இலட்சுமி திருகு அகப்பட்ட விவரம் கூறினாள். பின் சந்திரகாந்தன் வாலிபனைப் பார்த்து "ஐயா நீங்கள் யாரென நான் அறியலாமா?" என்று கேட்டான்.

வாலிபன் :—என்னுடன் வந்திருப்பவர்கள் என் பெற்ரோர். நாங்கள் தஞ்சனூர் வாசிகள். சுமார் இருபது வருஷங்களுக்கு முன் இந்நாட்டை விட்டு அயல் நாட்டுக்குச் சென்றவர்கள். இன்றுதான் திரும்பிவருகிரோம். இன்று இரவை இவ்வூர் சத்திரத்தில் கழித்துவிட்டு நாளைத் தஞ்சனூருக்குப் போக உத்தேசிக்கிரோம்.

சந்திரகாந்தன் :—நீங்கள் மூவரும் எங்கும் போகாமல் எங்களுடன் வந்து எங்கள் இல்லத்தில் தங்கிப் போக விரும்புகிரோம்—என்று சொல்லி அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்ருன்.

யாவரும் வீட்டை அடைந்ததும் சந்திரகாந்தனின் தந்தை கனகராய முதலியார் வாலிபனின் அன்னை இரங்கநாயகியைக் காணவே ஓடிப்போய் அவளைக் கட்டிக்கொண்டு "அக்கா! இறந்துபோய்விட்டதாக நினைத்த உன்னை உயிருடன் பார்க்க நான் என்ன புண்ணியம் செய்தேனே!" என்று அழுதார். அவ்விதமே சந்திரகாந்தனின் அன்னை கற்பகமும் அவளை அணைத்துக்கொண்டு அழுதாள். அதைப் பார்த்த பிள்ளைகள் யாவரும் வியப்படைந்து ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

பின்பு கனகராய முதலியார் தன் தமக்கையின் கணவன் இரகுபதி முதலியாரைப் பார்த்து "அத்தான்! நீங்கள் இந்த நாட்டை விட்டுச் செல்லும் பொழுது உங்களுக்கு மூன்று குழந்தைகளிருந்தனவே! மற்ற இருவரையும் எங்கே?" என்று கேட்க, அவர் "என் மகன் சாந்தசீலனையும், என் மகள் சுமதியையும் தஞ்சனூரிலேயே என் சகோதரி கோமளவல்லியிடம் விட்டுச் சென்றேன். அவர்களை உடனே போய்ப் பார்க்க எங்கள் மனம் துடிக்கிறது" எனப் பதிலுரைக்கவும், சந்திரகாந்தன் "சாந்தசீலனும், சுமதியும் உங்கள் பிள்ளைகளா? மாமா! நம்மைப்போல் துர் அதிஷ்டமுள்ளவர்கள் எவருமில்லை. சாந்தசீலன் இறந்து போனன்; சுமதியோ காணமற்போனள்" என்று சொல்லிக்

கோவென அழுதான். அதைக்கேட்டதும் இரகுபதி முதலியார் "ஐயோ! இதைக் கேட்கவா இந்நாட்டிற்கு உயிருடன் திரும்பினேன்? கப்பல் மூழ்கியபோதே நானும் மூழ்கி இறந்தேனில்லையே!" என்று புலம்பினர். இரங்கநாயகியும் அவ்வாறே புலம்பி மார்பிலடித்துக்கொண்டு கதறி அழுதாள். மற்றவர்களும் அவ்வாறே துயரத்திலாழ்ந்தனர்.

இரகுபதிமுதலியார் தஞ்சனூரிலுள்ள ஒரு பெரிய மிட்டாதார். அவருக்குக் கோமளவல்லி என்னும் ஒரு தமக்கை இருந்தாள். அவள் இளம்பிராயத்திலேயே விதவையாகி அவர் வீட்டிலேயே வசித்துவந்தாள். அவளுக்குப் புத்திர சந்தானமில்லை. சுமார் இருபது வருடங்களுக்குமுன் தன் மூத்த மகன் சாந்தசீலனையும், மகள் சுமதியையும் கோமளவல்லியிடம் விட்டுத் தன் மனைவியுடனும், கைக்குழந்தையாயிருந்த இளைய மகன் விஜயனுடனும் அயல் நாடுகளைப் பார்த்து வரச் சென்றார். அவர் சென்ற கப்பல் எதிர்பாராவண்ணம் புசலில் அடிபட்டுக் கடலில் மூழ்கும் சமயம் அக்கப்பலுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த ஒரு படகை அவர் விரைவில் அவிழ்த்து அதில் தன் மனைவி குழந்தையுடன் ஏறிக்கொண்டார். அது காற்றின் போக்கிற் சென்று ஒரு தீவின் கரையைச் சேர்ந்தது. அத்தீவிற்குக் கப்பல்கள் போகும் வழக்கமில்லாததால் சுமார் இருபது வருஷகாலமாய் அத்தீவிலேயே தன் காலத்தைக் கழித்துவந்தார். சில தினங்களுக்குமுன் அத்தீவுக்குப் பக்கமாய் ஒரு கப்பல் செல்லுவதைக் கண்டு மாலுமிக்குச் சைகை காட்டிக் கப்பலைத் தீவுக்கு வரும்படி செய்து அதில் தன் நாட்டிற்குத் திரும்பினர். சந்திரகாந்தன் குமரிபுரம் துறைமுகத்திற் கண்ட கப்பல் அதுவே.

கோமளவல்லி சாந்தசீலனையும், சுமதியையும் வளர்த்துக் கல்விகற்கச் செய்து அவர்கள் இருவருக்கும் வயதுவந்தபின் திவான் பகதூர் இராமலிங்க முதலியார் வீட்டிற் சம்பந்தஞ் செய்தாள். இரகுபதி முதலியாரின் மிட்டாவை அவளே மேல் பார்த்து வந்தாள்.

இரகுபதி முதலியார் கோமளவல்லியிடம் விட்டுப்போன தன் பிள்ளைகளின் கதியை விபரமாய் அறிந்தபின், தான் முன் விரும்பியபடி தஞ்சனூருக்கு உடனே செல்ல ஆத்திரங்கொள்ளாமல் சில நாள் குமரிபுரத்திலேயே தங்கினர்.

ஒருநாள் சந்திரகாந்தன், சுசீலி, இலட்சுமி மூவரும் சுசீலியின் அறையில் பேசிக்கொண்டிருக்கும்போது சுசீலி சந்திரகாந்தனை நோக்கி "நாதா! உங்கள் அத்தை தன் பேரனைப் பார்க்க நாளையதினம் தஞ்சனூருக்குப் போகவேண்டுமென்று தெரிவித்தார்கள். உங்களுக்கு ரஜாக் கிடைக்குமானல் நாமும் அவர்களுடன் போய்க் குழந்தையைப் பார்த்துவாலாமே!" என்றாள்.

சந்திரகாந்தன் :—அடுத்தவாரம் இரண்டுநாள் விடுமுறையிருக்கிறது. அதுவரை தாமதித்தார்களானல் நாமும் கூடச் செல்லலாம்—என்று சொல்லி இலட்சுமியைப்பார்த்து "அத்தை எங்கே யிருக்கிருர்களென்று பார்த்துவா" என, அவளும் எழுந்து சென்றாள். அவள் சென்ற சமயம் சந்திரகாந்தனின் அறையில் இரங்கநாயகி விஜயனுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திருப்பவே, அதைப் பார்த்த இரங்கநாயகி "இலட்சுமி! இங்கு வந்த நீ, உள்ளே வாாமல் ஏன் திரும்பிப் போகிறாய்? உன் அத்தான் தானே என்னுடனிருக்கிறான்! கூசாமல் வா" என்று சொல்லவும், அவள் உட்சென்று "நீங்கள் எங்கே இருக்கிறீர்களென்று அண்ணன் பார்த்து வரச் சொன்னர்கள். ஆதலால் பார்த்ததும் திரும்பினேன்" என்றாள்.

இரங்கநாயகி :—இலட்சுமி! அன்று காணமற்போன உன் திருகு வேறொருவரிடம் அகப்படாமல் உன் அத்தானிடம் அகப்பட்டது ஒரு ஆச்சரிய சம்பவமல்லவா?

விஜயன் :—அது தெய்வச் செயல். காணமற்போன அத்தானைக் கண்டுபிடிக்க ஏதுவாய் அவளுடைய திருகு காணமற்போகக் கடவுள் செய்தான். அவன் அவ்விதம் செய்யாவிடின் இலட்சுமி

விஜயம் எனக்குக் கிட்டியிருக்குமா? அம்மா! அத்தான் உங்களிடம் ஏதோ பேச விரும்புவதாய்த் தெரிகிறது. நாமே அவர்களிருக்குமிடத்திற்குப் போகலாமே—என்று சொல்லி இலட்சுமியை நோக்கி "இலட்சுமி! உன் அண்ணன் எங்கே இருக்கிறார்கள்" என "அண்ணியின் அறையில் இருக்கிறார்கள்" என்று அவள் சொல்லவும், மூவரும் அங்குப் போனார்கள்.

அங்குப் போனதும் விஜயன் சந்திரகாந்தனை நோக்கி "அத்தான்! ஒரு விண்ணப்பம். விஜயனாகிய நான் இந்நாட்டில் கால் வைத்ததும் உங்கள் தங்கை இலட்சுமி எனக்கு விஜயமளித்ததால், அவளை இனி விஜயலட்சுமி என அழைக்க எனக்கு அநுமதி கொடுக்கவேண்டும்" என்றான். வெளியிற் சென்றிருந்த சந்திரகாந்தனின் தம்பி ஜெயசீலன் அச்சமயம் அங்குவர விஜயன் சொல்லியதைக் கேட்டுச் சந்திரகாந்தனை நோக்கி "அண்ணா! அப்படி அநுமதி கொடுப்பது நியாயமன்று. முதலில் அத்தானே அக்காளுக்கு விஜயமளித்ததால் அவர்களையே 'இலட்சுமி விஜயன்' என அழைப்பது பொருத்தமாகும்" என்றான்.

சந்திரகாந்தன்:—இருவர் சொல்வதும் பொருத்தமே; ஆயினும் இவ்வழக்கை எப்படித் தீர்ப்பதென எனக்குத் தோன்றவில்லை.

சுசீலி:—(சந்திரகாந்தனை நோக்கி) இச்சிறு வழக்கில் தீர்ப்புச் சொல்ல உங்களுக்குச் சக்தியில்லையாயின், நியாயஸ்தலத்தில் நிரடான வழக்குகளுக்கு எவ்விதம் தீர்ப்புச் சொல்லப் போகிறீர்கள்?

சந்திரகாந்தன்:—இவ்வழக்கில் வாதி மைத்துனனும் பிரதிவாதி தங்கையாயுமிருப்பதுதான் தருமசங்கடமாயிருக்கிறது. எனக்குப் பதில் நீதான் ஒரு தீர்ப்புச் சொல்லேன்.

சுசீலி:—நானும், என் தம்பியும் உங்கள் தங்கையை 'விஜயலட்சுமி' என்றழைக்கவேண்டும்; நீங்களும், உங்கள் உடன் பிறந்தோரும் என் தம்பியை 'இலட்சுமி விஜயன்' என்றழைக்கவேண்

டும். மற்றவர்கள் விஜயனை ‘விஜயன்’ என்றும், இலட்சுமியை ‘இலட்சுமி’ என்றுமே அழைக்கவேண்டும்.

சந்திரகாந்தன் :—பேஷ்! சரியான தீர்ப்பு! இனி நான் நியாயஸ்தலத்திற்குப் போகவேண்டிய சிரமமேயில்லை—என்று சொல்லும் சமயம் அங்குவந்த கனகராய முதலியார் தன் மகனைப் பார்த்து “நீ இனிமேல் கச்சேரிக்குப் போக வேண்டியதில்லையென்று சொன்னாயே! என் அப்பா?” என்று கவலையுடன் கேட்க, சந்திரகாந்தன் நடந்த விஷயத்தை விஸ்தாரமாய்க் கூறினான்.

அப்பொழுது இரங்கநாயகி, முதலியாரை நோக்கி “தம்பி! நீ இலட்சுமியை விஜயனுக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிட்டால், ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாய் அழைக்கத் தேவையில்லை. யாவருமே இலட்சுமியை ‘விஜய லட்சுமி’ என அழைத்துவிடலாம்” என்றாள். அதற்கு அவர் “நீ விரும்புகிறபடி செய்தால் என் மகளை ‘விஜய லட்சுமி’ என்று அழைப்பதுதான் பொருந்துமோ? உன் மகனை ‘இலட்சுமி விஜயன்’ என அழைத்தால் பொருந்தாதோ?” என்று குறுநகை கொண்டார். அப்பொழுது அவள் “அகத்துக்கழகு அகமுடையாள்” என்பது பெரியோர் வாக்கல்லவா? அருமையும், பெருமையும் இல்லாளுக்கே உரித்தாகுமாதலால், உங்கள் மகளையே ‘விஜய லட்சுமி’ என அழைப்பது நியாயமாகும்” என்றாள்.

அதைச் செவியுற்றதும் விஜயன் கனகராய முதலியாரை நோக்கிப் பணிவாய் “மாமா! அப்படியே உத்தரவளிக்கவேண்டும்; இலட்சுமி தேவியும் கடாட்சிக்கவேண்டும்” என்று சொல்லி காதல் ததும்பிய கண்களுடன் இலட்சுமியை நோக்க, அதனைக் கண்ணுற்ற இலட்சுமி வெட்கமுற்று நிலத்தை நோக்கலானாள்.

பின்பு சந்திரகாந்தன் இரங்கநாயகியிடம் “அத்தை! நீங்கள் நாளை தஞ்சனூருக்குப்போக உத்தேசித்திருப்பதாய்ச் சுசீலி மூலம் அறிந்தேன். நீங்கள் இன்னும் ஒரு வாரம் இங்கே

தங்கிப்போவதாயிருக்குமானல் நாங்களும் கூடவாலாம். சாந்த சீலனின் குழந்தையைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் எங்களுக்கும் இருக்கிறது" என்று சொல்ல, அவள் அவ்விதமே போகச் சம்மதித்தாள்.

மறுவாரம் யாவரும் தஞ்சனூருக்குப் போனார்கள். இரகுபதி முதலியாரும், இரங்கநாயகியும் சாந்தசீலனது குழந்தையைப்பார்த்து ஒருவாறு தங்கள் துயரத்தை ஆற்றிக்கொண்டனர். சந்திரகாந்தன் அவ்விடம் ஒருநாள் மட்டும் தங்கித் தன் குடும்பத்துடன் குமரிபுரத்திற்குத் திரும்பினன்.

சமீன்தார் சிவஞான முதலியார் மிகுந்த நற்குணம் வாய்ந்தவர். பெருந்தன்மையும் பரோபகார சிந்தையுமுடையவர். தரித்திரரையும், தனவந்தரையும் ஒரே சமமாய் நினைத்து நடத்துபவர். பகைவரையும் பாமரிக்கும் பரமதயாளர். எவரும் துயருறச் சகியாதவர். தன் உயிரையும், தனது மைந்தனின் உயிரையும் காப்பாற்றிய சர்வோத்தமனும், தன் மைத்துனி காந்தாரியின் சற்பனையை வெளிப்படுத்திய சாரதாவும் ஒருவரையொருவர் மணந்துகொள்ள விரும்புகிறார்களெனவும், சர்வோத்தமனின் ஈன ஸ்திதியின் காரணமாக இலட்சுமண முதலியார் அச்சம்பந்தத்தை விரும்பவில்லையெனவும், அம்மனோ வியாகுலத்தினிமித்தமாய்ச் சர்வோத்தமனும், சாரதாவும் நோய் வாய்ப்பட்டிருக்கிறார்களெனவும் கேள்விப்படவே, சிவஞான முதலியாரின் மனம் தாளவில்லை. அவர்கள் இருவரையும் விவாகத்தில் சேர்த்து மகிழ்விப்பது தம்மேல் விழுந்த கடமையென நினைத்தார். அவ்வெண்ணம் உதித்ததும் சிறிதும் தாமதியாமல் இலட்சுமண முதலியாரிடம் சென்று "சாரதாவின் கலியாண விஷயத்தில் நீங்கள் ஒரே பிடிவாதமாயிருப்பது அவ்வளவு நலமாகத் தோன்றவில்லை. வாழுபவள் அவளே யாதலால் அவள் மனத்திற்கு விரோதமாய் நடப்பது எப்பொழுதும் துன்பத்தையே விளைவிக்கும். இதை உங்களுக்குத் தெரிவித்துச் சாரதாவைச் சர்வோத்தமனுக்கே மணஞ் செய்து கொடுக்கும்படி உங்களை வற்புறுத்தவே சர்வோத்தமனின் சார்பாக இங்கே வந்தேன்" என்றார்.

இலட்சுமண முதலியார் :—தரித்திரனாகிய சர்வோத்தமனுக்கு என் மகளைக் கொடுத்தால் உலகிலுள்ளோர் சிரிப்பதற்கிட முண்டாகுமே! அதை யோசித்தீர்களா?

சிவஞான முதலியார் :—செல்வந்தன் ஏழையாவதும் ஏழை செல்வந்தனாவதும் இவ்வுலகில் சகஜமில்லையா? இப்பொழுதும் சர்வோத்தமனுக்கு என் சமீனில் பாதி எழுதி வைத்திருக்கிறேன். ஆகலால் இனியாவது தடைசொல்லாமல் இம்மணத்தை முடித்து வையுங்கள்.

இலட்சுமண முதலியார் :—என்ன! அப்படியாயின் சர்வோத்தமன் கிட்டத்தட்ட எனக்குச் சமானமாகிவிட்டான். ஆயினும் அவன் ஒரு கொலைகாரனின் புத்திரனாதலால் என் மகளை அவனுக்குக் கொடுக்கச் சம்மதியேன்.

சிவஞான முதலியார் :—'நல்லதுக்கு ஒரு பொல்லாததும் பொல்லாததுக்கு ஒரு நல்லதும்' என்னும் பெரியோர் வாக்கைக் கேட்டதில்லையா? சர்வோத்தமன் எவ்வளவோ சற்குணன். அவனைப்போல் ஒரு உத்தமனை இவ்வுலகிற் காண்பது அரிதினுமரிது.

இலட்சுமண முதலியார் :—இதற்கு என் மனம் சற்றும் ஒப்பவில்லை. நான் உங்கள் வார்த்தையைத் தவிர்த்துப் பேசுவதற்காக என்னை மன்னியுங்கள்—என்று சொல்லும் சமயம் வைத்தியர் சாரதாவைப் பரிசோதிக்கவந்தார். அத்தருணம் சாரதாவின் படுக்கை அறையில் சுவர்ணம், சுகந்தி, ராதா, புஷ்கரன் நால்வரும் அவள் பக்கத்தில் அமர்ந்து ஊமைக் கண்ணீர் வடித்த வண்ணமாயிருந்தனர். இலட்சுமண முதலியாரும், சிவஞான முதலியாரும் வைத்தியருடன் அவ்வறைக்குள் போக, வைத்தியர் சாரதாவின் தேக நிலைமையைப் பரீட்சிக்க ஆரம்பித்தார். சோதித்து முடிந்ததும் இலட்சுமண முதலியாரை நோக்கி "ஐயா! குழந்தை இன்னும் இரண்டு தினங்கள் உயிர் தாங்குவதரிது. அதற்குள் அவள் மனக் கவலையை நீக்காவிடின் நீங்கள் உங்கள்

மகளை இழப்பது திண்ணம்" என்று சொல்லவும், சுவர்ணம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறி அழுதாள். யாவரும் மனங்கலங்கினர். சிவஞான முதலியார் இலட்சுமண முதலியாரின் கரங்களைப் பிடித்துக்கொண்டு "இன்னும் யோசனையா? குழந்தையின் உயிரினும் குலம் பெரிதா?" என்று கண்ணீர் விட்டார். உடனே இலட்சுமண முதலியார் "உங்கள் இஷ்டம் போற் செய்கிறேன். என் மகள் பிழைத்தால் போதும்" எனச் சொல்லிப் புஷ்கரனை விளித்து "உடனே போய்ச் சர்வோத்தமனை அழைத்துவா" என அனுப்பினர். இவ்வார்த்தைகள் சாரதாவின் செவிகளில் விழவும் அவள் வதங்கிய வதனம் அன்று விரிந்த புஷ்பம்போல் மலர்ந்தது. அதைப்பார்த்த யாவரும் ஆச்சரியமும் களிப்புமுற்றனர். சிவஞான முதலியாரும், வைத்தியரும் சர்வோத்தமனின் வரவை நோக்கி அங்கேயே தங்கியிருந்தனர்.

வெகு ஆவலுடன் சர்வோத்தமனை அழைக்கத் தஞ்சனூருக்குச் சென்ற புஷ்கரன் அவனைச் சந்தித்ததும், அவன் உருமாறிப் பலவீனமாய்ப் படுக்கையிலிருப்பதைப் பார்த்து மிகுந்த விசனத்திலாழ்ந்தான். சர்வோத்தமன் எவ்வித தேகவியாதியினாலும் வருந்தாவிடினும் மனோவியாதியால் பீடிக்கப்பட்டு நடக்கச் சக்தியற்று அவ்விதம் படுக்கையிலிருந்தான். புஷ்கரனைக் கண்டதும் அவனை அன்புடன் வரவேற்று "சாரதா சுகமாயிருக்கிறாளா?" என வினவினன். புஷ்கரன் விஷயங்களை விவரமாய்க் கூறி, தான் வந்த நோக்கத்தைத் தெரிவிக்கவும் சர்வோத்தமன் புத்துயிர் பெற்றெழுந்தான். சரியாய் நடக்கப் பெலனில்லாது போயினும் புஷ்கரனின் ஆதரவுகொண்டு மெதுவாய் நடந்து மோட்டார் வண்டியில் ஏறினன். வண்டியும் வாயுவேகம் மனோவேகமாய்ச் சென்றது.

புஷ்கரனைப் பிடித்துக்கொண்டு மெள்ள நடந்து சாரதாவின் அறைக்குள் வந்த சர்வோத்தமனைக் கண்டதும் அங்கிருந்த யாவரும் அவனது பலவீன நிலைமையைப் பார்த்து மிகவும் பரிதபித்தனர். சாரதாவோ அவன் நலிந்திருப்பதைப் பார்த்த விசனத்தாலும், அவனைக்கண்ட மகிழ்ச்சியாலும் நெடுமூச்செறிந்து மூர்ச்சையானாள். பக்கத்திலிருந்த வைத்தியர் உடனே அவளுக்கு வேண்டிய சிகிச்சை செய்து மூர்ச்சை தெளிவித்தார். பின்பு சர்வோத்தமன் சாரதாவின் பக்கத்தில் உட்கார, சாரதா அவன் இரு கரங்களையும் இறுகப் பிடித்துக்கொண்டு சிறிது நேரத்தில் அயர்ந்த நித்திரையிலாழ்ந்தாள். சிவஞான முதலியார் தான் எண்ணிய காரியம் கைகூடியதை நினைத்து மிகுந்த சந்தோஷத்துடன் வீட்டிற்குத் திரும்பினார். வைத்தியரின் ஆலோசனைப்படி சாரதா பூரண சுகமடையும் வரை சர்வோத்தமன் அங்கேயே தங்கிவந்தான்.

சர்வோத்தமனைக்கண்ட சில தினங்களில் சாரதா முற்றும் சுகமடைந்தாள். சர்வோத்தமனும் திடம் பெற்றான். அவர்களுடைய விவாகத்தைச் சமீபத்தில் முடிக்க நிச்சயித்ததால், இலட்சுமணமுதலியார் சர்வோத்தமனைத் தஞ்சனூருக்கு அனுப்பாமல் தன் மாளிகையிலேயே வைத்துக்கொண்டார். விவாக தினத்தை எதிர்நோக்கி சர்வோத்தமனும், சாரதாவும் மகிழ்வுற்றிருந்தனர்.

ஒருநாள் இருவரும் ராதாவுடன் தோட்டத்தில் உலாவி வரும் பொழுது சாரதா சர்வோத்தமனை நோக்கி "காதலா! நமது விவாகத்திற்குத் தங்கள் பெற்றோரை அழைக்கவேண்டாமா? உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்தபின் அப்பாவிடம் சொல்ல விரும்புகிறேன்" என்றாள்.

சர்வோத்தமன்:—காதலி! அந்த ஆவல் எனக்கும் உண்டு. ஆயினும் நாம் எவ்வளவு வருந்தி அழைத்தாலும் அவர்கள் வர விரும்பார்களென நினைக்கிறேன். அவர்களை அழைக்க விரும்பிய உன் பெருந் தன்மையை நினைத்து மகிழ்வுறுகிறேன்.

சாரதா :—அவர்கள் வந்தாலும் வாராவிட்டாலும் நாம் அழைப்பு அனுப்புவது அவசியமல்லவா? அழைப்பைப் பெற்றும் அவர்கள் வாராது போனால் விவாகத்திற்குப்பின் நாமிருவரும் போய் அவர்களைப் பார்த்து வருவோம்.

சர்வோத்தமன் :—அப்படியே செய்வோம். ஆனால் உன் தந்தையின் நோக்கம் எப்படியிருக்குமோ? அதைக் கவனித்துச் செய்—என்று பேசிக்கொண்டே மாளிகைக்குத் திரும்பினர். பின்பு சாரதா இது விஷயத்தைத் தன் தந்தையிடம் தெரிவிக்க அவர் யாதொரு ஆட்சேபனையும் சொல்லாமல் சர்வோத்தமனின் பெற்றோருக்கும் அழைப்புப் பத்திரிகை அனுப்பச் சம்மதித்தார்.

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்"

அத்தியாயம்—15

பாதகம் செய்த பரம சண்டாளர்

“மெய்ம்மை நீங்கியே கொலைகளவி யன்றுமேலுள்ள
செம்மை யாளரைச் சீறியேயணங்கு செய்தீயோர்
தம்மி லாற்றரும் பழிசுமந் தொல்லையிற்றமரோ
டிம்மை வீடுவ ரெழுமையுந் துயரினூடிருப்பார்”

பாம்பன்கோவிலில் புஷ்கரனுக்கும், சுகந்திக்கும் விவாகம் முடிந்தவுடனேயே அவர்களைத் தன் இல்லத்திற்கு விருந்திற் கழைத்துப்போகக் காவலூர் கஜபதி முதலியார் விரும்பியும், சாரதா திடீரெனச் சுகவீனமடைந்ததால் அவர் அவ்விதம் செய்ய இயலாதவரானார். சாரதா குணமடைந்ததும் யாவரையும் காவ லூருக்கு அழைத்துவரும்படி கஜபதி முதலியார் இலட்சுமண முதலியாருக்கு ஒரு லிகிதம் விடுத்தார். அதைப் பெற்றதும் இலட்சுமண முதலியார் தன் குடும்பத்துடன் அவ்விடம் ஏகினார். கணேசனையும் தனக்கு உதவியாக அழைத்துப்போனார். சர்வோத்தமன், சடாலிங்கம், ராதா மூவரும் பாம்பன்கோவிலி லேயே இலட்சுமண முதலியாரின் மாளிகையில் தங்கியிருந்தனர். இலட்சுமண முதலியார் காவலூருக்குச் சென்ற மூன்றுவதுநாள் அவரது வேலைக்காரர்களில் ஒருவன் அவரிடம் வந்து “எசமானே! சடாலிங்கம், ராதாவையும், சர்வோத்தமரையும் அழைத்துக் கொண்டு நேற்றிரவு எங்கேயோ போய்விட்டார். இதைத் தங்க ளிடம் சேர்ப்பிக்கும்படி கொடுத்துப்போனார்” என்று சொல்லி ஒரு கடிதத்தை அளித்தான். இலட்சுமண முதலியார் அதைப் பிரித்து வாசிக்கவும் “அடே! பாவி! உண்ட வீட்டிலேயே கெண்டி தூக்கினையே! கொள்ளைக்காரனாகவிருந்த உன்னைக் குல மகனாக்க வெண்ணியதற்கு இதுதானோ பிரதிபலன்! அட்டை யைக் கழுவிக் கட்டிலிற் கிடத்தினால் அது கிடக்குமா!” என்று

பிரலாபிக்க, சாரதா "அப்பா! என்ன விசேஷம்?" என ஆத்திரத்துடன் வினவினள். அப்பொழுது அவர் "அம்மா! சடாலிங்கம் உனக்குச் சதிசெய்தான். இதை நீ எப்படித் தாங்குவாயோ?" எனக் கண்ணீர் விட்டு அந்த லிகிதத்தை அவள் கையில் கொடுத்தார். அதில்

சமீன்தாரவர்களுக்கு

என் மகள் ராதாவை என் தங்கை மகன் சர்வோத்தமனுக்கு விவாகஞ் செய்ய எண்ணினேன். அவனும் தங்கள் மகள் சாரதாவும் ஒருவரையொருவர் காதலிப்பதை அறிந்ததும் விசனமுற்று அதைத் தடுப்பதெவ்வாறென ஆலோசித்தேன். தாங்களே அதற்குக் குறுக்காய் நின்றதும் சற்று மனம் தேறினேன். ஆனல் இப்பொழுது தாங்களும் அதை ஆமோதிக்கிறதால் இனித் தங்களோடு தங்கியிருக்க என் மனம் இடந்தரவில்லை. ஆதலால் நானும் ராதாவும் வெளிச் செல்லுகிறோம். சர்வோத்தமன் சாரதாவை மறந்து ராதாவை மணந்துகொள்ளுமாறு அவனையும் அழைத்துப் போகிறேன்.

சடாலிங்கம்

என்று வரையப்பட்டிருந்தது.

அதைக் கண்ணுறவும் சாரதா மிகவும் மனம் சோர்ந்தாலும் தன் தந்தையை நோக்கி "அப்பா! இக்கடிதம் சடாலிங்கத்தால் எழுதப்பட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவர் பல செல்வந்தரைத் துன்புறுத்திப் பணம் பறித்தவராயிருப்பினும் இத்தகைய இழிவான செய்கையைச் செய்யக்கூடியவரல்ல. மேலும் சர்வோத்தமர் ராதாவை மணஞ் செய்யமாட்டாரென்றும், ராதாவும் கணேசனைக் காதலிக்கிறதால் சர்வோத்தமரை மணஞ் செய்யச் சம்மதியாளென்றும் அவர் திட்டமாய் அறிவார். அவர்கள் மூவருக்கும் ஏதாவதொரு ஆபத்து நேரிட்டிருக்கவேண்டும். இக்கடிதம் யாரோ ஒரு விரோதியால் அனுப்பப்பட்டிருக்கவேண்டு

மெனச் சந்தேகிக்கிறேன்" எனச் சொல்லிக் கடிதத்தைக் கொண்டுவந்த வேலைக்காரனை அழைத்து "ராமா! இக்கடிதத்தைச் சடாலிங்கமே உன்னிடம் நேரில் கொடுத்தாரா?" என்று கேட்டாள்.

இராமன்:—இல்லை. அவர் கொடுத்ததாகப் புதிதாக வந்திருக்கும் சமையற்காரன் என்னிடம் கொடுத்தான்.

சாரதா:—சடாலிங்கமும் மற்ற இருவரும் மாளிகையை விட்டுப் போகும்பொழுது நீ பார்த்தாயா?

இராமன்:—இல்லை. எல்லா வேலைக்காரர்களும் தூங்கி விட்டோம். காலையில் எழுந்திருந்தபோது அந்தச் சமையற்காரன் "நேற்று இரவு சடாலிங்கம் ராதாவுடனும், சர்வோத்தமருடனும் வெளியிற் போய்விட்டார். சடாலிங்கம் இந்தக் கடிதத்தைச் சமீன்தாரவர்களுக்கு அனுப்பும்படி சொன்னார். இதைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுவா" என்று என்னைக் கடிதத்துடன் அனுப்பினான்—என்றான்.

இராமனின் வாக்குமூலத்தைக் கேட்டதும் யாவரும் சாரதா நினைத்தபடியே விஷயத்தைச் சந்தேகித்தனர். அப்புறம் சாரதா "நாம் சிறிதும் காலதாமதம் செய்யாது மூவரையும் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்" என்று சொல்ல இலட்சுமண முதலியார் அச்சணமே தன் குடும்பத்துடன் பாப்பன் கோவிலுக்குத் திரும்பினர். திரும்பியதும் புதிதாக அமர்ந்த பரிசாரகன் அங்கில்லாததாலும், சடாலிங்கமும் மற்ற இருவரும் இரவில் வெளியில் சென்றதை அங்கிருந்த மற்ற வேலைக்காரர் எவரும் பார்க்கவில்லையென்று அறிந்ததாலும் யாவருடைய சந்தேகமும் அதிகரித்தது. அந்நிமிஷமே கணேசன் தன்னுடன் ஒரு வேலையாளைக் கூட்டிக்கொண்டு மூவரையும் தேடிச்சென்றான்.

தினங்கள் இரண்டு கழிந்தும் சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் இம்மூவரில் எவரேனும் வரவில்லை. அவர்களைத் தேடிச்சென்ற கணேசனும் திரும்பிவரவில்லை. யாவரும் மிகுந்த கலக்கத்துடனிருந்தனர். அச்சமயம் அந்நியன் ஒருவன் புஷ்கரன் முன் தோன்றி "ஐயா! கணேசன் வீட்டிலிருக்கிறானா?" என விசாரித்தான்.

புஷ்கரன் :—இல்லை. நீ யார்?

அந்நியன் :—நான் முன்னொரு சமயம் சடாலிங்கத்துடனிருந்தவன்; நானும், கணேசனும் அந்நியோன்னிய சிநேகிதராவோம். அவன் ராதாவைக் கலியாணம் செய்துகொள்ள நினைத்திருப்பது எனக்குத் தெரியும். இப்பொழுதும் சடாலிங்கம் ராதாவை சர்வோத்தமனுக்கு விவாகம் செய்துவைக்க எண்ணி அவர்கள் இருவரையும் வேறு சாக்குச் சொல்லிக் கூட்டிப்போய்த் தன் எண்ணத்தைத் தெரிவிக்க அவர்கள் சம்மதியாததால் இருவரையும் துன்புறுத்திக்கொண்டிருக்கிறான். அவர்கள் இருக்குமிடத்தை அறிவேன். இதைக் கணேசனுக்குத் தெரிவிக்க வந்தேன்.

புஷ்கரன் :—இவைகளை நீ எப்படி அறிந்தாய்?

அந்நியன் :—தங்கள் மாளிகைக்குப் புதிதாய் வந்திருந்த சுயம்பாகியின் மூலம் அறிந்தேன். அவன் சடாலிங்கத்திற்கு மிகவும் வேண்டியவன். எனக்கும் நண்பனாவான். அவனும் இப்பொழுது சடாலிங்கத்துடன்தானிருக்கிறான்—என்றான். இவ்விவரத்தைக் கேட்டதும் புஷ்கரனுக்குச் சடாலிங்கத்தின் நடத்தையின்பேரில் சந்தேகம் உதித்தது. மற்றவர்களும் அவ்விதமே எண்ணினர். பின்பு புஷ்கரன் அவ்வந்நியனை நோக்கி "சடாலிங்கம் இருக்குமிடத்தை எனக்குக் காட்டுவாயா?" எனக் கேட்டான். அவன் "ஆகட்டும்" எனச் சொல்ல, புஷ்கரன் அவனுடன் போக ஆயத்தப்பட்டான். அப்பொழுது சாரதா தன்னையும் அழைத்துப்போகப் புஷ்கரனை வேண்ட அவன் சம்மதித்து அவளையுங் கூட்டிச் சென்றான்.

மதனபுரிக்கருகாமையிலுள்ள ஒரு குக்கிராமத்திற்கு வெளியே மரங்களடர்ந்த ஒரு சிறிய தோப்பின் மத்தியில் அழகிய குடிசை ஒன்றிருந்தது. அவ்விடத்திற்கே புஷ்கரனையும், சாரதாவையும் அவ்வந்நியன் அழைத்துப் போனான். அக்குடிசையின் கதவு அடைக்கப்பட்டிருந்தது. புஷ்கரன் கதவில் கையை வைக்கவும் அது திறந்துகொண்டது. அறைக்குள் சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவரையும் காண எதிர் பார்த்த புஷ்கரனும், சாரதாவும் அவர்களைக் காணாது, கோவிந்தன், பாஞ்சாலி, பூபாலன், காந்தருவன் நால்வரையும் பார்க்கவே சொல்லொணாத் திகிலடைந்தனர். தங்களுடன் வந்த அந்நியன் என்னவானானெனத் திரும்பிப் பார்க்க, அவனும், தங்கள் மாளிகையில் புதிதாய் மடப்பள்ளியாய் அமர்ந்து மறைந்துபோன மனிதனும் வாசலிற் காவலாய் நின்றதைக் கண்டனர். அது சமயம் பாஞ்சாலி பாய்ந்து சாரதாவைப் பிடித்துக் கொண்டனள். கோவிந்தனும், காந்தருவனும் சேர்ந்து புஷ்கரனைப் பிடித்துக் கொண்டனர். அவ்விதம் பிடிக்கவும் அடங்காக் கோபங்கொண்ட புஷ்கரனின் முகம் சிவந்தது. மீசை துடித்தது. தன் பலம் முழுவதையும் கூட்டித் திமிறி அவர்களிருவரின் கைகளினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளும் தருணம் பூபாலனும், வாசலில் நின்ற இருவரும் புஷ்கரன்மேல் விழுந்து அவனைக் கீழே தள்ளி அவன் கரங்களைக் கட்டி விட்டனர். அதைப்பார்த்த சாரதாவின் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகிற்று. அச்சமயம் அவள் கரங்களும் பிணிக்கப்பட்டன. தன் கரங்கள் கட்டப்பட்டபின் ஒன்றும் செய்ய இயலாதிருந்த புஷ்கரன் பூபாலனை நோக்கி "பூபாலா! இவ்வக்கிரமத்தைச் செய்யத் துணிந்த உன் நோக்கம் என்ன?" என்று உக்கிரத்துடன் கேட்டான்.

பூபாலன்:—எனக்கு விவாகஞ் செய்ய நிச்சயிக்கப்பட்ட சுகந்தியை நீ மணந்துகொண்டது அக்கிரமமா? நான் செய்வது அக்கிரமமா?

புஷ்கரன் :—சுகந்திக்கும், எனக்கும் விவாகம் முடியும் முன் தான் உன் எண்ணம் நிறைவேறும்படி எங்கள் இருவரையும் துன்புறுத்தினுய். இப்பொழுதும் நீ இத்துராகிர்தம் செய்வதற்குக் காரணமென்ன?

பூபாலன் :—சுகந்திக்குப் பதில் சாரதாவைக் கலியாணஞ் செய்யவேண்டியே.

புஷ்கரன் :—அடே! துஷ்டா! உன் துணிகரந்தானென்னே! உன்னே விரும்பாத பெண்களை விவாகஞ் செய்ய நினைத்து அவர்களுக்குப் பலவாறு தீங்கிழைப்பதில் மகிழ்ச்சிகொள்ளும் உன்னே, கண்ட துண்டமாய் வெட்டினுலும் என் மனம் ஆருது.

பூபாலன் :—புஷ்கரா! நீ இப்போதிருக்கும் நிலைமையைச் சற்றும் யோசியாது வீணுய்த் துள்ளுவதில் என்ன பலன்? சாரதா எனக்கு விவாகஞ் செய்து கொடுக்கப்படாவிடில் சுகந்தியை விதவையாக்கவும் சாரதாவைக் கற்பழிக்கவும் தீர்மானித்திருக்கிறேன். இச்சமயம் நீங்கள் என் கைக்குத் தப்பிப்போக முடியாது—என்று சொல்லவும், சாரதா "பூபாலரே! ஒரு பெண்ணின் கற்பை அழிக்க எப்பொழுது தீர்மானித்தீரோ அப்பொழுதே நீர் அழியுங் காலமும் வந்தது என்பதை நினையாமல் மனக்கோட்டை கட்டுகிறீர். எவரும் நினையாவாறு உம்முடைய சூழ்ச்சிகளிலிருந்து தெய்வம் எங்களை மீட்டுவிடும் என்பது திண்ணம்" என்று சொல்லி வாய்மூடுமுன், மதனபுரி கலால் இன்ஸ்பெக்டர் ஜெகந்நாதன் அங்குக் காணப்பட்டான்.

சடாலிங்கத்தால் துரத்தப்பட்ட பாஞ்சாலியும், கோவிந்தனும் வீசினகையும் வெறுங்கையுமாய் வெளிவந்ததும், மதனபுரியிலிருந்த பாஞ்சாலியின் பெற்றோர் வீட்டிற்கு நேராய்ச் சென்றனர். பாஞ்சாலிக்கு இரு சகோதரர் இருந்தனர். அவர்களைச் சடாலிங்கம் அறியான். இவ்விருவரிடமும் பாஞ்சாலியும், கோவிந்தனும் சடாலிங்கத்திற்கும், ராதாவிற்கும் எவ்விதம் தீங்கு இழைப்பதென ஆலோசனை செய்தனர். இறுதியில் சடாலிங்கத்

திற்கு விரோதியான மதனபுரி மிட்டாதார் பூபாலனைத் தங்களுக்கு ஆதரவாகக் கொண்டு எக்காரியத்தையும் செய்வதே உசிதமென ஒரு முடிவிற்கு வரவும், அப்பொழுதே கோவிந்தன் பூபாலனைப் பார்க்கச் சென்றான். பூபாலனிடம் கோவிந்தன் தான் வந்த நோக்கத்தைத் தெரிவிக்க, அவன் மிகவும் மகிழ்வெய்தி "கோவிந்தா! சடாலிங்கம், ராதா இருவரின் உயிரையும் போக்கு வதே அவர்களுக்குத் தகுந்த தண்டனையாகும். அத்தோடு சர்வோத்தமனையும் மாய்த்துச் சாரதாவை என்னிடம் சேர்ப்பிக் கச் சம்மதிப்பாயாயின் உனக்கு வேண்டிய பொருள் உதவியும், ஆள் உதவியும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். சுகந்தியை விவாகஞ் செய்து இலட்சுமண முதலியாரின் சமீனைக் கைப்பற்ற ஆசித்த என் எண்ணத்தில் மண்ணைப் போட்டாள் அச்சிறுமி சாரதா. அவளே அச்சமீனுக்கு இப்பொழுது உரித்தானவளாகி விட்டதால் அவளை நான் மணந்துகொள்ளின் என் எண்ணம் வீண்போகாது. என் விருப்பத்தை நிறைவேற்ற உனக்குச் சம்மதந்தானா?" என்று கேட்டான்.

கோவிந்தன்:—ஆகா! தடையில்லை. சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவரையும் விஷம் வைத்துக் கொல்லுவதே நலமென நினைக்கிறேன். ஆனால் அவ்விஷத்தை எந்த வைத்தியன் மூலம் வாங்குவதென்றே திகைக்கிறேன்—என்றான்.

அப்பொழுது பூபாலனுடனிருந்த அவன் உண்மைத் தோழன் காந்தருவன் பூபாலனை நோக்கி "பூபாலா! இது விஷயத்தில் எந்த வைத்தியனையும் நம்புவது ஆபத்திற்கிடமாகும். ஆதலால் நமக்கு உண்மையான உன் சிநேகிதி டாக்டர் மீனாவையே கருவி யாகக் கொள்ளுவது மேலாகும்" என, பூபாலன் "காந்தருவா! நீயே எப்பொழுதும் எனக்குச் சமய சகாயனாய் வருபவன்" என்று சொல்லிக் காந்தருவனையும், கோவிந்தனையும் தன் அறையில் காத்திருக்கச் செய்து உடனே டாக்டர் மீனாவின் வீட்டிற்குச் சென்றான். அவளைக் கண்டு "மீனா! பிரகஸ்பதியின் போக்கிரித் தனத்தைப் பார்த்தாயா? தனவந்தனோ—தரித்திரனோ, சன்மார்க் கனோ—துன்மார்க்கனோ, பெரியவனோ—சிறியவனோ, ஆணோ—

பெண்ணே எவரைக் கண்டாலும் உன் நடத்தையைக் குறித்துத் தீட்பாய்ப் பேசி வருகிறான். இனி இதைச் சகிக்க என்னால் முடியாது. சிறிதும் தாமதியாமல் அவனை விஷம் வைத்துக் கொன்றாலொழிய நம் மானம் தங்காது" என்று ஆத்திரத்துடன் கூறினான்.

மீனாள் :— நம் சிநேகத்தைப்பற்றி இப்பொழுது யாரிடம் பிரஸ்தாபித்தான்?

பூபாலன் :—கொள்ளைக்காரச் சடாலிங்கத்தின் கூட்டாளி கோவிந்தனிடம் நம்மைப்பற்றி இழிவாய்ப் பேசியிருக்கிறான். இப்பொழுதுதான் அவன் என்னிடம் வந்து தெரிவித்தான். அவனை என் வீட்டில் வைத்துவிட்டே இங்கு வந்தேன்.

மீனாள் :—இப்படிப்பட்ட துரோகியை விஷம் வைத்துக் கொல்ல எனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை. ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது?

பூபாலன் :—அதைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம். விஷம் மட்டும் வாங்கிக் கொடுத்துவிடு. கோவிந்தன் மூலம் நான் அவ்வேலையை முடித்துவிடுகிறேன்.

மீனாள் :—சரி. இப்பொழுதே நந்தனார்குடிக்குப் போய் விஷம் வாங்கிக் கொடுக்கிறேன். கோவிந்தனை என்னிடம் வரச் சொல்லுங்கள்—என்று சொல்லவும் பூபாலன் சந்தோஷத்துடன் எழுந்து சென்றான். தன் வீட்டிற்குத் திரும்பியதும் கோவிந்தனிடம் "கோவிந்தா! விஷம் மீனாளின் புருஷன் பிரகஸ்பதி ஐயரைக் கொல்லுவதற்கென்று அவளிடம் சொல்லியிருக்கிறேன். ஆதலால் அவளிடம் உண்மையைக் கூறிவிடாதே. பிரகஸ்பதி அவளை மானபங்கமாய்ப் பேசினானென அவளிடம் கொஞ்சமும் கூசாமல் தெரிவி" என்று சொல்லி அவனை மீனாளிடம் அனுப்பினான்.

பின்பு கோவிந்தன் மீனுளுடன் மருந்துக் கடைக்குச் சென்று அவள் வாங்கிக்கொடுத்த விஷத்துடன் தன் வீடு திரும்பித் தன் மூத்த மைத்துனனிடம் கொடுத்து "நீ உடனே இலட்சுமண முதலியாரிடம் சென்று தந்திரமாய்ப் பேசிப் பரிசாரக வேலையில் அமர்ந்து சமயம் பார்த்துச் சடாலிங்கம், ராதா சர்வோத்தமன் மூவருக்கும் ஆகாரத்தில் இவ்விஷத்தைக் கலந்து கொடுத்துவிடு'' என்று சொல்லி அதை அவன் கையில் அளித்துப் பின்னும் அவன் செய்யவேண்டிய விஷயங்களையெல்லாம் தெளி வாய்க் கூறி அவனை அனுப்பிவைத்தான். அவன் அவ்வண்ணமே சென்று இலட்சுமண முதலியாரிடம் சமையல் வேலையிலமர்ந்து அவர் தன் குடும்பத்துடன் காவலூருக்குப் போயிருந்த சமயம் சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவருக்கும் விஷமிட்டு, மற்ற வேலையாட்கள் யாவரும் தூங்கியபின், அம்மூவரின் சடலங்களையும் ஏற்கனவே தான் அங்கு தருவித்து வைத்திருந்த தன் தம்பியின் உதவிகொண்டு தன் சொந்த வண்டியிலேற்றிப்போய், ஊருக்குப் புறம்பேயுள்ள ஒரு பாழ்ங்கிணற்றில் எறிந்துவிட்டு மாளிகைக்குத் திரும்பினுன். அவன் அதிகாலையில் எழுந்து சடாலிங்கம் எழு தியவண்ணம் ஒரு கடிதத்தை எழுதி, முந்தின இரவு சடாலிங்கம் அதைத் தன்னிடமளித்து இலட்சுமண முதலியாருக்கு அனுப்பும் படி உத்தரவு செய்துவிட்டு ராதாவோடும், சர்வோத்தமனேடும் அயலூருக்குப் போய்விட்டதாக அங்குள்ள எல்லா வேலையாட் களிடமும் தெரிவித்து, அக்கடிதத்தை ஒரு வேலைக்காரன் மூலம் காவலூருக்கு அனுப்பிவைத்தான். பின் எவரும் அறியாமலே தன் ஊருக்குப் போய்விட்டான். வேலைக்காரன் இராமன் காவலூரில் இலட்சுமண முதலியாரிடம் அளித்த கடிதம் இதுவே. இலட்சுமண முதலியார் காவலூரிலிருந்து தன் மாளிகைக்குத் திரும்பியபின் சடாலிங்கத்தின் இருப்பிடத்தைக் காட்டுவதாகப் புஷ்கரனையும் சாரதாவையும் அழைத்துப்போனவன் இப்பரிசார கனின் தம்பியே. இவ்விருவருமே பாஞ்சாலியின் உடன் பிறந்தோர்.

புஷ்கரனும், சாரதாவும் பூபாலனிடத்திற்குத் தந்திரமாய் அழைத்துச் செல்லப்பட்ட தினத்திற்கு முந்தின இரவு, பாஞ்சாலி யின் இரு சகோதரரும் மதனபுரி சாராயக்கடையில் குடித்து வெறித்திருந்தனர். குடிவெறியில் அவர்கள் பேசிய சில வார்த் தைகள், அதுதருணம் அவ்விடத்திற்குத் தன் உத்தியோக சம்பந்த மாய் மாறு உடையில் சென்றிருந்த கலால் இன்ஸ்பெக்டர் ஜெகந்நாதனின் செவிகளில் விழுந்தன. அச்சம்பாஷணையி லிருந்து அவ்விருவரில் இளையவன் மறுநாட்காலையில் சாரதாவைப் பூபாலனிடம் தந்திரமாய்ச் சேர்ப்பிக்க உத்தேசித்திருக்கிறனென் று அறிந்தான். அதை அறிந்ததும் பூபாலன் இருக்குமிடத்தைத் தெரிந்துகொள்ள விரும்பி, அவ்விருவரும் வெளியிற் போகும்வரை காத்திருந்து அவர்களுக்குப் பின்சென்று, பூபாலன் தங்கியிருந்த குடிசையைக் கவனித்தபின் தன் வீடு திரும்பினன்.

மறுநாள் அக்குடிசைக்குச் சற்றுத் தூரத்தில் சில ஆட் களுடன் மறைந்திருந்து புஷ்கரனும், சாரதாவும் பாஞ்சாலியின் சகோதரனுடன் போவதைக் கவனித்து, அவர்கள் குடிசைக்குள் நுழைந்த சிறிது நேரத்தில் அவர்கள் முன் தோன்றினன். "எவரும் நினையாவாறு தெய்வம் எங்களை மீட்டுவிடும்" என்று சாரதா பூபாலனிடம் சொல்லி வாய்மூடியது இச்சமயமே.

பூபாலன் ஜெகந்நாதனைக் கண்டதும் ஆச்சரியமும் சந்தே கமுங்கொண்டு "ஜெகந்நாதா! நெடுநாளாய் உன்னைக் காணுமே! இப்பொழுது எப்படி இங்கு வந்தாய்?" என வினவினன்.

ஜெகந்நாதன்:—சற்றுமுன் சாரதாவும், அவள் தமையனும் இக்குடிசைக்குள் வந்ததைக் கண்டு இங்கே நடைபெறுவது யாதென அறியவே வந்தேன். என் இவர்கள் இருவரும் கட் டுண்டிருக்கிறுர்கள்?

பூபாலன்:—நினைத்த காரியத்தை முடிக்கும்வரை விடாது முயற்சிப்பதில் எவ்வித இடையூறு நேரிடினும் நான் சலிப்படைந்து பின் வாங்குவதில்லை யென்பது உனக்குத் தெரிந்த விஷயம்

தானே. இலட்சுமண முதலியாரின் சமீனே அநுபவிக்க அவாக் கொண்டு முதலில் சுகந்தியை மணஞ் செய்ய விரும்பினேன். அது தவறியதால் இப்பொழுது சாரதாவை விவாகஞ் செய்ய விரும்புகிறேன். ஆதலால் அவளையும், அவள் தமையனையும் தந்திரமாய் இங்கு தருவித்தேன். ஆனல் அவர்கள் இருவரும் என் விருப்பத்திற்கிணங்காததால் அவர்களைக் கட்டிவைத்திருக் கிறேன். அவள் சம்மதிக்கும்பட்சத்தில் இக்கணமே விடுதலை செய்வேன்.

ஜெகந்நாதன் :—பூபாலா! நீ இவர்களைத் துன்புறுத்துவது அழகல்ல. அவர்கள் கட்டுகளை அவிழ்த்துவிடச் சொல்.

பூபாலன் :—நீயா எனக்கு உத்தாவிடுவது? அவள் என்னை மணந்துகொள்ளச் சம்மதிக்கும்வரை ஒருபோதும் அவர்களை விடுவியேன்.

ஜெகந்நாதன் :—அப்படியா? உன் சாமர்த்தியத்தைப் பார்க் கலாம்—என்று சொல்லித் தன்னுடன் வந்து வெளியில் நின்ற ஆட்களுக்குச் சைகை காட்டவும், அவர்கள் பூபாலனையும், அவ னுடனிருந்த அவன் ஆட்கள் ஐவரையும் உதைத்துப் பிணித்தனர். புஷ்கரன், சாரதா இருவரின் கட்டுகளையும் ஜெகந்நாதன் அவிழ்த் தனன். ஜெகந்நாதனுடன் வந்த ஆட்கள், மாறுடையில் வந்த மதனபுரிப் போலீஸ் இன்ஸ்பெக்டரும், அவருடைய ஜவான் களுமே. பூபாலனும், அவன் ஆட்களுமே சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவருக்கும் தீங்கிழைத்திருக்கவேண்டுமெனப் போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்தேகித்து, அவர்களை விசாரிக்க, அவர்கள் யாதுங் கூறுது மௌனம் சாதித்தனர். அதனல் அவர் கோபங்கொண்டு அவர்களை மேலும் மேலும் நையப் புடைக்க, ஆண்கள் ஐவரும் பலமான அவ்வடிகளைப் பெற்றும் 'கல்லுளி மங்கன்போல்' வாய்திறவாதிருந்தனர். பாஞ்சாலியோ அவைகளைப் பொறுக்கமாட்டாமல் தன் சகோதரன் அவர்களுக்கு விஷமிட்டதை விளக்கமாய்த் தெரிவித்தாள். அதைச் செவி யுற்றதும் சாரதா "ஐயோ" என அலறி மூர்ச்சித்தாள். அக்

கணமே புஷ்கான் சாரதாவைத் தூக்கித் தன் மோட்டாரில் வைத்துக்கொண்டு ஜெகந்நாதனின் வீட்டிற்குச் சென்றான். போலீஸ் இன்ஸ்பெக்டர் கட்டுண்ட பூபாலனையும், அவன் ஆட்களையும் கச்சேரிக்கு அழைத்துச் சென்று சிறையிலிட்டார். ஜெகந்நாதனின் மனைவி பத்மாவதி, சாரதா மூர்ச்சித்திருந்ததைப் பார்த்ததும் அலறி அழுதாள். பின் ஜெகந்நாதன், பத்மாவதி, புஷ்கான் மூவரும் கூடி வேண்டிய சிகிச்சைகளைச் செய்து சாரதாவுக்கு மூர்ச்சை தெளிவித்தனர். தெளிந்ததும் அவள் பத்மாவதியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு "நான் மூர்ச்சித்த போது அப்படியே மரிக்கவிடாமல் என்னை ஏன் தெளிவித்தீர்கள்? என் சர்வோத்தமர் இறந்தபின் நான் இருந்து ஆவதென்ன! அப்பாதகர், அவருடன் எனக்கும் விஷமிட்டிருந்தால் சந்தோஷமாய் உயிர் விட்டிருப்பேனே!" எனப் பலவாறாய் அங்கலாய்த்தாள். அப்பொழுது புஷ்கான் "தங்காய்! அழாதே. நாம் உடனே சென்று சர்வோத்தமனின் தேகத்தைப் பார்த்தாவது சற்று ஆறுதலடைவோம்" என்று சாந்தப்படுத்தி மூவருடனும் பாம்பன்கோவிலுக்குப் புறப்பட்டனன். அவ்விடம் சேரவும் இலட்சுமண முதலியார், சுவர்ணம், சுகந்தி மூவரும் விஷயங்களை அறிந்து ஆறாத்துயரமடைந்தனர். யாவரும் சாரதாவிற்கு எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவளோ தன் அழுகையை விடவில்லை. அவளையும் இழக்க நேரிடுமோவென எல்லோரும் கலங்கலாயினர்.

யாவரும் சற்று அமைதியுற்றதும் சர்வோத்தமன், சடாலிங்கம், ராதா இவர்களின் சடலங்களை எடுத்துவரச் சில ஆட்களுடன் புஷ்கான் புறப்பட்டான். அது சமயம் ஒரு மோட்டார் வண்டி வேகமாய் வந்து இலட்சுமண முதலியாரது மாளிகையின் முன் நிற்கவும், அதில் தான் எடுத்து வரப்போகும் மூவரும் உயிருடனிருப்பதைக் கண்ட புஷ்கான் பிரமித்து "சாரதா! சாரதா! சர்வோத்தமர் உயிருடன் வந்திருக்கிறார். ஓடிவா! ஓடிவா! என்று சத்தமிடவும், சாரதாவும், மற்றவர்களும் ஆவலுடன் ஓடிவந்தனர். அப்பொழுது வண்டியிலிருந்த லோகா

னந்தன் இறங்கி "மூவரும் மிகுந்த காயத்துடனும், களைப்புடனும் பேச முதலாய்ச் சக்தியற்றிருக்கிறார்கள். முதலில் அவர்களை மெதுவாய்த் தூக்கி உள்ளே கொண்டுபோய்க் களைப்பாற்றுவோம்; பின்னால் விவரம் தெரிவிக்கிறேன்" என்றான். சர்வோத்தமனும், மற்ற இருவரும் இருந்த நிலைமையைப் பார்த்துச் சாரதா மிகவும் மனம் பதைத்தாள். தன் துயரத்தை அழுது தீர்க்க அவல் கொண்டாள். ஆயினும் சர்வோத்தமன் கலங்காவாறு தன்னை அடக்கிக்கொண்டாள். பின்பு சர்வோத்தமன், சடாலிங்கம், ராதா மூவரும் மாளிகைக்குள் கொண்டுபோகப்பட்டு களைப் பாற்றப்பட்டனர். வைத்தியரும் வந்து சிகிச்சை செய்தார். யாவரும் அம்மூவரையும் சூழ்ந்திருக்க, லோகானந்தன் "தஞ்சனூரிலிருக்கும் என் தங்கை சுனதியைப் பார்த்துவர நான் இன்று காலையில் நந்தனூர்குடியிலிருந்து புறப்பட்டேன். பாம்பன் கோவிலுக்குச் சமீபமாய் வந்ததும் என் மோட்டார்வண்டி ஏதோ கோளாறினால் நின்றுவிட்டது. மோட்டார் ஓட்டுபவன் அதைப் பழுதுபார்க்கும் சமயம் நான் பாட்டையின் பக்கமாய்ச் சென்று உலாவவே "அப்பா! அம்மா!" என்று யாரோ மெதுவாய் அனத்தும் சத்தம் என் காதில் விழ, அச்சத்தம் வந்த திக்கை நோக்கிச் சென்றேன். முட்புதர்களாலும், புற்களாலும் மூடப் பட்ட ஒரு பாழ்ங்கிணற்றைக் கண்டேன். சத்தம் அதிலிருந்து வந்துகொண்டிருந்ததால் அதை உற்று நோக்க, அதற்குள் இம் மூவரையும் கண்டேன். உடனே என் மோட்டார் ஓட்டுபவனை ஊருக்குள் அனுப்பிச் சில ஆட்களை அழைத்துவரச் சொல்லி அவர்களின் உதவிகொண்டு மூவரையும் வெளியேற்றினேன். மூவரும் உயரவிருந்து தாழ எறியப்பட்டு முட்புதரில் விழுந்ததால் நிலத்தில் அடிபட்டும் முட்களால் கீறுண்டும் அதிகக் காயம்பட்டிருக்கின்றனர். ஆயினும் தண்ணீரற்ற அக்கிணற்றினடியில் செடிகளும், புற்களும் அடர்ந்து வளர்ந்து மெத்தனவிருந்ததால் சாவுக்குத் தப்பினர்" என்று தெரிவித்தான். அப்பொழுது புஷ்கரன் "இவர்களை விஷமிட்டுக் கொன்றபின், பிணங்களையல்லவோ அக்கிணற்றில் எறிந்துவிட்டதாகப் பாஞ்சாலி அறிவித்தாள். இவர்கள் உயிர் பிழைத்தது எப்படியெனத் தெரியவில்லையே!"

எனச் சொல்லவும், சடாலிங்கம் "இது பாஞ்சாலியின் வேலையா? சண்டாளி எங்களைக் கொன்று பழிதீர்க்க நினைத்தாளோ!" என்று நெடுமூச்செறிந்தான். பின்பு புஷ்கரன், அம்மூவருக்கும் கோவிந்தன், பூபாலன் இருவரும் சேர்ந்து செய்த சூழ்ச்சிகள் யாவையும் தெரிவிக்க, சர்வோத்தமன் "நாங்கள் அன்றிரவு போசனம் முடிந்ததும், பாஞ்சாலியின் சகோதரன் பரிசாரகனாய் வந்தவன் எங்களுக்குக் குடிக்கப் பால் கொணர்ந்தான். அதை நாங்கள் பருகியதும் மயக்கமுற்றுக் கீழே விழுந்து உணர்விழந்தோம். பின் நடந்தது ஒன்றும் அறியோம். திரும்ப எங்களுக்கு உணர்வு வந்தபோது மாலை ஐந்துமணியிருக்கும். முட்புதர்களின் நடுவிலகப்பட்டுத் தேகம் எங்கும் பீறுண்டு மிகவும் வேதனையுற்றிருந்ததால் அவ்விடத்தைவிட்டு வெளியேற எங்களால் முடியவில்லை. உதவிக்காகப் பலங்கொண்டமட்டும் கூவியும் வருவார் எவருமிலர். அந்நிலைமையில் தண்ணீரும் ஆகாரமுமின்றி இரண்டு தினங்களைக் கழித்தோம். அத்தருணம் தெய்வாதீனமாய் லோகானந்தர் வந்து எங்களை மீட்டார்" என்று முடித்தான்.

சடாலிங்கத்தைத் தேடிச்சென்ற கணேசன், அவன் தங்கக்கூடிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு எங்கும் காணாது சோர்வுடன் திரும்பும் சமயம், பரதேசி சாம்பசிவனை வழியில் கண்டு விஷயத்தைத் தெரிவிக்க, அவன் "கணேசா! என் மனத்தில் ஒரு சந்தேகம் உதிக்கிறது. சில தினங்களுக்குமுன் பிரகஸ்பதியைக் கொல்ல, கோவிந்தன் விஷம் வாங்கிப்போனதாகவும், அதை டாக்டர் சுனதி பார்த்ததாகவும் கேள்விப்பட்டேன். ஆனால் பிரகஸ்பதிக்கு நாளதுவரை யாதொரு தீங்கும் ஏற்படவில்லை. ஒருவேளை அவ்விஷத்தால் சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவரையுமே கோவிந்தன் கொலைசெய்திருப்பானோவென ஐயுறுகிறேன். டாக்டர் சுனதியிடம் போய் முழு விவரத்தையும் அறிந்துவருவோம் வா" என்று அவனை அழைத்துச் சென்றான். டாக்டர் சுனதியை விசாரிக்க அவள் "சில தினங்களுக்குமுன் ஒருநாள் நானும், என் மைத்துனர் விஜயரும் என் சொந்த வைத்திய

சாலைக்குச் சில மருந்துகள் வாங்கும்படி நந்தனூர்குடியிலிருக்கும் மருந்துக்கடைக்குப் போயிருந்தோம். அங்கே ஓர் அறையில் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த சமயம் அடுத்த அறையில் டாக்டர் மீனுள் "கோவிந்தா! இவ்விஷத்தை என் கணவன் பிரகஸ்பதி ஐயரும், அவர் முதல் மனைவி மேனகையும் அருந்தும்படி செய்யவேண்டும். ஆனால் இதை எவரும் அறியாவண்ணம் வெகு ஜாக்கிரதையாய்ச் செய்" என்று சொல்லிய வார்த்தைகள் என் செவிகளில் விழுந்தன. உடனே நான் சென்று ஒரு மயக்க மருந்தை வாங்கி விஜயனிடம் அளித்து "நீர் எவ்விதமாவது கோவிந்தன் அறியாவாறு அவனிடமிருக்கும் விஷத்தைக் கைப்பற்றி இதை அதற்குப் பதில் அவன் வசம் சேர்க்கவேண்டும்; அப்படியாயின் நாம் இரு உயிர்களைக் காப்பாற்றியவர்களாவோம்" எனச் சொல்லி, கோவிந்தன் வெளியிற் சென்றபொழுது அவன் பிறகே விஜயரை அனுப்பினேன். மற்ற விவரத்தை அவரிடமே கேளுங்கள்" என்ருள். அப்பொழுது விஜயன் "நான் ஒரு பட்டிக்காட்டான்போல் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு சற்றுத் தூரம் கோவிந்தனின் பின்னுகவே சென்று அப்புறம் விரைவாய் நடந்து அவனை அணுகி "அண்ணு! கள்ளுக்கடை எங்கேயிருக்கிறது? இந்த ஊர் எனக்குப் புதிது. இப்போதுதான் வருகிறேன். வெகுதூரம் நடந்துவந்தது திரேகத்திற்கு அதிக அலுப்பாயிருக்கிறது" என்றேன். அதற்கு அவன் "தம்பி! நானும் அங்கேதான் போகிறேன். என்னுடன் வா!" என்று சொல்ல, இருவரும் கள்ளுக்கடைக்குச் சென்ருேம். அங்கே போனதும் கோவிந்தன் ஒரு மொந்தைக் கள்ளைக் குடித்துவிட்டு அதன் கிரயத்தைக் கடைக்காரனுக்குக் கொடுக்கப்போகும் சமயம், நான் அவனைத் தடுத்து "என்ன அண்ணு? இதற்குப் பணம் நீரா கொடுக்கவேண்டும்? நான் கொடுக்கமாட்டேனு? ஒரு மொந்தைதானே சாப்பிட்டிருக்கிறீர்! இன்னும் இரண்டு மூன்று போட்டுக்கொள்ளும். எல்லாவற்றிற்கும் நான் பணம் கொடுக்கிறேன்" என்று சொல்லவும், அவன் மிகவும் மனங்களித்து "சரி உன் இஷ்டம். தம்பி! நீ ஒரு மொந்தைகூடச் சாப்பிடவில்லையே! நீயும் கொஞ்சம் போட்டுக்கொள்" என்ருன். அப்பொழுது நான் 'முதலில்

உம்முடைய காரியம் முடியட்டும். பிற்பாடு என் வேலையைப் பார்க்கிறேன்" எனச் சொல்லிக் கடைக்காரனை அழைத்துக் கோவிந்தன் சாப்பிடுமட்டும் கள் ஊற்றச் சொன்னேன். காசு செலவில்லாமல் கிடைத்த கள்ளல்லவா? கோவிந்தன் வேண்டியமட்டும் குடித்து முற்றும் மதிமயங்கி உணர்விழந்து தரையிற் சாய்ந்துவிட்டான். உடனே நான் அதுவே ஏற்ற தருணமென நினைத்து அவன் மடியிலிருந்த விஷத்தை எடுத்துக்கொண்டு என்னிடமிருந்த மயக்க மருந்தை அவன் மடியில் வைத்துவிட்டேன். அதன்பின் கோவிந்தன் குடித்த கள்ளுக்குச் செல்லவேண்டிய பணத்தைக் கடைக்காரனுக்குச் செலுத்திவிட்டு வீடு சேர்ந்தேன். மறுநாள் அதிகாலையில் பிரகஸ்பதி ஐயரைக் கண்டு விஷயத்தைத் தெரிவித்துச் சாக்கிரதையாயிருக்கும்படி சொல்லி வந்தேன்" என்றான்.

அது சமயம் லோகானந்தன் அவ்விடம் வந்து, பாம்பன் கோவிலில் நடைபெற்ற விஷயங்களை அவர்களுக்குத் தெரிவிக்க, சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவரும் உயிருடனிருப்பதை அறிந்து யாவரும் களிப்பெய்தனர். பின்பு சுனதியும், விஜயனும் தாங்கள் அறிந்தவைகளை அவனிடம் சொல்லவும், லோகானந்தன் "இப்பொழுதுதான் விஷயம் விளங்குகிறது. கோவிந்தன் மயக்க மருந்தை விஷமென நினைத்துத் தன் மைத்துனனிடமளித்துச் சடாலிங்கம், ராதா, சர்வோத்தமன் மூவருக்கும் கொடுக்கும்படி செய்திருக்கிறான். அவர்கள் மயக்கமுற்று விழுந்ததும், மரித்துப்போனதாக எண்ணப்பட்டுப் பாழ்ங்கிணற்றில் எறியப்பட்டிருக்கிறார்கள். என்னே! தெய்வச்செயல்!" என்று சந்தோஷித்தான். கணேசன் அடைந்த சந்தோஷத்திற்கோ ஓர் அளவேயில்லை. பின்பு பேராபத்திலிருந்து தப்புவிக்கப்பட்ட சர்வோத்தமன் முதலியோரைப்பார்க்க ஆவல் கொண்டு, சாம்பசிவன், சுனதி, விஜயன், கணேசன் நால்வரும் லோகானந்தனுடன் பாம்பன்கோவிலுக்குச் சென்றனர். அவர்களைக் கண்டு விஷயங்களை அறிந்ததும், இலட்சுமண முதலியாது மாளிகையிலுள்ள யாவரும் சுனதியையும், விஜயனையும் மிகவும் புகழ்ந்தனர்.

சகல துர்க்குணங்களும் சேர்ந்து உருவாய் வந்த, இராம லிங்க முதலியார், காந்தாரி இருவருக்கும் பிறந்து, அவர்களின் துர்ச்சுபாவத்தையே அடிச் சுவடாகக் கொண்டு, பற்பல அவதி களுக்குள்ளாகிச் சீரழிந்து, இறுதியில் நல்லோரின் முயற்சியால் சீரடைந்த லோகானந்தன், சுனதி, பத்மாவதி மூவரும், தற் பொழுது பெற்ற புகழ்ச்சியே புகழ்ச்சி!

சர்வோத்தமன் கணேசனைப் பார்த்ததும் அவன் இரு கரங்களையும் ஆவலுடன் பிடித்துக் கொண்டு "அண்ணா! இது காறும் நீ எங்கே மறைந்திருந்தாய்?" என அன்புடன் வினவி னான். அப்பொழுது கணேசன் "நாம் இருவரும் அயல் நாட்டி லிருந்து இந்நாட்டிற்கு வந்ததும் சீவனத்திற்கு வழிதேட ஒரு வரைவிட்டு ஒருவர் பிரிந்த சமயம், நான் ஒரு நல்ல பதவியை அடையும் பரியந்தமும் உன் கண்ணுக்கு மறைந்திருப்பேனென்று சொன்னது உனக்கு ஞாபகமிருக்கலாம். நான் உன்னைவிட்டுச் சென்றபின் ஒரு ஐசுவரியவானிடம் வேலைக்கமர்ந்தேன். ஆனால் அவரது துர்க்குணத்தைத் தாங்கமுடியாமல் அவ்வேலையிலிருந்து நீங்கினேன். பின் என்னை வேலையில் வைத்துக்கொண்ட பல சீமான்களும் அவ்வண்ணமே இருக்கக்கண்டு மனச்சோர்வுற்று இனி என் செய்வதெனத் தயங்கி நிற்கும் சமயம் சடாலிங்கத் தைச் சந்தித்தேன். அவர் என் வரலாற்றைக் கேட்டுப் பரிதபித் துத் தன்னுடன் வரும்படி விரும்பினார். அவரது விருத்தாந்தத் தைக் கேட்ட நான் அவருடன் போகத் திகைத்தபோது, அவர் "அப்பா! நீ என் குகையில் காவலாயிருப்பதே போதும். மற்ற என் செய்கைகளுக்கு நீ உடன்படவேண்டாம்" எனச் சொல்ல, நான் சம்மதித்துச் சென்றேன். அவர் அக்கிரமச் சிந்தையுள்ள தனவந்தர்களையும், துஷ்டர்களையும் மட்டுமே கொள்ளையடித்தும் தண்டித்தும் வந்தார். அவருடைய மற்றக் குணங்கள் என் மனத்திற்குப் பொருத்தமானவையாகவே இருந் தன. அத்துடன் ராதாவின் நற்குணங்களும் என்னைக் கவர்ந்தன. ஆதலால் அவரிடமே என் காலத்தைக் கழித்து வந்தேன். பின் இச்சமீன்தார் அவரை இங்கே அழைத்து வந்தபோது

எனக்கும் ஒரு நல்ல பதவி அளித்தார். முன் நீ இங்கே வந்த சமயங்களில் நான் சமீன்தாரது கிராமம் ஒன்றில் தங்கியிருந்து அவருடைய வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தேனாதலால் இதுகாறும் உன்னைச் சந்திக்கச் சந்தர்ப்பம் வாய்க்காமற் போயிற்று. சடாலிங்கம் நம் அன்னையின் சகோதரன் என்பதை நீ சிறைச்சாலையிலிருந்த சமயமே அறிந்தேன். ஆயினும் நான் இன்னானென்பதை இதுபரியந்தமும் அவருக்காவது, ராதாவுக்காவது தெரிவிக்கவில்லை" என்றான். கணேசன் சர்வோத்தமனின் உடன்பிறந்த சகோதரன் என்பதைக் கேட்டதும் யாவரும் வியப்படைந்தனர். சடாலிங்கமும், ராதாவுமோ உள்ளங் கனிந்து மிகுந்த அன்புடன் கணேசனை நோக்கினர். சர்வோத்தமன், சடாலிங்கம், ராதா மூவரும் ஒரு வாரத்தில் பூரண சுகமடைந்தனர்.

" எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும் "

அத்தியாயம்—16

சங்கைக் காளாகிய சதிபதி.

" மாயிரு ஞாலந் தன்னில் தன்மத்தின் கருமம் வந்தால்
நேயமாய்ச் சடத்தால் வாக்கால் நிதியினுல் எதுவே யேனும்
ஈயலாற் சகாயஞ் செய்தார் எண்ணிடு நீசரேனும்
ஆயிரங் கோடி காலம் அமரரா யாள்வார் அன்றே"

சர்வோத்தமனுக்கும், சாரதாவிற்கும் விவாகதினம் குறிக்கப்பட்டு விவாகப்பத்திரிகைகளும் யாவருக்கும் அனுப்பப்பட்டன. இலட்சுமண முதலியார் வீரப்பனையும் அழைக்க மறக்கவில்லை. எல்லா உறவினரும், நண்பரும் தங்கள் தங்கள் குடும்பத்துடன் விஜயம் செய்திருந்தனர். ஆனல் சர்வோத்தமனின் பெற்ருேர் மட்டும் வரவில்லை. விவாகம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. தாம்பூலம் கொடுத்து முடியும் சமயம் எவரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. குன்றிய முகத்துடன் ஒரு மனிதனும் ஒரு ஸ்திரியும் கூட்டத்தினுட் புகுந்து சிவஞான முதலியாரிடம் சென்று அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்தனர். அவர்களைக் கண்டதும் சிவஞான முதலியார் மிகுந்த வியப்புற்று "வீரப்பனும் மீனுட்சியுமா! இதுகாறும் எங்கே போயிருந்தீர்கள்? எழுந்திருங்கள்" என, இருவரும் எழுந்தனர். வீரப்பன் தன் இரு கரங்களையும் கூப்பி நின்று "எசமானே! நான் தங்களுக்குத் தெரிவிக்கப்போகும் விஷயங்களைத் தாங்கள் மட்டுமல்ல, இச்சபையிலுள்ள எல்லோரும் கேட்க விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அநுமதியளிக்கவேண்டும்" என, சிவஞான முதலியார் எழுந்து அங்கு குழுமியிருந்த யாவரையும் நோக்கி "இப்பொழுது என் முன் நிற்பவன் பல வருடங்களுக்குமுன் என்னைவிட்டுப் பிரிந்துபோன என் வேலையாள் வீரப்பனுவான். அவனுடன் வந்திருக்கும் ஸ்திரி அவன் மனைவி மீனுட்சியாவாள். நீங்கள்

யாவரும் அறியும்படி ஏதோ சில விஷயங்களை அறிவிக்க வீரப்பன் விரும்புகிறான்" என்று சொல்லி உட்கார்ந்தார். பின்பு வீரப்பன் யாவரையும் நோக்கி "நான் பல வருஷங்களுக்குமுன் சிவஞான முதலியார் வீட்டில் வேலைபார்த்த காலத்தில் அவருக்கு முதன் முதலாய் ஒரு பெண் குழந்தை பிறந்தது. பிறந்ததும் அக்குழந் தையைக் கொலை செய்யும்படி அவர் தம்பி இராமலிங்க முதலியார் என்னை ஏவினார். நான் அவ்விதம் செய்ய மறுத்தும் அவர் விடாது அடிக்கடி என்னைத் தொந்தரவு செய்து வந்தார். இரண்டு வருஷங்களுக்குப்பின் சிவஞான முதலியாருக்கு ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. பிறக்கவே இராமலிங்க முதலியார் இரு குழந் தைகளையும் கொலை செய்யவேண்டுமென்று என்னைக் கட்டாயப் படுத்தினார். நான் பின்னும் மறுக்கவே என்னைப் பயமுறுத்த ஆரம்பித்தார். நான் விவாகஞ் செய்துகொள்ளுமுன் எனக்கும் என் தோழன் ஒருவனுக்கும் நடந்த சச்சரவில் கோபங்கொண்டு அவனைக் கொன்றுவிட்டேன். அதை வேறொருவரும் அறியா விட்டாலும் இராமலிங்க முதலியார் அறிவார். நான் அவ்விரு குழந்தைகளையும் கொலை செய்யச் சம்மதிக்காவிடில் என் தோழ னைக் கொன்ற குற்றத்திற்காக என்னைத் தூக்குமாத்திற்கனுப்புவ தாய்ப் பயமுறுத்தினார். அதன்மேல் நான் பயந்து அவர் விருப்பத் திற் கிணங்கினேன். ஒருநாள் யாவரும் அயர்ந்து தூங்கும் சமயம் இரு குழந்தைகளையும் என் வீட்டிற்குத் தூக்கிப்போய்க் கொலை செய்யப்போகும் சமயம் என் மனைவி விழித்துக்கொண்டு அக்கொலையை நான் புரியாதபடி கெஞ்சினாள். அக்குழந்தைகளைக் கொலை செய்யாவிட்டால் இராமலிங்க முதலியாரால் எனக்கு நேரிடவிருந்த ஆபத்தைத் தெரிவிக்க, அவள் குழந்தைகளைக் கொலை செய்யவேண்டாமென்றும், அவர்களை அயல்நாட்டிற்குக் கொண்டுபோய் வளர்க்கலாமென்றும் ஒரு ஆலோசனை கூறினாள். அன்றிரவே நான் இராமலிங்க முதலியாரைக் கண்டு குழந்தை களைக் கொலை செய்துவிட்டேனென்றும், இனி அவ்வூரிலிருக்கப் பயமாயிருப்பதால் அயல்நாடு செல்லத் தீர்மானித்திருக்கிறே னென்றும் சொல்ல, அவர் அதை ஆமோதித்து மாதா மாதம்

எனக்கு ஐம்பது ரூபாய் சீவனம்சத்திற்கு அனுப்புவதாக வாக்களித்தார். அவ்வண்ணமே நானும், என் மனைவியும் இரு குழந்தைகளுடனும் அன்றிரவே ஊரைவிட்டுப் புறப்பட்டோம். 'ஆண் குழந்தையையாவது கஷ்டதசையில் வளர்க்கலாம்; ஒரு பெண்ணை அவ்விதம் வளர்ப்பது பாவம்' என்று என் மனைவி சொல்ல, எனக்கு ஒரு யோசனை உதித்தது. காவலூர் கஜபதி முதலியார் மிகவும் நற்குணம் வாய்ந்தவராதலால் அவருக்குத் தெரியாது அவர் வீட்டில் அப்பெண் குழந்தையை விட்டுப்போய் விட்டால் அவர் அதை எவ்விதமும் பராமரிப்பாரென்று நினைத்து நாங்கள் போன வழியிலிருந்த அவர் வீட்டில் எவருமறியாது அப்பெண் குழந்தையை விட்டு ஆண்குழந்தையுடன் மட்டும் அயல் நாட்டிற்குச் சென்றோம். அவ்வாண்மகவை என் மனைவி வெகு செல்வமாய் நல் வழியில் வளர்த்துவந்தாள். அவன் பெரியவனானதும் என் நடத்தை பிடிக்காது என் மனைவியின் சம்மதத்தின் பேரில் என் சொந்த மகனையும் அழைத்துக்கொண்டு இந்நாட்டிற்கு வந்துவிட்டான். இராமலிங்க முதலியார் மாதா மாதம் தவறாது தான் வாக்களித்தபடி எனக்குப் பணம் அனுப்பிவந்தார். ஆனால் சில மாதங்களுக்குமுன் அவர் அதை நிறுத்திவிடவே நாங்கள் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டோம். அவர் பணம் அனுப்புவதை நிறுத்தியதன் காரணத்தை அறியும்பொருட்டு நானும் என் மனைவியும் இவ்வூருக்கு வந்தோம். வந்ததும் இராமலிங்க முதலியாரின் மனைவி காந்தாரியைக்காண அவள் சிவஞான முதலியாருக்கு மற்றுமொரு ஆண்குழந்தை பிறந்திருப்பதாகவும் அக்குழந்தையையும் அவரையும் கொன்றால்மட்டும் அவருடைய சமீன் இராமலிங்க முதலியாருக்கு உரித்தாகுமென்றும் அப்படிச் செய்யின் இருபதினாயிரம் ரூபாய் கொடுப்பதாயும் தெரிவித்தாள். நானும் பணத்தாசைகொண்டு அவ்விதமே செய்ய எத்தனித்தேன். ஆனால் அவ்விஷயத்தை என் மனைவி எவ்விதமோ தெரிந்து இந்நாட்டிற்கு முன்னமே வந்திருந்த அவள் வளர்ப்பு மகனுக்கு அறிவிக்க, அவன் நான் அக்கொலை புரியாதபடி என்னைத் தடுத்துவிட்டான். அவனே இப்போது மணமகனாய் வீற்றிருக்கும் இச்சர்வோத்தமன். இவனே சிவஞான முதலியாரின்

சிரேஷ்ட புத்திரன். குமரிபுரம் டிப்டி கலெக்டர் சந்திரகாந்தனின் மனைவி சுசீலியே சிவஞான முதலியாரின் ஏகபுத்திரி" என்று சொல்லி முடிக்கவும், சிவஞான முதலியார் ஓடி சர்வோத்தமனைக் கட்டி அணைத்து "அப்பா! என் மகனே!" என்று ஆனந்தக் கண்ணீர் விட்டார். அதே சமயம் அவரது மனைவி கௌசலை சுசீலியை மார்புறத் தழுவி "அம்மா! என் மகளே!" என ஆனந்த பாஷ்பம் பொழிந்தாள். பின்பு அவ்விதமே சிவஞான முதலியார் சுசீலியையும், கௌசலை சர்வோத்தமனையும் ஆவிச் சேர்த்தணைத்துக்கொண்டு சந்தோஷித்தனர். மணப்பந்தல் முழுவதும் சந்தோஷ ஆரவாரமாகவேயிருந்தது. இலட்சுமண முதலியாரும், சுவர்ணமும் சர்வோத்தமன் சிவஞான முதலியாரின் மகன் என்றறிந்ததும் சொல்லொணு மகிழ்ச்சியடைந்தனர். சாரதாவின் ஆனந்தத்தை யாரே அளவிட வல்லார்! மனம்போல் மாங்கல்யம் என்பது பொய்யா மொழியன்றே! வீரப்பனின் வார்த்தைகளைக்கேட்டதும் இராமலிங்க முதலியாரும், காந்தாரியும் முகம் வெளுத்துப் பிணம்போல் அசைவற்றிருந்தனர். பின்பு அங்குண்டான சந்தடியில் இருவரும் அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவிப் போயினர். அதை எவரும் கவனிக்கவில்லை.

சந்தோஷக்கூச்சல் சற்று அடங்கியதும் மணமகளாகிய சாரதா எழுந்து நின்று எல்லோரையும் அமைதியாய் அமர்ந்திருக்கச் செய்து "இச்சுபதினத்தில் சந்தோஷகரமான மற்றொரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். குமரிபுரத்தில் செம்படவர்கள் வசிக்கும் இடம் சமுத்திரக்கரையோரமாயுளது. அங்கே தனித்த சிறிய குடிசை ஒன்றில் நானும் என் அன்னையும் சில வருஷங்களாய்த் தங்கிவந்தோம். செம்படவச் சிறு பெண்களுடன் நான் அடிக்கடி கூடி விளையாடுவதுண்டு. அவ்விதம் அவர்களுடன் பழகியதில் கடலில் நீந்தவும் மிதப்புக்கட்டை, ஓடம் முதலியன தள்ளவும் கற்றுக்கொண்டேன். நான் வசித்த குடிசைக்குச் சற்றுத் தூரத்தில் கடற்கரையோரமாய் விசாலமும் உயர்ந்ததுமான பாறை ஒன்றிருந்தது. அதன் நுனி முன் நீண்டு

தண்ணீரின்மேல் கவிந்திருந்தது. அப்பாறையின் அடியிலிருப்பவரை மேல் இருப்பவர் பார்க்கமுடியாது. ஒருநாள் மாலை அப்பாறையின் அடியிலுள்ள மணலில் நானும் செம்படவச் சிறுமிகளும் விளையாடிக்கொண்டிருந்தோம். அச்சமயம் அங்கிருந்த ஒரு மிதப்புக்கட்டையின்மேலேறிக் கடல் நீரில் விளையாட நான் ஆசிக்கவே, என்னை அம்மிதப்பில் இருத்தி அவ்விரு பெண்களும் அம்மிதப்பை நீரில் வேகமாய்த் தள்ளினர். அது விர்ரென்று போன சமயம் பாறையின்மேலிருந்து கடலில் குதித்த வாலிபர் ஒருவர் என் மிதப்பின்மேலேயே விழுந்தார். அவர் ஜலத்தில் விழுந்துவிடாதபடி உடனே நான் அவரைப் பிடித்து மிதப்பில் சரியாய் உட்காரவைத்துத் துடுப்பு வலித்து மிதப்பைக் கரைசேர்த்தேன். பின் அவர் யாரெனவும் கடலில் குதித்த காரணம் என்னவெனவும் விசாரிக்க, அவர் தான் யாரெனக் கூறித் தன் நவநாகரீக மனைவியின் கொடுமையினால் உயிர் துறக்க நினைத்ததாகத் தெரிவித்தார். அப்பொழுது நான் அவர் அவ்விதம் தற்கொலை செய்ய எத்தனித்தது பாவமென்றும், இல்லாள் எவ்வளவு பொல்லாதவளாயிருப்பினும் அவளுடன் வாழ்ந்து அவளுக்குப் புத்தி புகட்டி அவளை நல்வழிப்படுத்துவதே ஆண்மகனுக்கழகாகுமென்றும் சொல்ல, அவர் அவளுடனிருந்து அவளைச் சீர்ப்படுத்துவது முடியாத காரியமென்றும், எனினும் முன் நினைத்தவாறு உயிரைத் துறவாது அவள் சீர்ப்படுமட்டும் மாறுவேடம் பூண்டு மறைந்திருந்து அவளைக் கவனித்து வருவதாகவும் என்னிடம் வாக்களித்து அவ்விதமே நடந்துவந்தார். ஆயினும் அவர் இறந்துபோனதாக மற்றவர் நினைக்கும் பொருட்டுத் தான் கடலில் விழுந்து உயிர் துறந்ததாகப் பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்தார். அவர் மனைவி ஒரு சமயம் பிரசவ வேதனைபட்டு யாதொரு ஆதரவுமற்ற நிலைமையிலிருந்தபோது அவளை அவர் தன் ஆப்த நண்பர் ஒருவரது மனைவியிடம் சேர்ப்பித்தார். மற்றொரு சமயம் அவள் தன் தந்தை குத்தப்பட்டாரெனக் கேள்விப்பட்டுத் திடுக்குற்றுத் தடுமாறிக் குழந்தையுடன் கீழே விழுந்து மூர்ச்சித்தபோது அவரே அவளைக் கண்டு உதவி செய்தார்.

பிறிதொரு சமயம் மிட்டாதாரன் ஒருவன் அவளைக் கற்பழிக்க எத்தனித்த பொழுதும் அவரே அவளை மீட்டுவிட்டார். இவ்வண் ணம் அவர் தன் மனைவியைக் கவனித்து அவளுக்கு அடிக்கடி உதவி செய்து வந்ததுமன்றி, பலருக்கும் அவ்வாறே பற்பல உபகாரங்கள் புரிந்து வந்திருக்கிறார். இவ்விதம் இல்லறத்தை விட்டுத் துறவறம் பூண்டவரும் கடலில் விழுந்து உயிர் துறந்த தாய்க் கருதப்பட்டவருமாகிய அம்மகா புருடர், தஞ்சனூர் மிட்டாதார் இரகுபதி முதலியாரின் சிரேஷ்ட புத்திரரும், குமரிபுரம் டிப்டி கலெக்டர் சந்திரகாந்தரின் ஆப்த நண்பரும், டாக்டர் சுனதியின் கணவருமான சாந்தசீலரே!" அவர் அதோ வீற்றிருக்கும் சாம்பசிவப் பரதேசியே!" என்று சொல்லி முடிக்கவும், சுனதி எழுந்தோடி சாந்தசீலனின் பாதங்களில் வீழ்ந்து "பிராணபதி! என் கல்வியினாலும், உத்தியோகத்தின லும் அகந்தை கொண்டு பொறுமைச் சொரூபியாகிய தங்களை இகழ்ந்து துன்புறுத்தி வதைத்த கற்றறி மூடமாகிய பாதகி நான் இதுவரை சீரழிந்தது போதும். கணவனை மதித்துக் குடும்பத் தைக் காத்துக் குணத்துடன் வாழாத ஒரு பெண்ணின் கல்வி எத்தகையதாயினும் முற்றும் பயனற்றதென்பதை என் அநுபவத் தில் உணர்ந்தேன். கல்வி அதிகமில்லாதிருந்தும் நற்குணம் பொருந்தியிருந்ததாலன்றோ இம்மாது சாரதா தங்களது உயி ரைக் காத்து எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்தாள். தரித்திர தசையடைந்த என்னைக் கைதூக்கி எனக்குப் புத்தி புகட்டி நல் வழி காட்டினாள். இனி எக்காலத்தும் தங்களது வரையைக் கடவேன். புத்தியீனமாய் நடந்த என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளவேண்டும்" எனத் தாரைதாரையாய்க் கண்ணீர்விட்டாள். சாந்தசீலன் அவளை வாரி எடுத்து "சுனதி! வருந்தாதே. உன் குணம் மாறியதை அறிந்து மகிழ்வுறுகிறேன். என் கவலை தீர்ந்தது" என்று அவளைத் தேற்றினான். அச்சமயம் சாந்தசீல னின் அத்தையாகிய கோமளவல்லியும், பெற்றோராகிய இரகுபதி முதலியாரும், இரங்கநாயகியும், தம்பியாகிய விஜயனும் ஆவலுடன் ஓடிப்போய் ஒவ்வொருவராய் அவனைத் தழுவி ஆனந்த பாஷ்பம் சொரிந்தனர்.

அத்தருணம் வேறொரு மாது அவனைத் தழுவி அணைத்து ஆனந்தக் கண்ணீர்விடப் பதை பதைத்து நின்றாள். ஆயினும் முன்வரத் தயங்கி நின்ற இடத்திலேயே அவனை இமைகொட்டாது பார்த்தவாறே கண்ணீர் சொரியலானாள். இதைக் கவனித்த சாரதா, லோகானந்தனை நோக்கி "அத்தான்! லோகானந்தரே! என்ன ஆந்தையைப்போல் விழிக்கிறீர்கள்? தங்கைக்குப் புருஷன் வந்துவிட்டாரே! நமக்குப் பெண்சாதி வரவில்லையே யென்று ஏங்கி நிற்கிறீர்களோ? அவள் எங்கே என்று அந்தப் பரதேசியைக் கேளுங்கள். அல்லது அந்தப் பரதேசியையே குறிவைத்து ஆனந்தக் கூத்தாடி நிற்கும் உங்கள் தாதியைக் கேளுங்கள். அல்லது உங்களுக்குத் தைரியமாயிருந்தால் அத்தாதியிடம் போய் அவள் தலையணியை நீக்கி அவள்தான் உங்கள் மனைவியோவெனப் பாருங்கள்" எனச் சொல்லவும், அவன் விரைந்துபோய் அத்தாதியின் தலையணியை நீக்க, அவளே தன் மனைவி சுமதியாயிருக்கக் கண்டு ஆச்சரியமடைந்து அவளை ஆவிச் சேர்த்தணைத்துக்கொண்டு "என் கண்ணே! சுமதி! உத்தம பத்தினியாகிய உனக்கும் பரம சண்டாளனாகிய நான் துரோகம் செய்தேனே! அழகே உருவெடுத்து வந்திருக்கும் உன்னை அலட்சியம் செய்து உன் முன்னிலையிலேயே ஒரு தாசியை நான் அணைத்தபோதும் என்னை வெறுக்காது உன் ஆபரணங்களையெல்லாம் விற்று அத்தாசியாலுண்டாகிய கடன்களையெல்லாம் தீர்த்ததுமன்றி நான் நோய் வாய்ப்பட்டிருந்தபோது அல்லும் பகலும் என் அருகிலமர்ந்து எனக்குப் பணிவிடைகள் செய்து என் உயிரைக் காப்பாற்றினாய். சுகமடைந்ததும் எத்தனைதரம் கழுவினாலும் திரும்பவும் சேற்றிலே புரளும் பன்றியைப்போல் நான் மறுபடியும் அத்தாசியையே அடைந்து நோயுற்று அவளால் துரத்தப்பட்டபோது என் பெற்றோரும், நானும் உன்னைத் துரத்தி அடித்தும் மனம் கோணாது ஒரு தாதியைப்போல் வேஷம் தரித்து வைத்தியசாலைக்கு வந்து இராப்பகலாய்க் கண்விழித்து எனக்குச் சிஷ்ருஷை செய்து மறுமுறையும் என் உயிரைக் காப்பாற்றி நற்புத்தி புகட்டி என் குணத்தை மாற்றினாய். என்னே உன் புருஷ பக்தி! உன் கல்வி எவ்வளவிற்கதிகமோ அவ்வளவிற்

கும் அதற்குமேலும் உன் குணம் மிளிர்கின்றது. என் கல்விக் களஞ்சியமே! கற்புக்கரசியே! பொறுமைக்கிருப்பிடமே! பெண்களின் நாயகமே! என்னை மன்னிப்பாயா?" என்று சிறு பிள்ளை போல் விம்மி விம்மி அழுதான். அப்பொழுது சுமதி "நாதா! என்னிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்கலாமா? நான் தங்களுக்கு விசேஷித்து ஒன்றும் செய்யவில்லையே! கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமையையே செய்தேன். விசனமுறுதீர்கள்" என அவனை ஆற்றினாள். பின்னும் அவனை நோக்கி "நாதா! நாமிருவரும் இப்பொழுது ஒன்று கூடி ஆனந்திப்பது அறிவு முதிர்ந்த குணபூஷணியாகிய இச்சாரதாவின் சமயோசித ஆலோசனையாலும் அரிய உதவியாலுமே. நான் உங்களாலும், உங்கள் அன்னையாலும் துரத்தப்பட்டபோது யாது செய்வதெனத் தோன்றாது என் அத்தை கோமளவல்லியின் வீட்டிற்கு அழுது கொண்டு போகும் சமயம் தன் வீட்டின் முன் வாசலில் நின்ற சாரதா என்னைக் கண்டு தன் வீட்டினுள் அழைத்துப்போய் என் துயரத்தின் காரணத்தை அன்புடன் விசாரித்தாள். விஷயத்தை அறிந்ததும் நான் வேறெங்கும் போகாது நேரே வைத்தியசாலைக்குச் சென்று தாதிபோல் அமர்ந்து உங்களுக்குப் பணிவிடை செய்வதே உசிதமாகுமென்று யோசனை கூறினாள். அவ்விதமே நான் வைத்தியரிடம் சென்று யாரெனத் தெரிவித்து உங்களுக்கு உதவிபுரிய அநுமதி கேட்டபொழுது அவரும் சந்தோஷமாய் விடையளித்தார். அப்புறம் உங்கள் பெரிய தந்தை வைத்தியசாலையிலிருந்து உங்களை அழைத்துப்போக வந்தபொழுது இனி நான் எங்குபோய் மறைந்திருப்பதெனத் தயங்கும் சமயம் தெய்வாதீனமாய் அவரே என்னைத் தன் குழந்தைக்குத் தாதியாக அழைத்துச் சென்றார். பின் ஒருநாள் தாசி பிரியவதியிடம் நான் சிக்குண்டு தவித்தபோது இத்தருமகுண வனிதையே எனக்குச் சகாயஞ் செய்தாள். இத்தகைய குணவதிக்கு நாம் என்ன ஈட்டைச் செலுத்தப்போகிறோம்" என்றாள். பின்பு அவனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு சாந்தசீலனிடம் ஓடோடியும் போய் அவனைத் தழுவிக்கொண்டு "அண்ணா!" என அழுதாள்.

பின் சுமதியின் அத்தையும், பெற்றோரும், தம்பியும் அவளைக் கட்டிக்கொண்டு அகமகிழ்ந்தனர்.

அப்பொழுது சிவஞான முதலியார் சாரதாவை அணுகி "அம்மா! நான் உன்னை மருமகளாகப் பெற்றது என் முன்னோர் செய்த தவப்பயனே! நீ பலருக்கும், விசேஷமாய் என் குடும்பத்திற்கும், என் தம்பி இராமலிங்கம் குடும்பத்திற்கும் செய்திருக்கும் பேருபகாரங்களை நினைக்க நினைக்க என் உள்ளத்தில் சந்தோஷமும், நன்றியும் பெருக்கெடுத்தோடுகின்றன. உன் மனம் குளிருமாறு உன்னை வீரப்பனுக்கு மருமகளாக்க நான் எத்தனித்ததில் எனக்கே நீ மருமகளானாய்! என்னே! தெய்வச் செயல்! என்னே! என் அதிஷ்டம்!" என்று புகழ்ந்தார். அங்கு குழுமியிருந்த யாவரும் ஒன்றன்பின்னொன்றாய் நடந்த இவ்வாச்சரிய சம்பவங்களை அறிந்து ஆனந்த பரவசமடைந்தனர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

சஞ்சீவி அச்சுக்கூடம், தர்மபுரி—1934